மகேந்திர வர்மன்

சு. அ. இராமசாமிப்புலவர்,
கருப்பக்கிளார். (அஞ்சல்)
கோட்டூர் வழி, தஞ்சை மாவட்டம்.

ஆசிரியர் :

மயிலை, சீனி. வேங்கடசாமி அவர்கள்

கழக வெளியீடு: ௭௭௭

மகேந்திர வர்மன்

சு. அ. இராமசாமிப்புலவர்,
கருப்பக்கிளார். (அஞ்சல்)
கோட்டூர் வழி, தஞ்சை மாவட்டம்.

ஆசிரியர்:
மயிலை, சீனி. வேங்கடசாமி அவர்கள்

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
திருநெல்வேலி. :: சென்னை-1.

First Edition: March, 1955.

MAHENDRA VARMAN

[All Rights Reserved]

Published by

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS
PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD.,
1/140, BROADWAY, MADRAS-1.

Head Office:

24, EAST CAR STREET, THIRUNELVELI.

Appar Achakam, Madras-1—I Ed. C. 1[illegible]00.

பதிப்புரை

நம் தமிழகத்தில் முடியுடை வேந்தர்கள் மூவர் ஆட்சி முடிந்தபின், பிற்காலத்தே ஆண்ட வேற்று மொழி வேந்தர்கள் பலராவர். அவருள், பல்லவ மன்னர்களென்பவர் நாட்டைக் கைக்கொண்டு அரசாண்டனர். அம்மன்னர் வழியில் வந்தோன், மகேந்திரவர்மனெனப் பெயரிய வேந்தனாவன்.

இம்மன்னனால் நம் நாட்டில் கலையும் இசையும் பெருகிவளரலாயின. இவன் காலத்தே சிற்பக்கலை செழித்தோங்கிச் சிறந்திருந்தது. இவ்வரசன் வரலாற்றைப் பழங்கால இலக்கியங்கள், கல்வெட்டு, கோயில்கள், சிற்பங்கள், ஓவியங்கள் கொண்டு தம் நுண்ணிய பேரறிவால் மயிலை, சீனி. வேங்கடசாமி அவர்கள் எழுதி உதவியுள்ளனர்.

இதன்கண் வரலாற்றுச் சான்றுடன் கூடிய ஓவியப் படங்களும், சிற்ப உருவப்படங்களும் இன்றியமையாத இடங்களில் விளக்கத்துக்காக இணைத்து நன் முறையில் நூலுருவாக்கி 'மகேந்திரவர்மன்' என்னும் பெயர்சூட்டி வெளியிட்டுள்ளோம்.

தமிழ் அன்பர்கள் வாங்கிக் கற்றுப் பழங்கால உண்மை வரலாறு கண்டுணர்ந்து இன்புறுவார்களென நம்புகின்றோம்.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

உரிமை விளக்கம்

இந்நூலில் உள்ள படங்களில், முகப்புப் படங்கள் 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 10, 11, 12-ம், 117, 118, 119, 122-ஆம் பக்கங்களில் உள்ள படங்களும் இந்திய அரசாங்க ஆர்க்கியாலஜி இலாகாவுக்கு உரிமையானவை. மற்றப் படங்கள் ஏ. ஹேச். லாங்ஹர்ஸ்ட் அவர்கள் எழுதிய 'பல்லவர் சிற்பங்கள்' என்னும் நூலிலிருந்தும், ழூவோ-துப்ராய் அவர்கள் எழுதிய 'பல்லவர் பழமைகள்,' 'திராவிடச் சிற்பம்' என்னும் நூல்களிலிருந்தும் எடுக்கப்பட்டவை என்பதை நன்றியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மயிலை, சீனி. வேங்கடசாமி

முன்னுரை

ஒவ்வொரு நாட்டுக்கும் அந்தந்த நாட்டின் வரலாறு மிகவும் முதன்மையாகும். ஆனால், வரலாற்று நூல்களை எழுதும் வழக்கம் நமது நாட்டிலே பண்டைக் காலத்தில் இருந்ததில்லை. ஆகவே, நமது நாட்டுப் பழைய வரலாறுகள் நமக்குக் கிடைக்கவில்லை. முஸ்லீம்களும் ஐரோப்பியரும் வரலாற்றுநூல் எழுதும் வழக்கமுடையராயிருந்தனர். ஐரோப்பியர் நமது நாட்டிற்கு வந்த பின்னரே, வரலாறு எழுதும் வழக்கம் நமக்கு ஏற்பட்டது.

அண்மைக்காலத்திலே மேல்நாடுகளில் ஆர்க்கியாலஜி, எபிகிராபி[1] சாத்திரங்களின் மூலமாக வரலாற்று ஆராய்ச்சி முறை பெரிதும் வளர்ச்சியடைந்திருக்கிறது. இந்த மூலமாகப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் போன எகிப்தியர், பாபிலோனியர், யவனர் ரகர்), உரோமர் முதலான பழங்கால மக்களின் வரலாறுகளும் நாகரிகங்களும் இப்போது கண்டறியப்பட்டுள்ளன.

நமது நாட்டிலிருந்த ஆங்கிலேய ஆட்சியினர், ஆர்க்கியாலஜி, எபிகிராபி இலாகாக்களை நமதுநாட்டிலும் ஏற்படுத்தி அவற்றின்மூலமாக மறைந்துபோன பழஞ் செய்திகளையும் நாகரிகங்களையும் வரலாறுகளையும் கண்டறிய வழிசெய்தனர். இதனால் மொகஞ்சதாரோ, ஹரப்பா, நாகார்ச்சுனகொண்ட, நாலந்தா, பாடலிபுரம்

1. Archaeology, Epigraphy.

(இராசக்கிருகம்) முதலிய பல அழிந்து மறைந்துபோன நகரங்களின் நாகரிகங்களும் வரலாறுகளும் கண்டறியப்பட்டன. அசோகச் சக்கரவர்த்தியின் பிராமி எழுத்துச் சாசனங்களும், ஏனைய அரசர்களின் கல்வெட்டெழுத்துக்களும்,செப்பேட்டுச் சாசனங்களும் கண்டறியப்பட்டு, அவற்றின் உதவியினாலே இந்திய நாட்டின் பழைய கலை, நாகரிகம் வரலாறு முதலிய செய்திகளை அறிய முடிந்தது.

நந்தமிழ் நாட்டிலேயும், பல நூற்றாண்டுகளுக்கு முன்னமே மறந்து மறைந்துபோன சேர சோழ பாண்டியர் முதலிய அரசர்களின் வரலாறுகளும், நாகரிகங்களும், செய்திகளும், ஆர்க்கியாலஜி எபிகிராபி ஆராய்ச்சியின் பயனாக, இப்போது நாம் அறிந்துகொள்ள இடமேற்பட்டிருக்கிறது. இதில் சிறப்பான செய்தி என்னவென்றால், முழுவதும் மறைந்துகிடந்த பல்லவ அரசர்களைப்பற்றிய வரலாறுகளும், செய்திகளும் இப்போது மீண்டும் நமக்குக் கிடைத்திருப்பதுதான்.

ஏறக்குறைய முப்பது ஆண்டுகளுக்கு முன்பு, பல்லவ அரசர்களின் வரலாறுகளும் செய்திகளும் நமக்கு ஒன்றுமே தெரியாதிருந்தது. இப்போது, அவர்களைப் பற்றிய பல செய்திகளையும் வரலாறுகளையும் நாம் அறிந்துகொள்ள, ஆர்க்கியாலஜி எபிகிராபி ஆராய்ச்சி பெரிதும் உதவிசெய்திருக்கிறது. ஏறத்தாழ கி. பி. மூன்றாம் நூற்றாண்டு முதல் கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டு வரையில் பல்லவ அரச பரம்பரையினர் தொண்டமண்டலத்தையும் சோழமண்டலத்தையும் அரசாண்டு வந்தனர். அவர்களுள் பேரும் புகழும் படைத்து விளங்கியவர் சிலர். இச் சிலரில் முதன்மையானவன் மகேந்திரவர்மன் ஆவன். இவ் வரசனைப்பற்றிய வரலாறும் இவன் காலத்து வரலாறும்

ில் கூறப்பட

மகேந்திரவர்மன் வாழ்ந்த காலம் கி. பி. 7-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியாகும். இவன் காலத்திலே தமிழ் நாட்டிலே சமண சமயமும் பௌத்த மதமும் பரவிச் சிறப்புப் பெற்றிருந்தன. சைவ வைணவ மதங்கள் குன்றி மங்கிக்கிடந்தன. ஆனால், பத்திநெறி தோன்றியிருந்தது. இவ்வரசன் காலத்திலேதான் அப்பர் சுவாமிகள் எனப் படும் திருநாவுக்கரசு சுவாமிகள் வாழ்ந்திருந்தார். சமண சமயத்தவனாக இருந்த மகேந்திரவர்மனை இவர் சைவ சமயத்தில் சேர்த்தார். அன்றியும் பத்திநெறியையும் சைவ சமயத்தையும் வளர்த்து நாடெங்கும் பரவச் செய்தார்.

மகேந்திரவர்மன் பேரும் புகழும் படைத்த அரசனாக மட்டும் வாழவில்லை; சிற்பம் ஓவியம் காவியம் இசை முதலிய நற்கலைகளை நன்கு கற்ற கலைச்செல்வனாகவும் விளங்கினான். கலைச்செல்வனாக விளங்கியதல்லாமல் கலை வள்ளலாகவும் வாழ்ந்தான். இவன் அளித்த கலைச்செல்வங் கள் இப்போதும் தமிழ்நாட்டில் நின்று நிலவுகின்றன.

இவ்வளவு சிறப்புவாய்ந்த இவ் வரசனைப்பற்றியும் இவன் காலத்து நிகழ்ச்சிகளைப்பற்றியும் இவன் அமைத்த குகைக்கோயில் முதலிய கலைகளைப் பற்றியும் இந்நூலில் ஆராயப்படுகின்றன. ஆர்க்கியாலஜி எபிகிராபி ஆராய்ச்சி மட்டுமல்லாமல், ஏனைய சிற்பம் ஓவியம் இலக்கியம் முதலியவற்றின் துணைக்கொண்டும் இந்நூல் ஒருவாறு எழுதப்பட்டது.

இந்நூலைப் படிப்போர் செய்யவேண்டிய கடமையுண்டு. மகேந்திரவர்மன் அமைத்த குகைக்கோயில்களையும் அவற்றில் உள்ள சிற்பங்களையும் கண்டுகளித்து, அக் கலைச் செல்வங்களை அழிவுபடாமல் பார்த்துக்கொள்ள வேண்டிய பொறுப்பும் கடமையும் இதைப் படிப்போர்களைச்

சார்ந்தன. ஏனென்றால், நம் நாட்டுக் கலைச்செல்வங்கள் நமக்குச் சொந்தமானவை என்பதை நம்மவரில் பெரும் பாலோர் இன்னும் உணரவில்லை. இப் பொறுப்பை உணர்ந்து அவற்றைப் பாதுகாக்கவேண்டியது நம் ஒவ்வொருவருடைய கடமையாகும். இக் கலைச்செல்வங்களைப் பொன்னேபோல் போற்றவேண்டும்.

இந்நூலை நல்லமுறையில் அச்சிட்டு வெளியிட்ட சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தாருக்கும், அக் கழகத்தின் ஆட்சிப் பொறுப்பாளர் திரு. வ. சுப்பையாபிள்ளை அவர்களுக்கும் எனது நன்றி யுரியதாகும்.

மலரகம்,
மயிலாப்பூர்,
சென்னை-4,
10-3-55

மயிலை. சீனி. வேங்கடசாமி.

உள்ளுறை

		பக்கம்
க.	அரசியல்	1
உ.	வேறு அரசர்கள்	9
ங.	சமயநிலை	24
1.	சமண சாக்கிய மதங்கள்	,,
2.	சைவ வைணவ மதங்கள்	25
3.	பக்தி இயக்கம்	26
4.	திருநாவுக்கரசர்	27
5.	மகேந்திரன் சைவனானது	32
6.	அப்பரின் சமயப் பற்று	36
7.	அப்பர் காலத்து நாயன்மார்	37
8.	முகம்மது நபி	39
ச.	கோயில்கள்	41
1.	மண்டளியும் கற்றளியும்	,,
2.	மகேந்திரனுக்கு முற்பட்ட கோயில்கள்	44
ரு	குகைக்கோயில்கள்	48
1.	திருச்சிராப்பள்ளிக் குகைக்கோயில்	52
2.	பல்லாவரத்துக் குகைக்கோயில்	56
3.	வல்லத்துக் குகைக்கோயில்	58
4.	மண்டகப்பட்டுக் குகைக்கோயில்	61
5.	தளவானூர்க் குகைக்கோயில்	64
6.	மகேந்திரவாடிக் குகைக்கோயில்	68
7.	மாமண்டூர்க் குகைக்கோயில்	70
8.	மேலைச்சேரிக் குகைக்கோயில்	72
9.	சித்தன்னவாசல் குகைக்கோயில்	74
10.	சீயமங்கலக் குகைக்கோயில்	78

11. குரங்கணின் முட்டத்துக் குகைக்கோயில் 80
12. சிங்கவரத்துக் குகைக்கோயில் 83
13. திருக்கழுக்குன்றத்துக் குகைக்கோயில் 86
14. திருக்கோகர்ணத்துக் குகைக்கோயில் 89
15. மகாபலிபுரத்துக் குகைக்கோயில்கள் 90

௬. சிற்பங்கள் 97
1. கங்காதர மூர்த்தி ,,
2. சகரசாகரர் கதைச் சிற்பம் 100
3. கொற்றவை 104
113

௭. ஓவியங்கள் 114

௮. இசைக்கலை 124

௯. மத்தவிலாசம் 132
ாச நாடகம 135

௧௦. தமிழிலக்கியம் 162
திருநாவுக்கரசர் ்பபாடல்கள ,,

௧௧. திருநாவுக்கரசர் தேவார ஆராய்ச்சி 169
1. பழமொழிகளும் உவமைகளும் ,,
2. சில மீன்களின் பெயர்கள் 174
3. கட்டங்கம் 175
4. ஆரியமும் தமிழும் 176
5. அகப்புறச் சமயங்கள் 181
6. ரம் திருமாலும் 188

இந்நூல் எழுத உதவியாய் நின்ற நூல்கள்

நூல்	ஆசிரியர்
கலிங்கத்துப் பரணி ...	செயங்கொண்டார்
கலைமகள் : தொகுதி I ...	திங்கள் வெளியீடு
சிலப்பதிகாரம் ...	
ஷை உரை ...	அடியார்க்கு நல்லார்
சீவக சிந்தாமணி ...	திருத்தக்க தேவர்
தக்கயாகப் பரணி ...	ஒட்டக்கூத்தர்
புக்கரசு தேவர், காதசமாலை ...	நம்பியாண்டார் நம்பி
இரட்டை மணிமாலை ...	காரைக்கால் அம்மையார்
தேவாரம் ...	திருநாவுக்கரசு சுவாமிகள்
	திருஞான சம்பந்த சுவாமிகள்
	சுந்தரமூர்த்தி சுவாமிகள்
நாலாயிரத் திவ்யப் பிரபந்தம் ..	ஆழ்வார்கள் அருளியது
பெரியபுராணம் ..	சேக்கிழார் சுவாமிகள்
பம	மயிலை, சீனி. வேங்கடசாமி
மேருமந்தர புராணம்	அப்பாசாமி சாஸ்திரி பதிப்பு
யாழ்நூல்	உயர்திரு. விபுலாநந்த அடிகள்
	வே. வேங்கடராஜுலு ரெட்டியார் பதிப்பு

BIBLIOGRAPHY

Annual Report on Archaeology, Madras 1917—18, 1918—19, 1919—20.

Annual Report of Archaeological Survey of India 1929—30.

Annual Report on Epigraphy, Madras 1893, 1896, 1900, 1905, 1908—9, 1916, 1932—33.

Bulletin of the Oriental Studies, London Institution, Vol. V. (Matta Vilasa. Translated by L. D. Barnett)

Cave Inscriptions at Vallam. P. P. 340—341. South Indian Inscriptions Vol. II.

Conjeevaram Inscription of Mahendravarman I, by G. Jouveau—Dubreuil.

Culavamsa......Translated by Wilhelm Geiger.

Dravidian Architecture by G. Jouveau—Dubreuil.

Epigraphia Indica Vols. III, IV, VI, VII, VIII, X, XII.

History and Culture of the Indian People Vol. III. The classical Age.—Bharatiya Vidya Bhavan.

Indian Antiquary Vol. VIII, LII.

Kasakudi Plates of Nandivarman Pallava Malla. S. I. I. Vol. II.

Kudimiyamalai Inscriptions on Music, Edited by Rao Bahadur P. R. Bhandarkar. PP. 226—237. Epi. Ind. Vol. XII.

Manual of Pudukkottai State Vol. II. Part II.

Mysore Archaeological Report 1909—10.

Origin and Early History of Saivism in South India —C. V. Narayana Ayyar.

Pallava Antiquities Vol. I & II. by G. Jouveau Dubreuil.

Pallava Architecture Part I & II. by A. H. Longhurst.

Pallavas of Kanchi by R. Gopalan.

South Indian Inscriptions Vol. I, II, XII.

Studies in Indian Painting, by Mehta.

Studies in South Indian Jainism, by M. S. Ramaswami Aiyengar.

The Pallavas......by G. Jouveau—Dnbreuil.

The Mattavilasa Prahasana of Mahendra Vikrama Varman —Trivandrum Sanskrit Series No. LV. (1917).

Two Cave Inscriptions at Dalavanur by Prof. E. Hultzsch. PP. 225—226. Epi. Ind. Vol. XII.

Trisashti Salaka Purusha Charitra Vol. I & II.—Helen M Johnson's Translation. (Gaekwad's Oriental Series)

Triveni Vol. III. (1930).

Velurpalaiyam Plates of Vijaya Nandi Varman III. S. I. I. Vol. II. PP. 342—361.

Velvikudi Grant of Nedunjadaiyan. PP. 291—309. Epi. Ind. Vol. XVII.

ABBREVIATIONS

Epi. Indi.—Epigraphia Indica.

Epi. Rep.—Annual Report on Epigraphy, Madras.

Ind. Ant.—Indian Antiquary

M. P. S.—Manual of Pudukkottai State.

Mys. Arch. Rep.—Mysore Archaeological Report.

S. I. I.—South Indian Inscriptions.

மகேந்திர வர்மன்

க. அரசியல்

மகேந்திரவர்மனுடைய தகப்பனாரான ஸிம்மவிஷ்ணு காஞ்சீபுரத்தைத் தலைநகராகக் கொண்டு பல்லவ இராச்சியத்தை அரசாண்டார். சிம்மவிஷ்ணு ஆட்சியை ஏற்றுக்கொண்டபோது, அவருடைய பல்லவ இராச்சியம் ஆந்திர நாட்டையும் தொண்டைமண்டலத்தையும் கொண்டதாக இருந்தது. பிறகு சிம்மவிஷ்ணு சோழநாட்டை வென்று தமது பல்லவ இராச்சியத்துடன் சேர்த்துக்கொண்டார். இச்செய்தி வேலூர்ப் பாளையம், காசாகுடி செப்பேட்டுச் சாசனங்களினாலே தெரிகிறது.

"நெல் வயல்களையும் கமுகஞ் சோலைகளையும் தனக்கு நகைகளாகப் பூண்டு விளங்குகின்ற கவீரனுடைய மகளினால் (காவிரி ஆற்றினால்) பொலிகின்ற சோழர்களின் சோழ நாட்டை அவன் (சிம்மவிஷ்ணு) விரைவில் கைப்பற்றினான்." என்று வேலூர்ப்பாளையச் சாசனத்தின் 10-ஆவது வடமொழிச் செய்யுள் கூறுகிறது.[1]

"பிறகு அவனிசிம்மனாகிய சிம்மவிஷ்ணு அரசாட்சிக்கு வந்தான். அவன் தன் பகைவர்களை ஒழிக்கக் கருதி மலய களபர மாளவ சோழ பாண்டிய அரசர்களையும், தன் கைவன்மையினால் தருக்கியிருந்த சிங்கள அரசனையும் கேரளனையும் வென்றான்." என்று காசாகுடி செப்பேட்டுச் சாசனம் 20-ஆவது செய்யுளில் கூறுகிறது.[2]

---

1. S. I. I. Vol II. Page, 501—516.
2. S. I. I. Vol II. Page, 342—361.

மகேந்திர வர்மன்

இந்தச் சாசனப் பகுதிகளினாலே நாம் தெரிந்து கொள்வது என்னவென்றால், சிம்மவிஷ்ணு சோழநாட்டின் மேல் படையெடுத்தபோது, சோழனுக்குத் துணையாகக் களபர, மாளவ, பாண்டிய, சிங்கள, கேரள அரசர்கள் வந்தார்கள் என்பதும் அவர்களையெல்லாம் சிம்மவிஷ்ணு வென்று சோழநாட்டைக் கைப்பற்றிக்கொண்டான் என்பதும் ஆகும். இவ்வாறு சிம்மவிஷ்ணு காலத்தில் பல்லவ இராச்சியம் வடக்கே கிருஷ்ணாநதி முதல் தெற்கே புதுக்கோட்டை வரையில் பரவியிருந்தது. அஃதாவது ஆந்திர தேசம் தொண்டைமண்டலம் சோழமண்டலம் ஆகிய மூன்று நாடுகளைக் கொண்டிருந்தது.

சிம்மவிஷ்ணுவின் மகனாகிய மகேந்திரவர்மன் இளவரசனாக இருந்தபோது ஆந்திரநாட்டிலே தங்கியிருந்தான். தெலுங்குநாட்டிலே குண்டூர் மாவட்டத்திலே சேஜர்லா என்னும் இடத்தில் உள்ள கபோதேசுவரன் கோவில் சாசனம் ஒன்று, மகேந்திரவர்மன் அக்கோயிலில் திருப்பணி செய்ததைக் கூறுகிறபடியினாலே இளவரசனாக இருந்தபோது இவன் தெலுங்குநாட்டில் இருந்தான் என்பது நன்கு தெரிகிறது.

சிம்மவிஷ்ணு ஏறக்குறைய கி. பி. 600-இல் காலமானான். பிறகு, அவன் மகனான மகேந்திரவர்மன் அரசன் ஆனான். மகேந்திரவர்மன் ஏறக்குறைய கி. பி. 600 முதல் 630 வரையில் அரசாண்டான்.

பல்லவ அரச குடும்பத்தில் மகேந்திரன் என்னும் பெயர் உடையவர்களில் இவன் முதல்வன். ஆகையினாலே சரித்திரத்தில் இவன் மகேந்திரவர்மன் முதலாவன் (மகேந்திரவர்மன் I) என்று கூறப்படுகிறான்.

மகேந்திரவர்மன், தன் தலைநகரான காஞ்சிபுரத்தில் அரசாண்டான். மகேந்திரன் காலத்தில் பல்லவ [illegible]ின் வட எல்லை குறைந்துவிட்டது. எப்படி என்றால், வாதாபி (பாதாமி) என்னும் ஊரைத் தலைநகரமாகக்கொண்டு அரசாண்ட சளுக்கிய அரசனாகிய இரண்

டாம் புலிகேசி (இவன் கி. பி. 609 முதல் 642 வரையில் அரசாண்டான்) கி. பி. 610-இல் பல்லவ இராஜ்ஜியத்தின் மேல் படையெடுத்து வந்து ஆந்திர தேசத்தைக் கைப்பற்றிக்கொண்டான். அல்லாமலும் பல்லவரின் தலைநகரமான காஞ்சிபுரத்தின் மேலும் படையெடுத்து வந்தான். ஆனால், மகேந்திரவர்மன் புள்ளலூர் என்னும் இடத்தில் புலிகேசியை எதிர்த்துப் போரிட்டு அவனை முறியடித்துத்
ிட்டான்.

காசாகுடி செப்புப் பட்டயம் டைய வெற்றியை இவ்வாறு கூறுகிறது :

"அதன் பிறகு மகேந்திரனுடைய புகழைப் போன்று புகழ்படைத்தவனும் ஆணையைச் செலுத்துபவனும் புள்ளலூரில் தன் பகைவரைப் புறங்கண்டவனுமான மகேந்திரவர்மன் என்னும் அரசன் மண்ணுலகத்தை அரசாண்டான்"[1]

'மகேந்திரன் வென்ற அரசன் யார்?' என்று இந்தப் பட்டயம் கூறவில்லை. ஆனால், இரண்டாம் புலிகேசியைத்தான் இந்தச் சாசனம் குறிப்பிடுகிறது என்று தெரிகிறது. ஏனென்றால், அய்ஹொளெ சாசனம் புலிகேசியை இவ்வாறு புகழ்கிறது :

'அவன் (புலிகேசி), தன்னுடைய சேனையின் தூசியி
தன்னை எதிர்த்த பல்லவ மன்னனுடைய ஆற்றலை மழுங்கச்செய்து அவனைக் காஞ்சிபுரத்தின் மதிலுக்குள் மறையும்படி செய்தான்." (செய்யுள் 29.)

"பல்லவர்களின் சேனையாகிய குளிர்ந்த பனிக்குக் கடுங் கிரணமுள்ள சூரியனைப்போன்ற அவன் (புலிகேசி), சோழ பாண்டிய கேரளர்களுக்குப் பெரும் மகிழ்ச்சியை யுண்டாக்கினான்." (செய்யுள். 31.)[2]

---

1. S. I. I. Vol II. Page, 342—361.
2. Epi. Ind. Vol VI. Page. 11.

இந்தச் சாசனங்கள் இவ்வாறு கூறுவதிலிருந்து மகேந்திரவர்மனுடன் போர் செய்த சளுக்கிய அரசன் இரண்டாம் புலிகேசி என்பது ஐயமற விளங்குகிறது.

மகேந்திரவர்மன் புலிகேசியுடன் போர் செய்து வெற்றிகொண்ட இடமாகிய புள்ளலூர், செங்கற்பட்டு மாவட்டம் காஞ்சிபுரம் தாலுகாவில் காஞ்சிபுரத்திற்கு வடக்கே 15 மைல் தூரத்தில் இருக்கிறது.

சளுக்கிய அரசனை புலிகேசியை மகேந்திரன் முறியடித்துத் துரத்திவிட்ட போதிலும், பல்லவநாட்டின் ஆந்திரப் பகுதி புலிகேசியின் வசமாயிற்று. தான் கைப்பற்றிய ஆந்திரநாட்டில், தன் தம்பியாகிய விஷ்ணுவர்த்தனனைப் புலிகேசி இளவரசனாக்கினான். வெங்கி என்னும் நகரத்தில் இளவரசனாக அமர்ந்த விஷ்ணுவர்த்தனன், பிற்காலத்தில் தனி அரசனாகப் பிரிந்து கீழைச் சளுக்கிய வம்சத்தை உண்டாக்கினான். ஆகவே, பாதாமியைத் தலைநகரமாகக் கொண்டிருந்த மூல சளுக்கிய வம்சம், மேலைச் சளுக்கிய வம்சம் என்று சரித்திரத்தில் பெயர் பெறுவதாயிற்று.

புலிகேசி, பல்லவ இராச்சியத்தின் ஆந்திரப் பகுதியை வென்று கொண்டபடியினாலே, மகேந்திரனுடைய பல்லவ இராச்சியம், வடக்கே வடபெண்ணையாற்றிலிருந்து தெற்கே புதுக்கோட்டைவரையில் தொண்டைமண்டலத்தையும் சோழமண்டலத்தையும் கொண்டதாக இருந்தது. அஃதாவது, நெல்லூர் மாவட்டத்தின் தென்பகுதி (வடபெண்ணைக்குத் தென்பகுதி), சித்தூர், செங்கல்பட்டு, வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு, திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், புதுக்கோட்டை, சேலம் ஆகிய மாவட்டங்கள் அடங்கிய இராச்சியமாக இருந்தது.

பல்லவரின் தலைநகரம் காஞ்சிபுரம். மகேந்திரவர்மன் காஞ்சிபுரத்தில் இருந்து அரசாண்டான். பல்லவரின் துறைமுகப்பட்டினம் கடன்மல்லை. கடன்மல்லையிலே மகேந்திரன் மகனை நரசிம்மவர்மன் (முதலாவன்) (இவனுக்கு

மாமல்லன் என்னும் சிறப்புப்பெயர் உண்டு) இளவரசனுக

மல்லை அல்லது கடன்மல்லை என்னும் துறைமுகப் பட்டினத்திற்கு மகேந்திரன் காலத்தில் மகாபலிபுரம் என்னும் பெயர் வழங்கவில்லை. மகேந்திரன் மகனுன நரசிம்மவர்மன் பல்லவ நாட்டின் மன்னனுன பிறகு, தன் சிறப்புப் பெயராகிய மாமல்லன் என்னும் பெயரை மல்லைக்குச் சூட்டி மாமல்லபுரம் என்று வழங்கினுன். (மாமல்லபுரம் என்னும் பெயர் பிற்காலத்தில் மகாபலி புரம் என்று மருவி வழங்கலாயிற்று.) ஆகவே, மகேந்திர வர்மன் காலத்தில் மாமல்லபுரம் மல்லை என்றும் கடல் மல்லை என்றும் பெயர்பெற்றிருந்தது.[1]

இவன் தன் பெயரினுல் மகேந்திரமங்கலம் என்னும் ஊரை மாமண்டூர்ப்பற்றில் ஏற்படுத்தினுன் என்பதைத்

---

1. பல்லவர் காலத்துக்கு முன்னே கி. பி. 2-ஆம் நூற்றுண்டில் 'காஞ்சிபுரத்தைத்' தலைநகரமாகக்கொண்டு தொண்டை நாட்டை அரசாண்ட தொண்டைமான் இளந்திரையன் என்னும் சோழமன்னன் காலத்திலும் கடல்மல்லை, தொண்டைநாட்டின் துறைமுகப்பட்டினமாக இருந்தது. தொண்டைமான் இளந் திரையனைக் கடியலூர் உருத்திரங்கண்ணனுர் பாடிய பெரும் பாணுற்றுப்படையில் கடல்மல்லை, நீர்ப்பெயற்று அல்லது நீர்ப் பெயர்த்து என்று கூறப்படுகிறது. (நீர்ப்பெயற்றெல்லை போகி. அடி. 319.) இதற்கு உரை எழுதிய நச்சினுர்க்கினியர், "நீர்ப் பெயற்றென்னும் ஊரின் எல்லையிலேபோய்" என்று எழுதுகிருர். கடல்மல்லைக்கு நீர்ப்பெயர்த்து (நீர்ப்பெயற்று) என்னும் பெயரும் உண்டுபோலும். நீர்ப்பாயல் என்னும் பெயரும் வழங்கிற்று என்று சிலர் கருதுகின்றனர். நீர்ப்பாயல் என்பது வடமொழியில் ஜலசயனம் என்று கூறப்பட்டது என்பர். எனவே கடல்மல்லை என்னும் தொண்டைநாட்டின் துறைமுகப்பட்டினம் நெடுங்கால மாக இருந்துவந்ததென்பதும் அது மகேந்திரவர்மன் காலத் திலும் பல்லவரின் துறைமுகமாக அமைந்திருந்தது என்பதும் தெரிகின்றன. மகேந்திரவர்மன் காலத்திற்குப் பிறகு அவன் மகன் நரசிம்மவர்மனுல் கடல்மல்லை, மாமல்லபுரம் என்று புதுப் பெயர் சூட்டப்பட்டது. நரசிம்மவர்மன் மாமல்லபுரத்தைப் புதிதாக உண்டாக்கினுன் என்று சில மேல்நாட்டு ஆசிரியர் கூறுவது சரியன்று.

திருப்பருத்திக் குன்றத்து வர்த்தமானர் கோயில் சாசனத்தினால் அறியலாம்.[1]

மாமண்டூரில் ஓர் ஏரியைச் **சித்ரமேகத் தடாகம்** என்று தன் பெயரினால் ஏற்படுத்தினான்.

தன் பெயரினால் இன்னொரு ஊராகிய **மகேந்திர வாடி**யை (மகேந்திரபாடி) உண்டாக்கினான். இவ்வூர் வட ஆர்க்காடு மாவட்டம் வாலாஜாபேட்டை தாலுகா சோளிங்கூருக்குத் தென் கிழக்கே மூன்று மைலில் உள்ளது.

மகேந்திரவாடியில் **மகேந்திரத் தடாகம்** என்னும் ஏரியைத் தன் பெயரினால் உண்டாக்கினான்.

மகேந்திரன் சோழநாட்டிலே தன் பெயரால் மகேந்திரப்பள்ளி என்னும ஊரையமைத்து அதில் தன் பெயரால் **மகேந்திரப்பள்ளி** என்னும் சிவன்கோயிலை அமைத்தான் என்று தெரிகிறது. மகேந்திரப்பள்ளி என்பது மயேந்திரப் பள்ளி என்று மருவி வழங்கப்படுகிறது. இது கடற்கரையோரமாக உள்ள ஊர். இதற்கு, இப்போது கோயிலடிப்பாளையம் என்னும் பெயர் வழங்கப் படுகிறது. திருஞானசம்பந்தர் இந்தக் கோயிலைப் பாடியுள்ளார். அவர் பாடிய ஒரு பாடல் இது :

“ நித்திலத் தொகைபல நிரைதரு மலரெனச்
சித்திரப் புணரிசேர்த் திடத்திகழ்ந் திருந்தவன்
மைத்திகழ் கண்டன்நன் மயேந்திரப் பள்ளியுட்
கைத்தல மழுவனைக் கண்டடி பணிமினே.”

மகேந்திரவர்மன் குகைக்கோயில்களை அமை, செங்கல் கருங்கல் முதலியவைகளைக் கொண்டும் கோயில்களை அமைத்தான். அவ்வாறு அமைத்த கோயில்களில் மயேந்திரப்பள்ளிக் கோயிலும் ஒன்றாக இருக்கலாம். இவன் கட்டுக் கோயிலையும் அமைத்தான் என்பதை துப்ராய் அவர்கள் எழுதிய ‘மகேந்திரவர்மனின் காஞ்சிபுரக் கல்வெட்டுக்கள்.’[2] என்னும் சிறுநூலில் காண்க.

---

1. Epi. Ind. Vol. VII., No 15. P. 115.
2. Conjeevaram Inscriptions of Mahendravaram.

மகேந்திரவர்மன் பல சிறப்புப் பெயர்களைக் கொண் டிருந்தான். மகேந்திரன், மகேந்திரவர்மன், மகேந்திர விக்ரமவர்மன், மகேந்திரப்போத்தரசன், பகாப்பிடுகு, லளிதாங்குரன், குணபரன், மத்தவிலாசன், அவனி பாஜனன், சத்யசந்தன், புருஷோத்தமன், சத்துருமல்லன், சங்கீர்ணஜாதி, சித்ரகாரப்புலி, சேத்தகாரி, விசித்ரசித் தன், அலுப்தகாமன், கலகப்பிரியன், அபிமுகன், மகா மேகன், நரேந்திரன் முதலிய சிறப்புப்பெயர்களை இவன் [illegible] ரன்.

1

2

3



1. மயேந்திரப் போத்தரெசரு
2. ஸ்ரீ மஹேந்த்ர போத்ராதி ராஜன்
3. ஸ்ரீ மஹேந்த்ர விக்ரம

இந்தப் படத்தில் முதலாவது, மகேந்திரவர்மன் காலத் துத் தமிழ் எழுத்து. வல்லம் குகைக் கோயிலில் உள்ளது. 'மயேந்திரப் போத்தரெசரு' என்பது இதன் வாசகம். இரண்டாவது வடமொழி எழுத்து. 'ஸ்ரீமஹேந்த்ர போத்ராதி ராஜன்' என்பது இதன் வாசகம். இது மகாபலி புரத்து வராகப்பெருமாள் குகைக் கோயிலில் உள்ளது. இது பிராகிருதப் பெயர் என்று தோன்றுகிறது. மூன்று

வது வடமொழி எழுத்து. இது பல்லாவரத்துக் குகைக் கோயிலிலும் திருச்சிராப்பள்ளிக் குகைக்கோயிலிலும், எழுதப்பட்டுள்ளது. 'ஸ்ரீமஹேந்த்ர விக்ரம' என்பது இதன் வாசகம். கீழேயுள்ளது மகேந்திரவர்மன் காலத்துத் தமிழ் எழுத்து; திருச்சிராப்பள்ளி குகைக்கோயிலில் உள்ளது. 'பிணபிணக்கு' என்பது இதன் வாசகம். பிணக்கு என்பது இவன் சிறப்புப் பெயர்களில் ஒன்று.



பிணபிணக்கு

சிவிபுந்து, நில்விலோனையம்பு, வேந்துலவித்து, பசரப்பு, சிலம்பு, மலாயு, கடுந்தரம்பு, நயம்பு முதலிய தெலுங்குப் பெயர்களையும் இவன் கொண்டிருந்தான். இப் பெயர்களை இவன் ஆந்திர நாட்டில் இளவரசனாக இருந்த போது பெற்றுக்கொண்டிருக்க வேண்டும்.

இவன் சிற்பக்கலை இசைக்கலை ஓவியக்கலை காவியக்கலை முதலிய கலைகளில் சிறந்தவன். குகைக் கோயில்களைத் தமிழ்நாட்டில் முதன் முதலாக அமைத்தவன் இவனே. இதனால் இவனுக்குச் **சேதகாரி** என்னும் பெயர் ஏற்பட்டது.

இசைக்கலையின் நுட்பத்தை அறிந்தவனாதலால், இவனுக்குச் **சங்கீர்ணஜாதி** என்னும் பெயர் உண்டாயிற்று. ஓவியக்கலையில் தேர்ந்தவன் ஆனபடியினாலே இவனுக்குச் **சித்திரகாரப்புலி** என்னும் பெயர் உண்டாயிற்று. **மத்த விலாசம்** என்னும் நகைச்சுவை நாடக நூலை இயற்றிய படியினாலே இவனுக்கு **மத்த விலாசன்** என்னும் பெயர் ஏற்பட்டது. இச்செய்திகள் எல்லாம் இந்நூலில் தனித் தனியே விளக்கமாகக் கூறப்படுகின்றன.

உ. வேறு அரசர்கள்

மகேந்திரவர்மன் காலத்தில் வட இந்தியாவை அரசாண்ட மன்னன் புகழ்பெற்ற ஹர்ஷவர்த்தனன். கன்னோசி நாட்டின் அரசனாகிய ஹர்ஷன் கி. பி. 606 முதல் 647 வரையில் அரசாண்டான். இவன் ஆட்சிக்கு வந்தவுடன் ஆறு ஆண்டு போர் செய்து பதினெட்டு அரசர்களை வென்று அவர்களின் நாடுகளைத் தனது நாட்டுடன் சேர்த்துக்கொண்டான். மேலும், கிழக்கே காமரூப (அஸ்ஸாம்) நாட்டின் அரசனாயிருந்த குமாரன் என்பவனும், வல்லபி (குஜராத்தி) நாட்டின் அரசனாயிருந்த துருவபட்டன் என்பவனும் இவனுக்கு அடங்கிக் கப்பங்கட்டி வந்தனர்.[1] இவ்வாறு வட இந்தியா முழுவதையும் வென்று மகாராசன் என்னும் சிறப்புப் பெயர்பெற்ற ஹர்ஷவர்த்தனன், தக்கிண தேசத்தையும் கைப்பற்ற எண்ணி, சளுக்கிய நாட்டின் மேல் படையெடுத்தான். சளுக்கிய அரசனான புலிகேசி (இரண்டாவன்), நருமதை யாற்றங்கரையில் ஹர்ஷனை எதிர்த்துப் போர்செய்து வெற்றிகொண்டான். இது கி. பி. 620-இல் நடந்தது. தோல்வியுற்ற ஹர்ஷன் அதன் பிறகு நருமதை யாற்றுக்குத் தெற்கே வரவில்லை. ஹர்ஷவர்த்தனுடைய ஆட்சி, தெற்கே நருமதை யாற்றிலிருந்து வடக்கே இமயமலை வரையில் வட இந்தியா முழுவதையும் கொண்டிருந்தது.

ஹர்ஷவர்த்தனனுடைய இராச்சியத்திற்குத் தெற்கே தக்கண இந்தியாவை அக்காலத்தில் அரசாண்ட மன்னன் இரண்டாம் புலிகேசி. இவன் சளுக்கிய மரபைச் சார்ந்தவன் ஆகையால், இவனுடைய நாடு சளுக்கிய நாடு என்று பெயர் பெற்றது. சளுக்கியருக்கு வல்லபர் என்னும் பெயரும் உண்டு. புலிகேசி கி. பி. 608 முதல் 642 வரையில் அரசாண்டான். இவன் அரசாட்சி பெற்றவுடன் நளர், மௌரியர், கடம்பர், காலச்(சூரியர்), கங்கர், ஆளுபர்,

1. Epi. Ind. Vol. X P. 105.



மகேந்திரவர்மன்
காலத்துப்
பரதகண்டம்
சட்லெஜ்
சிந்து
ஹர்ஷ
சாம்பல்
இராச்சியம்
நர்மதை
தபதி
கோதாவரி
சளுக்கியர்
பல்லவர்
காவிரி
சேரர்
பாண்டி
அரபிக் கடல்
வங்காளக் குடாக்கடல்
70
80
90
30
20
10

லாடர், மாளவர், கூர்ச்சரர் கலிங்கர் முதலிய அரசர்களை வென்று அவர்கள் நாட்டைத் தனது நாட்டுடன் சேர்த்துக் கொண்டு தனது இராச்சியத்தைப் பெரிதாக்கிக் கொண்டான்.

இவன் வென்றவர்களில் நளர் என்பவர் நளவாடி விஷயம் என்னும் நாட்டினர். இது பல்லாரி கர்னூல் மாவட்டங்களில் அடங்கியிருந்தது. மௌரியர் என்பவர், மகத நாட்டை யாண்ட மௌரிய அரசர் வழிவந்தவர் என்று கருதப்படுகின்றனர். இவர் மேற்குக் கடற்கரைப் பக்கத்தில் இருந்ததாகக் கருதப்படுகின்றனர். அகநானூறு என்னும் சங்க நூலில் கூறப்படுகிற வம்பமோரியர் என்பவர் இந்த மௌரியரின் முன்னோராக இருக்கக்கூடும். கடம்பர் என்பவர் மைசூர் நாட்டின் ஒரு பகுதியில் இருந்தவர். கங்கர் என்பவர் கங்கவாடி நாட்டைச் சேர்ந்தவர். லாடர் என்பவர் லாட (குஜராத்தி) நாட்டவர். பிஷ்டபுரம் (பித்தாபுரம்) என்னும் கோட்டையையும் (கோதாவரி மாவட்டத்தில் உள்ளது.) புலிகேசி கைப் ப

பல்லவர்களுக்குரியதாக இருந்த ஆந்திர நாட்டைப் புலிகேசி, மகேந்திரவர்மனுடன் போர் செய்து கைப்பற்றிக் கொண்டான் என்பதை முன்னமே கூறியுள்ளோம். வட இந்தியாவை அரசாண்ட ஹர்ஷவர்த்தனன் சளுக்கிய நாட்டின்மேல் படையெடுத்து வந்தபோது, அவனை எதிர்த்து முறியடித்தவன் இந்தப் புலிகேசியே. இதனால் புலிகேசியின் புகழ் எங்கும் பரவிற்று. பாரசீக நாட்டை அரசாண்ட குஸ்ரு (இரண்டாவன்), புலிகேசியின் புகழைக் கேள்விப்பட்டு, இவனிடம் தூதரை அனுப்பி இவனுடன் நட்புக்கொண்டான்.

புலிகேசியின் சளுக்கிய இராச்சியம் வடக்கே நருமதை யாறுமுதல் தெற்கே வடபெண்ணையாறு வரையிலும், மேற்கே அரபிக்கடல்முதல் கிழக்கே வங்காளக்குடாக்

1. Ind. Anti. Vol VIII P. 237.



மகேந்திரன்
காலத்தில்
தமிழ் நாடு
75
80
15
10
சளுக்கிய இராச்சியம்
வடபெண்ணை
பல்லவ இராச்சியம்
காஞ்சி
மல்லை
காவிரி
திருச்சி
நாகை
சேர நாடு
அரபிக் கடல்
வங்காளக் குடாக்கடல்
மதுரை
பாண்டி நாடு
கொற்கை
குமரி
இலங்கை

கடல் வரையிலும் பரவியிருந்தது. இந்தச் சளுக்கி இராச்சியத்தின் கிழக்குப் பகுதியைப் புலிகேசி தன் தம்பியாகிய குப்ஜவிஷ்ணுவர்த்தனனுக்குக் கொடுத்தான். குப்ஜ விஷ்ணுவர்த்தனன் கலியாணியைத் தலைநகராக் கொண்டிருந்தான். சளுக்கிய நாட்டின் மேற்குப் பகுதியைப் புலிகேசி அரசாண்டான். இவன் தலைநகரம் வாதாபி என்னும் பாதாமி நகரம்.

இவ்வாறு மகேந்திரவர்மன் காலத்தில் வட இந்தியாவை ஹர்ஷவர்த்தனனும் தக்கண இந்தியாவைப் புலிகேசியும் அரசாண்டனர். புலிகேசியின் சளுக்கிய இராச்சியத்திற்குத் தெற்கே மகேந்திரவர்மனுடைய பல்லவ இராச்சியம் இருந்தது. இந்தப் பல்லவ இராச்சியம், தொண்டை மண்டலம் சோழமண்டலம் என்னும் இரண்டு மண்டலங்களைக்கொண்டிருந்தது. அஃதாவது வடக்கே வடபெண்ணையாறு முதல், தெற்கே புதுக்கோட்டை வரையில் இருந்தது. சோழ அரசர், பல்லவ அரசர்களுக்குக் கீழடங்கிச் சிற்றரசராக இருந்தார்கள். உறையூர், திருவாரூர், பழையாறை முதலிய இடங்களில் சோழ குடும்பத்தவர் பல்லவருக்குக் ...ச் சிற்றரசராக அரசாண்டு வந்தனர்.

பல்லவ இராச்சியத்திற்குத் தெற்கே பாண்டிநாடு
மகேந்திரவர்மன் காலத்தில் பாண்டிநாட்டை அரசாண்ட பாண்டியன் சேந்தன் என்பவன். இந்தச் சேந்தன், பாண்டியன் மாறவர்மனுடைய மகன்; பாண்டியன் கடுங்கோனுடைய பேரன். இந்தச் சேந்தன் எ...
ஆண்டு அரசாண்டான் என்பது தெரியவில்லை.
பற்றி வேள்விக்குடிச் செப்பேட்டுச் சாசனம் இவ்வாறு

"மற்றவர்க்கு மருவினிய ஒரு மகனாகி மண்மகளை மறுக்கடிந்து விக்ரமத்தின் வெளிற்பட்டு விலங்கல்வேல் பொறி வேந்தர் வேந்தன் சிலைத் தடக்கைக் கொலைக் களிற்றுச் செழியன் வானவன் செங்கோற் சேந்தன்."[1]

1. pp. 291-309: Epi. Ind. XVII.

இந்தச் செங்கோற் சேந்தனுடைய மகன், நெடுமாறன் என்பவன். "நிறைக் கொண்ட சிந்தையான் நெல்வேலி வென்ற நின்ற சீர் நெடுமாறன்" என்று இவனைச் சுந்தர மூர்த்தி சுவாமிகள் கூறுகிறார். இந்த நெடுமாறன் முதலில் சமண சமயத்தவனாக இருந்தான். பிறகு திருஞான சம்பந்தரால் சைவ சமயத்தவனாக்கப்பட்டான். திருநாவுக்கரசர் பாண்டிநாட்டில் தல யாத்திரை செய்தபோது அவரை வரவேற்றுப் போற்றியவன் இவனே.

பாண்டி நாட்டிற்கு மேற்கே சேரநாடு இருந்தது. இக் காலத்தில் சேர நாட்டை யரசாண்ட சேர மன்னன் பெயர் தெரியவில்லை.

மகேந்திரவர்மன் காலத்தில் பாரத நாட்டின் அரசியல் நிலை இது. இனி, பாரத நாட்டுடன் சேர்ந்ததும் தமிழ் நாட்டின் அருகில் உள்ளதுமான இலங்கைத் தீவின் அரசியல் நிலை இக் காலத்தில் எப்படி இருந்தது என்பதைப் பார்ப்போம்.

தமிழ்நாட்டின் தென் கிழக்கில் சிங்களத் தீவு என்னும் இலங்கைத் தீவு இருக்கிறது. பண்டைக் காலத்தில் இந்தத் தீவிற்கும் தமிழ் நாட்டிற்கும் நெருங்கிய தொடர்பு இருந்தது. ஏனென்றால், பௌத்த சமயம் தமிழ் நாட்டில் சிறப்படைந்திருந்தது. காஞ்சிபுரம், நாகைப்பட்டினம், காவிரிப்பூம்பட்டினம், பூதமங்கலம், போதிமங்கை முதலிய இடங்களில் பௌத்தப் பள்ளிகளும் பௌத்த விகாரைகளும் இருந்தன. ஆகவே பௌத்த நாடாகிய இலங்கையிலிருந்து பௌத்தர்கள் தமிழ் நாட்டிற்கு வருவதும், தமிழ் நாட்டிலிருந்த பௌத்தர்கள் இலங்கைக்குச் செல்வதும் வழக்கமாயிருந்தது. அன்றியும் இலங்கையை ஆண்ட சிங்கள அரசர்கள், அடிக்கடி தமிழ்நாட்டு அரசர்களின் துணையை நாடினார்கள். ஆகவே, சமயச்சார்பாகவும் அரசியல் சார்பாகவும் தமிழ்நாட்டிற்கும் இலங்கைத் தீவுக்கும் நெருங்கிய தொடர்பு இருந்துவந்தது.

இலங்கை வரலாற்றைக் கூறுகிற மகாவம்சம் என்னும் ின் பிற்பகுதியாகிய சூல்லவம்சம் என்னும் நூலின்

44-ஆம் அதிகாரத்திலிருந்து இந்தக் காலத்து அரசியல் நிலையை அறியலாம். அதனைக் கூறுவோம். மகேந்திர வர்மன் காலத்தில் இலங்கைத் தீவின் அரசியல் நிலை, மிகக் குழப்பமான நிலையில் இருந்தது. அரச பதவிக்காகச் சிலர், அடிக்கடி கலகம் உண்டாக்கியும் போர்செய்தும் வந்தபடியினாலே நாட்டில் அமைதி நிலவவில்லை. ஏறக்குறைய கி. பி. 500 முதல் 630 வரையில், அஃதாவது மகேந்திரவர்மன் பல்லவ நாட்டை அரசாண்ட அதே காலத்தில் அக்கபோதி, ஜேட்டதிஸ்ஸன், தாட்டோபதிஸ்ஸன், கஸ்ஸபன் என்னும் நான்கு அரசர்கள் இலங்கைத் தீவின் அரசாட்சிக்காகப் பல முறை போர் செய்தார்கள். இவர்களைப்பற்றிய வரலாறு

இரண்டாம் அக்கபோதி: இவன் ஏறக்குறைய கி. பி. 601 முதல் 611 வரையில் அரசாண்டான். இவன் முதலாம் அக்கபோதியின் மகன். இவனைக் குட்ட ராசன் என்றும் குட்ட அக்கபோதி என்றும் கூறுவர். (குட்ட என்றால் இளைய என்பது பொருள்.) இவன், சங்கபத்திரை என்பவளை மணந்

இவன் காலத்தில் கலிங்கநாட்டு அரசன் அரசு துறந்து ...னைவியுடனும் அமைச்சனுடனும் இலங்கைக்கு வந்து, தூபாராம விகாரையின் தலைவராக இருந்த ஜோதிபாலர் என்னும் பௌத்தபிக்கு விடத்தில் துறவு பூண்டான். இவர்களை அக்கபோதியும் சங்கபத்திரையும் போற்றி வந்தனர். (கலிங்கமன்னன் அரசு துறந்து இலங்கைக்கு வந்ததன் காரணம், சளுக்கிய அரசன் புலிகேசி இவனுடன் போர் செய்து இவனுடைய நாட்டைக் கைப்பற்... ...டதனால் என்று கருதப்ப...

இரண்டாம் அக்கபோதி காலஞ்சென்ற பிறகு, சங்கதிஸ்ஸன் என்பவன் அரசனானான். இவன் ஏறக்குறைய கி. பி. 611 முதல் 617 வரையில் அரசாண்டான். இவன் காலத்தில் ... நாட்டில் இருந்த மொக்கல்லானன் என்பவன் அரசபதவிக்காக ...வனுடன்



இலங்கை
பழைய பிரிவுகள்
யாழ்ப்பாணம்
நாக நாடு
அநுரை
புலத்தி
மாவலி கங்கை
கல்யாணி
சமனொளி
உரோகணம்
கதிர்காமம்

போர்செய்தான். இருவருக்கும் போர் நடக்கும்போது, சங்கதிஸ்ஸனுடைய சேனாபதி சங்கதிஸ்ஸனையே எதிர்த்துப் போரிட்டான். இரண்டு சேனைகளுக்கிடையே அகப்பட்டுக்கொண்ட சங்கதிஸ்ஸன் போர்க்களத்தில் போராடிய போது, அவனுடைய பட்டத்து யானை ஒரு மரநிழலை நாடிச் சென்றது. அப்போது மரக்கிளை தடுத்தபடியினாலே அரசனுடைய கொற்றக்குடை கீழே விழுந்துவிட்டது. அக்குடையை மொக்கல்லானனுடைய வீரர்கள் கொண்டு போய் மொக்கல்லானனிடம் கொடுத்தார்கள். அவன் குன்றின்மேல் ஏறி நின்று அக்குடையை உயர்த்தினான். அது கண்ட சங்கதிஸ்ஸனுடைய சேனைகள் மொக்கல்லானன் வெற்றி பெற்றதாக நினைத்து அவனிடம் போய்விட்டார்கள். இவ்வாறு தனக்குத் தோல்வி ஏற்பட்டதைக் கண்ட சங்கதிஸ்ஸன் தன் மகனுடன் அருகில் இருந்த காட்டினுள் ஓடி ஒளிந்தான்.

வெற்றிபெற்ற மொக்கல்லானன், இலங்கையின் அரசனானான். இவனை மூன்றும் மொக்கல்லானன் என்றும் தல்ல மொக்கல்லானன் என்றும் கூறுவர். இவன் 6 ஆண்டு அரசாண்டான். தோல்வியுற்றுக் காட்டிற்கு ஓடிய சங்கதிஸ்ஸனும் அவன் மகனும் பௌத்தபிக்குகளைபோல வேடம் பூண்டு உரோகண நாட்டிற்குப் போனார்கள். போகும் வழியில் இவர்கள், மொக்கல்லானன் ஆட்களால் அடையாளம் கண்டறியப்பட்டுக் கொல்லப்பட்டனர். இவ்வாறு இறந்த சங்கதிஸ்ஸனுடைய இன்னொரு மகன் ஜேட்டதிஸ்ஸன் என்பவன், மலைய நாட்டில் சென்று மறைந்திருந்தான்.

மொக்கல்லானனுடைய சேனாபதி சிலாமேகவண்ணன் என்பவன். இவன் அரசனைப் பகைத்து உரோகண நாட்டிற்குப் போய்ச் சேனை யொன்றைச் சேர்த்துக்கொண்டு, மலைய நாட்டில் மறைந்திருந்த ஜேட்டதிஸ்ஸனுடன் (இவன் சங்கதிஸ்ஸனுடைய மகன்) நட்புக் கொண்டு அரசனாகிய மொக்கல்லானன் மேல் படையெடுத்துச் சென்றான். மொக்கல்லானன் சிலாமேகவண்ணனைப் போர்க்களத்தில்

எதிர்த்தான். ஆனால் போரில் தோற்று ஓடினான். அவனைச் சிலாமேகவண்ணன் சீயகிரிக்கு அருகில் கொன்றான்.

மொக்கல்லானனைக் கொன்று வெற்றிபெற்ற சிலாமேகவண்ணன், ஜேட்டதிஸ்ஸனை அநுராதபுரத்திற்கு வந்து அரச பதவியை ஏற்றுக்கொள்ளும்படி அழைத்தான். ஆனால், இவனுடைய உண்மையான நோக்கத்தை யறிந்த ஜேட்ட திஸ்ஸன், தன்னைக் கொன்று விடுவான் என்று தெரிந்து, இவனிடம் வராமலே மலையநாட்டிலேயே விட்டான். ஆகவே, சிலாமேகவண்ணன் அரசனானான்.

ஜேட்டதிஸ்ஸனுடைய அம்மாமன் சிறீநாகன் என்பவன் தமிழ் நாட்டிற்கு வந்து ஒரு சேனையைத் திரட்டிக் கொண்டு இலங்கைக்குப் போய்ச் சிலாமேக வண்ணனுடன் போர் செய்தான். ஆனால், இப் போரிலும் சிலாமேகவண்ணனே வெற்றி பெற்றான். இவன் ஒன்பது ஆண்டு அரசாண்டான். கடைசியில் நோய்வாய்ப்பட்டு இறந்தான். இவனுக்குப் பிறகு அக்கபோதி என்பவன் அரசனானான். இவனை மூன்றும் அக்கபோதி என்று கூறுவர். போதி என்றும் இவனுக்குப் பெயர்

அக்கபோதிக்கு மானு என்னும் பெயருள்ள தம்பி யொருவன் இருந்தான். அக்கபோதி, மானுவைத் துணை [illegible]

னான். அக்கபோதி நெடுங்காலம் அரசாளவில்லை. அவ [illegible] வந்த ஆறுவது [illegible] ல். ஜேட்டதிஸ்ஸன் (சங்கதிஸ்ஸனுடைய மகன்) சேனையொன்றைத் திரட்டிக்கொண்டு தாட்டாசிவன் என்னும் அமைச்சனுடன் அநுராதபுரத்தின்மேல் படையெடுத்து வந்தான். அக்கபோதி, ஜேட்டதிஸ்ஸனுடன் போர்செய்து தோற்றான். தோற்று மாறுவேடம் பூண்டு தமிழ்நாட்டில் அடைக்கலம் புகுந்தான்.

வெற்றிபெற்ற ஜேட்டதிஸ்ஸன் இலங்கையின் அரசனானான். இவனை மூன்றும் ஜேட்டதிஸ்ஸன் என்பர். இவ

னும் நெடுங்காலம் அரசாளவில்லை. ஏனென்றால், போரில் தோற்றுத் தமிழ்நாட்டிற்கு ஓடிய அக்கபோதி தமிழச் சேனையொன்றைத் திரட்டிக்கொண்டு இலங்கைக்கு வந்து ஜேட்டதிஸ்ஸனை எதிர்த்தான். இவன் அழைத்துவந்த தமிழப்படையின் தலைவன் **வெலுப்பன்** என்பவன். வெலுப்பன் என்பது வேலப்பன் என்பதன் திரிபாக இருக்கக் கூடும்.

காலவாபி என்னும் இடத்திலே அக்கபோதி அழைத்துவந்த தமிழச்சேனையை ஜேட்டதிஸ்ஸன் எதிர்த்தான். அப்போது வெலுப்பன், ஜேட்டதிஸ்ஸனுடன் போர்செய்து அவனைக் கொல்ல முயற்சித்தான். வெலுப்பனால் தான் உயிர் இழப்பது உறுதியென்றறிந்த ஜேட்டதிஸ்ஸன் தன் உடைவாளினால் தன்னைத்தானே குத்திக் கொண்டு இறந்தான். ஆகவே அக்கபோதி மறுபடியும், இரண்டாம் முறையாகத் தமிழப்படையின் உதவியினால் இலங்கைக்கு அரசனானான். இவன் அழைத்துவந்த தமிழப் படையினரில் பெரும்பாலோர் அநுராதபுரத்திலே தங்கி விட்டார்கள். இவன் முன்போலவே தன் தம்பியாகிய மானு என்பவனை துணைவேந்தனாக்கி இலங்கையை அரசாண்டான். ஆனால், மானு அரண்மனையின் அந்தப்புரத்திலே கூடாவொழுக்கமாக நடந்துகொண்டபடியால் அவன் சிரச்சேதம் செய்யப்பட்டான். ஆகவே மற்றொரு தம்பியாகிய **கஸ்ஸபன்** என்பவனைத் துணைவேந்தனாக்கினான்.

போர்க்களத்திலே உயிரைவிட்ட ஜேட்டதிஸ்ஸனுடைய அமைச்சனான **தாட்டாசிவன்,** தன்னுடைய அரசன் இறந்துவிட்டபடியாலும், அக்கபோதி வெற்றியடைந்தபடியாலும் தனக்கு இலங்கையில் செல்வாக்கு இல்லையென்பதையறிந்து தமிழ்நாட்டில் சென்று அடைக்கலம் புகுந்தான். அடைக்கலம் புகுந்த தாட்டாசிவன் அக்கபோதியை வென்று இலங்கையரசைத் தான் அடைவதற்குச் சமயம் பார்த்திருந்தான். இச்சமயத்தில் மானு என்னும் உபராசன் கொல்லப்பட்டான் என்பதைக் கேள்விப்பட்டு உடனே புதியதோர் தமிழச்சேனைகளை அழைத்

துக்கொண்டு இலங்கைக்குச் சென்று அநுராதபுரத்திற்கு அருகில் உள்ள திந்திணி என்னும் ஊரில் பாசறையமைத்தான்.

தாட்டாசிவன் தமிழப்படையுடன் தமிழ்நாட்டிலிருந்து போருக்கு வந்த செய்தியை அறிந்த அக்கபோதி, சேனையுடன் சென்று அவனுடன் போர்செய்தான். இந்தப் போரில் தாட்டாசிவன் வெற்றியடைந்து அக்க



போதி தோல்வியுற்றான். தோல்வியடைந்த அக்கபோதி, முடி முதலிய அரச சின்னங்களையெல்லாம் விட்டுவிட்டு, ஏகாவலி என்னும் பெயருள்ள முத்துமாலை ஒன்றைமட்டும் எடுத்துக்கொண்டு தமிழ்நாட்டிற்கு ஓடினான். தமிழச் சேனையினால் வெற்றிபெற்று அரசாட்சியைக் கைப்பற்றிய தாட்டாசிவன், ஏகாவலி என்னும் முத்துவடம் ஒன்று தவிர மற்ற அரச சின்னங்களை அணிந்து

அரசனானான். அரசனான பிறகு தாட்டாசிவன் தன் பெயரைத் தாட்டோபதிஸ்ஸன் என்று மாற்றிக்கொண்டான். இவன் தமிழ்நாட்டில் எங்கிருந்து தமிழச்சேனைகளை அழைத்துவந்தான் என்பது தெரியவில்லை. பாண்டிய நாட்டிலிருந்து அழைத்துவந்திருக்கக்கூடும்.

தோற்று ஓடிய அக்கபோதி தமிழ்நாட்டிலே எந்த அரசனிடம் அடைக்கலம் புகுந்தான் என்பது தெரியவில்லை. ஆனால், தமிழப்படையை அழைத்துக்கொண்டு இலங்கைக்கு வந்து தாட்டோபதிஸ்ஸனுடன் போர் செய்தான். இந்தப் போரில் அக்கபோதி வெற்றியடைந்து தாட்டோபதிஸ்ஸன் தோல்வியடைந்தான். ஆகவே, அக்கபோதி மூன்றாவது முறையாக மீண்டும் அரசனானான். போரில் தோற்று அரசை இழந்த தாட்டோபதிஸ்ஸன் மீண்டும் படைதிரட்டத் தமிழ்நாடு சென்றான். இவ்வாறு தாட்டோபதிஸ்ஸனும் அக்கபோதியும் பலமுறை போர் செய்து, தோற்பதும் வெல்வதும் அரசாள்வதும் அரசு துறப்பதுமாக மாறிமாறி இலங்கையை அரசாண்டார்கள். இவர்கள் தமிழ்நாட்டிலிருந்து அடிக்கடி போர்வீரர்களை அழைத்துக்கொண்டு வந்தபடியால், தமிழவீரர்கள் அநுரையில் அதிகமாகக் குடியேறினார்கள். அநுராதபுரத்தில் தமிழர்களின் செல்வாக்கு அதிகமாயிற்று.

அக்கபோதியும் தாட்டோபதிஸ்ஸனும் மாறிமாறிப் போர்செய்துகொண்டிருந்தபடியால், போரின் காரணமாக நாட்டிலே வறுமை உண்டாயிற்று. நாட்டுமக்கள் பொருளை இழந்து துன்பப்பட்டனர். நிலபுலங்கள் விளையாமல் மக்கள் அல்லல் அடைந்தார்கள். அடிக்கடி போர் செய்தபடியினாலே அரசர்களிடம் பொருள் இல்லாமற் போயிற்று. ஆகவே, அவர்கள் பௌத்தப்பள்ளிகளிலும் விகாரைகளிலும் இருந்த பொன்னையும் பொருளையும் கவர்ந்து அப் பொருள்களைப் போருக்காகச் செலவுசெய்தார்கள்.

தாட்டோபதிஸ்ஸன் மகா விகாரை, அபயகிரி விகாரை, ஜேதவன விகாரை என்னும் விகாரைகளில் இருந்த பொன்

ளையும் பொருளையும் கவர்ந்துகொண்டதோடு, தாகோப (தாதுகர்ப்பம்) என்னும் பௌத்தப்பள்ளிகளில் இருந்த விலையுயர்ந்த பொருள்களையும், பொன் நகைகளையும், பொன்னால் செய்யப்பட்டிருந்த புத்த விக்கிரகங்களையும் கவர்ந்துகொண்டான். தூபாராமம் என்னும் பள்ளியில் இருந்த பொன் கலசங்களையும் அதைச்சேர்ந்த சேதியத்தில் அமைத்திருந்த நவரத்தினங்கள் பதித்த பொற்குடையையும் கவர்ந்துகொண்டான். இவ்வாறு இவன் பௌத்தப் பள்ளிகள், பௌத்த விகாரைகள் முதலியவற்றில் இருந்த செல்வங்களைக் கவர்ந்து அவைகளைப் போருக்காகச் செலவு செய்தான்.

இவ்வாறே அக்கபோதியும் புத்த விகாரைகளில் ந்த பொருள்களைக் கவர்ந்துகொண்டான். அக்கபோதியின் தம்பியாகிய கஸ்ஸபன் (உபராசன்), தூபாராம சேதியத்தைத் திறந்து, அதற்கு முன்னைய அரசர்கள் தானமாக வழங்கியிருந்த பொன்னையும் பொருளையும் கவர்ந்துகொண்டான். தக்கிண விகாரையிலிருந்த சேதியங்களுக்குரிய பொன்னையும் நிதிகளையும் கவர்ந்தான்.

இவ்வாறு இந்த அரசர்கள் தமக்குள் அடிக்கடி செய்து வந்த போர்களுக்காகப் பௌத்த மடங்களையும் பௌத்தக் கோயில்களையும் கொள்ளையிட்டு அவற்றின் பொருள்களைக்

கடைசியாகத் தாட்டோபதிஸ்ஸன் அக்கபோதியை வென்று மீண்டும் அரசனானான். தோற்றுப்போன அக்கபோதி, உரோகண நாட்டிற்குச் சென்றான்; அங்கே நோய்வாய்ப்பட்டு இறந்தான். அக்கபோதி இறந்த பிறகும் தாட்டோபதிஸ்ஸன் அமைதியாக அரசாள முடியவில்லை. ஏனென்றால், அக்கபோதியின் தமபியும் உபராசனுமாக இருந்த கஸ்ஸபன் படையெடுத்து வந்து போர்செய்து தாட்டோபதிஸ்ஸனை வென்றான். போரில் தோற்ற தாட்டோபதிஸ்ஸன் பொன்முடி மணிவடம் முதலிய அரச சின்னங்களைத் தன்னுடன் எடுத்துக்கொண்டு போய்விட்

டான. வெறறுபெறறு கஸ்ஸபன், அரச அணியாமலே இலங்கைக்கு மன்னனானான் கஸ்ஸபனை, இரண்டாங் கஸ்ஸபன் என்று சரித்திர நூலோர் கூறுவர்.

கஸ்ஸபன ... அரசனான சில ஆண்டு கழித்துத் தோற்று ஓடிய தாட்டோபாதிஸ்ஸன் படை திரட்டிக்கொண்டு போருக்கு வந்தான். கஸ்ஸபன் அவனை எதிர்த்துப் போர்செய்தான். இந்தப் போரில் தா டாப திஸ்ஸன இறந்துபோனான். ஆகவே, கஸ்ஸபனே இலங்கையை அரசாண்டுவந்தான்.[1]

போரில் இறந்த தாட்டோபாதிஸ்ஸனுடைய தங்கை மகனும் உபராசனாக இருந்தவனும் ஆன ஹத்ததாதன் என்பவன் போர்க்களத்தில் உயிர் தப்பிப்பிழைத்துத் தமிழ் நாட்டிற்கு ஓடிவந்து அடைக்கலம்புகுந்தான்.

மகேந்திரவர்மன் காலத்திலே இலங்கைத் தீவின் அரசியல் நிலை இது. இதனால், இலங்கை அரசியலில் மறைமுகமாகத் தமிழ்நாட்டின் தொடர்பும் இருந்துவந்ததை அறிகிறோம். அக்காலத்தில் இலங்கையின் தலைநகரமான அநுராதபுரத்தில் தமிழ் வீரர்களின் செல்வாக்கும் ஆதிக்கமும் அதிகமாக

1. இந்தக் கஸ்ஸபன் மகன் மானவம்மா என்பவன். மானவம்மா பிற்காலத்தில் அரசாட்சி இழந்து, காஞ்சிபுரத்திற்கு வந்து, மகேந்திரவர்மன் மகனான மாமல்லன் என்னும் நரசிம்ம வர்மனிடம் அடைக்கலம் புகுந்தான்.

௩. சமயநிலை

1. சமண சாக்கிய மதங்கள்

மகேந்திரவர்மன் காலத்திலே தமிழ்நாட்டிலே சமண சமயமும் சாக்கிய மதமும் செழித்திருந்தன. சமண சமயம் என்பது, ஆருகத மதம்; அஃதாவது ஜைன சமயம். சாக்கிய மதம் என்பது, பௌத்த சமயம். இந்த இரண்டு சமயங்களும் சேர சோழ பாண்டியநாடு என்னும் மூன்று தமிழ்நாடுகளிலும் பரவி நிலைகொண்டிருந்தன. இந்த மதங்களை மக்கள் பெருவாரியாக ஆதரித்தார்கள். சமணருடைய பள்ளிகளும் பாழிகளும், பௌத்தருடைய பள்ளிகளும் விகாரைகளும் நாடெங்கும் ஊரெங்கும் நிறைந்திருந்தன. சமணத் துறவிகளும் பௌத்தப் பிக்குகளும் எங்கும் நிறைந்திருந்தனர். இந்த நிலையைச் சேக்கிழார் தமது பெரியபுராணத்தில் நன்றாக விளக்கிக் கூறுகிறார். ஞானசம்பந்தருடைய தந்தையாராகிய சிவபாத விருதயர், நாட்டில் சைவம் குன்றியிருந்ததையும் சமண சாக்கியம் பெருகியிருந்ததையும் கண்டு மனம்வருந்தினார் என்று சேக்கிழார் இவ்வாறு கூறுகிறார் :—

மேதினிமேல் சமண்கையர் சாக்கியர்தம் பொய்ம்மிகுத்தே
ஆதியரு மறைவழக்கம் அருகியரன் அடியார்பால்
பூதிசா தனவிளக்கம் போற்றல்பெறு தொழியக்கண்டு
ஏதமில்சீர்ச் சிவபாத இருதயர்தாம் இடருழந்தார்.

(திருஞான ம் - கஅ.)

[illegible]யா[illegible] ம[illegible]ரவர்மன் காலத்தில் இருந்தவர். ஆனால், ஞானசம்பந்தர் இவருக்கு மகனாக இன்னும் பிறக்கவில்லை. நாவுக்கரசரும் இக்காலத்தில் இருந்தவராவர். தொண்டைநாட்டையும் சோழநாட்டையும் அரசாண்ட மகேந்திரவர்மனே சமண சமயத்தவனாகத்தான். பிற்காலத்தில் இவன் நாவுக்கரசரால் சைவசமயத்தில் சேர்க்கப்பட்டான்.

இவ்வாறே பாண்டியநாட்டிலும் சமணசமயம் பெருகிச் சைவசமயம் குன்றியிருந்ததைச் சேக்கிழார் கூறுகிறார்:—

பூழியர் தமிழ்நாட் டுள்ள பொருவில்சீர்ப் பதிகள் எல்லாம்
பாழியும் அருகர் மேவும் பள்ளிகள் பலவும் ஆகிச்
சூழிருட் குழுக்கள் போலத் தொடைமயிற் பீலி யோடு
மூழிநீர் கையிற் பற்றி அமணரே யாகி மொய்ப்ப."

"பறிமயிர்த் தலையும் பாயும் பீலியும் தடுக்கும் மேனிச்
செறியுமுக் குடையு மாகித் திரிபவர் எங்கும் ஆகி
அறியுமச் சமய நூலின் அளவினில் அடங்கிச் சைவ
நெறியினிற் சித்தஞ் செல்லா நிலைமையில் நிகழுங் காலை."

(திருஞானம் - ௬0௧-௨.)

இக்காலத்தில் பாண்டியநாட்டை அரசாண்ட மன்னன் செங்கோற்சேந்தன்.

இவ்வாறு தமிழ்நாடு முழுவதும் சமணசமயமும் பௌத்தமதமும் பெருகிச் செழித்திருந்தன; சைவ வைணவ சமயங்கள் குன்றியிருந்தன.

2. சைவ வைணவ மதங்கள்

சமண சாக்கிய மதங்கள் சிறப்புற்றிருந்தன என்று சொன்னால், மற்றச் சைவ வைணவ மதங்கள் இல்லாமற் போயின என்று கருதக்கூடாது. அக்காலத்தில் சைவ வைணவ சமயங்களும் இருந்தன. சைவக் கோயில்களும் வைணவக் கோயில்களும் ஆங்காங்கே தமிழ்நாட்டில் இருந்தன. ஏன்? சைவ மடங்கள்கூட சிற்சில இடங்களில் அக்காலத்தில் இருந்தன என்பதற்குச் சான்றுகள் உள்ளன. ஆனால், சைவ வைணவச் சமயங்கள் சிறப்புப் பெறாமல் இருந்தன.

சைவ சமயப் பிரிவுகள்

அக்காலத்திலே சைவசமயத்தில் காபாலிகம், பாசுபதம், பைரவம் முதலான பிரிவுகள் இருந்தன. என்னை?

"விரிசடை விரதிகள் அந்தணர் சைவர் பாசுபதர் கபாலிகள்
தெருவினிற் பொலியும் திருவாரூர் அம்மானே."

என்றும்,

"வித்தகக் கோல வெண்டலை மாலை விரதிகள்
அத்த ஞரூர் ஆதிரை நாளால் அதுவண்ணம்."

என்றும்,

"தலையிற் றரித்தவென்புத் தலைமயிர் வடமும்பூண்ட
விலையிலா வேடர்வீழி மிழலையுள் விகிர்த ஞரே."

என்றும்,

"தலையறுத்த மாவிரதம் தரித்தான் தன்னை."

"பசுபதியைப் பாசுபத வேடத்தானை."

"பஞ்சவடி[1] மார்பினானை."

என்றும் மகேந்திரவர்மன் காலத்தில் இருந்த திருநாவுக்கரசர் தமது தேவாரத்தில் கூறுவது காண்க. மகேந்திர வர்மனும் தான் எழுதிய மத்தவிலாசப் பிரஹஸனம் என்னும் நூலிலே, திருவேகம்பத்தில் காபாலிகர், பாசுபதர் இருந்த செய்தியைக் கூறுகிறான். இவற்றினால் அக்காலத்தில் இந்த மதங்கள் இருந்தன என்பது தெரிகிறது.

3. பக்தி இயக்கம்

பௌத்த சமண மதங்கள் பெருகிச் சைவ வைணவ மதங்கள் குன்றியிருந்தபோதிலும் அக்காலத்தில் பக்தியியக்கம் தோன்றியிருந்தது. பிற்காலத்திலே சைவ வைணவ சமயங்கள் செழித்து வளரவும் பௌத்த சமண மதங்கள் குன்றி மறையவும் காரணமாக இருந்தது இந்தப் பக்தி இயக்கந்தான். சைவ நாயன்மார்களும் வைணவ அடியார்களும் இந்தப் பக்தி இயக்கத்தைப் பரவச் செய்தார்கள். மகேந்திரவர்மன் காலத்தில் சமயப் பூசல்

---

1. பஞ்சவடி என்பது மாவிரத சமயத்தார் பூணும் மயிர்ப்

கள் மும்முரமாக நிகழ்ந்தன. சமண சமயம், பௌத்த மதத்தையும் சைவ வைணவ சமயங்களையும் தாக்கிற்று. அவ்வாறே பௌத்த மதம் சமணமதத்தையும் சைவ வைணவ மதங்களையும் தாக்கிற்று. அங்ஙனமே சைவ வைணவ சமயங்கள் சமண சமயத்தையும் பௌத்த மதத்தையும் தாக்கின. நாளடைவில் பக்தி இயக்கம் வெற்றி பெற்றது. சமண பௌத்த மதங்கள் குன்றத்

மகேந்திரவர்மன் காலத்தில் பௌத்த மதத்தையும் சமண மதத்தையும் எதிர்த்துச் சைவசமயத்தை ஆதரித்துப் பக்தியைப் பரவச்செய்தவர் திருநாவுக்கரசு நாயனார். இவர் சைவசமயப் பிரசாரம் செய்யத்தொடங்கியது இவருடைய வயோதிக காலத்தில். முதன்முதலாகச் சைவ சமயப்பிரசாரம் செய்யக்கிளம்பி ஊர்ஊராகச் சுற்றுப் பிரயாணம்செய்து சைவத்தை நிலைநாட்டியவர் இவரே. ஏறக்குறைய இருபத்தைந்து ஆண்டுகளாக இவர் தமது முதுமைக்காலத்தில் சமயத்தொண்டு செய்து தமது 81-ஆவது வயதில் சிவகதியடைந்தார்.

4. திருநாவுக்கரசர்

திருநாவுக்கரசர், திருமுனைப்பாடி நாட்டில் திருவாமூர் என்னும் ஊரில் இருந்த புகழனார், மாதினியார் என்பவர்களுக்கு மகனாகப் பிறந்து மருணீக்கியார் என்னும் பெயருடன் வளர்ந்து வந்தார். சைவசமயத்திலே பிறந்த இவர் இளமையில் கல்வியை நன்குகற்றுத் தேர்ந்தார். வாலிபப் பருவத்திலே பெற்றோரை இழந்தார். உண்மைச் சமயம் எது என்பதை யறிய ஆவல் கொண்டு பல சமயக் கொள்கைகளை ஆராய்ச்சி செய்தார். அக்காலத்தில் பாடலிபுரம்[1] என்னும் இடத்தில் இருந்த, பேர்போன சமண

1. பாடலிபுரம், தென் ஆர்க்காடு மாவட்டத்தில் இருக்கிறது. இங்கிருந்த சமணப்பள்ளி அக்காலத்தில் பேர்போன மடமாக இருந்தது. இந்தச் சமணப் பள்ளியில்தான் லோகவிபாகம் என்னும் நூலைச் சர்வநந்தி என்பவர் சக ஆண்டு 380 இல் எழுதி

மடத்தில் சேர்ந்து சமண சமய நூல்களையெல்லாம் துறை போகக் கற்றுத் தேர்ந்தார்.

இவருடைய சமய அறிவையும் கல்வி யறிவையும் கண்ட சமணர்கள் இவரைத் தம் மதகுருவாக அமைத்துத் தருமசேனர் என்னும் பெயர் கொடுத்துப் போற்றினார்கள். தருமசேனர் பாடலிபுரத்துப் பள்ளியிலே சமண சமயத் தலைவராக இருந்தார். நெடுங்காலம் சமண குருவாக இருந்து தமது வாழ்நாளின் பெரும்பாகத்தை அங்கே கழித்தார்.

தருமசேனருடைய முதுமைப் பருவத்தில் இவருக்குக் கொடிய சூலைநோய் கண்டது. அந்நோய் நாளுக்கு நாள் கடுமையாக இருந்தது. மணி மந்திர மருந்துகளினாலும் இவருடைய சூலைநோய் தீரவில்லை. நோயின் துன்பத்தை இவர் தமது திருவதிகைப் பதிகத்தில் நன்கு விளக்கிக் கூறுகிறார். "தோற்றாதென் வயிற்றி னகம்படியே குடரோடு தொடக்கி முடக்கியிட ஆற்றேன்." என்றும், "சுடுகின்றது சூலை" என்றும், "பயந்தே யென்வயிற்றி னகம்படியே பறித்துப் புரட்டி யறுத்து ஈர்த்திட நான் அயர்ந்தேன்" என்றும், "கலித்தே யென் வயிற்றி னகம் படியே கலக்கிமலக்கிட்டுக் கவர்ந்து தின்ன அலுத்தேன்" என்றும் இவர் கூறுவதிலிருந்து இந்நோயின் கொடுமையை நன்கறியலாம்.

இந்நோய் தீராதென்று கைவிடப்பட்ட இவர், நோய் பொறுக்க முடியாத நிலையில், தம் தமக்கையாரான திலகவதியார் இருந்த திருவதிகை என்னும் ஊருக்குச் சென்று அவரைக்கண்டார். தமக்கையார், சிவபெருமானை

முடித்தார். அஃதாவது கி. பி. 458-இல் சிம்மவர்மன் என்னும் பல்லவ மன்னன் காஞ்சிபுரத்தை அரசாண்டிருந்த காலத்தில் அவ்வரசனுடைய 22-ஆவது ஆட்சி ஆண்டில் லோகவிபாகம் பாகத மொழியிலிருந்து வடமொழியில் மொழிபெயர்க்கப் பட்டது. (Mys. Archl. Rep. 1909-10, Para. 112) அதாவது நாவுக்கரசர் பிறப்பதற்கு 160 ஆண்டுகளுக்கு முன்னே இந்நூல் இந்தப் பள்ளியில் மொழி பெயர்க்கப்பட்டது.

வழிபட்டால் சூலைநோய் தீரும் என்று கூற இவர் சைவசமயத்தில் சேர்ந்து சிவபெருமானை வழிபட்டார். அப்போது அவருக்கிருந்த சூலைநோய் நீங்கி விட்டது. அதுமுதல் இவர் சைவசமயத்தையும் பக்தி யியக்கத்தையும் பரவச் செய்வதில் தமது வாழ்நாட்களைக் கழித்தார். தருமசேனர், சமண சமயத்தை விட்டுச் சைவ சமயத்திற்கு வந்த பின்னர், இவருக்குத் திருநாவுக்கரசர் என்னும் பெயர் சூட்டினார்கள். வடமொழியாளர் திருநாவுக்கரசர் என்னும் பெயரை வாகீசர் என்று மொழி பெயர்த்துக் கொண்டார்கள்.

திருநாவுக்கரசர் சைவசமயத்திற்கு வந்து பக்தி இயக்கத்தைப் பிரசாரம் செய்தது, இவரது இளமை கழிந்த முதுமைப் பருவத்திலாகும். இதனை இவர் தமது பாடல் களிலே குறிப்பிட்டிருக்கிறார். இவர் சமணசமயத்தை விட்டுச் சைவசமயத்தில் புகுந்தபோது இவருக்கு வயது ஐம்பதைந்து அல்லது அறுபது க்கலாம.

“ முன்பெலாம் இளைய காலம்
மூர்த்தியை நினையா தொழிக்
கண்கணை இருமி நாளும்
கருத்தழிந் தருத்த மின்றிப்
பின்பகல் உணங்கல் அட்டும்
பேதைமார் போன்றேன் உள்ளம்
அன்பனாய் வாழ மாட்டேன்

(திருவதிகை வீரட்டம். நேரிசை. க.)

“ பாலனாய்க் கழிந்த நாளும்
பனிமலர்க் கோதை மார்தம்
மேலனாய்க் கழிந்த நாளும்
மெலிவொடு மூப்பு வந்து
கோலனாய்க் கழிந்த நாளும்
குறிக்கோளி லாது கெட்டேன்
ஏலாம் பழன வேலித்
திருக்கொண்டீச் சரத்து ளானே ”
(திருக்கொண்டீச்சரம். திருநேரிசை. க.)

மகேந்திர வர்மன்

ன்ற விளைவை நோக்கி
வெண்மயிர் விரவி மேலும்
மூளைக்கின்ற வினையைப் போக
முயல்கின்றேன் இயல வெள்ளந்
திளைக்கின்ற முடியி னான்றன்
திருவடி பரவ மாட்டாது
இளைக்கின்றேன் இருமி யூன்றி
என்செய்வான் தோன்றி னேனே.”

கோதை நல்லார்
தங்களோ டின்ப மெய்த
மல்லேன் எந்தாய்
செய்வான் னே.

‘ தடியொடுங்கி வந்தடைந்தேன்
ரிப்பாய் பிழைப்ப வெல்லாம்.”

என்று இவரே தம்மைப்பற்றிக் கூறுவது காண்க. வ வாறாக, சமணசமயத்தைவிட்டுச் சைவமதத்தைச் சேர்ந்த பின்னர், திருநாவுக்கரசர் திருமணம் செய்து கொண்டு மக்களைப் பெற்றுக் குடும்பத்தோடு வாழ்ந்திருந்து பின்னர் மீண்டுந் துறவுபூண்டிருக்க வேண்டும் என்று ஒரு ஆராய்ச்சிக்காரர் எழுதுகிறார்.[1]

இதற்கு இவர் காட்டும் சான்று என்ன வென்றால்,

“மக்களே மணந்ததார மவ்வயிற் றவரை யோம்புஞ்
சிக்குளே யழுந்தி யீசன் றிறம் படேன் தவமதோரேன்.”

என்னும் குறைந்த நேரிசை (உ) செய்யுளாகும். இதனை ஆதாரமாகக் கொண்டு, நாவுக்கரசர் திருமணம் செய்து கொண்டு பிள்ளைப்பேற்றுடன் வாழ்ந்தார் என்று இவர் கூறுவது பொருந்தாது. நாவுக்கரசர் திருமணஞ் செய்து

1. Origin and early History of Saivism in South India. by C. V. Narayana Ayyar, Page, 390.

கொண்டார் என்று பெரியபுராணம் கூறவில்லை. மேலும் இளமை கழிந்த முதிய வயதில் இவர் சைவரானார் என்பதே துணிபு. திருமணஞ்செய்து இல்லறத்தில் வாழ்ந்திருந்தார் என்பதற்கு இவர் மேற்கோள் காட்டுகிற அதே குறைந்த நேரிசைப் பதிகத்தின் கூ-ஆவது பாடலில்,

“ தளையவிழ் கோதை நல்லார் தங்களோ டின்ப மெய்த
இளையனு மல்லே னெந்தாய் என் செய்வான் தோன்றி
”

என்று கூறுவது இக்கருத்துக்கு மாறுப

நாவுக்கரசர் சமணசமயத்தைவிட்டுச் சைவசமயத்துக்கு வந்த செய்து கொணடிருந தால், அதனைத் தவறாமல் பெரியபுராணம் கூறுமன்றோ? அவ்வாறு கூறாதபடியினாலும், சைவசமயத்துக்கு வந்த போது முதிய வயதினராகையினாலும் இவர் திருமணஞ் செய்துகொண்டார் என்பது சிறிதும் பொருந்தாது. அப்படியானால், நாவுக்கரசர் வாக்கினாலேயே அகச்சான்று இருக்கிறதே; ஆகவே, மணம் செய்து கொண்டார் என்பது உண்மைதானே என்று மக்கள் கருதுவர். அவ்வாறு கருதுவது தவறு. அடியார்கள், மனைவிமக்கள் இல்லாதவர்களாயிருந்தாலும் குடும்பப்பாசம் உடையவர் போல ஆண்டவனிடம் முறையிடுவது மரபு. இந்த மரபை யொட்டிப் பாடிய ஒரு செய்யுளை மட்டும் ஆதாரங் காட்டி, இவர் மணஞ்செய்துகொண்டு வாழ்ந்தார் என்று கூறுவது பொருந்தாது. ஏனைய சான்றுகள், மணஞ் செய்து கொண்டார் என்பதற்கு மாறுபடுகின்றன. கவி மரபு பாராமல், ஏனைய சான்றுகளையும் ஆராயாமல் ஏதோ ஒரு ஆதாரத்தை மட்டும் மேற்கோள் காட்டி ஒரு கருத்தை நிலை நாட்ட “ஆராய்ச்சி”யாளர்கள் முற்படுவார்களானால், அது பெருங்கேடாக முடியும். உதாரணமாக ஒன்று கூறுவோம்:

காரைக்கால் அம்மையார் என்பவர் பெண்பாலார் என்பது எல்லோரும் அறிந்த செய்தி. இவ்வம்மையார் இயற்றியுள்ள திருவிரட்டைமணிமாலையில்,

> னியா தொழுதிகண் டாய்நெஞ்ச மேயங்கோர் தஞ்சமென்று
> மனையா ளையுமக்க டம்மையுந் தேறியோ ராறுபுக்கும்
> நனையார்ச் சடைமுடி நம்பனந் தாதைநொந் தாதசெந்தீ
> யனையா னமரர் பிரானண்ட வாண னடித்தலமே.

என்று பாடியுள்ளார். பெண்பாலாராகிய அம்மையார், இப்பாடலில் மனையாளையும் மக்கள்தம்மையும் என்று கூறியுள்ளது கொண்டு, இது அவரே கூறிய அகச்சான்று ஆகையால், "காரைக்காலம்மையார் பெண்பாலார் அல்லர்; ஆண் மகன். அவர் பெண்ணாக இருந்தால் கணவனையும் மக்களையும் என்று கூறியிருப்பார். அப்படிக் கூறாமல் மனையாளையும் மக்களையும் என்று கூறியபடியால் காரைக் கால் அம்மையார் ஆண்மகனே" என்று ஓர் ஆராய்ச்சி யாளர் கிளம்புவாரானால் எப்படியிருக்கும்! ஆகவே கவி மரபாகவோ அன்றி வழுவமைதியாகவோ கவிஞர்கள் கூறிய செய்திகளைப் பகுத்தறிவு கொண்டும் ஏனைய சான்று கொண்டும் ஆராயாமல் மனம்போனவாறு கூறத்துணிவது உண்மைக்கு மாறுபட்ட தவறான முடிபாகும். நிற்க.

சமணசமயத் தலைவராக இருந்தபோது தருமசேனர் என்று பெயர்பெற்றிருந்த மருணீக்கியார், சைவசமயத்தில் சேர்ந்தபோது நாவுக்கரசர் என்னும் பெயர் பெற்றார் என்று கூறினோம். பிற்காலத்திலே இவருடன் சேர்ந்து சைவசமயத்தைப் பரப்பிய இவருக்கு மிக இளையரான ஞானசம்பந்தர், இவரை முதன்முதல் கண்டபோதும் அதன் பிறகும் இவரை "அப்பரே" என்று அழைத்தார். அதாவது தந்தைபோன்ற பெரியவர் என்பது பொருள். ஆகவே, சம்பந்தர் காலத்தில் நாவுக்கரசர் மிக்க வயது முதிர்ந்தவராக இருந்தார் என்பது இதனால் தெரிகிறது.

5. மகேந்திரன் சைவனானது

நாவுக்கரசர், சமணசமயத்தவனாக இருந்த மகேந்திர வர்மனைச் சைவசமயத்தில் சேர்த்தார் என்று கூறுவர். இதற்குப் பெரியபுராணச் செய்யுள் ஆதாரமாகக் காட்டப் படுகிறது. ஆனால், பெரியபுராணம் மகேந்திரன் பெயரைக்

கூறவில்லை; பல்லவ அரசர்களின் பொதுப்பெயராகிய காடவன், பல்லவன் என்னும் பெயர்களை மட்டும் கூறுகிறது. காடவ அரசன் சைவசமயத்தைச் சேர்ந்தபிறகு பாடலிபுரத்திலிருந்த சமணப்பள்ளியை, (அப்பர் தருமசேனர் என்னும் பெயருடன் தங்கியிருந்த அதே சமணப் பள்ளியை) இடித்து அந்தக் கற்களைக் கொண்டுபோய் திருவதிகைச் சிவன் கோயிலிலே குணதரவீச்சரம் என்னும் கோயிலைக் கட்டினான் என்று பெரியபுராணம் கூறுகிறது.

வீடறியாச் சமணர்மொழி பொய்யென்று மெய்யுணர்ந்த
காடவனும் திருவதிகை நகரின்கட் கண்ணுதற்குப்
பாடலிபுத் திரத்தில்அமண் பள்ளியொடு பாழிகளும்
கூடஇடித் துக்கொணர்ந்து குணதரவீச் சரம்எடுத்தான்

என்பது அச்செய்யுள்.

இப் பெரியபுராணச் செய்யுளில் சேக்கிழார் குணதரவீச்சரம் என்று கூறியுள்ளார். குணதரன் என்னும் அரசன் கட்டிய கோயில் என்பது இதன் பொருள். குணதரன் என்னும் பெயர் குணபரன் என்னும் பெயரின் மரூஉ என்றும், ஆகவே குணபரன் குணதரன் என்னும் இரண்டு சொற்களும் ஒரே அரசனைக் குறிக்கின்றன என்றும், இப் பெயர்கள் மகேந்திரவர்மனுடைய சிறப்புப் பெயர்கள் என்றும், ஆகவே அப்பரால் சைவனாக்கப்பட்டவன் மகேந்திரவர்மன்தான் என்றும், அவ்வரசன் தனது சிறப்புப் பெயராகிய குணதரன்[1] (குணபரன்) என்னும் பெயரால்

1. பெரியபுராணம் பாடிய சேக்கிழார் குணதரவீச்சரம் என்று கூறியிருக்கிறார். பெரியபுராணப் பதிப்புகள் எல்லாவற்றிலும் குணதரவீச்சரம் என்றே காணப்படுகிறது. பெரியபுராண வசனம் எழுதிய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்களும் குணதரவீச்சரம் என்றே எழுதியிருக்கிறார். ஆனால், 1950-ஆம் ஆண்டில் (விக்ருதி ஆண்டு ஆவணி மூலநாள்) திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்தார் வெளியிட்ட பெரியபுராணத்தில் குணதரவீச்சரம் என்னும் பெயர் குணபரவீச்சரம் என்று அச்சிடப்பட்டிருக்கிறது. இந்த மாற்றத்திற்குக் காரணம் கூறப்படவில்லை.

குணதரவீச்சரம் கட்டினான் என்றும் சரித்திர ஆராய்ச்சிக் காரர் கூறுவர்.



வல்லம் குகையில் உள்ள தமிழ் எழுத்து.
“ குணபரன் ” என்பது இதன் வாசகம்.

திருவதிகையில் குணதரவீச்சரம் கட்டிய காடவனாகிய பல்லவ அரசன் முதலாம் மகேந்திரவர்மன் ஆவன் என்றும், அவனைத்தான் நாவுக்கரசர், சமணமதத்திலிருந்து சைவமதத்திற்கு மாற்றினார் என்றும், நாவுக்கரசரும் மகேந்திரவர்மனும் ஒரே காலத்தில் வாழ்ந்தவர்கள் என்றும் முதன் முதலாக ஆராய்ந்து கூறியவர் திரு. வி. வெங்கையா அவர்களாவார். அவர் ஆங்கிலத்தில் எழுதிய கட்டுரையின் சுருக்கம் இது :—

திருநாவுக்கரசர் அல்லது அப்பர் என்பவருடைய காலத்தில் இருந்த திருஞானசம்பந்தர் அப்பருக்கு இளை

இக்காலத்துச் சரித்திர ஆராய்ச்சிக்காரர்களின் ஆராய்ச்சியை ஆதாரமாகக்கொண்டு இச்சொல் இவ்வாறு மாற்றப்பட்டது போலும்.

இதுபோலவே, சில ஆண்டுகளுக்கு முன்னர்த் தேவாரத்தைப் பதிப்பித்த சைவப் பெரியார் ஒருவர், நாவுக்கரசர் தேவாரத்தில் “ குலங்கெடுத்துக் கோணீக்க வல்லான் தன்னை ” என்ற அடியை மாற்றி, “குலங்கொடுத்துக் கோணீக்க வல்லான்தன்னை” என்று தம் விருப்பப்படி மாற்றி அச்சிட்டிருக்கிறார்.

பதிப்பாசிரியர்கள் நூலிலுள்ள சொல்லையோ அடியையோ மாற்றினால் அதற்குக் காரணம் கூறவேண்டுவது முறையாகும். காரணங்கூறாமலே ஒவ்வொருவரும் ஒவ்வொரு நூலில் சொற்களை மாற்றியமைப்பது பெருந்தவறாகும். சைவத்திற்கும் தமிழிற்கும் தொண்டு செய்வதாகாது.

யவர். பெயர் குறிக்கப்படாத ஒரு பல்லவ அரசன் நாவுக்கரசரை முதலில் துன்புறுத்திப் பிறகு அவரைப் போற்றினான். இந்த அரசனுடைய சிறப்புப் பெயர்களுள் ஒன்று குணதரன் என்பது. இந்த அரசனுக்குக் கீழ்ப் பட்டுச் சிற்றரசனாக இருந்த ஒருவன் தன்னுடைய அரசன் பெயரினால் குணதரவீச்சரம் என்னும் கோயிலைக் கட்டினான் என்று சொல்லப்படுகிறது. செங்கல்பட்டுக்கு அடுத்த வல்லம் கிராமத்துக் குகைக்கோயில் சாசனம் ஒன்று குணபரனை மகேந்திர போத்தரசன் என்று கூறுகிறது. டாக்டர், ஹுல்ட்ஸ்[1] என்பவர், உதயேந்திரச் செப்பேட்டுச் சாசனத்தில் கூறப்படுகிற இரண்டு மகேந்திரவர்மர்களில் ஒருவன், இந்த வல்லம் சாசனம் கூறுகிற குணபரனாகிய மகேந்திரவர்மன் என்று அறுதியிட்டுக் கூறுகிறார். குணதரன், குணபரன் என்னும் பெயர்களில் மிகச் சிறு வேறுபாடுதான் காணப்படுகிறது. வல்லம் குகைக்கோயில் சாசனத்தில் கூறப்படுகிற குணபரன் என்னும் மகேந்திரன் தான், திருநாவுக்கரசரை முதலில் துன்புறுத்திப் பிறகு போற்றினான் என்றும், பெரிய புராணம் கூறுகிற குண தரன் ஆவன் என்றும் துணிந்து கூறலாம். ஞானசம் பந்தர், முதலாம் நரசிம்மவர்மன் காலத்தில் இருந்தவர் என்று முன்னமே கூறியுள்ளேன். ஞானசம்பந்தருக்கு மூத்தவர் நாவுக்கரசர் ஆகையினாலே, வல்லம் சாசனம் கூறுகிற குணபரனாகிய மகேந்திரபோத்தரசன் (இவனைப் பெரியபுராணம் கூறுகிற குணதரன் என்று துணிந்து கூறு கிறேன்) முதலாம் நரசிம்மவர்மனுடைய தந்தையாகிய மகேந்திரவர்மனாகத்தான் இருக்கமுடியும்.[2]

பெரியபுராணம் கூறுகிற குணதரன் என்னும் பெயரும் வல்லத்துச் சாசனம் கூறுகிற குணபரன் என்னும் பெயரும் ஒரே அரசனைத்தான் குறிக்கின்றன; அந்த அரசன் முதலாம் மகேந்திரவர்மன் ஆவன் என்று திரு. வி. வெங்கையா அவர்கள் கொண்ட முடிவைச் சரித்திர ஆசிரியர்கள் எல்லோரும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

1. Dr. Hultzsch. 2. Epi. Ind. Vol. III.

ஆகவே, மகேந்திரவர்மனும் நாவுக்கரசரும் ஒரே காலத்தில் இருந்தவர்கள் என்பதில் ஐயமில்லை.[1]

தமது முதிர்ந்த வயதிலே, சமணசமயமும் பௌத்த மதமும் வலிமைபெற்று இருந்த காலத்திலே, தன்னந் தனியே தமிழ்நாடு முழுவதும் ஊர்ஊராகச் சுற்றுப்பிர யாணம் செய்து பக்தி இயக்கத்தையும் சைவசமயத்தையும் வளர்த்துப் பரப்பிய முதல் சமயகுரவர் திருநாவுக்கரசரே. ஏனைய சமயங்களின் ஆதிக்கம் வலுப்பட்டிருந்தகாலத்திலே, தளர்ந்த வயதிலும் அஞ்சாமல் சென்று பரப்பி மற்றவர்களுக்கு வழிகாட்டிய பெருமைநாவுக்கரசருக்கே யுரியது. ஏறக்குறைய இருபது ஆண்டுகளாகச் சமயப் பிரசாரம் செய்தபிறகு இவருக்குத் துணையாக ஞான சம்பந்தர் தோன்றினார்.

6. அப்பரின் சமயப் பற்று

திருநாவுக்கரசர் சைவசமயத்தில் திண்மையான பற்றும் அழுத்தமான உறுதியும் கொண்டிருந்தார். இந்த உறுதி இவரிடத்தில் மேன்மேலும் வளர்ந்துகொண்டே இருந்தது. இந்த உறுதியை இவர் தமது திருப்பாக்களில் ஆங்காங்கே கூறியுள்ளார். அவற்றிற் சில வருமாறு :

“பற்றாய் நினைந்திடப் போதுநெஞ் சேயிந்தப் பாரைமுற்றும்
சுற்றா யலைகடல் மூடினுங் கண்டேன் புகல்நமக்கு
உற்றான் உமையவட் கன்பன் திருப்பா திரிப்புலியூர்
முற்றா முளைமதிக் கண்ணியி னான்றன் மொய்கழலே.”

---

1. முதல் மகேந்திரவர்மனுடைய பேரனை இரண்டாம் மகேந்திரவர்மன் காலத்தில் நாவுக்கரசர் இருந்தார் என்று ஒரு ஆசிரியர் கூறுகிறார். (Studies in South Indian Jainism. P. 66. by M. S. Ramaswami Aiyengar.) இந்தக் கருத்தைச் சரித்திர ஆராய்ச்சிக்காரர்கள் ஒப்புக்கொள்ளவில்லை. இரண்டாம் மகேந்திரவர்மன் காலத்தில் நாவுக்கரசர் இருந்தார் என்பது எந்தவிதத்திலும் பொருந்தவில்லை. ஆகவே, இக்கருத்து தவறானது. நாவுக்கரசர் முதலாம் மகேந்திரவர்மன் காலத்திலே இருந்தவர் என்பதுதான் ஆராய்ச்சிக்குப் பொருத்தமாகத் தோன்றுகிறது.

"மண்பா தலம்புக்கு மால்கடல் மூடிமற் றேழுலகும்
விண்பால் திசைகெட்டு இருசுடர் வீழினும் அஞ்சல்நெஞ்சே
திண்பால் நமக்கொன்று கண்டோம் திருப்பா திரிப்புலியூர்க்
கண்பாவு நெற்றிக் கடவுட் சுடரான் கழலிணையே."

"வானந் துளங்கிலென் மண்கம்ப மாகிலென் மால்வரையும்
தானந் துளங்கித் தலைதடு மாறிலென் தண்கடலும்
மீனம் படிலென் விரிசுடர் வீழிலென் வேலைநஞ்சுண்டு
ஊனமொன் றில்லா ஒருவனுக் காட்பட்ட உத்தமர்க்கே."

"கன்னெடுங் காலம் வெதும்பிக் கருங்கடல் நீர்சுருங்கிப்
பன்னெடுங் காலம் மழைதான் மறக்கினும் பஞ்சமுண்டென்
றென்னெஞ்சம் சூளறும் அஞ்சல்நெஞ் சேஇமை யாதமுக்கண்
பொன்னெடுங் குன்றமொன் றுண்டுகண் டீர்இப் புகலிடத்தே."

"தப்பி வானந் தரணிகம் பிக்கிலென்
ஒப்பில் வேந்தர் ஒருங்குடன் சீறிலென்
செப்ப மாஞ்சேறைச் செந்நெறி மேவிய
அப்ப னுருளர் அஞ்சுவ தென்னுக்கே."

7. அப்பர் காலத்து நாயன்மார்

திருநாவுக்கரசர் காலத்தில் இருந்த சைவ அடியார்கள் அப்பூதியடிகள், முருக நாயனார், சிறுத்தொண்டர், திருநீல நக்கர், நெடுமாற நாயனார், பாண்டிமாதேவியார், குலச்சிறையார், குங்குலியக்கலயர், ஞானசம்பந்தர், திருநீலகண்ட யாழ்ப்பாணர் முதலானோர்.

திருநாவுக்கரசர், மகேந்திரவர்மன் காலத்திற்குப் பிறகு அவன் மகன் மாமல்லன் முதல் நரசிம்மவர்மன் காலத்திலும் உயிர்வாழ்ந்திருந்தார். நரசிம்மவர்மனுடைய படைத்தலைவர்களில் யானைப்படைத்தலைவராக இருந்தவர் பரஞ்சோதியார் எனப்படும் சிறுத்தொண்டர். சிறுத்தொண்டர், சளுக்கிய அரசன் இரண்டாம் புலிகேசியின் தலைநகரான வாதாபியை வென்றார் என்று பெரியபுராணம் கூறுகிறது.[1]

1. சிறுத்தொண்டநாயனார் புராணம் 6.

இது நிகழ்ந்த ஆண்டு கி. பி. 642 என்று சரித்திர ஆசிரியர்கள் கூறுகின்றனர். வாதாபியை வென்றபிறகு சிறுத்தொண்டர், படைத்தலைவர் பதவியிலிருந்து நீங்கி சைவத்தொண்டு செய்துவந்தார். அக்காலத்தில் சிறுத்தொண்டர் நாவுக்கரசருடனும் மிக இளைஞரான ஞானசம்பந்தருடனும் நண்பர் ஆனார். வாதாபியை வென்றபிறகு சிறுத்தொண்டருக்குக் குழந்தை பிறந்ததென்றும், அக்குழந்தை பள்ளியில் சேர்க்கப்பட்ட காலத்தில் ஞானசம்பந்தர் அவர் இல்லஞ்சென்றார் என்றும் பெரியபுராணம் கூறுகிறது. அதாவது ஏறக்குறைய கி. பி. 648-இல் சம்பந்தரும் சிறுத்தொண்டரும் சந்தித்திருக்கவேண்டும். சிறுத்தொண்டர் நாவுக்கரசரைத் திருப்புகலூரில் சந்தித்ததும் இதே ஆண்டாக இருக்கலாம். இந்த ஆண்டிற்குப் பிறகு, கி. பி. 649-இல் ஞானசம்பந்தர் பாண்டியன் மாறவர்மனை (நெடுமாறனை)ச் சைவனாக்கியிருக்க வேண்டும். நெடுமாறன் சைவனானபிறகு நாவுக்கரசர் பாண்டிநாட்டிற்கு யாத்திரை சென்றார். பாண்டிநாட்டில் நாவுக்கரசரைப் பாண்டியன் நெடுமாறனும் பாண்டி மாதேவியாரும் அமைச்சர் குலச்சிறையாரும் வரவேற்றனர். பாண்டிநாட்டு யாத்திரையிலிருந்து திரும்பிவந்த சிலநாட்களுக்குப் பிறகு (ஏறக்குறைய கி. பி. 650-இல்) நாவுக்கரசர் சிவகதியடைந்திருக்கக்கூடும்.

நாவுக்கரசர் சிவகதிபெற்றது, அவரது 81-வது வயதில் என்று சைவநூல்கள் கூறுகின்றன. எந்த ஆண்டில் என்பது தெரியவில்லை. ஆனால், ஏறக்குறைய கி. பி. 650-இல் நாவுக்கரசர் சிவகதியடைந்தார் என்று கொள்ளலாம். எனவே இவர் பிறந்த ஆண்டு ஏறக்குறைய கி. பி. 569 ஆகும்.[1]

---

1. திருநாவுக்கரசர் கி. பி. 600 முதல் 681 வரையில் உயிர் வாழ்ந்திருந்தார் என்று சிலர் கருதுவது தவறாகும். மகேந்திர வர்மனைத் திருநாவுக்கரசர் சைவனாக மாற்றிய காலத்தில் அவர் வயது முதிர்ந்தவராக இருந்தார் என்று [illegible] அறிகிறோம். அஃதாவது அப்போது நாவுக்கரசருக்கு 50 வயதுக்கு மேலிருக்கவேண்டும். மகேந்திரவர்மன் கி. பி. 630-க்குப் பிறகு வாழவில்லை என்பது சரித்திர ஆசிரியர்களின் முடிபு.

8. முகம்மது நபி

நாவுக்கரசர் பக்தி நெறியைத் தமிழ்நாட்டிலே பரப்பிய அதே காலத்தில் மற்றொரு பெரியார் இன்னொரு நாட்டிலே ஒரு புதிய மதக்கொள்கையைப் பரப்பிய செய்தியை இங்குக் குறிப்பிடவேண்டியது முறையாகும். ஏனென்றால், அந்தப் புதிய மதம் இப்போது உலக மதங்களில் ஒன்றாகப் பொலிகிறது. நாம் குறிப்பிடுவது முகம்மது நபி என்பவரையும், அவர் உண்டாக்கிய இஸ்லாம் மதத்தையும் ஆகும்.

அரபு நாட்டிலே மெக்கா என்னும் நகரத்திலே அப்துல்லா என்பவர் ஒருவர் இருந்தார். அப்துல்லாவின் மனைவியார் அமீனா என்பவர். இவர்களுக்கு ஓர் ஆண் குழந்தை கி. பி. 569-இல் பிறந்தது. இந்தக் குழந்தைக்கு முகம்மது என்று பெயரிட்டார்கள். முகம்மது என்னும் குழந்தை வளர்ந்து மணஞ்செய்யும் வயதடைந்தபிறகு கதிஜா என்னும் சீமாட்டியை மணஞ்செய்துகொண்டு வர்த்தகத்தொழில் செய்துவந்தார். இவ்வாறு வாழ்ந்துவந்த முகம்மது, தமது நாற்பதாவது வயதில் கடவுளின் திருவருள் கிடைக்கப்பெற்றார். கடவுளின் திருவருள் முழுவதும் கிடைக்கப்பெற்ற முகம்மது, நபி (கடவுளால் அனுப்பப்பட்ட தீர்க்கதரிசி) என்று போற்றப்பெற்றார். ஆகவே இவர் முகம்மது நபி என்றும், நபி நாயகம் என்றும் அழைக்கப்பெற்றார். இவர் கண்ட சமயத்துக்கு இஸ்லாம் என்பது பெயர். இஸ்லாம் சமயத்தின் வேதத்துக்குக் குர்ஆன் என்பது பெயர். குர்ஆன் வேதம் அரபிமொழியில் எழுதப்பட்டது.

முகம்மது நபி தாம் கண்ட புதிய இஸ்லாம் சமயத்தை மெக்கா நகரத்து மக்களுக்குப் போதித்தார். அவர்களில்

அப்பர் கி. பி. 600-இல் பிறந்தவரானால், அவர் தமது 30-ஆவது வயதில் மகேந்திரவர்மனைச் சைவனாக்கியிருக்கவேண்டும். ஆனால், இவர் வரலாறு இதற்கு மாறுபட்டதாகத் தெரிகிறது. ஆகவே, கி. பி. 600-க்கும் 631-க்கும் இடையில் நாவுக்கரசர் வாழ்ந்திருந்தார் என்று கூறுவது தவறு.

சிலர் இவர் மதத்தை ஏற்றுக்கொண்டார்கள். ஆனால், பலர் பழைய கொள்கையை விடாமல் இவரைப் பகைத்தார்கள். பகைத்து இவரைக் கொல்லவும் சூழ்ச்சி செய்தார்கள். அவர்களின் கொடிய எண்ணத்தை அறிந்த நபிநாயகம் அவர்கள், ஒருவருமறியாமல் மெக்காவைவிட்டு மதினா என்னும் நகரத்திற்குப் போய்விட்டார். இவ்வாறு மெக்காவிலிருந்து மதினாவுக்குப் போனதை முஸ்லிம்கள் ஹிஜ்ரா என்று கூறுவார்கள். ஹிஜ்ரா கி. பி. 622-இல் ஏற்பட்டது.

முகம்மது நபி தமது இஸ்லாம் மதத்தை மக்களுக்குப் போதித்தார். அதனால் பகைமையுண்டாகித் தம்மை எதிர்த்தவர்களுடன் போர்செய்து அவர்களை வென்றார். இவர் காலத்திலேயே இவருடைய மதம் அரபுநாடு முழுவதும் பரவிவிட்டது. நபிநாயகம் அவர்கள் இஸ்லாம் மதத்தின் மதகுருவாகவும் அரசியல் தலைவராகவும் விளங்கினார். இவர் கி. பி. 632-ஆம் ஆண்டில் ஜூன் திங்கள் 7-ம் நாள் காலமானார்.

மகேந்திரவர்மனும் திருநாவுக்கரசரும் வாழ்ந்திருந்த அதே காலத்தில், உலகப் பெரியார்களில் ஒருவராகிய முகம்மது நபி அவர்களும் வாழ்ந்திருந்தார். ஆகையினாலே, கால ஒற்றுமையைக் கருதி அவரைப்பற்றி ஈண்டுக் குறிப்பிட வேண்டியதாயிற்று.

௫. கோயில்கள்

மகேந்திரவர்மன் காலத்துக் கோயில் கட்டடங்[1]களைப்பற்றி ஆராய்வோம்.

மகேந்திரவர்மன் காலத்திற்கு முன்பு தமிழ்நாட்டிலே கோயில்கள் கிடையாது என்றும், அவனுக்குப் பிறகு தான் கோயில்கள் ஏற்பட்டன என்றும் ஐரோப்பியரில் சிலர் தவருகக் கருதியிருந்தார்கள். அவ்வாறு கருதியவர்களில், பல்லவ சரித்திர ஆராய்ச்சியில் வல்லவரான பிரான்ஸ் தேசத்து ஜோவி டூப்ரேல் என்பாரும் ஒருவராவார். ஆனால், ஜோவி டூப்ரேல் அவர்கள், காஞ்சிபுரத்து ஏகாம்பரேசுவரர் கோவில் பௌர்ணமி மண்டபத் தூண்களைக் கண்டபிறகு, மகேந்திரவர்மன் காலத்திலும் அவனுக்கு முற்பட்ட காலத்திலும் கோயில் கட்டடங்கள் தமிழ்நாட்டிலே இருந்தன என்பதைத் தெரிந்துகொண்டு அதுபற்றி ஒரு சிறு நூலையும் எழுதினர்.[2]

1. மண்டளியும் கற்றளியும்

மகேந்திரவர்மன் காலத்திலும அவனுக்கு முறபட்ட காலத்திலும் கணக்கற்ற கோயில்கள் (கோயில் கட்டடங்கள்) தமிழ்நாட்டிலே இருந்தன. ஆனல் அவை கற்றளிகள் அல்ல. அஃதாவது கருங்கற்களை ஒன்றின்மேல் ஒன்ருக அடுக்கிக் கட்டப்பட்ட கோயில்கள் அல்ல. அவை செங்கல் சுண்ணும்பு மரம் முதலிய பொருள்களினல் கட்டப்பட்ட கோயில்கள் ஆகும். மகேந்திரவர்மனுக்கு முன்பு இருந்த அரசர்கள் செங்கல் சுண்ணும்பு மரம் முதலியவைகளைக் கொண்டுதான் கோயில்களைக் கட்டினர்கள். காவிரிப்பூம்பட்டினத்தில் இருந்த பல்லவனீச்சரம் என்னும் கோயில், மகேந்திரவர்மனுடைய முன்னேர்களால் கட்டப்பட்ட செங்கற் கோயில் ஆகும்.

---

1. Architecture.

2. Conjeevaram Inscriptions of Mahendravarman I. by G. Jouveau Dubreuil of Pondicherry College 1919.

குகைக் கோயில்

கோயில் அமைப்பதில் தமிழ்நாட்டில் முன்பு இல்லாத புதிய முறையை மகேந்திரவர்மன் முதன்முதல் உண்டாக்கினான். அஃதென்னவென்றால், ஒரே கருங்கற் பாறையைக் குடைந்து, மண்டபத்தையும் கருப்பக்கிருகத்தையும் அமைக்கிற புதிய முறையை இந்த அரசன் புதியன புகுதலாக அமைத்தான். இவ்வாறு பாறைகளில் அமைக்கப்பட்ட கோயில்களுக்குக் "குகைக் கோயில்கள்" என்பது பெயர்.

ஆனால், மகேந்திரவர்மன் காலத்தில் கற்றளிகள் ஏற்படவில்லை. கருங்கற்களினால் சுவர் எழுப்பிக் கோயில் கட்டும் கற்கோயில்கள் — கற்றளிகள் — மகேந்திரவர்மனுடைய பேரன் காலத்தில் ஏற்பட்டன.

ரவாமன பாறைகளைக் குடைந்து குகைக கோயில்களை உண்டாக்கும் புதிய முறையை முதன் முதலாகத் தமிழ்நாட்டிலே ஏற்படுத்தினான் என்று கூறினோம். ஆகவே அவனுக்குச் சேதகாரி என்னும் பெயர் ஏற்பட்டது. சேதகாரி என்றால் சேதியங்களை அமைப்பவன் என்பது பொருள் (சேதம், சேதியம். சேதியம்=கோயில்.)

மகேந்திரன் அமைத்த மண்ட

மகேந்திரவர்மன் குகைக் கோயில்களை மட்டும் அமைத்தான் என்று கருதவேண்டா. சில கோயில்களைச் செங்கற் கட்டிடங்களாகவும் அமைத்தான் என்பதற்குச் சான்றுகள் உள்ளன. அவ்வாறு இவன் அமைத்த செங்கற் கட்டிடக் கோயில்கள் பிற்காலத்தில் அழிந்துவிட்டன. காஞ்சிபுரத்து ஏகாம்பரேசுவரர் கோயில் பௌர்ணமி மண்டபத்தில் ஒரு கருங்கல் தூணில் மகேந்திரனுடைய சிறப்புப் பெயர்கள் சில பொறிக்கப்பட்டுள்ளன. அபிமுக, சித்ரகார புலி, கூற்றம்பு முதலிய மகேந்திரனுடைய சிறப்புப்பெயர்கள் அத்தூணில் எழுதப்பட்டுள்ளன. இதனால் என்னதெரிகிறதென்றால், மகேந்திரவர்மன் குகைக்கோயில் அல்லாமல் வேறு கோயிலையும் கட்டினான் என்பதும், அக்கோயில்

பிற்காலத்தில் அழிந்துவிட்டிருக்கவேண்டும் என்பதும், அந்த அழிந்துபோன கோயிலிலிருந்து இந்தத் தூணைக் கொண்டுவந்து பிற்காலத்தவர் இந்த மண்டபத்தில் வைத்துக் கட்டியிருக்க வேண்டும் என்பதே.

அன்றியும் சோழநாட்டிலே மயேந்திரப்பள்ளி என்னும் ஊரில் இருந்த சிவன் கோயிலை ஞானசம்பந்தர் பாடிய பாடல்கள் தேவாரப்பதிகத்தில் காணப்படுகிறது. மயேந்திரப்பள்ளி என்பது மகேந்திரப்பள்ளி என்பதன் திரிபு. மகேந்திரன் சோழநாட்டிலும் தன் பெயரால் மகேந்திரப் பள்ளியை உண்டாக்கி அங்குச் சிவபெருமானுக்கு ஒரு கோயிலை, ஒரு மண்டளியைக் கட்டினான் என்பது இதனால் தெரிகிறது. இந்த மயேந்திரப்பள்ளிக் கோயிலை, இவன் காலத்துக்குப் பிறகு மிக அண்மைக்காலத்தில் இருந்த ஞானசம்பந்தர் பாடியிருக்கிறார். மயேந்திரப் பள்ளி கடற்கரையை யடுத்திருந்த ஊர் என்பது தெரிகிறது. என்

"திரைதரு பவளமுஞ் சீர்திகழ் வயிரமும்
கரைதரு மகிலொடு கனவளை புகுதரும்
வரைவிலா லெயிலெய்த மயேந்திரப் பள்ளியுள்."

என்றும்,

"கொண்டல்சேர் கோபுரங் கோலமார் மாளிகை
கண்டலுங் கைதையும் கமலமார் வாவியும்
வண்டுலாம் பொழிலணி மயேந்திரப் பள்ளியுள்."

என்றும்,

"நித்திலத் தொகைபல நிரைதரு மலரெனச்
சித்திரப் புணரி சேர்த்திடத் திகழ்ந்தவன்
மைத்திகழ் கண்டன் மயேந்திரப் பள்ளியுள்."

என்றும் ஞானசம்பந்தர் கூறுவது காண்க.

2. மகேந்திரனுக்கு முற்பட்ட கோயில்கள்

மகேந்திரவர்மன் அமைத்த இந்த மகேந்திரப்பள்ளிக் கோயில் மிக அழகாக இருந்திருக்கவேண்டும். ஏனென்றால், கலைச்செல்வனாகிய மகேந்திரவர்மன் கட்டிய கோயில் அழகாகத்தானே இருக்கவேண்டும். இக்கோயிற்சுவர்களில் இவன் ஓவியங்களை எழுதியும் அழகுபடுத்தியிருந்தான் என்பதில் சற்றும் ஐயமில்லை.

மகேந்திரவர்மன் காலத்தில் இருந்த வேறு கட்டிடக் கோயில்களைப்பற்றியும் இங்குச் சிறிது கூறவேண்டியிருக்கிறது. ஏனென்றால் மகேந்திரவர்மன் காலத்தில் இருந்த நாவுக்கரசர் இக்கோயில்களைப்பற்றிக் குறிப்பிடுகிறார். கி. பி. 4-ம் நூற்றாண்டில் இருந்தவன் என்று கருதப்படுகிற சோழன் செங்கணான் கட்டிய கோயில்கள், அப்பர் காலத்தில் இருந்தன என்றும், சோழன் செங்கணான் எழுபத்தெட்டுக் கோயில்களைக் கட்டினான் என்றும் நாவுக்கரசர் கூறுகிறார். "பெருக்காறு சடைக்கணிந்த பெருமான் சேரும் பெருங்கோயில் எழுபதினோடெட்டும்"[1] இவன் அமைத்தான் என்று கூறுகிறார். நாவுக்கரசருக்குப் பின்னர் இருந்தவரான திருமங்கையாழ்வார், இந்தச் செங்கட் சோழன் திருநறையூர் மணிமாடக் கோயில் உட்பட எழுபது கோயில்களைக் கட்டினான் என்று கூறுகிறார்.

"இருக்கிலங்கு திருமொழிவாய் எண்தோளீசற்கு
எழில்மாடம் எழுபதுசெய்து உலகமாண்ட
திருக்குலத்து வளச்சோழன் சேர்ந்த கோயில்
திருநறையூர் மணிமாடம் சேர்மின்களே."
(பெரிய திருமொழி. 6-ஆம் பத்து. 6-ஆம் திருமொழி. 8.)

செங்கட் சோழன் கட்டிய கோயில்களைப் பெருங் கோயில் என்று திருநாவுக்கரசரும், எழில் மாடம் என்று திருமங்கை ஆழ்வாரும் கூறுகிறபடியினாலே, அவை பெரிய கட்டிடங்களாக இருந்தன என்று அறிகிறோம். ஆனால், அக்கோயில் கட்டிடங்கள் செங்கல்லினால் கட்டப்பட்டவை

1. அப்பர், திரு அடைவு திருத்தாண்டகம்-5.

யாகையினாலே அவை திருநாவுக்கரசர் காலத்திலே பழுது பட்ட நிலையில் இருந்தன என்பது தெரிகிறது.

அப்பர் கூறுகிற சிலவகைக் கோயில்கள்

செங்கற்களினாலே அமைக்கப்பட்ட அந்தக்காலத்துக் கோயில் விமானங்களின் அமைப்பு, பலவிதமாக அமைந் திருக்கவேண்டும் என்று தோன்றுகிறது. ஏனென்றால், அக் காலத்துக் கோயில் விமான அமைப்புகள் சிலவற்றின் பெயரைத் திருநாவுக்கரசர் கூறுகிறார்:

" பெருக்காறு சடைக்கணிந்த பெருமான் சேரும்
பெருங்கோயில் எழுபதினோ டெட்டும், மற்றும்
கரக்கோயில் கடிபொழில்சூழ் ஞாழற் கோயில்,
கருப்பறியற் பொருப்பனைய கொகுடிக்கோயில்,
இருக்கோதி மறையவர்கள் வழிபட்டேத்தும்

திருக்கோயில் சிவனுறையும் கோயில் சூழ்ந்து
தாழ்ந்திறைஞ்சத் தீவினைகள் தீருமன்றே."

என்பது அவர் பாடல். இப்பாடலில் கூறப்பட் பெருங் கோயில், கரக்கோயில், ஞாழற்கோயில், கொகு டிக் கோயில், இளங்கோயில், மணிக்கோயில், ஆலக்கோயில் என்பன கோயில் விமான வகையில் வெவ்வேறு விதங்கள் என்று

திருக்குடவாயில், கீழ்வேளூர், திருப்பூந்தராய், திரு அம்பர், சிவபுரம், தலைச்சங்கை முதலிய ஊர்களில் இருந்த கோயில்கள் பெருங்கோயில்கள் என்று தேவாரத்தினால்

கடம்பூரில் இருந்த கோயில் கரக்கோயில் என் பது தெரிகிறது. கரக்கோயிலைச் சிலர் கற்கோயிலென்று கூறுகிறார்கள். கற்கோயில்கள் அஃதாவது கருங்கல்லால் கட்டப்பட்ட கற்றளிகள் மகேந்திரவர்ம பல்லவன் இருந்த கி. பி. 7-ஆம் நூற்றாண்டிற்குப் பிற்பட்ட காலத்தில் தோன்றியவை. ஆகவே, மகேந்திரவர்மன் காலத்தில்

இருந்த திருநாவுக்கரசர் கூறுகிற கரக்கோயில் கற்கோயில் அன்று; இது கோயில் விமான அமைப்பில் ஒருவகை யானது என்று கருதுவதே சரியானது.

திருமீயச்சூரில் இருந்தது இளங்கோயில். திருப் பதிக்கு அருகில் உள்ள திருச்சானூர் (திருச்சோகினூர்) என்னும் ஊரில் இருந்து இப்போது அழிந்துபோன ஒரு கோயிலும் இளங்கோயில் என்று ஒரு கல்லெழுத்துச் சாசனம் கூறுகிறது.

கடம்பை, திருக்கருப்பறியலூர் முதலிய ஊர்க் கோயில் கள் கொகுடிக் கோயில்கள். கொகுடிக் கோயில், ஞாழற் கோயில், ஆலக்கோயில் என்பவைகளைப் பற்றிச் சிலர் பொருத்தமற்ற சில கருத்துக்களைக் கூறுகிறார்கள். அக் கருத்துக்களை எல்லாம் இங்கு ஆராய்வது நம் கருத்தன்று. நாவுக்கரசர் கூறுகிற இந்தக் கோயில்களைப்பற்றி நாம் எழுதிவருகிற மாமல்லன்—நரசிம்ம வர்மன் என்னும் நூலில் விளக்கமாக ஆராய்வோம்.

மகேந்திரவர்மன் காலத்திலும் அதற்கு முற்பட்ட காலத்திலும் அமைந்திருந்த பழைய செங்கற் கட்டிடக் கோயில்கள், காலப் பழைமையினாலே பழுதடைந்தபோது பிற்காலத்தவர் அக் கட்டிடங்களைக் கற்றளியாகக் கருங் கல்லினால் புதுப்பித்துக் கட்டினார்கள். இச் செய்தியைச் சாசனங்களினால் அறிகிறோம். ஆனால், கருங்கல்லினால் கற்றளி அமைக்கும் முறை மகேந்திரவர்மன் காலத்தில் ஏற்படவில்லை. மகேந்திர வர்மனுடைய பேரனை இராச சிம்மன் காலத்தில் கி. பி. 8-ஆம் நூற்றாண்டின் தொடக் கான் கற்றளிகள் அமைக்கும் வழக்கம் ஏற்பட்டது.

மகேந்திரவர்மன் காலத்தில் செங்கல்லால் அமைக் கப்பட்ட கோயில்கள் இப்போது

சோழநாட்டில் இவனால் கட்டப்பட்டதென்று கருதப் படுகின்ற மயேந்திரப்பள்ளிக் கோயில் (இது இப்போது கோயிலடிப்பாளையம் என்று வழங்கப்படுகின்றது.) சில

தடவையாவது புதுப்பிக்கப்பட்டிருக்கவேண்டும். ஏனென்றால் செங்கற்கோயில் ஆயிரத்துமுந்நூறு ஆண்டுகளாக நிலைபெற்றிருக்காது அல்லவா? ஆகவே, மகேந்திரவர்மன் அமைத்த செங்கற் கட்டிடக் கோயில்களில், இப்போது ஒன்றேனும் இல்லை என்றே கூறவேண்டும்.

ஆனால், மகேந்திரவர்மன் தன் காலத்தில் புதிதாக அமைத்த குகைக்கோயில்கள் இப்போதும் உள்ளன. அக் குகைக்கோயில்களை ஆராய்வோம்.

௫. குகைக்கோயில்கள்

இப்போது தமிழ்நாட்டில் ஏறக்குறைய ஐம்பதுக்கு மேற்பட்ட குகைக் கோயில்கள் உள்ளன. முதன் முதலாகத் தமிழ்நாட்டிலே குகைக்கோயில்களை அமைத்தவன் மகேந்திர வர்மனே. இவனுக்குப் பிறகு இவன் சந்ததியார் சில குகைக்கோயில்களை அமைத்தார்கள். பிறகு பாண்டியன் முதலிய வேறு அரசர்களும் சில குகைக் கோயில்களை அமைத்தார்கள்.

மகேந்திர வர்மன் காலத்துக் குகைக்கோயிலுக்கும் மற்றவர் காலத்துக் குகைக்கோயிலுக்கும் சில வேறுபாடுகள் காணப்படுகின்றன. இந்த வேறுபாடுகளைக் கொண்டு மகேந்திர வர்மன் அமைத்த குகைக்கோயில்களை எளிதில் தெரிந்துகொள்ளலாம். முன்னே மண்டபமும், மண்டபத்தில் மத்திய பாகத்தில் கர்ப்பக் கிருகமும் அமைக்கப்படுவது எல்லாக் குகைக்கோயிலின் பொதுத்தன்மையாக இருந்தபோதிலும், மண்டபத் தூண்களின் அமைப்பு, துவாரபாலகரின் அமைப்பு, மகர தோரண அமைப்பு முதலியவற்றைக் கொண்டு இந்தக் கோயில்கள் எந்தெந்தக் காலத்தில் அமைக்கப்பட்டன என்பதை அறிந்துகொள்ளலாம்.

ஈட அடையாளங்களைக் கொண்டு மகேந்திர வர்மன் காலத்துக் குகைக்கோயில்களைத் தெரிந்து கொள்ளலாம் என்று ஆராய்ந்தறிந்த அறிஞர்கள் கூறுகிறார்கள்.

தூண்கள்:— குகைக்கோயிலின் மண்டபத்தைத் தாங்குகின்ற தூண்கள், மேற்பகுதி நடுப்பகுதி அடிப்பகுதி என மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, மேற்பகுதியும் அடிப்பகுதியும் நான்கு பக்கமுள்ள சதுரமாகவும் நடுப்பகுதி எட்டுப்பட்டையாகவும் இருக்கும். சில குகைகளில் இத் தூண்களின் சதுரப்பகுதியில் தாமரைப் பூவின் சிற்பம் பொறித்திருக்கும்.

தூண்களின் மேலேயுள்ள போதிகை, சிலவற்றில் அரைவட்டமாக வளைந்தும் சிலவற்றில் வளைவில்லாமலும் இருக்கும்.



மகேந்திரன் காலத்துக் குகைக்கோயில் தூண்கள்.
தூண்களின் போதிகைஅமைப்பைக் காண்க.



மகேந்திரவர்மன் குகைத்தூண்களில் காணப்படுகிற தாமரைப்பூவின் சிற்ப அமைப்பு.

துவார பாலகர்: மகேந்திரவர்மன் காலத்துக் குகைக் கோயிலில் உள்ள துவாரபாலகர் உருவங்கள் எல்லாம்

எதிர்பார்வையாக (எதிர்நோக்கி நிற்பதுபோல) அமைந்துள்ளன. பக்கவாட்டமாகத் திரும்பியிரா. இவை பெரிய பளுவான தண்டாயுதத்தைத் தரையில் ஊன்றி அதன்மேல் கைகளைத் தாங்கி நிற்கும். சில குகைக்கோயில்களில் துவாரபாலகர் கையைத் தலைக்குமேல் உயர்த்தியிருப்பது போல அமைந்திருக்கும். சில துவாரபாலகரின் தலையில் மாட்டுக்கொம்புகளை அணிந்திருப்பதுபோல இரண்டு கொம்புகள் காணப்படுகின்றன. மகேந்திரவர்மன் காலத்துத் துவாரபாலகர்கள் இரண்டு கைகளை மட்டும் உடையவர்கள். சில துவாரபாலகர் ஒரு காலை யூன்றி மற்றொரு காலை குறுக்காக மடக்கி நிற்பர்.[1]

மகரதோரணம்: மகேந்திரவர்மன் குகைக் கோயிலிலுள்ள மகரதோரணங்கள் அல்லது திருவாசிகள் இரண்டு வளைவுள்ளனவாக இருக்கும். ஒரே வளைவுள்ளதாக)ரா.



மகேந்திரன் குகைக்கோயில்களில் காணப்படுகிற மகர தோரணத்தின் சிற்பம்; இரு வளைவாக இருப்பது காண்க.

திருநிலையறை: (கருப்பக் கிருகம்) குழவிக்கல் போன்ற உருண்டையான இலிங்கம் கருப்பக் கிருகத்தில் காணப்படுகின்றன. பட்டை தீட்டப்பட்ட இலிங்க உருவங்கள் காணப்படா. இலிங்கத்தின் பின்புறச் சுவரில் சோமஸ்கந்த மூர்த்தியின் உருவம் இராது. வெறும் 5ம்.

கூடு: கோயில் கட்டி ல் கூடு எனப்படும் ஒரு பகுதியுண்டு. க் கூடுகள் வெவ்வேறு காலங்களில்

வெவ்வேறு விதமான சித்திர அமைப்புடன் காணப்படு கின்றன. மகேந்திரவர்மன் குகைக்கோயில்கள் சிலவற்றில் கூடுகளும் காணப்படுகின்றன. அந்தக் கூடுகளின் அமைப் பைக் கொண்டும் அந்தக் குகைகள் மகேந்திரவர்மன் காலத் தவை என்பதை அறியலாம். மகேந்திரவர்மன் காலத்துக் கூடுகளுக்குள் மனிதன் தலையுருவம் அமைக்கப்பட் டிருக்கும்.

மகேந்திரவர்மன் குகைக்கோயில்களில் காணப்படுகிற "கூடு" என்னும் உறுப்பின் அமைப்பு.

இந்த அமைப்புக்களைக் கொண்டு மகேந்திரவர்மன் காலத்துக் குகைக்கோயில்களை நன்கு அறியலாம்.

மகேந்திரவர்மன் திருமாலுக்கு மூன்றும், சிவ பெருமானுக்கு ஆறும், மும்மூர்த்திக்கு இரண்டும், பஞ்ச மூர்த்திக்கு இரண்டும், கொற்றவைக்கு (துர்க்கை) ஒன்றும், அருகக் கடவுளுக்கு ஒன்றும், ஏழு மூர்த்திகளுக்கு (?) ஒன்றும் ஆகப் பதினேழு குகைக்கோயில்களை அமைத் தான். அவற்றை ஒவ்வொன்றாக ஆராய்வோம்.

1. திருச்சிராப்பள்ளிக் குகைக்கோயில்

திருச்சிராப்பள்ளி மலையில் இரண்டு குகைக்கோயில்கள் உள்ளன. இவ்விரண்டில், மேலே இருப்பது மகேந்திரவர்மன் அமைத்த குகைக்கோயில் ஆகும். கீழே இருப்பது மகேந்திரவர்மன் மகன் மாமல்லன் அமைத்த குகைக்கோயில். இங்குக் கூறப்படுவது மேல் குகையாகும். பல்லவ அரச குடும்பத்தினர் வாழ்ந்த பல்லாவரம் என்னும் பெயருள்ள மூன்று ஊர்களில் அமைந்துள்ள குகைக்கோயில்களில் இது ஒன்று. திருச்சிக்கு அருகே "பல்லாபுரம்" என்னும் ஊர் உளது. பல்லாபுரம் என்பது பல்லவபுரம் என்பதன் திரிபு.



திருச்சிராப்பள்ளிக் குகைக்கோயிலின் தரையமைப்பு.

இக் குகைக்கோயில் தெற்குப் பார்த்தது. வழக்கம் போல முன்மண்டபமும் அதற்குள் கருப்பக்கிருகமும் அமைந்துள்ளன. மண்டபம் முப்பது அடி நீளமும், பதினைந்து அடி அகலமும், ஒன்பது அடி உயரமும் உள்ளது. மண்டபத்தின் கிழக்குப்புறச் சுவரில் கருப்பக்கிருகம் மேற்குப் பார்த்தபடி அமைக்கப்பட்டுள்ளது. இதன் அகலமும் நீளமும் 7 அடி 10 அங்குலம் உள்ள சதுரமாயும், உயரம் 7 அடி உள்ளதாயும் அமைந்துள்ளது. இந்தக் கருப்பக்கிருகத்தின் தரையில் 2 அடிச் சதுரமுள்ள குழியொன்று காணப்படுகிறது. இது, இங்கு முன்பு சிவ

இருந்த அடையாளம் ஆகும். இதன் பக்கத்தில் ஒரு அடிச் சதுரம் உள்ள இன்னொரு குழி இருக்கிறது. இது மகேந்திரவர்மனுடைய உருவம் அமைக்கப்பட்டிருந்த இடமாகும். ஏனென்றால், மகேந்திரவர்மனுடைய உருவம் சிவலிங்கத்தின் பக்கத்தில் அமைந்திருந்தது என்பதை இங்குள்ள சாசனம் கூறுகிறது. இப்போது சிவலிங்கமும் மகேந்திரவர்மன் உருவமும் இங்கு இல்லை.[1]

திருநிலையறையின் (கருப்பக்கிருகத்தின்) வாயிலில் இரண்டு துவாரபாலகரின் உருவங்கள் பாறையில் செதுக்கியமைக்கப்பட்டுள்ளன. ஒருகாலை யூன்றி இன்னொரு காலை மடக்கி நின்று கதாயுதத்தைத் தரையில் ஊன்றி அதன் மேல் இரண்டு கைகளையும் தாங்கிக்கொண்டு துவாரபாலகர் உருவங்கள் நிற்கின்றன.[2]

கருப்பக்கிருகத்துக்கு எதிரேயுள்ள மேற்குப்புறப் பாறையில், மண்டபச் சுவரிலே, சுமார் ஏழு அடிச் சதுரத்தில் கங்காதரமூர்த்தியின் உருவம் புடைப்புச் சிற்பமாக அமைக்கப்பட்டுள்ளது. இச் சிற்பத்தைப்பற்றி இந் நூலில் மற்றோரிடத்தில் காண்க.

பல்லாவரத்துக் குகைக்கோயிலில் காணப்படுவது போலவே இங்கும், மண்டபத்தின் தூலத்திலும் தூண்களிலும் மகேந்திரவர்மனுடைய சிறப்புப் பெயர்களும் சாசனங்களும் எழுதப்பட்டுள்ளன. இச் சாசனங்களில் ஒன்று, நான்கு வடமொழிச் செய்யுட்களாக அமைந்துள்ளது.[3] இச்சாசனம் கீழ்வரும் கருத்தைக் கூறுகிறது.

“வயல்களாகிய மாலையை யணிந்தவளும் விரும்பத் தக்க தன்மையையும் இனிய நீரையும் உடையவளுமாகிய

1. கர்நாடக நவாப்புகள் காலத்தில், பிரெஞ்சுக்காரர்கள் இக் குகையை வெடிமருந்துக் கிடங்காக உபயோகித்தார்கள் என்று தெரிகிறது.

2. முகப்புப் படம் 1 பார்க்க.

3. S. I. I. Vol. I. No. 33. Page 29. Nos. 777, 778 Top List. Vol. III.

காவிரியைக் கண்டு, ஆறுகளைத் தமது முடியிலே சூடுகிற சிவபெருமான் எங்கே இவள்மேல் விருப்பங்கொண்டு விடுவாரோ என்று அச்சங்கொண்ட மலைமகள், தன்னுடைய தந்தையின் இல்லத்தைவிட்டு வந்து இந்த மலையிலே நிரந்தரமாகத் தங்கியிருந்து 'இந்தக் காவிரியானவள் பல்லவன் காதலி' என்று கூ யிருக்கிறாள்."

"விபக்ஷ ஒழுக்கத்தைவிட்டுத் திரும்பி இலிங்கத்தை வழிபடுகின்ற குணபரன் என்னும் அரசன் இந்த மாகிய உலகத்தில் நெடுங்காலம் வாழ்வானாக.[1]

"சோழநாட்டின் முடிபோல விளங்குகிறது மலை. முடியில் அமைந்த மணிபோன்று (குகைக்) கோயில். மணியின் ஒளிபோன்று பிரகாசிக்கிறது சங்கரனுடைய (அருள்) ஒளி."

"சத்திய சந்தனுடைய பருவுடம்பு கல்லில் செதுக்கி யமைக்கப்பட்டுள்ளது. அதிலிருந்து அழியாப் புகழுடம்பு தோன்றியுள்ளது."[2]

இக் குகையின் வலப்புறத் தூண் ஒன்றில் வடமொழிச் சாசனம் எழுதப்பட்டுள்ளது. நான்கு செய்யுட்களாக அமைந்துள்ளது இந்தச் சாசனம்.[3] இச் சாசனத்தின் கருத்து இது:

---

1. இந்தச் செய்யுள், லிங்கானுலிங்கி, விபக்ஷம் முதலான தர்க்கப் பரிபாஷைச் சொற்களை அமைத்து இரண்டு பொருள் படும்படி சிலேடையாக அமைந்துள்ளது. இந்தச் சாசனத்தைக் கொண்டு, இக் குகைக்கோயிலை அமைத்த குணபரன் என்னும் அரசன் சமணமதத்திலிருந்து சைவமதத்திற்கு வந்து இலிங்க வழிபாடு செய்தான் என்று ஆராய்ச்சியாளர் கருதுகிறார்கள்.

2. இதில் கூறப்படுகிற சத்தியசந்தன் என்னும் பெயர் மகேந்திரவர்மனுடைய சிறப்புப்பெயர். இந்த அரசனுடைய உருவச்சிலை இங்கு அமைக்கப்பட்டிருந்ததென்பது இச் செய்யுளினால் அறியப்படுகிறது.

3. S. I. I. Vol. I. No. 34. Page 30.

"மலைகளில் சிறந்ததான இந்த மலையின் உச்சியிலே, வியக்கத்தக்க இந்தக் கற்கோயிலிலே, குணபரன் என்னும் அரசன் கல்லினால் திருமேனி அமைத்து ஸ்தாணுவை ஸ்தாணுவாக்கி[1] அவனுடன் தன்னையும் உலகத்திலே அழியாப் பொருளாக்கிக்கொண்டான்.[2]

"கிரீசன் (மலையில் வாழ்பவன்) என்னும் பெயரை மெய்ப்பிக்கும் பொருட்டு மலைமகள் கணவனாகிய கிரீசனுக்கு (சிவனுக்கு) சத்துருமல்லன் என்னும் மன்னன் இந்த மலைமேலே ஒரு கோயிலை அமைத்தான்."

"தரையிலே அமைக்கப்பட்ட கோயிலிலே இருந்து கொண்டு சோழர், காவிரி இவர்களின் பேராற்றலை நான் எவ்வாறு காணமுடியும் என்று அரன் (சிவன்) கேட்ட படியினாலே, தன்னுடைய நீதியான ஆட்சியினாலே மனுவை ஒத்த குணபர மன்னன். மேகங்கள் தவழ்கின்ற இந்த மலைக்கோயிலைச் சிவனுக்கு அமைத்துக்கொடுத்தான்."

"தன் உள்ளத்திலே சிவபெருமானை எப்போதும் நிலைநிறுத்தியுள்ள புருஷோத்தமன் இந்த மலையிலே அரனுக்கு ஒப்பற்ற திருமேனியைக் கல்லினால் விருப்பத்தோடு அமைத்து மேன்மையான இந்த மலையை அழகு

இக் குகையின் உட்புறத் தூண்களின் மேல் உள்ள தூலத்தில் எழுதப்பட்டுள்ள வடமொழிச் சாசனம் ஒரு செய்யுள்வடிவாக அமைந்திருக்கிறது.[3] அதன் கருத்து

'லலிதாங்குரன் என்னும் பல்லவ மன்னனால் அமைக்கப்பட்ட லலிதாங்குர பல்லவேஸ்வரக் கிருகம்."

---

1. ஸ்தாணு = அழிவில்லாதவன், சிவன். ஸ்தாணுவை ஸ்தாணுவாக்கி என்பதற்கு அழியாப் பொருளை அழியாப் பொருளாகச் செய்து என்பது பொருள்.

2. இதனால் குணபரனுடைய (மகேந்திரனுடைய) உருவமும் இக் கோயிலில் அமைக்கப்பட்டிருந்ததென்பது தெரிகிறது.

3. S. I. I. Vol. XII. No. 9.

மேலே கண்ட சாசனங்களிலே குணபரன், சத்துரு மல்லன், புருஷோத்தமன், லலிதாங்குரன் என்னும் பெயர் கள் கூறப்படுகின்றன. இப் பெயர்கள் மகேந்திரவர்ம னுடைய சிறப்புப்பெயர்கள் ஆகும்.

சென்னைக்கு அடுத்துள்ள பல்லாவரத்துக் குகைக் கோயிலில் காணப்படுவது போலவே இந்தக் குகைக் கோயிலிலும், தூண்களிலும் தூலங்களிலும் பல்லவக் கிரந்த எழுத்துகளினால் எழுதப்பட்ட மகேந்திரவர்மனுடைய சிறப்புப்பெயர்கள் காணப்படுகின்றன. இப் பெயர்களில் ஸ்ரீ மகேந்திரவிக்ரமன், குணபரன், பிணபிணக்கு, சித்திர காரப்புலி முதலிய பெயர்கள் காணப்படுகின்றன. இப் பெயர்களைத் தென் இந்திய சாசனம் பன்னிரண்டாம் தொகுதியில்[1] காண்க.

2. பல்லாவரத்துக் குகைக்கோயில்

இது, செங்கல்பட்டு மாவட்டம் சைதாப்பேட்டை தாலுகா பல்லாவரம் என்னும் ஊருக்கு அருகில் இருக் கிறது. பல்லாவரம், தென் இந்திய இருப்புப்பாதையில் ஒரு இரயில் நிலையம். சென்னையில் இருந்து பஸ் வண்டியிலும் செல்லலாம். இக்குகை உள்ள இடம், பழைய பல்லாவரம் என்னும் இடத்தில் பஞ்சபாண்டவமலை என்று வழங்கப்படு கிறது. பல்லாவரம் என்பது பல்லவபுரம் என்பதன் திரிபு.

பல்லவ அரச குடும்பத்தவர் வாழ்ந்திருந்ததும் குகைக்கோயில்களையுடையதுமான மூன்று பல்லாவரங் களில் இது ஒன்று.

இப்போது இந்தக் குகைக்கோயில் முகம்மதியரின் ஆதிக்கத்தில் இருக்கிறது. அவர்கள் இதை முகம்மதிய தர்க்காவாக உபயோகப்படுத்தி வருகிறார்கள். குகையில் சுண்ணும்பு பூசி வெள்ளையடித்திருக்கிறார்கள்.

இந்தக் குகைக்கோயிலின் அமைப்பு, மண்டகப்பட்டு குகைக்கோயிலின் அமைப்பை ஒத்திருக்கிறது. பல்லா வரத்துக் குகைக்கோயிலில் துவாரபாலகர் உருவம் முதலிய

1. S. I. I. Vol. XII. No. 8.

ஒன்றும் கிடையாது. முன்பக்கத்தில் மண்டபமும் மண்டபத்திற்குள் ஐந்து திருநிலையறைகளும் பாறையைக் குடைந்து அமைக்கப்பட்டுள்ளன. கர்ப்பக்கிருகத்திற்குள் உருவங்கள் ஒன்றும் இல்லை.

இக்குகையின் முன் மண்டபம் 32 அடி நீளமும் 12½ அடி அகலமும் 9 அடி உயரமும் உள்ளது. மண்டபத்தை இரண்டு வரிசைத் தூண்கள் தாங்குகின்றன. ஒவ்வொரு வரிசையிலும் நான்கு நான்கு தூண்கள் உள்ளன.



பல்லாவரத்துக் குகைக்கோயிலின் தரையமைப்பு.

மண்டபத்தின் பின்புறத்தில் உள்ள ஐந்து கருப்பக்கிருகங்களும் 2½ அடிச் சதுரமாக அமைந்த மாடங்கள்போல் உள்ளன. மண்டபத்தின் மேற்புறப் பாறையிலும் உட்புறத் தூண்களிலும் பல்லவக் கிரந்த எழுத்துக்கள் செதுக்கப்பட்டுள்ளன. இவை மகேந்திர விக்ரமவர்மனின் சிறப்புப் பெயர்களாக உள்ளன. இந்தப் பெயர்களில் முதல் முதலாகத் தொடங்குவது "ஸ்ரீ மகேந்திரவிக்ரமன்" என்பது. இதைப்போலவே திருச்சி குகைக்கோயிலிலும் இந்த அரசனுடைய பெயர்கள் எழுதப்பட்டுள்ளது கருதத்தக்கது.

ஸ்ரீ மகேந்திரவிக்ரமன், மத்தவிலாசன், சேத்தகாரி, விசித்திரசித்தன், பகாப்பிடுகு, லலிதாங்குரன், சித்ரகாரப் புலி என்னும் பெயர்கள் இச்சாசனத்தில் காணப்படுகின்றன. இப் பெயர்கள் மகேந்திரவர்மனுடைய விருதுப் பெயர்கள் ஆகும்.

3. வல்லத்துக் குகைக்கோயில்

செங்கல்பட்டு மாவட்டம் செங்கல்பட்டு தாலுகா செங்கல்பட்டுக்கு ஒன்றரை மைல் தூரத்தில், திருக்கழுக் குன்றத்துக்குப் போகிற சாலையில் வல்லம் கிராமம் இருக்கிறது. "களத்தூர்க் கோட்டத்து வல்லநாட்டு வல்லம்" என்று இவ்வூர், பழைய சாசனங்களில் கூறப்படுகிறது.

இவ்வூர்க் குன்றின்மேல் பாறையிலே மூன்று குகைகள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றில் இரண்டு குகைகள் முற்றுப்பெறவில்லை. நன்றாக அமைக்கப்பட்டது மூன்றாவது குகைக்கோயில். இது சிவன் கோயில். இக்கோயிலுக்குத் திருவயந்தீசுவரமுடைய நாயனார் கோயில் என்பது பெயர். இந்நாட்டை, மகேந்திரவர்மன் காலத்தில், அவன் கீழ்ச் சிற்றரசனாக இருந்து அரசாண்ட வயந்தப்பிரியன் என்னும் அரசன் பெயரால் இக்குகைக்கோயில் அமைக்கப் பட்டபடியினால் இக்கோயிலுக்கு இப்பெயர் வந்தது.



வல்லம் குகைக்கோயிலின் தரையமைப்பு.

இக்கோயிலில் இன்றும் பூசை வழிபாடுகள் நடைபெறுகின்றன. இக்கோயிலின் முன் மண்டபத்தைப் பிற்காலத்தில் செங்கல் சுவர் எழுப்பி அடைத்துவிட்டார்கள். இதனால், இக் கோயிலின் பார்வையும் அழகும் கெட்டுவிட்டன.

மறையின் வாயிற்புறத்தில் வழக்கம்போலத் துவாரபாலகர் உருவங்கள் உள்ளன. துவாரபாலகர்களின்

உருவ அமைப்பும் தூண்களின் உருவ அமைப்பும் மகேந்திரவர்மன் காலத்து அமைப்பையே ஒத்திருக்கின்றன.

இங்கு இரண்டு பழைய சாசனங்கள் காணப்படுகின்றன. இவற்றில் மிகப் பழமையானது இ
கோயிலைச் செய்வித்தவர் யார் என்பதைக்
இது பல்லவத் தமிழ் எழுத்தினால் எழுதப்பட்டது. மகேந்திரவர்மன் காலத்தில் எழுதப்பட்ட தமிழ்ச் சாசனங்கள் மிகச்சில. அவற்றில் ஒன்று இந்தச் சாசனம். (இந்தப் பல்லவத் தமிழ் எழுத்தின் அமைப்பை 60-ஆம் பக்கத்திலுள்ள படத்தில் காண்க.) இந்தத் தமிழ்ச் சாசனத்தின் வாசகம் இது :

“பகாப்பிடுகு லளிதாங்குரன்
சத்துரும்மல்லன் குணபரன்
மயேந்திரப் போத்தரெசரு அடியான்
வயந்தப்பிரி அரெசரு மகந் கந்தசேனன்
செயிவித்த தேவகுலம்.”

இந்தச் சாசனத்தின் கருத்து என்னவென்றால், பகாப்பிடுகு, லளிதாங்குரன், சத்துருமல்லன், குணபரன் என்னும் சிறப்புப் பெயர்களையுடைய மயேந்திரப்போத்தரன் கீழ் சிற்றரசனாக இருந்த வயந்தப்பிரிய அரசன் மகன் கந்தசேனன் என்பவன் இந்தக் கோயிலை அமைத்தான் என்பது.[1]

இதில் குறிப்பிட்ட மயேந்திரன் என்பவன் மகேந்திரவர்மன் முதலாம் ஆவன். இந்தச் சாசனம் கி. பி. 7-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் எழுதப் பட்டதாகும்.

1. வல்லத்துக் குகைக்கோயிலை அமைத்த
(ஸ்கந்தசேனன்) என்பவரும், திருக்கழுக்குன்றத்து மலையில் வேதகிரீசுவரர் கோயிலில் உள்ள சாசனம் கூறுகிற ஸ்கந்த சிஷ்யன் என்பவரும் ஒருவரே என்று கருதுகின்றனர். (See S. I. I. Vol. XII. Introduction Page 2, 3. and 9.) இந்தக் கருத்து ஒப்புக்கொள்ளக்கூடியதன்று. இருவரும் வெவ்வேறு



வல்லம் குகைக்கோயிலில் உள்ள தமிழ் எழுத்துச் சாசனம்.

இந்தக் குகைக்கோயிலில் உள்ள மற்றொரு சாசனம் கி. பி. 12-ஆம் நூற்றாண்டில், கோப்பெருஞ்சிங்கன் என்னும் அரசன் காலத்தில் எழுதப்பட்டது; இக்கோயிலுக்கு நுந்தாவிளக்குத் தானம் செய்யப்பட்ட செய்தியைக் கூறுது.

"சலபுவன சக்கரவர்த்திகள் ஸ்ரீ கோப்பெருஞ்சிங்க தேவர்க்கு யாண்டு கச-வது களத்தூர்க் கோட்டத்து வல்ல நாட்டு வல்லத்து உடையார் திருவயந்தீசுரமுடைய நாயனாக்கு" எனறு இநதச சாசனம

இக்குகைக்கோயிலின் வெளியே குன்றின் பாறையில் ஜேஷ்டா தேவியின் உருவமும் பிள்ளையார் (கணபதி) உருவமும் செதுக்கப்பட்டுள்ளன. ஜேஷ்டாதேவியின் வணக்கம் பல்லவர் காலத்தில் வழக்கத்தில் இருந்துவந்தது. பிற் காலத்தில் இந்தத் தெய்வ வணக்கம் மறக்கப்பட்டது.

இங்குச் செதுக்கப்பட்டுள்ள கணபதியின் உருவம் வெகு அழகானது. இளங்குழந்தை யொன்று உட்கார்ந் திருப்பதுபோலக் காணப்படுகிறது. இது வலம்புரி விநாயகர்; இந்தக் கணபதியின் உருவத்தைப் பிற்காலத் தில் செதுக்கியிருக்கவேண்டும் என்று சிலர் கருதுவது தவறு. இது இக்குகை அமைக்கப்பட்ட அதே காலத்தில் அமைக்கப்பட்டதாதல் வேண்டும். மகேந்திரவர்மன் காலத் தில் அமைக்கப்பட்ட கணபதி உருவங்கள் புதுக்கோட்டை யிலும் காணப்படுகின்றன.

4. மண்டகப்பட்டுக் குகைக்கோயில்

இவ்வூர், தென் ஆர்க்காடு மாவட்டம் விழுப்புரம் விழுப்புரம் இரயில் நிலையத்திலிருந்து வட மேற்கே 12 மைலில் இருக்கிறது. தளவானூருக்குத் தென் மேற்கே 6 மைலில் உள்ளது. இந்த ஊருக்கு மேற்கே அரை மைலில் உள்ள சிறு பாறைக்குன்றின் வடக்குப் ...றல் ஒரு குகைக்கோயில் அமைக்கப்பட்டிருக்கிறது. தளவானூர்க் குகைக்கோயிலைப் போன்றது. தளவா

னூர்க் கோயிலைப் போன்றே, மண்டபத்தின் வெளிப்புறத்தில், இரண்டு கோடியிலும் துவாரபாலகர் உருவங்கள் அமைக்கப்பட்டுள்ளன.[1]

மண்டபம் 22 அடி நீளம்; 24 அடி அகலம்; 9 அடி உயரம் உள்ளது. மண்டபத்தின் தென்புறப் பாறையில் மூன்று திருநிலையறைகள் அமைக்கப்பட்டுள்ளன. இம் மூன்று திருநிலையறைகளின் தரையில் மூன்று சதுரமான சிறு குழிகள் காணப்படுகின்றன. இந்தக் குழிகள், முற்காலத்தில் இங்கு மூன்று தெய்வத் திருமேனிகள் வைக்கப் பட்டிருந்ததைக் காட்டுகின்றன. இப்போது இங்குத் தெய்வ



மண்டகப்பட்டுக் குகைக்கோயிலின் தரையமைப்பு.

உருவங்கள் காணப்படவில்லை. இக்குழிகளில் இருந்த உருவங்கள் பிரமா, விஷ்ணு, சிவன் என்னும் மும்மூர்த்திகளின் உருவங்களாக இருந்திருக்கவேண்டும் என்றும் நினைக்க வேண்டியிருக்கிறது. இங்குள்ள பல்லவக் கிரந்த எழுத்துச் சாசனமும் இது மும்மூர்த்தி ஆலயம் என்றே கூறுகிறது. நடுவில் உள்ள கருப்பக்கிருகத்தில் சிவன் உருவம் இருந்தது என்பதை, இக்கருப்பக்கிருகத்தின் வாயிலில் உள்ள துவாரபாலகர், பாம்பு அணிந்திருப்பதிலிருந்து அறியலாம். இக் குகைக்கோயிலில் உள்ள ஒரு தூணில் எழுதப்பட்டுள்ள சாசனம், இக்கோயிலை அமைத்த அரசன் பெயர் விசித்திர சித்தன் என்று கூறுகிறது. விசித்திர சித்தன் என்பது மகேந்திரவர்மனுடைய சிறப்புப் பெயர்களில் ஒன்று.

1. முகப்புப் படம் 2 பார்க்க.

ஆகையால், இக்கோயில் மகேந்திரவர்மனால் அமைக்கப் பட்டதாகும். இந்தச் சாசனத்தின் வாசகம் இது :—



மண்டகப்பட்டுக் குகைக்கோயிலில் உள்ள வடமொழிச் சாசனம்.

ஏததநிஷ்டக மத்ருமமலோஹ
மசுத விசித்ரசித் தேன
நிர்மாபிதம் ந்ருபேண ப்ரமேஸ்வர
விஷ்ணுலக்ஷிதாய தனம்.

இதன் பொருள் :

“செங்கல் இல்லாமலும் மரமில்லாமலும் உலோகம் இல்லாமலும் சுண்ணாம்பு இல்லாமலும் பிரம ஈசுவர விஷ்ணுக்களுக்கு விசித்திரசித்தன் என்னும் அரசனால் இக் கோயில் அமைக்கப்பட்டது.”[1]

1. Ep. Ind. Vol. XVII. P. 14.

இதனுல், மகேந்திரவர்மன் பாறைகளைக் குடைந்து குகைக்கோயில்களை முதன் முதலாக அமைத்தான் என்பதும், • காலத்துக்குமுன்னே அமைக்கப்பட்ட கோயில்கள் செங்கல் மபு மரம பு முதலிய பொருள்களைக் கொண்டு அமைக்கப்பட்டன என்பதும் ல அழிந்துவிடக்கூடிய செங்கல் சுண்ணும்பு முதலிய பொருள்களைக் கொண்டு கட்டப்பட்ட பண்டைக் காலத்துக்கோயில்கள் இப்போது காணப்படவில்லை. சங்க காலத்தின் பிறகு கி. பி. 4-ஆம் நூற்றுண்டில் இருந்த சோழன் செங்கணுன் எழுபத்தெட்டு பெரிய கோயில்களைக் கட்டினுன் என்று நூல்களினுல் அறிகிறேம். அவன் கட்டிய கோயில்கள் யாவும் செங்கல் சுண்ணும்பு மரம் முதலியவைகளைக் கொண்டு கட்டியவையே. அவன் கட்டிய கோயில்கள், அப்பர் சம்பந்தர் காலத்தில் (கி. பி. 7-ஆம் நூற்றுண்டிலேயே) அழியும் நிலையில் இருந்தன என்பது தெரிகிறது. கருங்கற்களைக் கொண்டு கற்றளி (கற்கோயில்) அமைக்கும் வழக்கம் மகேந்திரன் காலத்திற்குப் பிறகு, கி. பி. 8-ஆம் நூற்றுண்டின் தொடக்கத்தில் ஏற்பட்டது என்பது சாசன ஆராய்ச்சியினுல் விளங்குகிறது.

5. தளவானூர்க் குகைக்கோயில்

தென் ஆர்க்காடு மாவட்டம் திண்டிவனம் தாலுகாவில் உள்ளது தளவானூர்க் கிராமம். இது பேரணி இரயில் நிலையத்திலிருந்து மேற்கே ஐந்து மைலில் இருக்கிறது; செஞ்சிக்குத் தென்கிழக்கே பத்து மைல் தூரத்தில் உள்ளது. இந்தக் கிராமத்துக்கு வடக்கேயுள்ள பாறைக்குன்றின் தெற்குப் பக்கத்தில் இக்குகைக் கோயில் அமைக்கப்பட்டுள்ளது. இவ்வூரார் இக்குகைக்கோயிலைப் பஞ்சபாண்டவர் மலை என்று கூறுகிருர்கள். சத்துருமல்லேஸ்வராலயம் என்பது இதன் பழைய பெயர். சத்துருமல்லன் என்பது முதலாம் மகேந்திரவர்மனுடைய சிறப்புப் பெயர்களுள் ஒன்று. எனவே சத்துருமல்லன் என்னும் மகேந்திரவர்மனுல் அமைக்கப்பட்ட

இப்போது இக்கோயிலில் வழிபாடுகள் நடைபெறு வது இல்லை. இக் குகைக்கோயிலில், முன்மண்டபமும் ஒரு திருநிலையறையும் அமைக்கப்பட்டுள்ளது. மண்டபத்தின் நீளம் 21 அடி 10 அங்குலம். அகலம் 19 அடி. உயரம் 8 அடி 10 அங்குலம். இந்த மண்டபத்தின் இருகோடியிலும் வெளிப்புறப் பாறையில் இரண்டு துவாரபாலகர் உருவங் கள் செதுக்கப்பட்டுள்ளன. தூண்களில் மகேந்திரவர்மன் காலத்துத் தாமரைப் பூ சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. மண்டபத்தின் வெளிப்புறத்துள்ள நடுத் தூண்களுக்கு மேலே மகரதோரணம் அழகாகப் பாறையில் செதுக்கப் பட்டிருக்கிறது.[1]



தளவானூர்க் குகைக்கோயிலின் தரையமைப்பு.

இந்த மண்டபத்தின் மேற்குப்புறத்தில் பாறைச் சுவ ரில் கிழக்குமுகமாகத் திருநிலையறை செதுக்கியமைக்கப் பட்டிருக்கிறது. இவ்வறையின் நீளம் 8 அடி 6 அங்குலம்; அகலம் 7 அடி 10 அங்குலம்; உயரம் 6 அடி 10 அங்கு லம். இதில் சிவலிங்கத்தின் உருவம் அமைக்கப்பட்டிருக் கிறது. திருநிலையறையின் வாயிலில் இரண்டு துவாரபாலகர் உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன.

மண்டபத்தின் தூண் ஒன்றிலே பல்லவர் காலத்துத் தமிழ் எழுத்தினால் எழுதப்பட்ட ஒரு வெண்பா காணப் படுகிறது.

1. முகப்புப் படம் 3 பார்க்க.

ஸ்ரீகோணைநாயகர
வெங்கண்ணகளங்கிர
ப்பொக்கணையன்வெ
ண்பெட்டின்றேன்பா
லம்த்மதிழ்ந்துத்
ணாடான்ராமித்தவெ
த்திலையான்ஞ
க்துடு மல்லைணர
ரிலுமைணர/ர
ண ர த்திடமாதவாத்து



தளவானூர்க் குகைக்கோயிலில் உள்ள தமிழ்ச்சாசன எழுத்து.

அதனை இப்போதைய தமிழ் எழுத்தினால் எழுதிக் காட்டுவோம் :

"ஸ்ரீ தொண் டையந்தார் வேந்தன் நரேந்திரப் போத்தரையன்,
வெண்பேட்டின் றென்பால் மிகமகிழ்ந்து—கண்டான்
சரமிக்க வெஞ்சிலையான் சத்துருமல் லேஸ்வராலயமென்
றானுக் கிடமாக வாங்கு."

இவ்வூர் ப்ரம்மங்கலவன் செல்லன் சிவதாசன் சொல்லியது."

மண்டபத்தின் வெளிப்புறத் தூண்களில் இடது பக்கத்துத் தூண் ஒன்றிலே பல்லவக் கிரந்த எழுத்தினால் எழுதப்பட்ட வடமொழிச் செய்யுள் காணப்படுகிறது.

அதன் வாசகம் இது :

" தண்டாநத நரேந்த்ரேண

ஸத்ருமல்லேண ஸைலேஸ்மின்
ஸத்ருமல்லேஸ்வ ராலய :"

கருத்து இது ;—

" தனது போர்வீரர்களால் பகைவரை அடக்கிய நரேந்திரனுகிய சத்துருமல்லன் என்னும் அரசனுலே, இந்த மலையின் மேலே சத்துரு மல்லேஸ்வராலயம் என்னும் கோயில் அமைக்கப்பட்டது."

6. மகேந்திரவாடி குகைக்கோயில்

மகேந்திரவாடி, வட ஆர்க்காடு மாவட்டம் வாலாஜா பேட்டை தாலுகா; சோளிங்கூர் இரயில் நிலயத்தில் இருந்து தென்கிழக்கே மூன்று மைலில் இருக்கிறது.

மகேந்திரவாடி என்பது மகேந்திரபாடி என்பதன் மரூஉ. முதல் மகேந்திரவர்மன் காலத்தில் உண்டாக்கப்பட்டது இந்த ஊர் என்பது இதன் பெயரினுலே அறியலாம்.

இவ்வூருக்கு அருகில் ஓர் ஏரியுண்டு. ஏரிக்கு அருகிலே பழைய காலத்திலே கோட்டை இருந்த அடையாளங்கள் தரையில் காணப்படுகின்றன. இங்குள்ள ஒரு பெரிய பாறையில் குகைக்கோயில் அமைக்கப்பட்டுள்ளது. வழக்கப்படி முன் மண்டபமும் கர்ப்பக்கிருகமும் உள்ளன[1]

இது திருமால் கோயில்.

கிழக்கு முகமாக அமைந்துள்ள இக் கோயில் மண்டபம் பதினெட்டு அடி நீளம் உடையது. அகலம் 13 அடி 6 அங்குலம். உயரம் 9 அடி. மண்டபத் தூண்கள், மகேந்திர பல்லவன் தூண்கள் போன்ற அமைப்புள்ளவை; தாமரைப் பூவின் உருவம் பொறிக்கப்பட்டவை.

திருநிலையறையின் வாயிலில் துவாரபாலகர் உருவங்கள் உள்ளன. சாந்தமாகக் காணப்படுகிற இந்த உருவங்கள் இரண்டு கைகளையும் இடுப்பில் ஊன்றி நிற்கின்றன.

திருநிலையறைக்குள் நரசிங்கப் பெருமாள் உருவம் அமைக்கப்பட்டிருக்கிறது. ஆனால், இது பழைய காலத்து உருவம் அன்று; பிற்காலத்தது.



மகேந்திரவாடி குகைக்கோயிலின் தரையமைப்பு.

இங்கு மண்டபத் தூண் ஒன்றில், பல்லவக்கிரந்த எழுத்துச் சாசனம் பொறிக்கப்பட்டுள்ளது. இதன் வாசகம் இது :

மஹிததமம் ஸதாமுப மஹேந்த்ர தடாகமித
ஸ்திரமுருகாரிதம் குணபரேண விதார்ய விலாம்
ஜனநயனுபிரம குணதாமி மஹேந்த்ர புரே
மஹதி மஹேந்த்ர விஷ்ணுக்ருஹா நாம முராரிக்ருஹ:

கருத்து :—

. . . ,ில் மகேந்திர தடாகக் ......ன
மேல், உலகத்தாரால் புகழ்ந்துரைக்கப்பட்டதும் மக்கள்

கண்டு களிக்கும்படி அழகுக்கு உறைவிடமானதுமான முராரி (திருமால்) கிருஹத்தை மகேந்திர விஷ்ணுக்கிருகம் என்னும் பெயரினால் குணபரன் என்னும் அரசன் செய்வித்தான்.”

இங்குள்ள ஏரிக்கு மகேந்திர தடாகம் என்றும், இக்குகைக்கோயிலுக்கு மகேந்திர விஷ்ணுக்கிருஹம் என்றும் பெயர் வழங்கின என்பதும், இவற்றை அமைத்தவன் குணபரன் என்னும் பெயரையுடைய மகேந்திர விக்கிரமன் என்பதும் இதனால் அறியப்படுகின்றன.

7. மாமண்டூர்க் குகைக்கோயில்

காஞ்சீபுரத்திற்குத் தெற்கே ஆறுகல் தொலைவில் உள்ளது மாமண்டூர். இவ்வூர் ஏரிக்கரையில் உள்ள கற்பாறைக் குன்றில் இரண்டு குகைக்கோயில்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவை மகேந்திரவர்மனால், அல்லது மகேந்திரவர்மன் காலத்தில் அமைக்கப்பட்டவை இந்தக் குகைக் கோயில்களுக்குத் தெற்கே, நரசபாளையம் அல்லது நரசபுரம் என்னும் ஊரைச்சார்ந்து வேறு இரண்டு குகைக் கோயில்கள் உள்ளன. அவை மகேந்திரன் காலத்திற்குப் பிற்காலத்தில் அமைக்கப்பட்டவை. ஆகவே, அவற்றைப் பற்றி இங்கு எழுதவில்லை.

காஞ்சீபுரத்திற்குத் தெற்கே மூன்று கல்லில் பல்லாவரம் என்னும் ஊரும், (இந்த ஊருக்கு அருகில் ஒரு குகைக் கோயில் உண்டு. குரங்கணின் முட்டத்துக் குகைக் கோயில் என்பது காண்க) அவ்வூருக்கு அருகில் தூசி என்னும் ஊரும், தூசிக்கு அருகில் மாமண்டூர் என்னும் ஊரும் உள்ளன இந்த ஊர்களின் பெயர்களை ஆராய்வோம். பல்லாவரம் என்பது பல்லவபுரம் என்பதன் திரிபு. இவ்வூரில் பல்லவ அரச குடும்பத்தார் வசித்தார்கள் போலும். அதனால்தான் இப் பெயர் ஏற்பட்டிருக்க வேண்டும். இதற்குப் பக்கத்தில் உள்ள ஊரின் பெயர் தூசி என்பது. இது பல்லவர்களின் தூசிப்படை இருந்த ஊர் என்று கருதலாம்.

இதற்கு அப்பால் இருப்பது மாமண்டூர் என்பது. இவ்வூரில் பல்லவர்களின் யானைப்படை குதிரைப் படைகள் இருந்தனபோலும். மா என்றால் மிருகம் என்றும் குதிரை, யானை என்றும் பொருள்படும்.

மாமண்டூர் ஏரிக்கரையில் உள்ள கற்பாறைக் குன்றில் அமைந்துள்ள இக் குகைக்கோயில்களில் வலது புறத்தில் இருப்பது திருமாலுக்கும் இடது புறத்தில் இருப்பது சிவபெருமானுக்கும் அமைந்தவை.

மாமண்டூரின் ஒரு பகுதி மகேந்திரமங்கலம் என்று பெயர் பெற்றிருந்தது. மகேந்திரமங்கலம் என்பது மகேந்திரவர்மன் பெயரால் ஏற்பட்ட ஊர். மாமண்டூர் ஏரிக்கு சித்ரமேகத் தடாகம் என்பது பழைய பெயர்.

வலது புறத்துக் குகையின் பாறைச் சுவரில் பல்லவக் கிரந்த எழுத்தினால் எழுதப்பட்ட சாசனம் ஒன்று காணப்படுகிறது. ஆனால், இந்தச் சாசனம் உள்ள பாறை வெடித்துப் பிளவுபட்டிருக்கிறபடியால் ஆங்காங்கே எழுத்துக்கள் மறைந்து சாசனத்தை முழுவதும் படிக்க முடியாமல் செய்துவிட்டது. என்றாலும் சிற்சில இடங்களில் காணப்படுகிற சொற்றொடர்களைக் கொண்டு மகேந்திரவர்மனைப் பற்றிய செய்திகள் சிலவற்றைத் தெரிந்துகொள்ள முடி

முதல் வரியில்,.........கந்தர்வ சாஸ்த்ர.........
வரியில்,......மத்தவிலாசாதிபதம் ப்ரஹனேத்தமம்......
7- வரியில்.........சத்ரு மல்லஸ்ய.........
11- வரியில்.........கல்பாத் ப்ரவிபஞ்ய.........வ்ருத்திம்
தக்ஷிண சித்ராக்யம் (கார) யித்வா யதாவிதிஹி.........
வரியில்,.........ஸ்ச விவிதை ஹ் க்ருத்வா வர்ண
சதுர்த்த.........

சொற்களும் தொடர்களும் காணப்படுகின்றன.

இதனால், சத்துருமல்லன் என்னும் சிறப்புப் பெயரையுடைய ... ர்மன் கந்தாவ சாஸ ... ல

(இசைநூலில்) வல்லவன் என்பதும், மத்த விலாசம் என்னும் நூலை இயற்றினவன் என்பதும், தக்ஷிண சித்ரம் என்னும் பெயருள்ள தென் இந்திய ஓவிய நூலுக்கு ஓர் உரை எழுதினான் என்பதும் தெரிகின்றன. இவ் விஷயங்களைப் பற்றி இந் நூலில் வேறு இடங்களில் காண்க.

இதனால் இக் குகைக்கோயில்கள் இவ்வரசனால் அமைக்கப்பட்டவை என்பது ஐயமற விளங்குகிறது. இக் குகைக் கோயிலின் அமைப்பும் தூண்களின் அமைப்பும் பாறை அமைப்பும் இதை உறுதிப்படுத்துகின்றன.

[illegible]ல பிற்காலத்தில் [illegible]யங்கள் தீட்டப்பட்டிருக்க வேண்டும். ஏனென்றால், இங்கு ஆங்காங்கே வண்ணங்கள் காணப்படுகின்றன. ஆனால், உருவான ஓவியம் ஒன்றேனும் காணப்பட[illegible]

8. மேலைச்சேரிக் குகைக்கோயில்

தென்ஆர்க்காடு மாவட்டம் செஞ்சி தாலுகா செஞ்சிக்கு வடக்கே மூன்று மைலில் உள்ளது மேலைச்சேரி என்னும் கிராமம். இந்தக் கிராமம் சிவசெஞ்சி என்றும் கூறப்படுவது உண்டு.

இந்த ஊருக்கு வடக்கே பாறைக்குன்று ஒன்று உண்டு. இந்தப் பாறையைக் குடைந்து, குகைக்கோயில் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இந்தக் குகைக்கோயிலுக்கு முன்புறத்தில் செங்கல்லினால் மண்டபம் கட்டப்பட்டிருப்பதனாலே, வெளிப்பார்வைக்கு இது குகைக்கோயிலாகத் தோன்றாது. உள்ளே சென்று பார்த்தால்தான் தெரியும். இவ்வூரார் இந்தக் கோயிலை மத்திளேசுவரர் கோயில் என்று கூறுகிறார்கள். ஆனால், இக்கோயிலின் தூண் ஒன்றில் எழுதப்பட்டுள்ள வடமொழிச் சாசனம் இக்கோயிலை, ஸ்ரீசிகாரி பல்லவேசுவரம் என்று கூறுகிறது.

செங்கற் சுவர்கொண்டு பிற்காலத்தில் அமைக்கப்பட்ட முன் மண்டபத்தைக் கடந்து உள்ளே சென்றால், பாறையில் அமைக்கப்பட்ட குகைக்கோயிலைக் காணலாம்.

இது ஒரு மண்டபத்தையும் அந்த மண்டபத்தின் நடுவில் ஒரு கர்ப்பக்கிருகத்தையும் கொண்டுள்ளது. பாறையைச் செதுக்கி அமைக்கப்பட்டுள்ள இந்த மண்டபத்தின் நீளம் 19 அடி 9 அங்குலம; அகலம் 8 அடி 9 அங்குலம். உயரம் 6 அடி 8 அங்குலம். இந்த மண்டபத்தின் நடுவில் அமைக்கப்பட்டுள்ள திருநிலையறை ஏறக்குறைய சதுரமான அமைப்புள்ளது. இதன் அகலம் 8 அடி 7 அங்குலம். நீளம் 8 அடி 4 அங்குலம். உயரம், மண்டபத்தின் உயரத்



மேலைச்சேரி குகைக்கோயில் தரையமைப்பு

தைப்போலவே 6 அடி 8 அங்குலம். இந்தத் திருநிலை யறையில் உள்ள சிவலிங்கத்தின் உயரம் பீடத்துடன் 4 அடி 9 அங்குலம் உள்ளது. பீடமும் சிவலிங்கமும் அதே பாறையில் அமைக்கப்பட்ட "சுயம்பு" உருவங்கள்.

இந்தக் குகைக்கோயிலில் வேறு சிற்பங்கள் காணப் படவில்லை இந்தக் கோவிலில் இப்போதும் வழிபாடு நடை பெற்று வருகிறது.

இந்தக் கோயிலின் தூண் ஒன்றில் வடமொழிச் சாசனம் பல்லவக்கிரந்த எழுத்தில் எழுதப்பட்டிருக்கிறது.

காரிதம் இதம் ந்ருபதிநா
சந்த்ரா தித்யேன ஸார்வபௌமேன
ஸ்ரீஸிகாரி பல்லவேஸ்வரமிதி
ஸைவந்தாம ஸித்திர் அஷ்டேக்ர.

"ஸ்ரீசிகாரி பல்லவேஸ்வரம் என்னும் பெயருள்ள இந்தக் கோயில் சிங்கபுரத்தில் சந்திராதித்யன் என்னும் அரசனால் அமைக்கப்பட்டது"[1] என்பது இதன் பொருள்.

சாசனத்தில் சிங்கபுரம் என்று கூறப்படுகிற ஊர் இப்போது சிங்கவரம் என்னும் பெயரால் வழங்கப்படுகிறது. சிங்கவரம் மேலைச்சேரிக்குத் தெற்கே ஒரு மைலில் உள்ளது. பண்டைக்காலத்தில் மேலைச்சேரியும் சிங்கவரத்துடன் சேர்ந்த ஊராக இருந்ததுபோலும்.

௸ சாசனத்தில் கூறப்படுகிற சந்திராதித்யன் என்னும் அரசன் யார் என்பது தெரியவில்லை. சந்திராதித்யன் என்பது சிறப்புப் பெயரா இயற்பெயரா என்பதும் தெரியவில்லை. இவன் பல்லவ குடும்பத்தைச் சேர்ந்த சிற்றரசனாக இருக்கக்கூடும் என்றும், இவன் மகேந்திரவர்மன் காலத்தில் இருந்திருக்கக்கூடும என்றும் கருதுகிறார்கள். இந்தக் குகைக்கோயிலின் அமைப்பும் இதில் எழுதப்பட்டுள்ள சாசன எழுத்தின் அமைப்பும் கி. பி. 7-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் முதலாம் மகேந்திரவர்மன் காலத்து அமைப்பைப் போன்றிருக்கிறபடியினால், இந்தக் குகைக் கோயில் மகேந்திரவர்மன் காலத்தில் அமைக்கப்பட்டது என்று அறிஞர்கள் கருதுகிறார்கள்.

9. சித்தன்னவாசல் குகைக்கோயில்

புதுக்கோட்டையைச் சேர்ந்த குளத்தூர் தாலுகா ன்னவாசல் என்னும் கிராமத்துக்குக் கிழக்கே அரை மைல் தூரத்தில் உள்ள குன்றின்மேல், கற்பாறையைக் குடைந்து அமைக்கப்பட்ட ஒரு குகைக்கோயில் உண்டு.

1. 284 of 1916. Epi. Rep. 1916; P. 114 Para 6.

சமணசமயக் கோயில். இக் குகைக்குள் எழுதப்பட்டுள்ள பழைய ஓவியங்களினாலே இக்கோயில் உலகமெங்கும் பேர்பெற்றிருக்கிறது. இந்தக் குகைக்கோயிலை அமைத்தவன் மகேந்திரவர்மனே. இவன் அமைத்த சமணசமயக் கோயில் இது

மகேந்திரவர்மன் அமைத்த ஏனைய குகைக்கோயிலைப் போலவே இக்கோயிலும் முன் மண்டபத்தையும் அதன் மத்தியில் ஒரு கருப்பக்கிருகத்தையும் உடையது. மண்ட



சித்தன்னவாசல் குகைக்கோயில் தரையமைப்பு

பத்தின் நீளம் 22 அடி 10 அங்குலம்; அகலம் 11 அடி 6 அங்குலம். இந்த மண்டபத்தில் இரண்டு தூண்கள் உள்ளன. மண்டபத்தின் மத்தியில் பாறையைக்குடைந்து அமைக்கப்பட்டுள்ள திருநிலையறை 10½ அடி சதுரமாக அமைந்துள்ளது. இவ்வறையின் வாயிலின் உயரம் 5 அடி 7 அங்குலமும், அகலம் 2½ அடியும் உள்ளது.

யறையின் உள்ளே அருகக் கடவுளின் மூன்று திருமேனிகள் முக்குடையுடன்

மண்டபத்தின் இரண்டுகோடிகளிலும் இரண்டு ஜைன உருவங்கள் ஒன்றுக்கொன்று எதிராக அமைக்கப்பட்டுள்ளன. வடபுறத்தில் உள்ளது குடையுடனும், தென்புறத்தில் உள்ளது ஐந்தலை நாகத்துடனும் காணப்படுகின்றன.

இக்குகையின் பாறைச்சுவரில் சுண்ணம் பூசப்பட்டு அழகான வண்ண ஓவியங்கள் எழுதப்பட்டுள்ளன கருப்பக் கிருகத்தின் எதிரே மண்டபத்தின் மேற்புறத்தில், தாமரையும் அல்லியும் அரும்பிப் பூத்துத் தழைத்துள்ள தாமரைக்குளத்தின் ஓவியம் அழகாகக் காட்சியளிக்கிறது. இரண்டு தூண்களிலும் அரம்பையர் இரண்டு பேர் நடனம் ஆடுவது போன்ற காட்சி எழுதப்பட்டுள்ளது. மேலும், இக் குகைக்கோயிலை அமைத்த மகேந்திரவர்மன், அவன் பட்டத்தரசி ஆகிய இவர்களின் வண்ண ஓவியமும் இங்குக் காணப்படுகின்றன.

மகேந்திரவிக்ரமன் காலத்தில் எழுதப்பட்ட இந்த வண்ணச் சித்திரங்கள், அஜந்தா மலைக்குகை ஓவியங்களைப் போன்று ஓவியக்கலைஞர்களால் புகழப்படுகின்றன. இந்த ஓவியங்களின் விளக்கத்தை இந்நூலில் "ஓவியங்கள்" என்னும் தலைப்பின்கீழ் காண்க.

பிற்காலத்திலே, கி. பி. 862-இல் அவனிபசேகரன் ஸ்ரீவல்லபன் என்னும் பாண்டியன் காலத்தில் எழுதப்பட்ட இங்குள்ள ஒரு சாசனம் மதுரையாசிரியன் இளங்கௌதமன் என்பவன் இங்கு ஒரு மண்டபத்தைக் கட்டியதாகக் கூறுகிறது. ஆனால், அப்படிப்பட்ட மண்டபம் இப்போது இங்கு இல்லை.

இந்தச் சாசனம் இந்தக் குகைக்கோயிலை "அறிவன் கோயில்" என்று கூறுகிறது. எனவே, இக் குகைக்கோயிலின் பழைய பெயர் அறிவன் கோயில் என்று அறியப்படுகிறது. ஜைனக் கடவுளுக்கு அருகன் என்பது பெயராகலின் அருகன்கோயில் என்று இதற்குப் பெயர் ஏற்பட்டிருக்கவேண்டும் என்றும், அருகன்கோயில் என்பதைத் தான் தமிழில் அறிவன்கோயில் என்று வழங்கினார்கள்

என்றும் சிலர் கருதுகின்றனர். அவ்வாறு கருதுவதற்குக் காரணம் இல்லை. ஏனென்றால் அருகக்கடவுளுக்கு அறிவன் என்றே பெயர் உண்டு. இதனைச் சிலப்பதிகாரம்,

"அறிவன் அறவோன் அறிவுவரம் பிகந்தோன்
செறிவன் சினேந்திரன் சித்தன் பகவன்
தரும முதல்வன் தலைவன் தருமன்
பொருளன் புனிதன் புராணன் புலவன்
சினவரன் தேவன் சிவகதி நாயகன்"
(சிலம்பு, ௧0: ௧௭௬ - ௧௮0)

என்று கூறுவதினால் அறியலாம். கும்பகோணம் தஞ்சாவூர் முதலிய ஊர்களிலுள்ள ஜைனர்கள் அவ்வப்போது இக்குகைக் கோயிலுக்கு வந்து அருகக் கடவுளை வழிபட்டுச் செல்வது இப்போதும் வழக்கமாக இருக்கிறது

ானவாசல குகையின வடகிழக்குப புறத்தில மழமழப்பான பாறையில் இயற்கையாக அமைந்துள்ள குடகில் பதினேழு கற்படுக்கைகள் பாறையில் செதுக்கப்பட்டுள்ளன. இக்கற்படுக்கைகளின் தலைப்புறம் தலையணை போன்று சற்று உயரமாக அமைக்கப்பட்டுள்ளன. ஜைன முனிவர்கள் இக்கற்பாறைப் படுக்கையில் படுத்து உறங்குவது வழக்கம். இங்கு பிராமி எழுத்தில் எழுதப்பட்ட சாசனங்கள் உள்ளன. இவை கி. மு. 2-ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டவை. (மகேந்திரன் காலத்தில் எழுதப்பட்ட சாசனங்களும் இங்கு உள்ளன) இவை இக்கற்படுக்கைகளை -பயோகித்துவந்த சமண முனிவர்களின் பெயர்களாகத் ...றன.

"தொழக்குன்றத்துக் கடவுளன்நீலன், திருப்பூரணன் திட்டைச்சாணன், திருச்சாத்தன் ஸ்ரீபூரணச்சந்திரன், நியத்கரன்பட்டக்காழி,........த்தூர்க் கடவுளன்" என்னும் பெயர்கள் காணப்படுகின்றன. (கடவுளன் என்றால் முனிவன் என்பது பொருள்.)

கற்படுக்கைகள் உள்ள குடகிற்குச் செல்லும்)க்கட்டான வழிக்கு ஏழடிப்பட்டம் என்பது பெயர்.

சித்தன்னவாசல் கிராமத்தில் "நவச்சுனை" என்னும் பெயருள்ள குளம் ஒன்று உண்டு. இக்குளத்தருகில் நாவல் மரம் இருப்பதனால் நாவல்சுனை என்று பெயர் ஏற்பட்டு அப்பெயர் நவச்சுனை என்று மாறிற்று. இக்குளத்தில் எப்போதும் நீர் நிறைந்திருக்கும். 1911-இல் இக்குளத்து நீர் இறைக்கப்பட்டபோது, இதற்குள் பாறையிலே முட்டை வடிவமுள்ளதாகக் குடைந்து அமைக்கப்பட்ட சிறு குகையும் அதில் ஒரு சிவலிங்கமும் காணப்பட்டதாம். ஓர் ஆள் இக் குகைக்குள் நுழைந்து லிங்கத்தை வலம் வரக்கூடிய அளவு இடம் இருக்கிறதாம்.

10. சீயமங்கலக் குகைக்கோயில்

வடஆர்க்காடு மாவட்டம் வந்தவாசி தாலுகா தேசூரில் இருந்து தெற்கே ஒரு மைலில் உள்ளது சீயமங்கலம். சீயம் என்றால் சிங்கம் என்பது பொருள். சீயமங்கலம் என்பது சிம்மவிஷ்ணு சதுர்வேதி மங்கலம் என்பதன் திரிபாக இருக்கக்கூடும் என்றும், முதல் மகேந்திரவர்மனுடைய தந்தையாகிய சிம்மவிஷ்ணுவின் பெயரால் இந்தக் கிராமம் ஏற்பட்டிருக்கவேண்டும் என்றும் கருதுகிறார்கள்.

இவ்வூர்ப் பாறைக்குன்றில் அமைக்கப்பட்டது இக் குகைக்கோயில். சிவன் கோயிலாகிய இது இன்றும் வழிபடப்படுகிறது.

க் குகைக்கோயிலின் முன்புறத்தில், பிற்காலத்தில் அமைக்கப்பட்ட செங்கல் சுவர் மண்டபம் இக் கோயிலுக்குள் வெளிச்சம் புகாதபடி தடுத்துவிடுகிறது. ஆகையால், பட்டம் பகலிலும் இக்கோயில் இருள் அடைந்துள்ளது.

இந்தக் குகைக்கோயிலும், ஏனைய குகைக்கோயில்களைப்போலவே முன் மண்டபத்தையும் ஒரு திருநிலையறையையும் கொண்டுள்ளது. திருநிலையறையில் சிவலிங்க உருவமும், வாயிலில் இரண்டு துவாரபாலகர் உருவங்களும் உள்ளன. முன் மண்டபத்தின் இரண்டு கோடிகளிலும்

இரண்டு போர்வீரர்களுடைய சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. நீண்ட மீசையுடைய இந்த உருவங்கள் இடது கையில் கேடயத்தைத் தாங்கி வலது கையில் வாளைப் பிடித்து ஓங்கி வீசுவதுபோன்று அமைந்துள்ளன. இந்தச் சிற்பத்தைப்பற்றி இந்நூலில் "மகேந்திரன் காலத்துச் சிற்பங்கள்" என்னும் தலைப்பில் காண்க. இப்படிப்பட்ட சிற்ப உருவங்கள் வேறு குகைக்கோயில்களில் காணப்பட



சீயமங்கலக் குகைக்கோயிலின் தரையமைப்பு

மண்டபத் தூணில் சிங்கம் ஒன்று ஒரு முன்காலைத் தூக்கிநிற்பது போன்று சிற்பம் அமைக்கப்பட்டுள்ளது. தூண்களில் தாமரைப்பூவின் உருவமும் பொறிக்கப்பட்டுள்ளன.

இங்குள்ள பல்லவக் கிரந்த எழுத்துச் சாசனம், இக் கோயிலை அமைத்த அரசன் பெயர் லலிதாங்குரன் என்றும், இக்கோயிலின் பெயர் அவனிபாஜன பல்லவேசுவரம் என்றும்

அந்தச் 'ன் வாசகம்

"லலிதாங்குரேண ராஜ்ஞாவ
நிபாஜன பல்லவேஸ்வரந்நாம
காரிதமேதத்ஸவேதா கரண்ட
மிவபுண்ய ரத்நாநம்."

இதன் கருத்து இது :

"புண்ணியமாகிய இரத்தினங்களை வைக்கும் செப்புப் போல (அருங்கலச் செப்புபோல), அவனிபாஜன பல்லவேஸ்வரம் என்னும் பெயருள்ள இக் கோவிலை லலிதாங்குரன் என்னும் அரசன் அமைத்தான்."

சீயமங்கலம் குகைக்கோயிலும் தளவானூர்க் குகைக் கோயிலும் ஒன்றுக்கொன்று அண்மையில் உள்ளன.

சீயமங்கலக் குகைக்கோயில், மகேந்திரவர்மனுடைய தந்தையான சிம்மவிஷ்ணுவின் காலத்தில் தொடங்கப் பட்டு, மகேந்திரவர்மன் காலத்தில் முற்றுப்பெற்றிருக்கக் கூடும் என்று கருதப்படுகிறது.

11. குரங்கணின்முட்டத்துக் குகைக்கோயில்

வடஆர்க்காடு மாவட்டம் செய்யாறு தாலுகாவில் ங்கணின்முட்டம் இருக்கிறது. இவ்வூர் காஞ்சிபுரத்தி ந்து தென்மேற்கே மூன்று மைல். குரங்கணின் முட்டத்தில் பாடல்பெற்ற சிவன்கோயில் உண்டு. ஆனால், அது குகைக்கோயில் அன்று. குரங்கணின் முட்டத்திற்கு அருகில் பல்லாவரம் (பல்லவபுரம்) என்னும் பெயருள்ள ஓர் ஊர் இருக்கிறது. இந்தப் பல்லவபுரத்திற்கு அருகில் ஒரு குகைக்கோயில் உண்டு. இக் குகைக்கோயிலை இவ் வூரார் பாண்டவர் மலை, பஞ்சபாண்டவர் மலை என்று கூறு கின்றன

பல்லவபுரம் என்னும் பெயருள்ள மூன்று இடங்களில் இது ஒன்று.

இங்குள்ள ஒரு பெரும்பாறையைக் குடைந்து இக் குகைக்கோயில் அமைக்கப்பட்டுள்ளது. மற்றக் குகைக் கோயில்களைவிட இக் குகைக்கோயில் அமைப்புமுறை புதுமையானது. மண்டபமும் மண்டபத்தின் எதிரில் மூன்று திருநிலையறைகளும் மண்டபத்தின் வலது பக்கம் இடது பக்கம் ஆகிய இரண்டு பக்கங்களிலும் இரண்டு இரண்டு திருநிலையறைகளும் ஆக ஏழு திருநிலையறைகள் உள்ளன. இவ்வறைகளில் இப்போது உருவங்கள் இல்லை. ஆனால், முற்காலத்தில் உருவங்கள் அமைக்கப்பட்டிருந்தன என்பதற்கு அடையாளமாக ஒவ்வொரு அறையிலும் சிறு குழிகள் பாறையில் காணப்படுகின்றன.

இங்கு இராஷ்டிரகூட அரசன் மூன்றும் காலத்துச் சாசனம் ஒன்று காணப்படுகிறது. தஞ்சையையும் காஞ்சியையும் வென்று கொண்ட கன்னர தேவரின் (இராஷ்டிரகூட அரசன் மூன்றும் கிருஷ்ணன்) 24-ஆவது ஆண்டில் எழுதப்பட்ட இந்தச் சாசனம் ஏரிகீழ்நாட்டு காலியூர்க் கோட்டத்துப் பல்லவபுரம் கல்மடை காத்த ஆழ்வாரின் ஸ்ரீபலிக்காக இவ்வூரார் நிலம் தானம் செய்ததை இந்தச் சாசனம் கூறுகிறது.[1]

இந்த ஆதாரத்தைக் கொண்டுபோலும், இக் கோயிலை வைணவக் கோயில் என்று எபிகிராபி அறிக்கை[2] கூறுகிறது. பிற்காலத்து அரசனான இராஷ்டிரகூட அரசன் காலத்தில் இக்கோயில் இப்பெயருடன் வழங்கப்பட்டிருக்கலாம். ஆனால், இக் குகைக்கோயிலில் உள்ள சிற்பங்கள் இதனை ஆதரிக்கவில்லை. உண்மையில் இக் குகைக்கோயில் மும்மூர்த்திகளுக்கும் உரிய கோயிலாகும். எப்படி என்றால், மண்டபத்துக்கு எதிர்ப்புறத்திலுள்ள மூன்று கருப்பக்கிருகங்களில் தெற்கில்உள்ள திருநிலையறை வாயிலில் மீசை தாடியுள்ள துவாரபாலகர்களும் நடுவில் உள்ள திருநிலையறையின் வாயிலில், தலையில் மாட்டுக் கொம்பு போன்ற அணியையுடைய துவாரபாலகர் உருவங்களும், வடக்குப்புறத் திருநிலையறையில் தாடி மீசையில்

1. 295 of 1912., Epi. Rep. 1913. Page 84. Para 2.
2. Epi. Rep. 1915, Page, 84.

லாத துவாரபாலகர் உருவங்களும் காணப்படுகின்றன. ஆகவே, இந்தக் குகைக்கோயில் பிரம்மா, சிவன், திருமால் ஆகிய மும்மூர்த்திகளுக்கு ஏற்பட்ட மும்மூர்த்திக் கோயிலாகும். ஆனால், மண்டபத்தின் இடப்புறம் வலப்புறங்களில் உள்ள நான்கு திருநிலையறைகளில் எந்தெந்தத் தெய்வ உருவங்கள் அமைக்கப்பட்டிருந்தன என்பது தெரியவில்லை.



குரங்கணின் முட்டம் குகைக்கோயில் தரையமைப்பு

இந்தக் குகைக்கோயில் மண்டபத்தின் நீளம் 28 அடி 4 அங்குலம்; அகலம் 14 அடி; உயரம் 8 அடி 4 அங்குலம். இரண்டு வரிசைத் தூண்கள் உள்ளன. இவை மகேந்திரன் காலத்துச் சதுரத் தூண்கள் போன்றவை.[1]

இந்தக் குகை, முதல்மகேந்திரவர்மன் காலத்தது அன்று; பிற்காலத்தது என்று எபிகிராபி அறிக்கை கூறுகிறது. ஆனால், தூண்களின் அமைப்பு, துவாரபாலகர் உருவ அமைப்பு முதலியவை, மகேந்திரவர்மன் காலத்தில் அமைக்கப்பட்ட குகைக்கோயில் என்பதைத் தெரிவிக்கின்றன. இதில் பல்லவ அரசனுடைய சாசனங்கள் காணப்படவில்லை. ஆனால், குகையின் மண்டபத்தின் முன் பக்கத்தில், மேற்புறப்பாறையில் பல்லவக் கிரந்த எழுத்துக்கள் அழிக்கப்பட்டிருக்கிற அடையாளம் காணப்படு

1

குறிப்பு:—இந்தக் குகைக்கோயில் உள்ள பல்லவபுரத்தில், பல்லவ அரச குடும்பத்தார் வாழ்ந்திருக்கக்கூடும். பல்லாவரத்திற்கு (பல்லவபுரத்திற்கு) அருகில் கணிகிலுப்பை என்னும் சிறு கிராமம் இருக்கிறது. இங்குப் பல்லவரின் நிமித்திகர் (கணி= நிமித்திகன்) இருந்தனர் போலும். கணிகிலுப்பையில் ஒரு பௌத்தக்கோயில் இருந்தது. இக்கோயில் இப்போது மறைந்துவிட்டது. இதிலிருந்த புத்த உருவம் (தியானத்தில் அமர்ந்திருப்பது போன்றது) இவ்வூர் ஏரிக்கரைக்கருகில் கொண்டு போய் வைக்கப்பட்டிருக்கிறது. கோயில் இருந்த இடத்தில் கருங்கல் பீடம் மட்டும் காணப்படுகிறது. இக்கோயில் இருந்த இடத்தின் அருகில் ஒரு பிள்ளையார்கோயில் கட்டியிருக்கிறார்கள். இக்கோயில் தெருக்கோடியில் ஒரு கருங்கல் நடப்பட்டிருக்கிறது. இக்கல்லில் பௌத்தரின் தருமச்சக்கரம் முதலிய சின்னங்கள் காணப்படுகின்றன. இந்தப் பௌத்தக்கோயில் பல்லவர் காலத்தில் கட்டப்பட்டிருக்கக்கூடும் ஏனென்றால், பல்லவ அரசர்களில் சிலர் புத்தவர்மன் என்னும் பெயருடன் பௌத்தர்களாக இருந்தனர்.

பல்லவபுரத்திற்கு அருகில் தூசி, மாமண்டூர் என்னும் ஊர்கள் உள்ளன. தூசி என்பது தூசிப்படையிருந்த ஊர். மாமண்டூர் என்பது யானைப்படை குதிரைப்படையிருந்த ஊர். (மா=மிருகம், யானை குதிரையைக் குறிக்கிறது.) பல்லவபுரம் கணிகிலுப்பை, தூசி, மாமண்டூர் என்னும் இவை ஒன்றையொன்றடுத்திருப்பதும், காஞ்சிபுரத்துக்கு அருகில் இருப்பதும் இங்குப் பல்லவர் காலத்தில் பல்லவ அரசகுடும்பத்தினர் வாழ்ந்திருந்தனர் என்பதைக் குறிப்பட...

12. சிங்கவரத்துக் குகைக்கோயில்

தென் ஆர்க்காடு மாவட்டம் செஞ்சித் தாலுக்கா செஞ்சிக்கு வடக்கே இரண்டு மைலில் சிங்கவரம் என்னும் கிராமம் இருக்கிறது. சிங்கவரம் என்பது சிங்கபுரம் என்பதன் மரூஉ. இது சிங்கபுரநாட்டின் தலைநகராக இருந்தது. முதலாம் மகேந்திரவர்மன் தந்தையாகிய சிம்மவிஷ்ணுவின் காலத்தில் அந்த அரசன் பெயரால் இந்நகரம் டாக்கப்பட்டிருக்கக்கூடும் என்று கருதுகிறார்கள்.

ஊருக்கு விஷ்ணு செஞ்சி என்றும் பெயர் கூறப்ப...

இவ்வூரில் உள்ள அரங்கநாதர் கோயில், பாறையைக் குடைந்து அமைக்கப்பட்ட குகைக்கோயில் ஆகும். இது முதலாம் மகேந்திரவர்மன் காலத்தில் அமைக்கப்பட்டது.

பாறையைக் குடைந்து அமைக்கப்பட்ட முன் மண்டபமும் அதற்குப்பின்னால் திருநிலையறையும் அதில் அனந்த சயன மூர்த்தியின் உருவமும் உள்ளன. மகாபலிபுரத்துக் கடற்கரைக் கோயிலில் உள்ள அநந்தசயன மூர்த்தியைப் போல, இங்குள்ள அரங்கநாதரும் வலது கையை நீட்டித் தொங்கவிட்டிருக்கிறார். இந்த உருவம், பிற்காலத்தில், சிற்பிகளால் செப்பனிடப்பட்டதாகத் தெரிகிறது. மண்டபத் தூண்களில், மகேந்திர வர்மன் தூண்களில் காணப்படுகிற தாமரைப்பூவின் சிற்பங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. தளவானூர்க் குகைக்கோயிலில் உள்ள துவாரபாலகர் போன்ற உருவங்களும் இங்கு உள்ளன. இக் கோயிலில் இப்போதும் வழிபாடுகள் நடைபெறுகின்றன.

பல்லவக் குகைக்கோயில்களில் காணப்படுகிறபடி இக் கோயிலிலும் சாசன எழுத்துக்கள் இருக்கவேண்டும். ஆனால், இதுவரையில் இங்குச் சாசன எழுத்துக்கள் கண்டுபிடிக்கப்படவில்லை. ஏனென்றால், பாறைத் தூண்களுக்கு இடையில், பிற்காலத்தில் செங்கற் சுவர்கள் அமைக்கப்பட்டிருப்பதினால், சாசன எழுத்துக்கள் மறைந்திருக்கக்கூடும். ...லாகா, இங்குள்ள சாசன எழுத்தைக் கண்டுபிடிக்க முயற்சி செய்தது. ஆனால், கோயில் அதிகாரிகள் செங்கல் சுவரை எடுத்துவிட மறுக்கிறபடியால் அவர்கள் முயற்சி நிறைவேறவில்லை.

...நள்ள பிற்காலத்துச் சாசனம் ஒன்று, "சகல புவன சக்ரவர்த்திகள் ஸ்ரீ அவனி ஆளப்பிறந்தான் கோப்பெருஞ்சிங்க தேவர்க்கு" 4-ஆவது ஆண்டில் எழுதப்பட்டது. இதில் இக்கோயில் "திருப்பன்றிக்குன்று எம்பெருமான்" என்று கூறப்படுகிறது. எனவே, இக் குகைக் கோயில், ஆதிகாலத்தில் வராகப்பெருமாள் கோயிலாக இருந்திருக்கவேண்டும் என்றும், பிற்காலத்திலே

கோயில் அரங்கநாதர் கோயிலாக மாற்றப்பட்டிருக்கவேண்டும் என்றும் நினைக்கவேண்டியதாக இருக்கிறது.

சிங்கவரம் குகைக்கோயில், மகேந்திர வர்மன் தந்தையான சிம்மவிஷ்ணு காலத்தில் அமைக்கப்பட்டிருக்கலாம் என்று க(

குறிப்பு :—முகம்மது துக்லாக் என்பவன் டெல்லியை அரசாண்ட காலத்தில் அவனுடைய சேனுபதி மாலிக்காபூர் என்பவனைத் தென்னுட்டிற்கு அனுப்பிக் கோயில்களைக் கொள்ளையிட்டான். தென்னுட்டுக் கோயில்களைக் கொள்ளையடித்த மாலிக்காபூர் ஸ்ரீரங்கத்துக்கு வந்து அக் கோயிலைக் கொள்ளையிட்டான். அவன் வருவதையறிந்த ஸ்ரீரங்கத்துக் கோயில் அதிகாரிகள் ஸ்ரீரங்கநாதரைக்கொண்டுவந்து, சிங்கவரம் குகைக் கோயிலில் வைத்துவிட்டார்கள் என்றும் அந்த ஸ்ரீரங்கநாதர் உருவந்தான் இப்போது இங்குள்ளது என்றும் கூறுகிருர்கள். இப்போது ஸ்ரீரங்கத்தில் உள்ளஅரங்கநாதர் உருவத்தைவிட சிங்கவரத்தில் உள்ள அரங்கநாதர் உருவம் சற்றுப் பெரிது என்றும் கூறுகிருர்கள். கி. பி. 1327-28-ல் நடைபெற்ற மாலிக்காபூர் கோயில் கொள்ளையைக் கோயில் ஒழுகு, குருபரம்பரைப் பிரபாலம் என்னும் வைணவநூல்கள் கூறுகின்றன. அப்போது ஸ்ரீரங்கத்தில் இருந்த பிள்ளை லோகாசார்யரும் வேதாந்த தேசிகரும் முறையே, தென்னுட்டிற்கும் மைசூர்நாட்டிற்கும் ஓடி மறைந்தார்கள் என்று அந்நூல்கள் கூறுகின்றன. ஸ்ரீரங்கத்தில் இருந்து அரங்கநாதரை முதலில்திருப்பதிக்குக் கொண்டுபோனுர்கள் என்றும், பிறகு அங்கிருந்து செஞ்சிக்கு அருகில் உள்ள சிங்கவரத்திற்குக் கொண்டு வந்தார்கள் என்றும், பின்னர்ச் செஞ்சியை அரசாண்ட துபாகி கிருஷ்ணப்ப நாயகர் என்னும் அரசரின் குருவாக இருந்த நல்லான் சக்ரவர்த்தி சத்ரயாகம் சேஷாத்திரி அய்யங்கார் என்பவரின் முயற்சியால், இந்த அரங்கநாதர் உருவம் மீண்டும் ஸ்ரீரங்கத்துக்குக் கொண்டுபோகப்பட்டுக் கோபணுர்யர் என்பவரால் பிரிதிஷ்டை செய்யப்பட்டது என்றும் அனந்தார்யர் இயற்றிய பிரபன்னும்ருதம் என்னும் நூல் கூறுகிறது.

தேசிங்குராசன் செஞ்சியை அரசாண்டகாலத்தில், சிங்கவரத்து அரங்கநாதரை உபாசக மூர்த்தியாகக் கொண்டிருந்தான் என்றும், கி. பி. 1714 இல் ஆர்க்காட்டு நவாபுடன் தேசிங்கு போரிட்டபோது, தேசிங்கு அரங்கநாதரிடம் போருக்குச் செல்ல உத்தரவு கேட்டார் என்றும், அரங்கநாதர், போருக்குப் போகவேண்டாம் என்று கூறி முகத்தைத் திருப்பிக்கொண்டதாகவும் கதை கூறுவர். சுமார் 14 அடி நீளமுள்ள அரங்கநாதர் உருவம் தலையைத் திருப்பிக் கொண்டிருப்பதுபோல அமைக்கப்பட்டுள்ளது.

13. திருக்கழுக்குன்றத்துக் குகைக்கோயில்

செங்கல்பட்டு இரயி
்க ஒனபதுகல தூரத்தில் திருக்கழுக்குன்றம் என்னும் ஊர் இருக்கிறது. இந்த ஊரில் திருக்கழுக்குன்றம் என்னும் மலை இருக்கிறது. மலையின் உச்சியில் வேத-கிரீசுவரர் கோயில் இருக்கிறது. இந்தக் கோயிலுக்குப் போகவேண்டுமானால், மலையின் தெற்குப்புறத்திலிருந்து படி ஏறவேண்டும். இந்த மலைப்படியில் ஏறிச் சென்றால் பாதிவழியில் கிழக்கு மேற்காகப் பிரிந்து செல்கிறது. கிழக்கு வழியாகச் சென்றால் ஒரு பெரிய பாறையைக் குடைந்து அமைக்கப்பட்ட குகைக்கோயிலைக் காணலாம்.



திருக்கழுக்குன்றத்துக் குகைக்கோயில் தரையமைப்பு

இந்தக் குகைக்கோயிலை ஒற்றைக்கல் மண்டபம் என்று கூறுகிறார்கள். இந்தக் குகைக்கோயில், மலையுச்சியில் உள்ள வேதகிரி ஈசுவரர் கோயிலுக்கு ஐம்பதடி கீழே இருக்கிறது.

குகைக்கோயில் கிழக்கு நோக்கியுள்ளது. தரை மட்டத்திற்கு ஐந்து அடி உயரத்தில் இக் குகைக் கோயில் அமைந்திருப்பதினாலே, குகைக்குச் செல்லப்பாறை

யில் படிகள் அமைந்துள்ளன. படிகள் ஏறிச்சென்றால் ஒரு பெரிய மண்டபமும் அதன் மத்தியில் ஒரு திருநிலை யறையும் பாறையைக் குடைந்தமைக்கப்பட்டுள்ளதைக் காணலாம். இந்த மண்டபத்தின் நீளம் 22½ அடி, அகலம் 17 அடி, உயரம் 9 அடி. திருநிலையறையின் நீளம் 8 அடி, அகலம் 7 அடி. மண்டபத்தின் தரையைவிட மூன்று அடி உயரத்தில் திருநிலையறையின் தரை அமைந் திருப்பதனால் திருநிலையறைக்குச் செல்லப் படிகள் அமைந் துள்ளன. அறையின் வாயிலில், துவாரபாலகர்களின் உருவங்கள் மகேந்திரன் காலத்து உருவ அமைப்புடன் காணப்படுகின்றன. இரண்டு கைகள் உள்ள இத் துவார பாலகர் ஒருகையை இடுப்பில் ஊன்றி மற்றொரு கையைப் பெரிய தண்டாயுதத்தின்மேல் தாங்கி நிற்கின்றனர். கருப் பக்கிருகத்தினுள்ளே பெரிய சிவலிங்கத்தின் உருவம் அமைந்திருக்கிறது, பூஜை நடைபெறுவது இல்லை. கருப்பக் கிருகத்திற்கு வெளிப்புறத்தில் மண்டபத்தின் இருகோடி யில் தெற்குப்புறத்தில் பிரமனுடைய உருவமும் கிழக்குப் புறத்தில் திருமாலுடைய உருவமும் பாறைச்சுவரிலே புடைப்புச் சிற்பமாக அமைக்கப்பட்டுள்ளன. பிரம்மா, விஷ்ணு உருவங்களைத் தவிர, இந்த மண்டபத்தின் வடபுறச் சுவரிலும் தென்புறச் சுவரிலும் இரண்டு துவார பாலகர் உருவங்கள் ஒன்றையொன்று பார்த்தாற்போலப் பெரிய உருவத்தில் புடைப்புச் சிற்பங்களாகஅமைக்கப்பட் டுள்ளன. இவை, கருப்பக்கிருகத்துத் துவாரபாலகரைப் போலல்லாமல், கடவுளைப் போற்றுவதுபோல ஒரு கையை உயரத் தூக்கிக்கொண்டும் மற்றொரு கையை இடுப்பில் ஊன்றிக்கொண்டும் நிற்கின்றன.

இங்குள்ள தூண்களுக்கு மேலே தூலம்போல் அமைந்துள்ள பாறையில் மகேந்திரவர்மனுடைய மகன் "வாதாபிகொண்ட நரசிம்மவர்ம"னுடைய சாசனம் தமிழில் எழுதப்பட்டுள்ளது. ஆனால், அந்தச் சாசனம் எக்காரணத்தினாலோ முடிவுற எழுதப்பெறாமல் அரை குறையாகக் காணப்படு

மகேந்திரவர்மன் குகைக்கோயில் அமைப்புப்படி காணப்படுகிற இந்தக் குகைக்கோயில், மகேந்திரவர்மன் காலத்தில் தொடங்கப்பட்டு அவன் மகன் முதல் நரசிம்ம வர்மன் காலத்தில் முடிவுபெற்றது என்று கருதவேண்டி யிருக்கிறது. நரசிம்மவர்மன் கி. பி. 642-இல் சாளுக்கிய அரசனின் தலைநகரமான வாதாவியை (பாதாமியை) வென்றுகொண்டான். நரசிம்மவர்மன் வா களில் ஒருவராக ந்தவர் சிறுத்தொண்ட நாயனர் என்னும் அடியார் என்று தெரிகிறது. இந்த வாதாவிப் போரில் டரும் சென்று போர்செய்தார் என்று

"ஈசனடி யார்க்கென்றும் இயல்பான பணிசெய்தே
ஆசில்புகழ் மன்னவன்பால் அணுக்கராய் அவற்காகப்
பூசல்முனைக் களிறுகைத்துப் போர்வென்று பொரும்அரசர்
தேசங்கள் பலகொண்டு தேர்வேந்தன் பாற்சிறந்தார்.

மன்னவர்க்குத் தண்டுபோய் வடபுலத்து வாதாவித்
தொன்னகரைத் துகளாகத் துளைநெடுங்கை வரையுகைத்துப்
பன்மணியும் நிதிக்குவையும் பகட்டினமும் பரித்தொகையும்
இன்னனஎண் ணிலகவர்ந்தே இகலரசன் முன்கொணர்ந்தார்."
(பெரிய சிறுத்தொண்டர், ௫, ௬)

என்று கூறுகிறபடியினலே, நரசிம்மவர்மன் வாதாவியை வென்றபோது அப் படையில் சிறுத்தொண்டரும் போர் புரிந்தார் என்று கொள்ளலாம்.

இந்தக் குகைச்சாசனத்திலே "வாதாவிகொண்ட நரசிம்மன்" பெயர் எழுதப்பட்டிருப்பதனலே, அவருடைய தந்தையான முதலாம் மகேந்திரவர்மன் காலத்தில் இக் குகைக்கோயில் முற்றுப்பெறவில்லை என்பது தெரிகிறது. ஆனலும், இக் குகைக்கோயில், மகேந்திரவர்மன் காலத்தில் தொடங்கப்பெற்றபடியினலும், மகேந்திரவர்மன் காலத்து மரபுப்படி அமைந்திருப்பதனலும் இப் பகுதியில் சேர்க்கவேண்டியதாயிற்று.

கி. பி. 17-ஆம் நூற்றாண்டில் சதுரங்கபட்டினத்தில் ...ந்த டச்சுக்காரர்கள் (ஒல்லாந்தர்கள்) சிலர் திருக்கழுக்குன்றத்தில் வந்து தங்கியிருந்தபோது, அவர்கள் ... பெயர்களை இக் குகையில் பல இடங்களிலும் ...தார்கள். அப்பெயர்கள் இங்குப் பல இடங் ... காணபப...

மலைமேல் உள்ள வேதகிரிஈசுவரர் கோவில் சாசனம் ஒன்று, மூலஸ்தானத்துப் பெருமானடிகளுக்கு ஸ்கந்த சிஷ்யர் என்பவர் தானம் செய்திருந்ததையும், பிற்காலத்தில் நரசிம்மவர்மன் அந்தத் தானத்தை உறுதிப்படுத்தியதையும், இன்னும் பிற்காலத்தில் முதலாம் ராஜகேசரி வர்மன் ஆதித்தியன் அதனையே மீண்டும் உறுதிப்படுத்தியதையும் கூறுகிறது.[1] இதனால், இக் குகைக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் சிவலிங்கமூர்த்திக்கு மூலஸ்தானத்துப் பெருமான் எனும் பெயர் வழங்கியதாகத் தெரிகிறது.

14. திருக்கோகர்ணத்துக் குகைக்கோயில்

புதுக்கோட்டை ஆலங்குடித் தாலுகாவில் திருக்கோகர்ணம் இருக்கிறது. இங்குள்ள பாறையில் குகைக் கோயில் அமைக்கப்பட்டிருக்கிறது. இது சித்தன்னவாசல் குகைக்கோயிலைப் போன்றது. திருநிலையறையில் சிவலிங்கம் இருக்கிறது. மண்டபச் சுவரின் ஒருபுறத்தில் புடைப்புச் சிற்பமாக[2] பிள்ளையாரின் (கணேசர்) பெரிய உருவமும், இன்னொருபுறத்தில் கங்காதரமூர்த்தியின் உருவமும் அமைக்கப்பட்டுள்ளன. தூண்கள் மகேந்திரவர்மன் காலத்துத் தூண்கள்போன்றுள்ளன. [3]இக்குகைக்கோயில் மகேந்திரவர்மன் காலத்தில் அமைக்கப்பட்டதென்று கருதப் படுகிறது. புதுக்கோட்டையும், மகேந்திரவர்மன் ஆட ... ட்டிருந்தது என்பது இதனால் தெரிகிறது.

1. Epigraphia Indica, Vol. III. Pages, 277-280.
2. Bas relief.
3. M. P. S. Vol. II. Part II, Pages, 980-81

15. மகாபலிபுரத்துக் குகைக்கோயில்கள்

மகாபலிபுரம் என்று இப்போது பெயர் வழங்கப் படுகிற மாமல்லபுரம் சென்னைப்பட்டினத்திற்குத் தெற்கே நாற்பது மைலில் கடற்கரையோரத்தில் இருக்கிறது. கடல்மல்லை என்னும் பெயருடனிருந்த இந்தப் பட்டினம் பல்லவர்களின் துறைமுகப்பட்டினமாக இருந்தது. மல்லை அல்லது கடல்மல்லை என்னும் பழைய பெயரை மாற்றி, மகேந்திரவர்மனின் மகனை நரசிம்மவர்மன் தன் சிறப்புப் பெயராகிய மாமல்லன் என்னும் பெயரை இதற்குச் சூட்டி மாமல்லபுரம் என்று பெயரிட்டான். மாமல்லபுரம் பிற் காலத்தில் மகாபலிபுரம் என்று வழங்கப்பட்டது.

மாமல்லபுரத்திலே பல குகைக்கோயில்களும் "இரதக்" கோயில்களும் அமைப்பட்டுள்ளன. இவை நரசிம்ம வர்மன் (மாமல்லன்) காலத்திலும் அவன் பேரனை பரமேசுவரவர்மன் காலத்திலும் அமைக்கப்பட்டவை. ஆனால், "அர்ச்சுனன் தபசு" என்று கூறப்படுகிற சிற்பப் பாறையும் வேறு மூன்று குகைக்கோயில்களும் மகேந்திர வர்மன் காலத்தில் அமைக்கப்பட்டன. இவற்றில் "அர்ச் சுனன் தபசு" என்று தவறாகக் கூறப்படுகிற சகரசக்ர வர்த்தி சிற்பத்தைப்பற்றி மகேந்திரன் காலத்துச் சிற்பங் கள் என்னும் தலைப்பில் கூறியுள்ளோம். இங்கு மாமல்ல புரத்தில் மகேந்திரவர்மன் அமைத்த மூன்று குகைக் கோயில்களை மட்டும் ஆராய்வோம்.

I. கோடிக்கால் மண்டபம்

கோடிக்கால் மண்டபம் என்று இப்போது பெயர் கூறப்படுகிற குகைக்கோயில், மகாபலிபுரத்துப் பாறைக் குன்றின்மேல் அமைக்கப்பட்டுள்ளது. இது மேற்குப் பார்த்த குகைக்கோயில். இதில் சாசனங்கள் காணப்பட வில்லை. இது கொற்றவை(துர்க்கை)க்காக அமைக்கப் பட்டது. மகேந்திரவாடி குகைக்கோயிலைப் போன்ற அமைப்பையுடையது. முன்மண்டபத்தையும் அதற்குள் திருநிலையறையையும் கொண்டுள்ளது. மண்டபத்தின்

நீளம் 21 அடி 10 அங்குலம்; அகலம் 8 அடி; உயரம் 8 அடி 3 அங்குலம். மண்டபத்தின் முன்புறத்தில் இரண்டு தூண்கள் உள்ளன. அவை மேலும் கீழும் சதுரமாகவும் நடுப்பகுதிப் பாகம் எட்டுப் பட்டையுடையதாகவும் உள்ளன. கொற்றவைகோயில் ஆகையினால் கருப்பக்கிருகத்தின் வாயிற்புறத்தில் பெண் துவாரபாலகர்களின் உருவங்கள் காணப்படுகின்றன. இவை மகேந்திரவர்மன் காலத்துத் துவாரபாலகர்களைப் போலவே எதிர்ப்பார்வையில் அமைந்துள்ளன[1]

மண்டபத்தின் தரைமட்டத்துக்குமேல் இரண்டடி உயரத்தில் திருநிலையறை அமைந்திருப்பதனால், அதற்குள் போக இரண்டு படிகள் அமைந்துள்ளன. இவற்றில் முதல்படி அரைவட்டமாக அமைந்திருக்கிறது. திருநிலையறையிலும் மண்டபத்தின் வெளிப்புறத்திலும் முற்காலத்தில் மரக்கதவுகள் அமைக்கப்பட்டிருந்தன என்பதற்கு அடையாளமாகச் சிறுகுழிகள் பாறையில் காணப்படுகின்றன. திருநிலையறையில் இப்போது துர்க்கை உருவம் இல்லை. ஆயினும் முற்காலத்தில் துர்க்கையின் உருவம் அமைக்கப்பட்டு வழிபடப்பட்டு வந்தது என்பதில் ஐயம் இல்லை. இப்போது இவ்வூர்ப்புறத்தில் சப்தமாதர்களுடன் வைக்கப்பட்டிருக்கிற சிதைந்துள்ள கொற்றவையின் உருவந்தான் முன்பு இக் குகைக்கோயிலில் இருந்திருக்கக் கூடும்என்று கருதுவது தவறாகாது. இவ் வுருவத்தைப் பற்றிச் சிற்பங்கள் என்னும் பகுதியில் காண்க.

II. பஞ்சமூர்த்தி குகைக்கோயில்

மேலே சொன்ன கோடிக்கால் மண்டபம் என்னும் ஈகை குகைக்கோயிலுக்குத் தெற்கே ஒரு குகைக் கோயில் உண்டு. இதில் ஐந்து திருநிலையறைகள் காணப்படுவதால் பஞ்சமூர்த்தி குகைக்கோயில் என்று பெயர் கொடுத்தோம். இதன் பழைய பெயர் தெரியவில்லை. இங்குச் சாசன எழுத்துக்கள் காணப்படவில்லை. இந்தக் குகைக்கோயில் மகேந்திரவர்மன் காலத்தில் அமைக்கப்

1. முகப்புப் படம் 6 பார்க்க.

பட்டது என்பதை இதன் அமைப்புகளைக்கொண்டு உறுதிப் படுத்தலாம். இதுவும் மேற்குப் பார்த்த கோயிலே.

இதன் அமைப்பு பல்லாவரத்துக் குகைக்கோயிலைப் போன்றதே. இதிலும் ஐந்து திருநிலையறைகள் உள்ளன. நடுவில் உள்ளது சற்றுப்பெரியது திருநிலையறைக்குச் செல்வதற்குப் படிகள் உள்ளன. ஆனால், இவை செம்மையாக அமைக்கப்படாமல் கரடுமுரடாக உள்ளன. கருப்பக்கிருகங்கள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு சிவலிங்கம் அமைந்திருந்தது என்பதற்கு அடையாளமாக ஒவ்வோர் அறையிலும் மூன்றங்குல ஆழமுள்ள சிறு குழிகள் காணப்படுகின்றன. திருநிலையறை வாயில்களில் துவாரபாலகர் உருவங்கள் அமைந்துள்ளன. இவையாவும் மகேந்திரவர்மன் காலத்துத் துவாரபாலகர்களின் உருவங்களைப் போலவே காணப்படுகின்றன. முன்மண்டபம் 35 அடி 2 அங்குல நீளமும், 12½ அடி அகலமும் உடையது.

முன்மண்டபத்திலே இரண்டுவரிசையுள்ள நான்கு தூண்கள் உள்ளன. முன்வரிசையில் உள்ள நான்கு தூண்களும் வழக்கம்போல் மேற்புறமும் அடிப்புறமும் சதுரமாகவும் மத்தியில் எண்கோணப் பட்டையாகவும் அமைந்துள்ளன. உள்வரிசைத் தூண்கள் பட்டையாக இல்லாமல் உருண்டும் அடிமுதல் நுனிவரையில் குழைவான பட்டைகள் உடையனவாயும் இடையிடையே கொடிப்பட்டைகளால் கட்டப்பட்டும் மிக அழகாகக் காணப்படுகின்றன.

இந்தக் குகைக்கோயிலும் முற்காலத்தில் வழிபடப்பட்டு வந்தது எனத் தோன்றுகிறது. பிற்காலத்திலே நிகழ்ந்த சைவ வைணவ சச்சரவு காலத்தில் இக் குகைக் கோயிலிலிருந்த சிவலிங்கங்கள் அப்புறப்படுத்தப்பட்டன போலும். ஏனென்றால் மண்டபத்துக்கு வெளியேயுள்ள பாறைச்சுவரில் பிற்காலத்தில் பொறிக்கப்பட்ட வைணவர்களின் சங்கு சக்கரங்களின் உருவங்கள் காணப்படுகின்றன.

III. தர்மராச மண்டபம்

இது கலங்கரை விளக்கம் கட்டியுள்ள பாறையின் தென் கோடியில் இருக்கிறது. இக் குகைக் கோயில், தென்

ஆர்க்காடு மாவட்டத்தில் மண்டகப்பட்டு என்னும் இடத்தில் மகேந்திரவர்மன் அமைத்த குகைக்கோயிலின் அமைப்புப் போன்றது. கிழக்குப் பார்த்த குகைக்கோயில். இதன் மண்டபத்தின் நீளம் இருபத்தொரு அடி இரண்டங்குலம். அகலம் ஏறக்குறைய பதினொன்கரை அடி. மண்டபத்துக்குப் பின்னால் மூன்று திருநிலையறைகள் அமைந்துள்ளன. நடுவிலுள்ள திருநிலையறை மற்ற இரண்டையும் விடச் சற்றுப் பெரியது. மண்டபத் தரையைவிட திருநிலையறைகளின் தரை இரண்டடி உயரம் உள்ளது. ஆகவே, அறைகளுக்குள் செல்ல மும்மூன்று படிகள் அமைக்கப்பட்டுள்ளன.[1]

சைவ வைணவச் சமயக்கலகங்கள் நடைபெற்ற பிற்காலத்திலே, வைணவ சமயத்தவர் இக் குகைக்கோயிலைக் கைப்பற்றி, இதிலிருந்த திருமேனிகளை அப்புறப்படுத்தி, திருநிலையறை வாயில்களில் இருந்த துவாரபாலகர்களின் உருவங்களை உருத்தெரியாமல் செதுக்கிச் சிதைத்து அழித்து, தூண்களில் சங்கு சக்கர உருவத்தை அமைத்து வைத்து, இதற்குத் தர்மராச மண்டபம் என்னும் புதிய பெயரையும் கொடுத்தார்கள். இந்தப் புதிய பெயர்தான் இப்போதும் வழங்கி வருகிறது.

இந்தக் குகைக்கோயிலைப்பற்றி இரண்டுபட்ட கருத்துக்கள் உள்ளன. அவை என்னவென்றால் :—இந்தக் குகையின் தூண்கள் முதலிய அமைப்புக்கள் இது மகேந்திரவர்மன் அமைத்த குகைக்கோயில் என்று தெரிவிக்கிறபடியால் இது மகேந்திரவர்மன் அமைத்த குகைக்கோயில் என்பது ஒரு கொள்கை. இக் குகைக்கோயிலின் மண்டபச் சுவரில் பதினொரு வடமொழிச் சுலோகங்கள் பல்லவக் கிரந்த எழுத்தினால் எழுதப்பட்டுள்ளன. இந்தச் சாசனத்தின்படி இக் கோயிலின் பெயர் அத்யந்தகாம பல்லவேஸ்வரக் கிருகம் என்பது. அத்யந்தகாமன் என்னும் பெயர் மகேந்திரவர்மனின் மகன் நரசிம்மவர்மனுக்கும் அவன் பேரனை பரமேசுவரவர்மனுக்கும் உண்டு. ஆகவே, இந்தக்

1. முகப்புப் படம் 7 பார்க்க.

குகைக் கோயில், நரசிம்மவர்மன் காலத்திலாவது அவனுடைய பேரன் பரமேசுவரவர்மன் காலத்திலாவது அமைக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், இந்தச் சாசன எழுத்து நரசிம்மவர்மன் காலத்து எழுத்தாக இல்லாமல் பரமேசுவர வர்மன் காலத்து எழுத்துப்போல இருப்பதால் இக் குகைக் கோயிலைப் பரமேசுவரவர்மன் அமைத்திருக்கவேண்டும் என்பது மற்றொரு கருத்து.

சாசன எழுத்துக்களின் அமைப்பைமட்டும் கொண்டு காலத்தை முடிவு செய்வது தவறான முறையென்றும், இதனுடன் மற்ற ஆதாரங்களையும் ஒத்திட்டுப் பார்த்துக் காலத்தை முடிவு செய்ய வேண்டும் என்றும் அறிஞர்கள் கருதுகிறார்கள். எழுத்தின் அமைப்பு அத்யந்தகாமன் காலத்ததாக இருந்தாலும் குகையின் தூண்கள் முதலிய அமைப்பு முதல்மகேந்திரவர்மன் காலத்தனவாகத் தோன்றுகின்றன. மேலும், அத்யந்தகாம பல்லவேசுவரம் என்னும் பெயர் வேறு இரண்டு கோயில்களுக்கும் வழங்கப்பட்டிருக்கிறது. மகாபலிபுரத்திலுள்ள "கணேச ரதம்" என்னும் பெயர் வழங்குகிற பாறைக் கோயிலுக்கும் அத்யந்த காம பல்லவேசுவரம் என்னும் பெயர் வழங்கியது என்பது அங்குள்ள சாசனத்தினால் தெரிகிறது. அங்குள்ள சாசனம், இந்தக் குகைக்கோயிலில் எழுதப்பட்டுள்ள அதே எழுத்தினால் அதே சுலோகங்களைக் கூறுகின்றன. "தர்மராச ரதம்" என்று பெயர்கூறப்படுகிற பாறைக்கோயிலிலும் அத்யந்த காம பல்லவேசுவரக்ருகம் என்னும் பெயர் இதே பல்லவக்கிரந்த எழுத்தினால் பொறிக்கப்பட்டுள்ளது. இவற்றையெல்லாம் கருதும்போது, நரசிம்மவர்மன் காலத்திற்குப் பிறகு ஒரு பல்லவ அரசனால் இந்தச் சாசனங்கள் மேலே கூறிய இந்த மூன்று இடங்களிலும் பொறிக்கப்பட்டிருக்க வேண்டும் என்று அறிஞர்கள் கருதுகின்றனர்.

"தர்மராச மண்டபம்" என்று பெயர் கூறப்படுகிற இந்தக் குகைக் கோயில், இங்குள்ள சாசனம் கூறுகிறபடி தனிப்பட்ட சிவன் கோயிலன்று. மும்மூர்த்திகளுக்காக ஏற்பட்ட மும்மூர்த்திக் கோயில் என்பது இதிலுள்ள திரு

நிலையறைகளினால் அறியலாம். எனவே, இங்குள்ள சாசனத்தில் காணப்படுகிறபடி இது அத்யந்தகாம பல்லவேசுவரக்கிருகம், அஃதாவது சிவனுக்காகமட்டும் ஏற்பட்ட தனிக்கோயில் அன்று. அன்றியும், இக் குகைக்கோயிலின் அமைப்பும் தூண்களின் அமைப்பும் பிற்காலத் பல்லவர் குகைக்கோயில் அமைப்புப்போல் இல்லாமல் ம ரவர்மன் காலத்துக் குகைக்கோயில் அமைப்பையே
ஆகவே, இக் குகைக்கோயில் மகேந்திரன ல அமைக்கப்பட்டது என்பதில் ஐயமில்லை. இங்குக் காணப்படுகிற வடமொழிச் சாசன சுலோகம் பிற்காலத்தில் எழுதப்பட்டது. (இந்தச் சாசனம், கணேச ரதத்தில் எழுதப்பட்டுள்ள அதே சாசன சுலோகத்தின் பிரதியாகும்.) இந்தக் குகைக் கோயிலில் பிற்காலத்தில் எழுதப்பட்ட இச் சாசனத்தின் கருத்து இது :—[1]

ஆக்கல், காத்தல், ல என்னும் முச்செயல்களுக்கும் காரணராயும் ஆதிநாயகராயும் இருக்கிற காமாந்தகமூர்த்தி மானிடரின் அத்யந்தகாமங்களை (விருப்பங்களை) நிறைவேற்றி யருள்வாராக.

2. மாயைகளோடு கலந்திருந்தும் மாயையில்லாதவராயும் பல குணங்களைக் கொண்டிருந்தும் குணங்கள் இல்லாதவராயும் தமக்குத் தாமே காரணரா யிருப்பவரும் எல்லாருக்கும் தலைவராக இருப்பவரும் தமக்கோர் இறைவன் இன்றித் தாமே இறைவனாக இருப்பவரும் ஆகிய அவருடைய வெற்றி வாழ்வதாக.

3. கயிலாய மலையையும் அதைத் தூக்கிய தசமுகனையும் (இராவணனையும்) பாதலத்தில் அழுந்தும்படி கால்விரலால் அழுத்திய, அத்தகைய ஆற்றலையுடைய பிறப்பிலியாகிய சிவபெருமானை ஸ்ரீநிதி தமது தலையில் தாங்கியிருக்கிறார்.

4. நிலமகளைக் காதலோடு கைகளில் அணைத்துக் கொண்டு, பக்தி நிறைந்த உள்ளத்திலே பவனை (சிவனை)

1. இந்தச் சாசனம் S. I. I. Vol. I. P. 6-இல் அச்சிடப்பட்டிருக்கிறது.

வைத்துக் கொண்டு இருக்கிற ஸ்ரீபரன் வெற்றியுடன் நெடுங் காலம் வாழ்வானாக.

5. பகை மன்னரின் நாடுகளைத் தன் அடிப்படுத்தி ரணஜயன் என்னும் பெயர் படைத்த அத்யந்தகாம அரசன், சம்புவுக்கு (சிவனுக்கு) இந்த இல்லத்தை அமைத்தான்.

6. காற்றும் தீயுமாகவும் பீமனும் சிவனுமாகவும் சங்கரனும் காமாந்தகனுமாகவும் உள்ள அவன் வெற்றியுடன் விளங்குவானாக.

7. மகாராஜனுக்கும் (குபேரனுக்கும்) மகாராஜனும், ஆனால், குரூபியாயில்லாதவனும், மக்களைத் துன்புறுத் தாமல் அருளுடன் காக்கும் சக்கரவர்த்தியும், சந்திரனைப் போன்றவனும், ஆனால், நலிந்த உடம்பில்லாமல் நல்லுடம்பு பெற்றவனும் ஆகிய தருணங்குரன் வெற்றி பெறுவானாக.

8, 9. பகை மன்னரின் ஆற்றலை அழித்தவனும் திரு மகள் தங்குவதற்கு இடமாகவுள்ளவனும் காமனைப் போன்று அழகுள்ளவனும் அரனை (சிவனை) எப்போதும் வணங்கிக்கொண்டிருப்பவனும் ஆகிய அத்யந்தகாமனுடைய, தாமரை மலர்கள் அலரப் பெற்று நீராடுதற்கு ஏற்ற நறு நீர்ப் பொய்கை போன்று பட்டாபிஷேக நீரினாலும் இரத் தின மணி முடியினாலும் விளங்குகின்ற திருமுடியில் சங்க ரன் எழுந்தருளியிருக்கிறான்.

10. தன் குடிமக்களின் விருப்பத்தை [illegible]று வதற்காகவும், சங்கரனுடைய அருளைப் பெறுவதற் காகவும் தூர்ஜதி (சிவன்) எழுந்தருளும் பொருட்டு இந்தப் பெரிய தளியை அவன் அமைத்தான்.

11. தீய வழியில் ஒழுகாமல் தடுக்கிற உருத்திரன் எழுந்தருளப் பெறாத மனமுடையவர்கள் ஆறு மடங்கு ஆவர்.

அத்யந்தகாம பல்லவேஸ்வரக் கிருகம்.

௪. சிற்பங்கள்

1. கங்காதர மூர்த்தி

மகேந்திரவர்மன் காலத்துச் சிற்பங்களைப்பற்றி ஆராய்வோம்: திருச்சி மலைப்பாறையில் மகேந்திரவர்மன் அமைத்த குகைக்கோயிலில் கங்காதரமூர்த்தியின் திருவுருவம் உள்ளது என்று கூறினோம். அதைப்பற்றி இங்கு விவரிப்போம். கருப்பக்கிருகத்தின் எதிரில் உள்ள பாறைச் சுவரில் கங்காதரமூர்த்தியின் உருவம் புடைப்புச் சிற்பமாக அமைக்கப்பட்டுள்ளது. இந்தச் சிற்பம் சுமார் ஏழு சதுர அடிப்பரப்புடையது இந்தச் சிற்பம், சிற்பக்கலை ரசிகர்களின் கண்ணையும் கருத்தையும் கவரும் வனப்பு வாய்ந்தது. உலகத்தை அழித்துவிடுவேன் என்று பெருவெள்ளமாகப் பாய்ந்து வந்த கங்கையைச் சிவபெருமான் ஒரு துளியளவாகத் தமது சடாமுடியில் ஏற்றுக்கொண்டதை இந்தச் ற்பம் காட்

பகீரதன் தவங்கிடந்து ஆகாய கங்கையைப் பூமியில் வரும்படி வரம் வேண்டினான். ஆகாய கங்கை வேகமாகப் பாய்ந்து பூமியை—உலகத்தை, அழித்து நாசமாக்குவேன் என்று இறுமாந்து கூறியது. இதை யறிந்த தேவர்கள் சிவபெருமானிடம் முறையிட்டார்கள். சிவபெருமான், தேவர்களின் வேண்டுகோளுக்கு இணங்கிப் பெருவெள்ளமாகப் பாய்ந்துவந்த கங்கையைத் தமது சடாமுடியில் ஒரு புரியை யவிழ்த்துப் பிடித்தார். பெருவெள்ளமாக வந்த கங்கை அவருடைய புரிசடையில் சிறுதுளியாக அடங்கி விட்டது. அகம்பாவம் நீங்கிய கங்கையைச் சிவபெருமான் பூமியில் விட்டார். அது கங்கையாகப் பாய்ந்து ஓடியது.

கங்கையின் இறுமாப்பு எத்தகையது என்பதையும் சிவபெருமான் அதன் இறுமாப்பை எப்படி அடக்கி என்பதையும் மாணிக்கவாசகர் நன்கு விளக்குகிறார்:

மலைமகளை ஒருபாகம் வைத்தலுமே மற்றொருத்தி
சலமுகத்தால் அவன் சடையில் பாயுமது என்னேடீ
சலமுகத்தால் அவன் சடையில் பாய்ந்திலளேல் தரணியெல்லாம்
பிலமுகத்தே புகப்பாய்ந்து பெருங்கேடாஞ் சாழலோ.

கங்காதர மூர்த்தியின் வரலாற்றை மகேந்திரவர்மன் காலத்தவரான திருநாவுக்கரசர் இனிய பாக்களினாலே அழகாகக் கூறுகிறார்: "பகீரதற்கா வானோர் வேண்ட, பரந்திழியும் புனற் கங்கை பனிபோலாகச்
என்று அவர் கூறுகிறார். மேலும்,

மையறு
பகீரதன் வரங்கள்வேண்ட
ஐயமில் அமரர் ஏத்த
ஆயிர முகம தாகி
வையகம் நெளியப் பாய்வாள்
வந்திழி கங்கை யென்னும்
தையலைச் சடையில் ஏற்றார்
சாய்க்காடு மேவி னாரே.

என்றும்,

அஞ்சையும் அடக்கி ஆற்றல்
உடையனாய் அநேக காலம்
வஞ்சமில் தவத்துள் நின்று
மன்னிய பகீரதற்கு
வெஞ்சின முகங்க ளாகி
விசையொடு பாயுங் கங்கை
செஞ்சடை யேற்றார் சேறைச்
செந்நெறிச் செல்வ னாரே.

என்றும் அவர் பாடியது காண்க.

கங்கையின் வரலாற்றைச் சொல்லோவியமாகத் நாவுக்கரசர் பாடியதை, அவர் காலத்தில் இருந்த மகேந்திர வர்மன் தான் அமைத்த குகைக்கோயிலிலே கல் ஓவியமாக அமைத்துக்கொடுத்தான். இந்தச் சொல் ஓவியத்தைப் பாடிக்கொண்டே கல்லோவியத்தைக் காணும் சிற்பக் கலை ரசிகர்களுக்கு மனத்தில் தோன்றும் இன்ப

அனுபவித்தறியவேண்டியது தவிர எழுத்தில் படித்து

திருச்சிக் குகைக்கோயிலிலே, புடைப்புச் சிற்பமாக அமைக்கப்பட்டுள்ள கங்காதர மூர்த்தியின் அமைப்பை விளக்குவோம்.[1]

இந்தச் சிற்பத்தில் நடுநாயகமாக விளங்குபவர் சிவ பெருமான். குறள் உருவமுள்ள ஒரு
மேல் தமது வலது காலை வைத்து இடது கால்
ஊன்றி நிற்கிறார். அவருடைய இடது கை இடுப்பில் ஊன்றி நிற்கிறது. வலது கையில் ஒரு பாம்பைப் பிடித் திருக்கிறார். அப்பாம்பு படமெடுத்து ஆடுகிறது. மற்றொரு வலது கையைத் தூக்கி விரல்களினாலே தமது சடாமுடி யின் ஒரு புரியை அவிழ்த்துப் பிடித்திருக்கிறார். அந்தப் புரிசடையிலே ஆகாய கங்கை, ஒரு மகள் உருவமாக மேலிருந்து வந்து அமர்கிறாள். அவளுடைய செருக்கும் வேகமும் அடங்கிவிட்டன. மற்றொரு இடது
சிவபெருமான் எதையோ ஒரு பொருளை
இந்த இடது கைக்கு மேலே, கங்கைக்கு எதிர்ப்புறத்தில், ஒரு எலி காணப்படுகிறது. இது ஏன் இங்குக் காணப்படு கிறது? இதன் கருத்து யாது?

சிவபெருமானுடைய காலடியில் இருபுறத்திலும் இரண்டிரண்டுபேர் தரையில் மண்டியிட்டு அமர்ந்து கையைத்தூக்கிச் சிவபெருமானைக் காட்டியவண்ணம் அவ ரைத் துதிசெய்கிறார்கள். அதுபோலவே வேறு இரண்டு பேர், சிவபெருமானுக்கு இருபுறத்திலும் ஆகாயத்தில் பறந்தபடி தமது கையை உயர்த்தி அவரைப் போற்று கிறார்கள். இவர்கள் தேவர்கள் போலும்.

வெள்ளப்பெருக்குடன் உலகத்தையழிக்க வேகமாக வந்த கங்கையின் ஆற்றலை அடக்கி, உலகத்தை அழிக்க விடாமல் தமது சடையின் ஒரு சிறு புரியில் ஏற்றுக் கொண்ட சிவபெருமானை மனிதரும் தேவரும் புகழ்ந்து போற்றி வணங்குவதை இந்தச் சிற்பம் விளக்குகிறது.

---

1. முகப்புப் படம் 8 பார்க்க.

சிவபெருமான் வலது காலைப் பூதகணத்தின்மேல் வைத்து இடது கையை இடுப்பிலேயூன்றி உடம்பைச் சற்றுச் சாய்த்து நிற்கும் எழிலும், தமது சடாமுடியிலிருந்து ஒரு புரியை மட்டும் எடுத்து அதை விரல்களால் பிடித்துக் கங்கையைத் தாங்கும் எளிமையும், ஆற்றலும் செருக்கும் அடங்கிய கங்கையின் அமைதியும், தரையில் அமர்ந்தும் வானத்தில் இருந்தும் மக்களும் தேவரும் கடவுளை வாழ்த்தும் உருக்கமும் இந்தச் சிற்பத்தைக் காண்பவருடைய க கருத்தையும் கவர்கின்றன

2. சகர சாகரர் கதைச்சிற்பம்

மகேந்திரவர்மன் காலத்தில் மகாபலிபுரத்தில்(மாமல்லபுரத்தில்) அமைக்கப்பட்ட அழகான பாறைச்சிற்பம் "அர்ச்சுனன் தபசு" என்பது. இந்த அழகான புடைப்புச் சிற்பம்[1] மகேந்திரவர்மன் காலத்தில் தொடங்கப்பட்டு இவன் மகன் நரசிம்மன் (மாமல்லன்) காலத்தில் முடிவு பெற்றது என்று கருதப்படுகிறது.

இந்தச் சிற்பம், ஏறக்குறைய தொண்ணூற்றாறு அடி அகலமும் நாற்பத்து மூன்றடி உயரமும் உள்ள செங்குத்தான பாறையிலே செதுக்கியமைக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பெரும் பாறையின் நடுப்பகுதி பிளவுபட்டு நீர் வீழ்ச்சிபோல அமைந்திருக்கிறது. இந்தப் பிளவுக்கு இருபுறத்திலும் தேவர், தேவமகளிர், கின்னரர் கிம்புருடர், குறள் உருவமுடைய பூதர்கள், நாகர் நாக கன்னியர்களின் உருவங்களும், மனிதர் முனிவர் யானைகள் குரங்குகள் பூனை எலி முதலிய உருவங்களும் மிக அழகாகச் செதுக்கப்பட்டுள்ளன.

கண்ணையுங் கருத்தையுங் கவர்கி றஇந்தச் சிறந்த காண்பவர் வியந்து பெருமைப் படாமல் இருக்கமுடியாது.

1. Bas relief.

நச் சிற்பத்தைப் பாமர மக்கள் இப்போது அர்ச்சுனன் தபசு என்று ள.¹ வேறு சிலர் பகீரதன் தபசு என்று கூ தபசு என்று கூறப்படுவது ஒருசிறிது பொருந்தும். உண்மையில் இந்தச் உருவம் எந்தக் என்றால், பரதகண்டத்தை யரசாண்ட சகர சக்கரவர்த்தி, அவர் பிள்ளைகளான சாகர குமாரர்கள், அவர் பேரனை பகீரதன் ெயவர்களின் கதையைத்தான் இந்தச் சிற்பம் விளக்கு இந்தக் கதையை இங்குச் சுருக்கமாகக் கூறுவோம்.

---

1. மகாபலிபுரத்தில் மிகப் பிற்காலத்திலே, விஜய நகர அரசர் காலத்திலே, சைவ வைணவக் கலகம் நடைபெற்றதாகத் தெரிகிறது. வைணவர் மகாபலிபுரத்தை வைணவத்திருப்பதி யாக்க முயன்றனர். இங்குள்ள, மகேந்திரவர்மன் காலத்துக் குகைக்கோயில் கருப்பக்கிருகங்களை உடைத்து அதற்கு **தர்மராச மண்டபம்** என்றும், மற்றொரு குகைக்கோயிலிலிருந்த அழகான புடைச் சிற்பங்களை உருத்தெரியாமல் செதுக்கிப்போட்டு அதற்கு **இராமநுச மண்டபம்** என்றும், அத்யந்தகாம பல்லவேச்சுரம் என்று பெயரிருந்த கோயிலைத் **தர்மராச இரதம்** என்றும், அது போலவே மற்றக் கோயில்களுக்கு **அர்ச்சுனன் இரதம், பீமன் இரதம், நகுல சகாதேவ இரதங்கள்** என்றும், கொற்றவைக் கோயிலுக்குத் **திரௌபதை இரதம்** என்றும், வாமாங்குச என்னும் குகைக்கோயிலுக்குக் **கோடிக்கால் மண்டபம்**என்றும், அங்குள்ள சிறு ஏரிக்குக் **கோனேரி** என்றும் (திருவேங்கடத்தில் ஒரு கோனேரி இருப்பதுபோல) வைணவப் பெயர்களைச் சூட்டினார்கள். அதுபோலவே, சகரசாகரர் கதையைக் காட்டுகிற சிற்பத்துக்கு **அர்ச்சுனன் தபசு** என்று வைணவ பரமாகப் பெயர் சூட்டினார்கள். இந்தச் சரிதங்களை ஆராயாத பாமர மக்கள், பிற்காலத்தில் ஏற்பட்ட இப் பெயர்களையே இப்போதும் வழங்குகிறார்கள்.

இதில் அதிசயம் என்னவெனில், அரசினர் ஆர்க்கியாலஜி இலாகா அலுவலர்களில் சிலர், பிற்காலத்தில் ஏற்பட்ட இப் பெயர்களை ஆதிகாலத்திலிருந்தே ஏற்பட்ட பெயர்கள் என்று நம்பிச், சகரசாகரர் சிற்பத்தை **அர்ச்சுனன் தபசு** என்று நிலை நிறுத்துவதற்கு முயற்சி செய்வதுதான். மகேந்திரவர்மன் காலத்தில் சமணசமயம் நாடெங்கும் பரவிச் சைவ வைணவ சமயங்கள் குன்றியிருந்தன என்பதை இந்நூலில் மற்றோர் இடத்தில் விளக்கியுள்ளோம். சமணசமயம் சிறப்புற்றிருந்த அந்தக் காலத்தில் அஜிதநாதர் புராணத்தில்உள்ள சகரசாகரர் கதை உலகில் எல்லோருக்கும் தெரிந்திருந்தபடியால், அச் சிற்பத்தை மகேந்திரன் மாமல்லபுரத்தில் அமைத்ததில் வியப்பில்லை.

சகர சக்கரவர்த்தி பாரதநாட்டை அரசாண்ட காலத்தில், அவர் ஒரு மலைக்குச்சென்று அங்கு இந்திரனை நோக்கித் தவஞ்செய்து நவநிதிகள் எனப்படும் ஒன்பது நிதிகளைப் பெற்றார். சக்கரவர்த்திகளுக்கு மட்டுந்தான் நவநிதிகள் கிடைப்பது வழக்கம். நவநிதிகளைப் பெற்றுச் செங்கோல் செலுத்தி அளவற்ற இன்ப சுகங்களை அனுபவித்துவந்த சகர சக்கரவர்த்திக்கு அறுபதினாயிரம் பிள்ளைகள் பிறந்தார்கள். இந்தப் பிள்ளைகளுக்குப் பொதுப்பெயர் சாகரகுமரர் என்பது; அதாவது சகர சக்கரவர்த்தியின் பிள்ளைகள் என்பது பொருள்.[1]

சாகர குமரர்கள் பெரியவர்களாக வளர்ந்த பிறகு தேச யாத்திரை செய்ய விரும்பி சகர சக்கரவர்த்தியின் உத்தரவு பெற்றுப் புறப்பட்டுச் சென்று பல நாடுகளைச் சுற்றிப் பார்த்தார்கள். கடைசியாக அவர்கள் கயிலாய மலைக்கு வந்தார்கள். கயிலாய மலையின் மேலே இவர்களின் முன்னோரான பரதச் சக்கரவர்த்தி ஒரு கோயில் கட்டியிருந்தார். அந்தக் கோயிலைக் கண்ட இவர்கள், அக் கோயிலைச் சூழ்ந்து அகழி தோண்டவேண்டுமென்று விரும்பினார்கள். ஆகவே, தம்முடன் கொண்டு வந்திருந்த நவநிதிகளில் ஒன்றான தண்டரத்தினத்தினால் ஆழமான அகழி தோண்டினார்கள். அந்த அகழி நாகலோகம் வரையில் ஆழ்ந்து இருந்தது. பின்னர், தண்ட இரத்தினத்தின் உதவியினாலே கங்கையாற்றை இழுத்துவந்து அதனை இந்த அகழியிலே பாய்ச்சினார்கள். கங்கையாறு, வெள்ளம் புரண்டுவந்து அகழியில் பாய்ந்து அதை நிரப்பி வழிந்து ஓடியது. கங்கை அகழியில் பாதலம் வரையில் பாயவே, பாதலத்தில் இருந்த நாகர்கள் துன்புற்றார்கள். நாகராசன் சினங்கொண்டு மதயானைபோல வந்து தனது விஷக் கண்களினால் சகர குமாரர்களை நோக்கினான். அந்தப் பார்வையினால், சகர குமாரர்கள் மாய்ந்து சாம்பலாயினர்.

தன் மக்கள் மாண்டுபோனதையும், கங்கை வெள்ளப் பெருக்கால் நாடுகள் அழிக்கப்படுவதையும் அறிந்த சகர

1. முகப்புப் படம் 9 பார்க்க.

சக்கரவர்த்தி தன் பேரனை பகீரதனை அழைத்துத் தண்ட இரத்தினத்தின் உதவியினால் கங்கை வெள்ளத்தை இழுத்துக்கொண்டுபோய்க் கடலில் விடும்படி கூறினான். அதன் படியே பகீரதன் சென்று தண்டஇரத்தினத்தின் உதவியினால் கங்கை வெள்ளத்தை இழுத்துக்கொண்டுபோய் கடலில் பாய விட்டான்.

லை அழகாக அமைக்கப்பட்டுள்ளது. இந்தச் சிற்பத்தை மேல்பகுதி கீழ்ப்பகுதி என இரண்டாகப் பிரிக்கலாம். மேல்பகுதி, சகர சக்கரவர்த்தி இந்திரனை நோக்கித் தவங்கிடந்து நவநிதிகளைப் பெற்றதைக் காட்டுகிறது.[1] தேவர் தேவமகளிர் போலவும் குள்ள உருவமான பூத உருவங்கள் போலவும் கின்னரர் கிம்புருடர் முதலியவர்களைப் போலவும் நவநிதிகள் இப்பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ளன. கீழ்ப்பகுதி, சாகர குமரர்கள் கயிலாய மலைக்கு வந்ததையும் அங்குக் கோயிலைக்கண்டு அதனைச் சூழ்ந்து அகழி தோண்டியதையும் அகழி நீர் பாதலத்திலுள்ள நாகர்களுக்குத் துன்பம் உண்டாக்கவே நாகர்களும் நாகராசனும் சகர குமாரர்களிடம் வந்ததையும் நாகராசன் பார்வையினால் சகர குமாரர்கள் இறந்துபட்டதையும் காட்டுகிறது. குரங்கு பூனை எலி முதலியவை இந்தச் சிற்பத்திற்கு அழகு செய்கின்றன.[2]

நாடு செழிப்புற வேண்டுமானால் நீர்வளம் இன்றியமையாததாகும். இதையறிந்த மகேந்திரவர்மன் தனது நாட்டில் ஏரிகளை அமைத்தான். காஞ்சிபுரத்துக்கு அருகில் உள்ள மாமண்டூர் ஏரியை அமைத்து அதற்குச் சித்ரமேகத் தடாகம் என்று தன் பெயரைச் சூட்டினான். மகேந்திர வாடியில் ஏரி அமைத்து அதற்கு மகேந்திர தடாகம் என்று பெயர் இட்டான். நீரைக் கட்டுப்படுத்தாவிட்டால் அது ஊரை அழிக்கும் என்பதையும் அதைக் கட்டுப்படுத்தினால்

1. முகப்புப் படம் 9 பார்க்க.

2. இந்தச் சிற்பத்தின் விரிவான ஆராய்ச்சியை இந்நூலாசிரியர் எழுதியுள்ள "மகாபலிபுரத்து ஜைன சிற்பம்" என்னும் நூலில் விரிவாகக் காணலாம். இந்நூலை அச்சிட்டவர் வேதாரணியம் திரு. A.J. அனந்தராஜய்யன் முதலியார் அவர்கள்.

அதன் மூலமாக ஊர் செழிப்படையும் என்பதையும் விளக்குவதற்காக, மாமல்லபுரத்தில் சகரசாகரர் சிற்பத்தையும் திருச்சிக் குகைக்கோயிலில் கங்காதரமூர்த்தியின் சிற்பத்தையும் மகேந்திரவர்மன் அமைத்தான் போலும். வெள்ளத்தைக் கட்டுப்படுத்தாமல் விட்டுவிடின், அது அழிவை யுண்டாக்கும் என்பதைக் குறிப்பது மாமல்லபுரத்துச் சகரசாகரர் சிற்பம். (அர்ச்சுனன் தபசு என்று தவருகக் கூறப்படுகிற சிற்பம்.) வெள்ளத்தைக் கட்டுப்படுத்தினல் அழிவுநேரிடாமல் தடுக்கலாம்; அன்றியும் அதனல் நன்மையும் பெறலாம் என்பதைக் குறிப்பது திருச்சிக் குகைக் கோயில் பாறையில் இவன் அமைத்துள்ள கங்காதர மூர்த்தி சிற்பம்.

மகேந்திரவர்மன் காலத்தவரான திருநாவுக்கரசு சுவாமிகளும், வெள்ளம் பெருகி நாடு அழியாதபடி சிவபெருமான் கங்கையின் வெள்ளத்தைத் தமது சடையில் ஏற்றுக்கொண்டார் என்று கூறுவது இங்குக் கருதத் தக்கது :—

> "ஒருகாலத் தொன்ருகி நின்ருர் போலும்
> ஊழிபல கண்டிருந்தார் போலும்
> பெருகாமே வெள்ளம் தவிர்த்தார் போலும்
> பிறப்பிடும்பை சாக்காடொன் றில்லார் போலும்"
>
> (திருவாரூர்த் திருத்தாண்டகம் 10.)

> "தாதுமலர் தண்டிக்குக் கொடுத்த நாளோ
> சகரர்களை மறித்திட் டாட்கொண்ட நாளோ"
>
> (திருவாரூர்த் திருத்தாண்டகம் 10.)

> "வெள்ளம் ஒருசடைமேல் ஏற்ருர்தாமே
> மேலார்கள் மேலார்கள் மேலார் தாமே."
>
> (திருப்பழனம் திருத்தாண்டகம். 2)

3. கொற்றவை

I. மாமல்லபுரக் கொற்றவை

மாமல்லபுரத்தில் கோடிக்கால் மண்டபம் என்று இப்போது பெயர் வழங்கப்படுகிற குகைக்கோயில் மகேந்

திரவர்மனால் அமைக்கப்பட்ட காளிகோயில் என்று கூறினோம். இக்கோயிலில் இருந்த காளியின் உருவச்சிலை ஊரிலேயுள்ள ஒரு மேடைமேல் மற்ற உருவச்சிலைகளுடன் இப்போது வைக்கப்பட்டிருக்கிறது என்றும் கூறினோம். இந்த உருவத்தின் இடதுகை ஒன்று காணப்படவில்லை; உடையுண்டதுபோலும். உடைபட்ட உருவத்தை வழி படக்கூடாது ஆகையால் இந்தக் காளிஉருவத்தை அப்புறப் படுத்திவிட்டார்கள் போலும்.[1]

இந்தக் காளி, கொற்றவை என்றும் காடுகிழாள் என்றும் கூறப்படுகிறாள். இந்தக் கொற்றவையின் உருவம் புதுமையானது; அருமையானது. இதுபோன்ற கொற்றவையின் உருவத்தை நமதுநாட்டிலே—ஏன்? உலகத்திலேயே—, வேறெங்கும் காணமுடியாது. இது பல்லவர் காலத்தில் அமைக்கப்பட்ட மிகப் பழைய உருவம் என்பதில் சிறிதும் ஐயமில்லை. கொற்றவை என்றால் வெற்றிமடந்தை என்பது பொருள். (கொற்றம்=வெற்றி. அவ்வை= உயர்ந்தவள்) பார்ப்பவரை அச்சுறுத்துகிற இதன் அமைப்பு போற்றத்தக்கது. வீரம், பெருமிதம், உறுதி, ஆற்றல், வெற்றி முதலிய இயல்புகள் எல்லாம் இவ் வுருவச் சிலையில் காட்சியளிக்கின்றன.

இடதுகாலை மடக்கி வலதுகாலைத் தொங்கவிட்டுச் சுகாசனநிலையில் அமர்ந்து நிமிர்ந்து உட்கார்ந்து, வீரமும் வெற்றியும் கண்களில் விளங்கப் பெருமிதமும் உறுதியும் வாயின் அமைப்பிலே தோன்ற நடுத்தர வயதுள்ள வீர மங்கையாக அமர்ந்திருக்கிறாள் இக்கொற்றவை. இரண்டு கோரைப் பற்கள் வெளியே தெரிகின்றன. கட்டாரி தாங்கிய இரண்டு கைகளையும் தன் இரண்டு தொடைகளின் மேல் தாங்கியிருக்கிறாள். மற்றொரு வலதுகையில் மணி யொன்றை ஏந்தியிருக்கிறாள். (உடைந்துபோய் விட்ட மற்றொரு கையில் கபாலபாத்திரத்தை ஏந்தியிருந்தாள்.) இடது காதில் பொற்குழை விளங்க வலதுகாதில் பிணம் ஒன்று தொங்குகிறது. இடது தோளிலிருந்து மார்பின்

1. முகப்புப் படம் 10 பார்க்க.

வழியாகத் தொங்குகிற பூணூலிலும் தலையோடுகள் காணப் படுகின்றன. தலைமுடியிலும் தலையோடு ஒன்றை அணிந் திருக்கிறாள்.

கடலிலிருந்து உப்பங்காற்றினால் மோதுண்டு வெயி லிலும் பனியிலும் மழையிலும் பல ஆண்டுகளாகக் கிடந்து வருகிற இந்தக் கருங்கல் சிற்பம், நாளுக்குநாள் தேய்ந்து மழுங்கிவருகிற நிலையிலும், வீரச் சுவையை வெளிப்படுத்திக் கொண்டே யிருக்கிறது. ஒரு பாறைக் கல்லைச் செதுக்கி அதில் வீரச் சுவையை அமைத்துக்காட்டிய அந்தச் சிற்பா சாரியார் யார்? அவர் பெயர் என்ன? அவர் வரலாறு யாது? ஒன்றும் தெரியவில்லை. ஆனால் அவர் அமைத்துக் கொடுத்த இந்தச் சிற்ப உருவம் நமது கண்ணையும் மனத் தையும் கவர்ந்து உணர்ச்சியளிக்கிறது. அரசாங்கக் காட்சிச்சாலையில் பாதுகாக்கப்பட வேண்டிய கலைச் செல்வ மன்றோ இது? காட்சிச்சாலையில் இடம்பெற வேண்டிய இந்தச் சிற்பம் ஏன் ஊரின் ஒதுக்கிடத்தில் புறக்கணிக்கப் பட்டு வெயிலிலும் மழையிலும் கிடந்து அழிந்துவருகிறது?

இந்த உருவம் ஒருகாலத்தில் பூசைசெய்து வணங்கப் பட்டதென்பதில் ஐயமில்லை. இவ்வுருவம் **கருக்கிலமர்ந்தாள்** என்னும் பெயர் பெற்றிருந்தது. எப்படி என்றால், கூறு வேன். மகாபலிபுரத்தில் ஊரையடுத்துக் கருக்கிலமர்ந்தாள் என்னும் சிறிய கோயில் இருக்கிறது. இது கிராமதேவதை யின் கோயில். இந்தக் கோயிலில் இருக்கிற கருக்கிலமர்ந்தாள் உருவமும் மேலே கூறப்பட்ட கொற்றவையின் உருவமும் ஒரேமாதிரியாக உள்ளன. இரண்டுக்கும் காணப்படுகிற வேறுபாடு என்னவென்றால், கொற்றவையின் வலதுபுறத் துக் கையொன்று உடைந்துபோய் விட்டது. கோயிலில் உள்ள கொற்றவையின் வலதுகை உடைபடாமல் கபால பாத்திரத்தை ஏந்திக்கொண்டிருக்கிறது. நமது கொற்றவை ஏறக்குறைய இரண்டரையடி உயரம் உள்ளது. கோயிலி லுள்ள உருவம் சுமார் ஓர் அடி உயரம் உள்ளது. இந்த வேறுபாடுதவிர மற்றப்படி எல்லா அமைப்புகளும் இரண்டு உருவங்களிலும் ஒன்றுபோலவே அமைந்துள்ளன. ஆனால்,

நமது சிற்பத்தில் காணப்படுகிற வீரச்சுவை முகபாவம் கோயிலிலுள்ள சிற்பத்தில் காணப்படவில்லை. எட்டு வகைச் சுவைகளில் ஒன்றாகிய வீரச்சுவையைக் கல்லிலே அமைத்துக் காட்டுவது அருமையிலும் அருமையன்றோ?

சைவ வைணவ சமயக் கலகங்கள் உண்டான பிற்காலத்திலே "கோடிக்கால் மண்டபம்" என்னும் குகைக் கோயிலிலே இருந்த இந்த உருவம் பின்னப்படுத்தப் பட்டது. கபாலமேந்திய வலதுகை உடைபட்டுப்போன படியினாலே, பின்னப்பட்ட இவ்வுருவம் வழிபாட்டிற்குத் தகாததாயிற்று. ஆகவே, இதைக் கொண்டுவந்து ஊரின் ஒருபுறத்தில் வைத்துவிட்டு, புதிய உருவத்தை அமைத்துப் புதியகோயிலில் வழிபடுகின்றனர். அதுதான் இப்போது மகாபலிபுரத்தில் உள்ள கருக்கில்அமர்ந்தாள் கோயில் என்பது. பின்னப்பட்ட கொற்றவை இருந்த குகைக் கோயில் இப்போது வெறுங்கோயிலாக இருக்கிறது.

காஞ்சிபுரத்திலும் கருக்கில்அமர்ந்தாள் கோயில் ஒன்று உண்டு.[1] பல்லவர் தலைநகரமான காஞ்சியிலும் துறைமுகப்பட்டினமான மாமல்லபுரத்திலும் கருக்கில் அமர்ந்தாள் கோயில்கள் இருப்பதை நோக்கும்போது, கருக்கில்அமர்ந்தாள் என்னும் பெயருடைய கொற்றவை பல்லவர்களின் குலதெய்வம் என்று கருதவேண்டியிருக் அடிக்கடி போர்செய்துவந்த பல்லவ அரசர்கள், வெற்றிக்கும் கடவுளாகிய கொற்றவையை வழிபட்டு வந்தனர் என்பதற்கு அடையாளமாக, அவ் அரசர் அமைத்த கோயில்களில் கொற்றவையின் உருவங் களைக் காண்கிறோம். ஆனால், மற்றக் கொற்றவையின் உருவ அமைப்புக்கும் இங்குக் குறிப்பிட்ட கொற்றவையின் உருவத்திற்கும் மிகப்பெரிய வேறுபாடு உண்டு.

1. காஞ்சிபுரத்தில் உள்ள கருக்கிலமர்ந்தாள் கோயிலிலுள்ள கொற்றவையின் உருவ அமைப்பு, மகாபலிபுரத்துக் கருக்கிலமர்ந்தாள் உருவ அமைப்புப் போன்றதா என்பது தெரியவில்லை. நேரிற் சென்று பார்த்து ஆராய்வதற்கு இயல ரவர் ஆராய்ந்து காண்பாராக.

கூறப்பட்ட கொற்றவையின் உருவம் மிகப் பழைமை யானது. மகேந்திரவர்மன் காலத்தில் இது அமைக்கப் பட்டது என்பதில்

II. சிங்கவரத்துக் கொற்றவை

மாவட ம் செஞ்சிக்கு அருகில் உள்ள சிங்கவரம் (சிங்கபுரம்) என்னும் ஊரில் குகைக்கோயில் மகேந்திரவர்மன் காலத்தில் அமைக்கப் பட்டது. இக் குகைக்கோயில் இப்போது அரங்கநாதர் கோயில் என்று வழங்கப்படுகிறது. ஆனால், இது முதலில் வராகப்பெருமாள் கோயிலாக இருந்திருக்க வேண்டும் என்று இங்குள்ள ஒரு சாசனத்தைக்கொண்டு கருத

இந்தக் குகையின் பாறைச்சுவரில், கொற்றவையின் உருவம் புடைப்புச்சிற்பமாக அமைக்கப்பட்டிருக்கிறது. பாறையில் 5′ × 5′ சதுர அமைப்புள்ள சிற்பமாக இது காணப்படுகிறது. கொற்றவை, மகிடாசுரனாகிய எருமையின் தலைமேல் வலதுகாலை வைத்து, இடதுகாலைத் தரைமேல் வைத்து நிற்கிறாள். தலையில் மகுடமும் காதுகளில் பெரிய பொற்றோடுகளும் அணிந்துள்ள கொற்றவையின் கண்களில் அச்சந்தரும் வீரஒளி மிளிர்கிறது. வலது கையில் சக்கரமும் இடதுகையில் சங்கமும் ஏந்தி, மற்ற இரண்டு கைகளையும் இடுப்பின்மேலும் தொடையின்மேலும் வைத்துக்கொண்டு, சற்றுச் சாய்ந்து நிற்கும் கொற்றவையின் அமைப்பு இனிய காட்சியாக இருக்கிறது. கழுத்தில் பொன்னரிமாலைகளும் கைகளில் கடகங்களும் வளைகளும் இடுப்பில் மேகலையும் கால்களில் சிலம்பு சதங்கைகளும் அணிந்து தெய்வத் திருவுருவத்துடன் காட்சியளிக்கிறாள்

றவ.

மகிடாசுரமர்த்தனியாகிய கொற்றவையின் உருவங்கள் பல பல்லவர் காலத்துச் சிற்பங்களில் காணப்படுகின்றன. அவை பெரும்பாலும் எருமைத் (மகிடாசுரன்) தலைமேல் நிற்பதுபோல அமைந்துள்ளன. ஆனால், இந்தக்

கொற்றவையின் சிற்பமோ, அவ்வாறில்லாமல் ஒருகாலை எருமைத் தலைமேலும் மற்றொருகாலைத் தரையின்மேலும் வைத்து நிற்கிறது. இந்த அமைப்புள்ள கொற்றவையின் உருவம் வேறெங்கும் காணப்படவில்லை. இதுவும் பல்லவச் சிற்பங்களில் மிகப் பழைமையானது[1]

கொற்றவையின் வலப்புறத்தில் ஓர் ஆள் மண்டியிட்டு முழங்காலின்மேல் உட்கார்ந்திருக்கிறான். காதில் தோடு அணிந்து நீண்ட தலைமுடியைச் சடைபோலக் கட்டியிருக்கிறான். மீசை அழகாக வளர்ந்திருக்கிறது. இடது கையினால் இடது கால் தொடையின் சதையைப் பிடித்துக் கொண்டு வலது கையில் கட்டாரி பிடித்துச் சதையை அறுக்கிறான். இவனுடைய அடர்ந்த தலைமயிரும் மீசையும் இவன் போர்வீரன் என்பதைத் தெரிவிக்கின்றன.

இந்தப் போர்வீரனுக்கு எதிரிலே, கொற்றவையின் இடப்புறத்தில் இன்னொரு ஆள், தரையில் முழங்கால் மண்டியிட்டு அமர்ந்திருக்கிறான். இந்த ஆள் தலையில் நீண்ட மயிர் இல்லை; முகத்தில் மீசையும் இல்லை. மார்பில் யோகபட்டை அணிந்திருக்கிறான். நீண்டு தொங்கும் காதுகளில் அணிந்துள்ள சிறிய குண்டலங்கள் தோளின் மேல் தங்கியுள்ளன. வலது கையைச் சின் முத்திரையாகப் பிடித்து இடது கையை இடுப்பின்மேல் வைத்திருக்கிறான். இவன் கொற்றவைக்குப் பூசை செய்கிற பாரசிவன் போலக் காணப்படுகிறான். கொற்றவையாகிய காளியைப் பூசை செய்கிறவர்களுக்குப் பாரசிவர் என்பது பெயர்.

கொற்றவையின் திருவடிகளின் கீழே அமர்ந்துள்ள இவர்கள் என்ன செய்கிறார்கள்? போர்வீரன் கொற்றவைக்கு நவகண்டம் கொடுக்கிறான் போலத் தெரிகிறது. போருக்கும் வெற்றிக்கும் தெய்வமாகிய கொற்றவையை (கொற்றம்=வெற்றி, அவ்வை=உயர்ந்தவள்) போர் வீரர்களும் மறக்குடி மக்களும் வழிபடுவார்கள். வெற்றி மடந்தையை வெற்றி வீரர்கள் வழிபடுவது இயற்கைதானே. வெற்றி மடந்தையாகிய கொற்றவையை வழிபடுகிற வெற்றி

---

1. முகப்புப் படம் 11 பார்க்க.

வீரர்கள், சில சமயங்களில், தம் உடல் உறுப்புகளை அரிந்து கொற்றவைக்கு இரத்தக் காணிக்கை கொடுப்பதுண்டு. இதற்கு நவகண்டம் கொடுத்தல் என்பது பெயர். இன்னும், சில வீரர்கள் தங்கள் தலையைத் தாங்களே அரிந்து கொற்றவைக்குத் தலைப்பலி கொடுப்பதும் உண்டு. உடம்பின் உறுப்புக்களை அரிந்து நவகண்டம் கொடுப்பதையும் தங்கள் தலையைத் தாங்களே அரிந்து தலைப்பலி கொடுப்பதையும் கலிங்கத்துப்பரணி என்னும் நூல் கூறுகிறது:

சலியாத தனியாண்மைத் தறுகண் வீரர்
"தருகவரம், வரத்தினுக்குத் தக்க தாகப்
பலியாக வுறுப்பரிந்து தருதும்" என்று
பரவுமொலி கடலொலியிற் பரக்குமாலோ.

அடிக்கழுத்தி னெடுஞ்சிரத்தை யரிவராலோ
அரிந்தசிரம் அணங்கின்கைக் கொடுப்ப ராலோ
கொடுத்தசிரங் கொற்றவையைப் பரவு மாலோ
குறையுடலுங் கும்பிட்டு நிற்கு மாலோ.[1]

இவ்வாறு தமிழ் நூல்களில் கூறப்படுவது வெறுங் கற்பனையல்ல. நடைமுறையில் உண்மையாக நடந்துவந்த செய்கைகளே. கொற்றவைக்கு நவகண்டங் கொடுத்துத் தலையரிந்து பலிகொடுத்த செய்தி கல்வெட்டுச் சாசனத்திலும் கூறப்படுகிறது. கம்பவர்மன் என்னும் அரசனுடைய 20-ஆவது ஆண்டில், ஒங்கொண்ட நாகன் ஒக்கதிந்தன் பட்டைப்பொத்தன் என்னும் வீரன் கொற்றவைக்கு நவகண்டம் கொடுத்துத் தலையரிந்து பலி கொடுத்ததற்காக, அவனுடைய மகன் பட்டைப்பொத்தனுக்கு திருவான்மூர் ஊரார் நிலம் தானம் செய்ததை ஒரு சாசனம் கூறுகிறது.[2]

---

1. கலிங்கத்துப்பரணி; கோயில் பாடியது: 13, 15. கொற்றவைக்குத் தலைப்பலியிடுவதைக் காளிகா புராணத்திலும் கூறப்படுகிறது என்பர்.

2. இந்தச் சாசனம் தமிழில் எழுதப்பட்டுள்ளது. நெல்லூர் மாவட்டம் கூடூர்த் தாலுகா மல்லம் என்னும் ஊரில் உள்ள சுப்பிரமணியர் கோயிலுக்கு முன்புறத்தில் உள்ள கல்லில் எழுதப்பட்

இந்தச் சிற்பத்தில் காணப்படுகிற போர்வீரன், கட்டாரியினால் தொடைச்சதையை யறுப்பதிலிருந்து இவன் கொற்றவைக்கு நவகண்டம் கொடுக்கிறான் என்று கருதலாம. அருகிலிருக்கும் பாரசிவன், வீரன் உறுப்பரிந்து இரத்தக் காணிக்கை கொடுக்கும்போது, மந்திரம் சடங்கு செய்கிறான் போலும்.

சஙககாலதது நூலகளிலே கொறறவை வணககங கூறப்படுகிறது. தொல்காப்பியம், புறப்பொருள் வெண்பா மாலை, சிலப்பதிகாரம் முதலிய நூல்களில் கொற்றவை வணக்கம் கூறப்படுகிறது. பிற்காலத்துத் தக்கயாகப்பரணி, கலிங்கத்துப்பரணி முதலிய நூல்களிலும் இவ் வணக்கம் கூறப்படுகிறது. தமிழரின் இப் பழைய வழக்கத்தைப் பல்லவ அரசரும் மேற்கொண்டிருந்தனர்.

டிருக்கிறது. இப்போதைய நெல்லூர் மாவட்டத்தின் மத்தியில் பாய்கிற வடபெண்ணையாற்றின் தென்பகுதிகள் முற்காலத்தில் தமிழ்நாடாக இருந்தன. இந்தத் தமிழ்ச் சாசனம் உள்ள, மல்லம் என்று இப்போது பெயர் வழங்கப்படுகிற ஊரின் பழைய தமிழ்ப் பெயர் திருவான்மூர் என்பது.

இந்தச் சாசனம் எழுதப்பட்ட கல்லில், ஓர் ஆள் தலையை அரிந்து எடுத்து அதை ஒரு கையினால் தலைமயிரைப் பிடித்துக் கொண்டிருபபது போலவும் மற்றொரு கையில் வாளைப் பிடித்திருப்பது போலவும் சிற்பம் சித்திரிக்கப்பட்டிருக்கிறது. இந்தச் சிற்ப உருவம் நவகண்டம் கொடுத்துத் தலையரிந்து பலிகொடுத்த ஒக்கொண்டநாகனைக் குறிக்கிறது போலும். இந்த உருவத் மேலே ஷை சாசனம் எழுதப்பட்டிருக்கிறது. அதன்

"ஸ்ரீ கம்ப பருமற்கு யாண்டு இருபதாவது. பட்டை பொத்தனுக்கு. ஒக்கொண்ட நாகன் ஒக்கதிந்தன் பட்டைபொத்தன் மெ (தவம்) புரிந்ததென்று படாரிக்கு நவகண்டங் குடுத்து குன்றகத்தலை அறுத்துப் பிடலிகைமேல்வைத்தானுக்கு திருவான்மூர் ஊரார் வைத்த பரிசாவது: எமூர்ப்பறை கொட்டிக் கல்மெடு செய்தாராவிக்குக் குடுப்பாரானார். பொத்தனங் கிழவர்களும் தொறுப்பட்டி நிலங் குடுத்தார்கள். இது அன்றென்றார் கங்கையிடை குமரியிடை எழுநூற்றுக் காவதமும் செய்தான் செய்த பாவத்துப் படுவார். அன்றென்றார் அன்றாள் கோவுக்கு காற் பொன் றண்டப்படுவார்." S. I. I. Vol. XII. No. 106.

சீயமங்கலம் குகைக்கோயில் பாறையில் உள்ள
"வாள்வீரன்" சிற்பம்.

4. வாள்வீரன்

சீயமங்கலத்துக் குகைக்கோயிலின் வெளிப்புறத்தில், இரண்டு பக்கத்திலும் இரண்டு வீரர்களின் புடைப்புச் சிற்பங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இச் சிற்பங்களில் இடது பக்கத்துள்ள ஒரு வாள்வீரன் சிற்பத்தைப் படத்தில் காண்க.

இந்த வாள்வீரன் மீசையுள்ள ஆண்பிள்ளை. இடது கையில் கேடயந்தாங்கி வலது கையில் வாள் ஏந்தி எதிரியைத் தாக்குகிறான். கேடயம் பிடித்த இடது கை, வலது புறம் திரும்பியிருக்கிறது. வாள் பிடித்த வலது கை தலைக்கு மேலே உயர்ந்து வாளை ஓங்குகிறது. கால்கள் இருக்கும் நிலை இந்த வீரன் எதிரியின்மேல் பாயும் சுறுசுறுப்பை நன்கு புலப்படுத்துகிறது. அரையில் அணிந்துள்ள ஆடை துடைவரையில் சல்லடம்போல் அமைந்திருக்கிறது. ஆனால், அதிலும் ஒரு அழகு புலனாகிறது. போர்வீரனின் வழக்கப்படி தலைமுடியைத் துணியினால் பொதிந்து கட்டிக் குஞ்சக்கயிற்றினால் பிணித்திருக்கிறான்.

போர்வீரரின் தலைமுடி போர்க்களத்தில் அவிழ்ந்து விட்டால், அவ் வீரனுடன் மற்ற வீரர்கள் போர் செய்யக் கூடாது என்பது பண்டைக்காலத்துத் தமிழ்வீரரின் மரபு. ஆகவே தலைமுடி அவிழாதபடி கட்டியிருக்கிறான். காதில் அணிந்துள்ள கனமான குண்டலம் அசைந்து ஆடு கைகளிலும் கால்களிலும் காப்பும் கடகமும் கழலும் அணிந்திருக்கிறான். முகத்தில் மீசை நன்கு அமைந்திருக்கிறது. எதிரியின் வாள்வீச்சிலிருந்து கேடயத்தினால் தற்காத்துக்கொண்டு, அதேசமயத்தில் எதிரியை வாளினால் வீசப்பார்க்கிறான். கைகால்களின்நிலை, உடம்பின் சாயல், விழிப்புள்ள பார்வை இவையெல்லாம் வாட்போர் காட்சியைப் படம் பிடித்துக் காட்டுகின்றன.

கி. பி. 7-ஆம் நூற்றாண்டில், மகேந்திரவர்மன் காலத்தில் இருந்த போர்வீரனுடைய போர்க்காட்சியின் சிற்பவுருவம் இது.

எ. ஓவியங்கள்

ஓவியக்கலை மிகப் பழைய காலத்திலிருந்தே தமிழ் நாட்டில் வளர்ச்சியடைந்திருந்தது. சங்கநூல்களிலே ஓவியத்தைப்பற்றிய குறிப்புகள் ஆங்காங்கே காணப்படுகின்றன. அக் காலத்திலே ஓவியங்கள் பெரும்பாலும் சுவர்களிலே எழுதப்பட்ட சுவர் ஓவியங்கள் ஆகும். மகேந்திரவர்மன் வாழ்ந்திருந்த கி. பி. 7-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் ஓவியக்கலை மிகச் சிறப்படைந்திருந்தது. மகேந்திரவர்மன் தமிழ்நாட்டிலே புதிதாகக் குகைக் கோயில்களை அமைத்து அக் குகைக்கோயில்களின் சுவர்களிலே ஓவியங்களை எழுதினான். சித்திரங்கள் (ஓவியங்கள்) தக்கபடி பாதுகாக்கப்படாவிட்டால், எளிதில் அழிந்துபடக் கூடியவை. ஆதலால், அக்காலத்துச் சிற்பங்கள் பாதுகாக்கப்படாமல் பெரிதும் அழிந்துவிட்டன. மிருந்துள்ளவை மிகச் சொற்பமே.

மகேந்திர விக்கிரமபல்லவன் ஓவியச் சுவையுடையவன். ஓவியக் கலையைச் சுவைத்தவன் மட்டுமல்லன்; ஓவிய [illegible] எப்படி அறிகிறோம் என்றால், இவன் சித்திரகாரப்புலி என்று சிறப்புப்பெயர் பெற்றிருந்ததனாலே அறிகிறோம்.

இவன் அமைத்த திருச்சிராப்பள்ளிக் குகைக்கோயிலிலே இவனுடைய சிறப்புப் பெயர்கள் பல பொறிக்கப்பட்டுள்ளன. அவ்வாறு பொறிக்கப்பட்ட பெயர்களிலே, பல்லவத் தமிழ் எழுத்திலே சித்திரகாரப்புலி என்னும் பெயர் காணப்படுகிறது. பல்லாவரத்துக் குகைக் காயிலிலும் சித்ரகாரபுலி என்னும் பெயர் எழுதப்பட்டுள்ளது. காஞ்சிபுரத்திலே ஏகாம்பரேசுவரர் கோவில் பௌர்ணமி மண்டபத்திலேயுள்ள தூண்களில் உள்ள மகேந்திரவர்மனுடைய சிறப்புப்பெயர்களில் சித்ரகாரபுலி என்னும் பெயரும் காணப்படுகிறது,

இவ்வாறு சித்திரகாரப்புலி என்னும் பெயரைச் சூடியிருந்தபடியினாலே மகேந்திரவர்மன் சித்திரக் கலையை நன்கு பயின்றவன் என்பதை அறியலாம். அது மட்டுமன்று. தக்ஷிண சித்திரம் என்னும் ஓவிய நூலுக்கு இந்த அரசன் உரை ஒன்று எழுதினான் என்னும் செய்தியும் அறிகிறோம். மாமண்டூர்க் குகைக்கோயிலிலே இவனைப் பற்றி எழுதியுள்ள சாசனத்திலே, (இப்போது இந்தச் சாசனம் சிதைந்துள்ளது.) 11, 12-ஆவது வரிகளில்

"..........கல்பாத் ப்ரவிபஜ்ய..........வ்ருத்திம..
தக்ஷிண சித்ராக்யம் (கார) யித்வா யதா
..........ஸ்ச விவிதைஹ் க்ருத்வா வர்ண சதுர்த்த

என்று எழுதப்பட்டுள்ளது.



1. சித்திரகாரப் புலி. 2. சித்ரகார புலி.

இதனால், தக்ஷிண ... ப்பற்றிய ஓர் ஓவிய நூலுக்கு இவன் உரை எ... ன் என்று அறிஞர்கள் ...ர்கள்.

தக்ஷிண சித்திரம் என்பது பரத கண்டத்தின் தென் பகுதியில் வழங்கிய ஓவியங்களைக் குறிக்கிறது போலும். ஏனென்றால், தக்கிண இந்தியாவில் இருந்து தெற்கே இலங்கைவரையில் ஒரேவிதமான ஓவியக்கலை வளர்ச்சி பெற்றிருந்ததாகத் தெரிகிறது. அஃதாவது வடக்கே பாக் குகை, அஜந்தாக் குகைகளில் காணப்படுகிற ஓவியங்களும்

தமிழ்நாட்டிலே காணப்படுகிற ஓவியங்களும் இலங்கையில் சிகிரியா மலைக்கோட்டையில் காணப்படுகிற ஓவியங்களும் ஒரேவித பண்புடையனவாய்க் காணப்படுகின்றன என்று ஓவியநூற் புலவர்கள் கூறுகிறார்கள். இந்தத் தக்ஷிண சித்திரங்கள், அந்தந்த நாட்டிற்கேற்ப சிறுசிறு மாறுதல்களுடன் காணப்பட்டாலும், பொதுப்படையான அமைப்பில் ஒரேவிதமாக இருக்கின்றன என்று ஓவிய நூல் புலவர்கள் கூறுகிறார்கள்.

மகேந்திரவர்மன் காலத்தில் இருந்ததும், மகேந்திர வர்மனால் உரை எழுதப்பட்டதுமான தக்ஷிணசித்திரம் எனும் நூல் இப்போது கிடைக்கவில்லை. சிலப்பதிகார உரையாசிரியராகிய அடியார்க்கு நல்லார் தமது உரையில் ஓவிய நூல் என்னும் சித்திரத்தைப் பற்றிய ஒரு நூலைக் குறிப்பிடுகிறார். அந் நூலும் இப்போது கிடைக்கவில்லை.

மகேந்திரவர்ம பல்லவன் காலத்துச் சித்திரங்கள் பெரும்பாலும் மறைந்துவிட்டன. நற்காலமாக இப்போது கிடைத்திருப்பவை, காலப்பழமையினால் வண்ணங்கள் மங்கிப்போய் அரைகுறையாக அழிந்துபட்ட நிலையில் சித்தன்ன வாசல் குகைக்கோயிலில் காணப்படுகிற ஓவியங்களே. சித்தன்ன வாசல் குகைக்கோயில், மகேந்திரவர்மன் காலத்தில் அமைக்கப்பட்ட சமணக்கோயில் ஆகும்.[1] அங்குக் காணப்படுகிற சுவர் ஓவியங்கள் முக்கியமாக நான்கு. அவற்றில் முதலாவது, அரசன் அரசி ஆகிய இருவரின் யங்கள். இவை மார்பளவுவரையில் காணப்படுகின் கிரீடங்களுடன் காணப்படுகிற இந்த ஓவியத்தை, மேத்தா அவர்கள் "அர்த்தநாரீசுவரர்" உருவம் என்று கூறுவது தவறு.[2]

---

1. சித்தன்னவாசல் ஓவியம் மகேந்திரவர்மன் காலத்தது அல்ல என்பது திரு. K. R. ஸ்ரீநிவாசன் அவர்கள் கருத்து. (See Pp. 168—176. Proceedings of the Indian History Congress, Seventh Session, Madras.) ஆனால், இவர் அபிப்பிராயம் ஒப்புக்கொள்ளப்படவில்லை. இவை மகேந்திரவர்மன் காலத்து ஓவியங்களே என்பது பல ஆராய்ச்சியாளர்களின் கருத்து.

2. Studies in Indian Painting by Mehta.

இது அர்த்தநாரீசுவரர் உருவம் அன்று. சமணக் கோயிலிலே சிவபெருமானுடைய அர்த்தநாரீசுவரர் உருவம் எழுதப்படுவது வழக்கமன்று. அன்றியும் இது அர்த்தநாரீசுவரர் உருவமாகக் காணப்படவில்லை. இடப்புறம் பெண்ணாகவும் வலப்புறம் ஆணாகவும் அமைந்த ஒரே உருவந்தான்

சித்தன்னவாசல் ஓவியம்: மகேந்திரவர்மனும் இராணியும்

ரீசுவரர உருவம ஆகும். ஆனால், இந்த ஓவியத்தில்,
ஆண் உருவமும் பெண் உருவமும் தனித்தனியே வெவ்வே
றாக உள்ளன. இவை ஓர் அரசன் அரசியின் ஓவியங்களைக்
றன. உண்மையில் இந்த ஓவியம் மகேந்திரவர்ம
மு அவனுடைய பட்டத்தரசியையும் குறிக்கிறது என்
பதில்

1. முகப்புப் படம் 12 பார்க்க.

இரண்டாவதாக உள்ளவை, இரண்டு தூண்களில் எழுதப்பட்டுள்ள இரண்டு அரம்பையரின் நடனக் காட்சி. இவை அரம்பையர் இருவர் அரங்கத்தில் நின்று நடனம் புரி

சித்தன்னவாசல் ஓவியம்: நடன மங்கை

வதைக் காட்டுகின்றன. மகேந்திரவர்மனையும் அவன் மனைவியையும் ஓவிய உருவமாகத்தீட்டிய அதே ஓவியப் புலவனுடைய கைவன்மையையும் கலைத்திறத்தையும் இந்த ஓவியத்திலும் காணலாம். நாடகக் கலையில் தேர்ந்த

நங்கையர் இருவர், நமது கண்முன்பாக உயிருடன் நின்று நடனம் ஆடுவதுபோலக் காணப்படுகின்றனரே யல்லாமல் சுவரில் எழுதப்பட்ட சித்திரமாகத் தோன்றவில்லை.

சித்தன்னவாசல் ஓவியம்: நடன மங்கை

இந்த ஓவியங்கள் உயிர் உள்ளவையாகக் காணப்படுகின்றன! ஓவியப் புலவன் திறம்பட எழுதிய இந்த ஓவியங்களின் நடன நிலையைக் காணும்போது, காவியப் புலவராகிய திருத்தக்கதேவரின் சீவகசிந்தாமணிச் செய்யுள்கள் நம் நினைவுக்கு வருகின்றன. தேசிகப் பாவை என்பவள் சீவகனுக்கு முன்பாக அரங்கில் நின்று நடனம் ஆடிய காட்சியைக் கூறும் செய்யுட்களோடு இந்த ஓவியங்களின் நடனக் காட்சியை ஒத்திட்டு நோக்குக:

“குழலெடுத்து யாத்து மட்டார்
கோதையில் பொலிந்து மின்னும்
அழலவிழ் செம்பொற் பட்டம்
குண்டலம் ஆரம் தாங்கி

நிழலவிர் அல்குற் காசு சிலம்பொடு
சிலம்ப நீள் தோள்
அழகிகூத் தாடு கின்றாள்
அரங் அரம்பை யன்னாள்.

பட்டம
வார் குழை திருவில் வீசப்
பூண்முலை பிறழப் பொற்றோடு
இடவயின் நுடங்க ஒல்கி
மாணிழை வலக்கை தம்மால்
வட்டணை போக்கு கின்றாள்
காண்வரு

(பதுமையார் இலம்பகம்: 89, 92.)

இச் செய்யுள்களை த ஓவியங்கள் நினைவுறுத்துகின்றன.

ப் பூச்சூடிய இந்த நடனமங்கையர் அணிந்திருக்கும் நகைகளைப் பாருங்கள். இந்த நகைகளைப் பார்க்கும்போது பூம்புகார்ப் பட்டினத்து மாதவி அணிந்த நகைகளை இளங்கோவடிகள் கூறுவது நினைவுக்கு வருகிறது. பேர்போன நடனமங்கையாகிய மாதவி அணிந்திருந்த நகைகளைச் சிலப்பதிகாரம் கூறுகிறது. சிலம்பு, பாடகம், சதங்கை, காற்சரி என்பவற்றைக் காலுக்கு அணிந்து, முப்பத்திரண்டு முத்துமாலைகளினால் அமைக்கப்பட்ட விரிசிகை என்னும் மேகலையை அரையிலே நீலப்பட்டாடையின் மேல் அணிந்து, மாணிக்க வளையையும் பொற் கடகத்தையும் தோளுக்கு அணிந்து, சூடகம் நவரத்தினவளை பொன்வளை சங்கவளை பவழவளைகளை முன் கைக்கு அணிந்து, மகரவாய் மோதிரம் முதலிய மோதிரங்களை விரல்களுக்கு அணிந்து, வீரசங்கிலி நேர்ஞ்சங்கிலி சவடி சரப்பணி முத்தாரம் முதலியவற்றைக் கழுத்துக்கு அணிந்து, பத்திரகுண்டலம் குதம்பை முதலிய அணிகளைக் காதுக்கணிந்து, சீதேவி வலம்புரி பூரப்பாளை தென்பல்லி வடபல்லி என்னும் அணிகளை தலைக்கு அணிந்து மாதவி

என்னும் நாடக மடந்தை எழிலுடன் விளங்கினாள் என்று சிலப்பதிகாரம் (கடலாடுகாதை) கூறுவதுபோலவே, இந்தச் சித்தன்னவாசல் ஓவியத்தில் காணப்படும் நாடக மடந்தையரும் பலவித நகைகளையும் அணிகளையும் பூண்டு ...ய தோற்றத்தோடு காட்சி

அருகக்கடவுள் எழுந்தருளியுள்ள இந்தக் குகைக் கோயிலிலே அரம்பையரின் நடனக்காட்சி ஓவியமாக எழுதப்பட்டிருப்பதின் காரணம் என்ன?

சமவசரணம் என்பது ஒன்றுக்குள் ஒன்றாக ஏழு மாடவீதிகளையுடையது. இந்தச் சமவசரணத்தின் நடுவிலே அமைந்துள்ள ஸ்ரீநிலயம் என்னும் கோயிலில் அருகக்கடவுள் எழுந்தருளியிருந்து திருவறம் போதிக்கிறார். ஏழு மாடவீதிகளையும் கடந்து ஸ்ரீநிலயத்துக்குச் செல்லும்போது, ஒவ்வொரு மாடவீதியிலும் நடன அரங்கங்கள் உள்ளன. அந்த அரங்கங்களில் அரம்பையர் அருகப்பெருமானின் சரிதையை நாட்டியமாக நடித்தும் பாடியும் நடனம் புரிகிறார்கள் என்று சமணசமய நூல்கள் கூறுகின்றன. ஆகவே, அருகக்கடவுள் எழுந்தருளியுள்ள இந்தச் சமணக் குகைக்கோயிலில் அரம்பையர் நாட்டியம் போன்ற ஓவியங்கள் எழுதப்பட்டுள்ளன.

மூன்றாவதாகக் கண்ணையும் கருத்தையும் ... அழகான ஓவியம் தாமரைக்குளம் ஆகும். இத் தாமரைக் குள ஓவியம் இக் குகைக்கோயில் மண்டபத்தின் விதானத்தில் எழுதப்பட்டிருக்கிறது. கைவன்மை படைத்த ஓவியப்புலவனின் கலைநுட்பத்தைக் காட்டும் இந்த ஓவியம், வண்ணங்கள் மழுங்கி சிதைந்துள்ள நிலையிலும் தாமரைக்குளத்தின் அழகைக் காட்டுகிறது.

இக் குளத்தில் செந்தாமரை வெண்டாமரை அல்லி ஆம்பல் முதலிய நீர்ப்பூக்கள் பூத்து நிறைந்திருக்கின்றன. செழித்து வளர்ந்த தாமரையிலைகள் நீர் தெரியாதபடி குளத்தை மூடிக்கொண்டிருக்கின்றன. அன்னப்பறவைகளும் மீன்களும் இடையிடையே காணப்படுகின்றன.

எருமையும் யானையும் நீரில் நிற்கின்றன. ஆழமற்ற இந்தக் குளத்தில் முழங்கால் அளவுள்ள நீரில் மூன்று ஆட்கள் இறங்கித் தாமரைப்பூக்களை நாளத்தோடு கொய்து கற்றை யாகக் கட்டித் தோளின்மேல் வைத்துக்கொண்டு வருகிறார் கள். ய இயற்கைக்காட்சி இந்த ஓவியத்தில் நன்கு அமைந்திருக்கிறது. இந்தத் தாமரைக் குளத்தின் ஓவியம் எதைக் குறிக்கிறது?

சித்தன்னவாசல் குகைக்கோயிலில் உள்ள
தாமரைக்குளத்து ஓவியம்.

அருகக்கடவுள் எழுந்தருளியிருந்து அறவுரை ளுகிற இடம் சமவசரணம் என்பது. சமவசரணத் தில் ஒன்றுக்குள் ஒன்றாக ஏழு மாடவீதிகள் உள்ளன. இந்த மாடவீதிகளில் இரண்டாவதாகவுள்ளது காதிகாபூமி எனப்படும். காதிகாபூமி, சமவசரணத்தைச் சூழ்ந்து அகழிபோன்ற நீர்நிலையாகும். இரண்டு குரோச சுற்றளவு உள்ளதாய் ஒன்றரைக்காத அகலமுடையதாய் இருக்கும்.

பார்ப்பதற்கு மிகுந்த ஆழமுள்ளதுபோல் தோன்றினாலும் இதில் இறங்கினால் முழங்கால் அளவுமட்டும் நீருள்ளதா யிருக்கும். மேடுபள்ள மில்லாமல் சமதரையாகவுள்ள இந்தக் காதிகாபூமி பலவித நீர்ப்பூக்கள் பூத்துப் பார் வைக்கு இந்திரவில்லைப்போன்று பலநிறமாகக் காணப்படும். அருகப்பெருமானை வணங்குவதற்காகச் செல்லும் அன் பர்கள் இதில் இறங்கிச் செல்லவேண்டும். செல்லும்போது அருகப்பெருமான் திருவடியில் இடுவதற்காகத் தாமரை அல்லி முதலிய பூக்களைப் பறித்துக்கொண்டு போவார்கள். இவ்வாறு சமவசரணத்தில் உள்ள காதிகாபூமி என்னும் அகழியைப் பற்றிச் சமணசமய நூல்கள் கூறுகின்றன. சித்தன்னவாசலில் உள்ள இந்தச் சமணக்கோயிலில், மண் டபத்தின் மேல் விதானத்தில் ஓவியமாக எழுதப்பட்ட இந்தத் தாமரைக்குளக் காட்சி காதிகாபூமியைக் குறிக் கு என்பதில் ஐயமில்லை.

குகைக்கோயிலின் பாறைச்சுவர்கள் கரடுமுரடாக இருக்கும். அச்சுவர் வண்ணஓவியம் எழுதுவதற்கு ஏற் றவை அல்ல. அச்சுவர்களில் ஓவியம் எழுதவேண்டுமானால், பாறைச்சுவரின்மேல் மெல்லிய சுதை பூசிய பின்னர் வண்ண ஓவியம் எழுதவேண்டும். சித்தன்னவாசல் பாறைச்சுவ ரிலும் மெல்லிய சுதை பூசப்பட்டு அதன்மேல் ஓவியம் எழுதப்பட்டுள்ளன. அஜந்தா, சிகிரியா முதலிய குகை களிலுள்ள ஓவியங்களும் இவ்வாறு சுதை பூசப்பட்டு அதன்மேல் எழுதப்பட்டவைகளே.

மகேந்திரவர்மன் காலத்தில், அவனுடைய குகைக் கோயில்களில் எழுதப்பட்ட ஓவியங்கள் யாவும் மறைந்து விட்டன. இந்தச் சித்தன்னவாசல் குகைக்கோயிலின் ஓவியங்கள் மட்டும், ஒளி மழுங்கிப்போய் அறைகுறையாக வேனும் காட்சியளிப்பது நமது நற்காலமாகும். காலத் தினால் மிக முற்பட்ட தமிழ்நாட்டு ஓவியம் இது ஒன்று தான்; பிற யாவும் இதற்குப் பிற்பட்ட காலத்தன.

அ. இசைக்கலை

மகேந்திரவர்மன் காலத்தில் இசைக்கலை மேன்மை பெற்றிருந்தது. நாடெங்கும் இசைப் பயிற்சியும் இசை யார்வமும் காணப்பட்டன. இந்த அரசன் காலத்தில் இருந்த பக்தி இயக்கத்தை வளர்த்த திருநாவுக்கரசர் இசைப்பாடல்களைப் பாடியே பக்தி இயக்கத்தை நாடெங் கும் பரப்பினார். இவர் பாடிய தேவாரப் பாடல்கள் இசைப்பாடல்களே. இவர் காலத்தில் இசைக்கலை நாட்டில் பரவியிருந்தது என்பதை இவரது தேவாரப் பாடல்களில் காணப்படுகிற குறிப்புகளிலிருந்து அறியலாம். அக் குறிப்புகள் சிலவற்றை இங்கே ...

“பண்பொருந்த இசைபாடும் பழனம். பஞ்சமம் பாடியாடும் தெள்ளியர். பண்ணினைப் பாடவைத்தார் பத்தர்கள் பயிலவைத்தார். பண்ணினாற் கின்னரங்கள் பத்தர்கள் பாடியாட இன்னிசை தொண்டர் பாட இருந் தார் ஆப்பாடியாரே. கொக்கரை தாளம் வீணை பாணிசெய் குழகர் போலும், சீரொடு பாடலானார். பண்ணினார் முழவ மோவாப் பைம்பொழிற் பழனைமேய அண்ணலார். பாட் டினார் முழவமோவாப் பைம்பொழிற் பழனைமேயார். கிளரும் பேரொலி கின்னரம் பாட்டறாக்களரி.

“அந்தளி ராகம். ஏழிசை வண்ணம். பண்ணார் பல்லியம் பாடி. ஏழ்நரம்பினோசை. ஏழ்நரம்பின் இசை. தொன்னரம்பின் இசை. பாட்டான் நல்ல தொடை. பண்ணிலங்கு பாடல். பண்பாடல். பாலையாழொடு செவ் வழிப் பண்கொள. யாழின் பாட்டு. பாவாய இன்னி சைகள் பாடி. பண்ணோடு யாழ்வீணை பயன். ஏழிசை யாழ் வீணை முரலக் கண்டேன்.

“குழலையாழ் மொழியார் இசை வேட்கையால், உழலை யாக்கையை யூனு முணர்விலீர். கொண்டபாணி கொடு கொட்டி தாளங்கைக் கொண்ட தொண்டர். குடமுழவம்

வீணை தாளம். குழலோடு கொக்கரை தாளம் மொந்தை. பிடவம் மொந்தை குடமுழவங் கொடுகொட்டி குழலும் ஓங்க. கொக்கரையும் கொடுகொட்டியும். துடியாம் துடியின் முழக்கந்தானும். குழல் மொந்தை தாளம் வீணை கொக்கரை. அறை கலந்த குழல் மொந்தை வீணை யாழும். கொக்கரை சச்சரி வீணை. கொக்கரை குழல் வீணை கொடுகொட்டி, முரலுங் கின்னரம் மொந்தை முழங்கவே. தாளம் குழல் யாழ் குண்டிகை கொக்கரை. பரண்டை மொந்தை முழவு. கொடுகொட்டியும் கொக்கரை விரவினார் பண்கெழுமிய வீணையும். கொடுகொட்டி கொக்கரை தக்கை குழல் தாளம் வீணை மொந்தை. செந்துவர்வாய்க் கருங்கண்ணிணை வெண்ணகைத் தேமொழியார் வந்துவலஞ் செய்து மாநடமாட. பண்ணுணத்தார் பாடலோடு ஆட லோவாப் பரங்குன்றம்.''

இவ்வாறு இசையைப்பற்றியும் இசைக்கருவிகளைப் பற்றியும் இன்னும் பல குறிப்புகள் திருநாவுக்கரசரின் தேவாரப் பதிகங்களிலே காணப்படுகின்றன.

புறநீர்மை காந்தாரம் பியந்தைக் காந்தாரம் கவுசிகம் இந்தளம் தக்கேசி சாதாரி நட்டபாடை நட்டராகம் பழம் பஞ்சுரம் காந்தார பஞ்சமம் பஞ்சமம் என்னும் பன்னிரண்டு பகற்பண்களும், தக்கராகம் பழந்தக்கராகம் சீகாமரம் கொல்லி கொல்லிக்சாவாணம் வியாழக்குறிஞ்சி மேகராகக் குறிஞ்சி அந்தாளிக் குறிஞ்சி குறிஞ்சி என்னும் ஒன்பது இராப்பண்களும், செவ்வழி செந்துருத்தி திருத் தாண்டகம் என்னும் மூன்று பொதுப்பண்களும் ஆக இரு பத்துநான்கு பண்கள் இவரது தேவாரப் பதிகங்களில் பயிலப்பட்டுள்ளன.

மகேந்திரவர்மன் மற்றக் கலைகளைப் பயின்றது போலவே இசைக்கலையையும் பயின்று அக்கலையில் சிறந்து இவன் இசைக்கலையில் வல்லவன் என்பதை வழங்கிய "சங்கீர்ணஜாதி" என்னும் சிறப்புப் பெயரினால் அறியலாம். திருச்சியிலும் பல்லாவரத்திலும்

இவன் அமைத்த குகைக்கோயில்களில் எழுதப்பட்டுள்ள சாசனங்களில் சங்கீர்ணஜாதி என்னும் இவனுடைய சிறப்புப் பெயர் காணப்படுகிறது.[1]

-யைச் சார்ந்த குளத்தூர் தாலுகாவில் உள்ள குடுமியாமலை என்னும் குன்றின்மேல் சிகாநாதேசுவரர் கோயில் இருக்கிறது. இது குகைக்கோயில். இக்கோயிலுக்குப் பின்புறத்தில் பாறையில் இரண்டு பிள்ளையார் உருவங்கள் செதுக்கியமைக்கப்பட்டுள்ளன. ஒன்று வலம்புரி விநாயகர்; மற்றொன்று இடம்புரி விநாயகர். இரண்டு விநாயகர்களுக்கு இடையிலே கற்பாறையில் குடுமியாமலை இசைக்கலைச் சாசனம் பொறிக்கப்பட்டிருக்கிறது. இது 1904-ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்டது.[2] கி. பி. 7-ஆம் நூற்றாண்டில் பல்லவக் கிரந்த எழுத்தினால் எழுதப்பட்ட இந்தச் சாசனம் 13 × 14 அடி பரப்புள்ள

முப்பத்தெட்டு வரிகளையுடைய இந்தச் சாசனம், இராகத்துக்கு ஒரு பிரிவாக ஏழு இராகத்துக்கு ஏழு பிரிவுகளைக் கொண்டுள்ளது. இது, **சித்தம் நமசிவாய** என்று

---

1. இந்தப் பெயரைத் திரு. கோபிநாதராவ் அவர்கள் தவறுகப் பொருள் கொண்டார். மகேந்திரனுடைய தாயும் தந்தையும் வெவ்வேறு ஜாதியில் பிறந்தவர்கள் என்றும் அவர்கள் கலப்பு மணம் செய்துகொண்டு பிறந்தவன் மகேந்திரவர்மன் என்றும், ஆதலால்தான் அவனுக்குச் சங்கீர்ண ஜாதி என்னும் பெயர் உண்டாயிற்று என்றும் தவறுக எழுதினுர்.

—Epi. Ind. Vol. XVII. P. 16.

திரு. கிருஷ்ண சாஸ்திரி அவர்கள் இதனை மறுத்து, சங்கீர்ண ஜாதி என்பது தாளவகையின் ஒரு பெயர் என்று கூறினுர். சங்கீர்ண ஜாதி என்பதற்குக் கலப்பு ஜாதி என்னும் பொருள் இவ்விடத்தில் பொருந்தாது. பரதர் இயற்றிய நாட்டிய சாஸ்திரம் இசையை ஜாதி என்னும் பெயரால் கூறுகிறது. ஆகையால், சங்கீர்ண ஜாதி என்னும் பெயர் இசை சம்பந்தமான பெயர் என்பது ஐயமறத் தெரிகிறது. எனவே, மகேந்திரவர்மன், சங்கீர்ண ஜாதி என்னும் பெயர் பெற்றிருந்தது அவன் இசைக்கலையில் தேர்ந்தவன் என்பதைத் தெரிவிக்கிறது.

2. Epi. Rep. 1905. Page 47, Para 4.

தொடங்கி இசையைப்பற்றிய செய்திகளைக் கூறிய பின்னர், முடிவிலே,

> ஸ்ரீருத்ராசார்ய ஶிஷ்யேண பரம
> மாஹேஸ்வரேண ராஜ்ஞா ஶிஷ்ய
> ஹிதார்த்த க்ருதா : ஸ்வராகமா

என்று முடிகிறது; அஃதாவது, ருத்ராசார்யருடைய சீடரான ஓர் அரசனால் இந்த இசைக்கலைச் சாசனம் இயற்றப்பட்டது என்று கூ.



குடுமியாமலை இசைக்கலைச் சாசனத்தின்

> "எட்டிற்கும் ஏழிற்கும்
> இவை உரிய."

என்று பல்லவத் ல் இந்தச் ன
ில் எழுதப்பட்

இச் சாசனத்தை எழுதியவன் முதல் மகேந்திரவர்மன் என்று சரித்திர ஆராய்ச்சிவல்லார் முடிவுசெய்துள்ளார்கள். பல்லவக்கிரந்த எழுத்தினால் எழுதப்பட்டுள்ள இந்தச் சாசனம் நாகரி எழுத்தில் அச்சிடப் பட்டிருக்கிறது.[1] சங்கீத

1. Epi. Ind. Vol. XII, P. 226 - 237.

ரத்நாகரம் என்னும் நூலை இயற்றிய சாரங்கதேவர் காலத்துக்கு ஆறு நூற்றாண்டுகளுக்கு முன்னே இந்தச் சாசனம் எழுதப்பட்டது. சாரங்கதேவர் 13-ஆம் நூற்றாண்டில் இருந்தவர். சங்கீதரத்நாகரத்துக்கு முன்னே நாரதசிக்ஷை என்னும் ஓர் இசைநூல் இருந்தது. அந்த நூலைச் சங்கீத ரத்நாகரத்தில் மேற்கோள் காட்டியிருக்கிறார் சாரங்க தேவர். ஆனால், நாரதசிக்ஷை எப்போது இயற்றப்பட்டதென்று தெரியவில்லை. சாரங்கதேவர் தமது சங்கீத ரத்நாகரத்தில் மேற்கோள் காட்டுகிற நாரதசிக்ஷை ஏழு ராகங்களை மட்டும் கூறுகிறது. ஆகவே, நாரதசிக்ஷை கூறுகிற இசையும், குடுமியாமலைச் சாசனம் கூறுகிற இசையும் ஒற்றுமையுள்ளவை என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள். சங்கீத ரத்நாகரமோ பல இராகங்களைக் கூறுகிறது. நாரதசிக்ஷை என்னும் நூல், நாரத முனிவர் இயற்றிய ஒரு இசைநூலைப் பின்பற்றி எழுதப்பட்டது என்று கருதப் ப[illegible]

நாரத சிக்ஷையும் அதனுடன் [illegible] குடுமியாமலை இசைக்கலைச் சாசனமும் தமிழ்இசை மரபைச் சேர்ந்தவை என்று தெரிகின்றன. என்னை? வடநாட்டு இசை மரபு ஹனுமந்தரைப் பின்பற்றியது என்றும், தென்னாட்டு இசைமரபு நாரதரைப் பின்பற்றியது என்றும் கர்ண பரம்பரையாகச் சொல்லப்படுகிறது. அன்றியும் நாரதமுனிவர் தமிழ் இசைநூல் செய்தவர் என்பது தமிழ் [illegible]

"நாரத வீணை நயந்தெரி பாடல்

என்று, சிலப்பதிகாரம் 6-வது காதை கூறுகிறது. "யாழாசிரியனாகிய நாரத முனிவனின் யாழின் ஏழிசை இன்பம்" என்று இதற்கு அடியார்க்கு நல்லார் உரை எழுதுகிறார்.

குடுமியாமலைச் சாசனமும் வீணையைப்பற்றிய இசையைத்தான் கூறுகிறது என்பது ஈண்டுக் கருதத்தக்கது.

நாரதமுனிவர் பஞ்சபாரதீயம் என்னும் இசைத்தமிழ் நூலைச் செய்தார் என்று அடியார்க்கு நல்லார் சிலப்பதிகார உரைப்பாயிரத்தில் கூறுகிறார்: "இசைத் தமிழ்

நூலாகிய பெருநாரை பெருங்குருகும் பிறவும் தேவவிருடி நாரதன் செய்த பஞ்சபாரதீய முதலா வுள்ள தொன்னூல் தன" என்று அவர் எழுதுவது காண்க.

மேலும் சிலப்பதிகாரம் ஆய்ச்சியர் குரவை ஒன்றன் பகுதி "கதிர் திகிரியான் மறைத்த" என்னும் செய்யுளின் ஈற்றடி, "முதுமறை தேர் நாரதனார் முந்தைமுறை நரம் புளர்வார்" என்று நாரதரின் யாழிசையைக் கூறுகிறது. இதற்கு, "முதிய வேதத்தின் சிக்கை என்னு மங்கத்தை ஆராயும் முதனரம்பை உருவி வாசிக்கும் நாரதனு ரென்க. சிக்கை என்பது இசை" என்று அடியார்க்கு நல்லார் உரை யெழுதுகிறார். நில் நாரதசிக்ஷை என்னும் நூலை இவர் குறிப்பிடுவது காண்க.

ஷை ஆய்ச்சியர் குரவை ஒன்றன்பகுதி இரண்டாவது பாடலாகிய "மயிலெருத் துறழ்மேனி" என்னும் செய்யு ளின் கடைசி அடி "குயிலுவருள் நாரதனார் கொளைபுரணர் சீர் நரம்புளர்வார்" என்று கூறுகிறது. "குயிலுவ ருட் செறிப்புப் புணர்ந்திருக்கும் தாள வறுதியையுடைய நரம்பை உருவிவாசிக்கும் நாரதனு ரென்க" என்று உரை யாசிரியர் எழுதுகிறார்.

திருஞானசம்பந்தர் அருளிய "திருவெழுகூற்றிருக் கை"யில், நாரதமுனிவரை ஏழிசையோன் என்று கூறு கிறார். "எச்சன் ஏழிசையோன் கொச்சையை மேச்சினை" என்பது அவர் வாக்கு. இதில், எச்சன் என்பது இந்திரன், ஏழிசையோன் என்பது நாரதன். இதனாலும், தமிழ்நாட் டிலே நாரத முனிவர் வழியாக இசைக்கலை பயின்று வரு கிறது என்பது தெரிகிறது. இசைத்தமிழ் வல்லவரான ஞானசம்பந்தரே இதைக் கூறுவது கருதத்தக்கது.

இதனால் நாரதரைப் பின்பற்றித் தமிழிசை மரபு வரு கிறது என்பது தெரிகிறது. மகேந்திரவர்மனுடைய குடு மியாமலை இசைச்சாசனமும் இந்த மரபையே பின்பற்றி யுள்ளது என்று ஆராய்ந்து பார்த்த அறிஞர்கள் கூறுகிறார் கள்.

யாழ்நூல் என்னும் இசைத்தமிழ் நூலினை இயற்றிய ஸ்ரீமத் விபுலாநந்த அடிகள் தமது நூலில் இதையே கூறுகிறார். “சார்ங்கதேவர் சொல்லுகிற சுத்தவுருவம், காகலியோடு கூடிய வுருவம், அந்தரத்தோடு கூடியவுருவம், காகலி அந்தரத்தோடு கூடிய வுருவம் எனும் நான்கினுள் காகலியோடு கூடியவுருவம் (குடுமியாமலை) கல்வெட்டிற் கொள்ளப்பட்டிலதாதலின், கல்வெட்டினைப் பொறித்த ஆசிரியர் முற்றிலும் பழந்தமிழ் மரபினைக் கைக்கொள்கின்றார் என்பது தெளிவாகிறது” என்று அவர் எழுதுவது காண்க.

குடுமியாமலை இசைக்கலைக் கல்வெட்டைப்பற்றி விபுலாநந்த அடிகள் மேலும் எழுதுவது ஈண்டுக் கருதத் தக்கது. அவர் எழுதுவது வருமாறு:

“எட்டிற்கும் ஏழிற்கும் இவையுரிய எனக் கல்வெட்டின் ஈற்றிலே காணப்படுகின்ற குறிப்பினை நோக்குமிடத்துச், சுத்த மூர்ச்சனையாகவும், அந்தரங் கூடிய மூர்ச்சனையாகவும், காகலியந்தரங்கூடிய மூர்ச்சனையாகவும் அனைத்தினையும் இசைக்கலாம் என்னும் கருத்துப் பெறப்படுகின்றது. கரஹரப்பிரியா மேளத்திற்குள்ள சுத்த நரம்புகள் ஏழினையும் பெற்ற மூர்ச்சனை ‘ஏழு’ எனக் குறிக்கப்பட்டது. அந்தரம் கூடியது ‘எட்டு’ எனவும், காகலி யந்தரம் கூடியது ‘ஒன்பது’ எனவும் குறிக்கப்பட்டன வென்றெண்ண வேண்டியிருக்கிறது. மூன்றுருவங்களிலும் தனித்தனி ஏழு பாலைகளையும் பிறப்பிக்கலாம் இப்பொருளைத் தேவார வியல், 5-ஆம் பிரிவினுள்ளே தெளிவுபடுத்தினோம்.”[2]

“‘தொண்டுபடு திவவின் முண்டக நல்யாழ்’ என ஆசிரிய மாலையினுட் குறிக்கப்பட்ட ஒன்பது நரம்பினையுடைய இசைக்கருவி, குடுமியாமலைக் கல்வெட்டு பொறிக்கப்பட்ட காலத்திலே வழக்கிலிருந்த தென்பதற்கு அக்

---

1. யாழ்நூல்: ஒழிபியல், குடுமியாமலைக் கல்வெட்டு, பக்கம், 338.

2. யாழ்நூல்: ஒழிபியல், பக்கம், 351.

கல்வெட்டே சான்று பகருகின்றது. இக்கருவியிலே அந்தர காந்தாரமும், காகலி நிஷாதமும் அந்தரங்களாக நின்றன வென்பதும் கல்வெட்டினால் அறியப்படுகின்றது."[1]

குடுமியாமலைக்கு அருகிலே திருமய்யம் என்னும் ஊரிலுள்ள மலையக்கோயிலின் அருகில், பல்லவர் காலத்து எழுத்தினால் எழுதப்பட்ட இசைக்கலைச் சாசனம் ஒன்று இருந்தது. பிற்காலத்துப் பாண்டியன் ஒருவன், இந்தச் சாசனத்தை அழித்துப்போட்டு அந்த இடத்தில் தன் சாசனம் ஒன்றை எழுதிவிட்டான். ஆனாலும், அழிக்கப் படாத சில எழுத்துக்கள் இன்றும் காணப்படுகின்றன. அவை,

> பரிவாதினிதா
> கற்கப்படுவது காண்.
>
> ஞ்சொல்லிய புகிற் பருக்கும்நிமி
> முக்கந் நிருவத்துக்கும் உரித்து
>
> குணசேனப் பிரமாணஞ்
> செய்த வித்யா பரிவாதினி கற்.

என்பன. துண்டுதுண்டாக எஞ்சியுள்ள இந்தச் சொற்களி லிருந்து இதன் பொருளைத் தெரிந்துகொள்ள முடியவில்லை. இந்தச் சாசனம் அழிக்கப்பட்டுப் போனபடியினாலே அக் காலத்து இசைக்கலையைப்பற்றிய செய்தியை அறிய முடி யாமலிருக்கிறது. இந்தச் சாசனத்தை அமைத்தவன் மகேந்திரவர்மனே என்று கருதுகின்றனர்.

1. தேவாரவியல், பக்கம், 268.

௧௦. மத்தவிலாசம்

கலைச்செல்வனுகிய மகேந்திரவர்மன் நாடகக் கலையிலும் வல்லவனுக இருந்தான். மத்தவிலாசப் பிரஹஸனம் என்னும் நாடக நூலை இவன் இயற்றியிருப்பதிலிருந்து இதனை யறியலாம். பிரஹஸனம் என்பது நகைச்சுவை நாடகம் என்று பொருள்படும். எனவே, மத்தவிலாசப் பிரஹஸனம் என்பது பைத்தியக்காரனின் நகைச்சுவை நாடகம் என்று பொருள்படுகிறது. உண்மையிலே ஒரு பைத்தியக்காரன் இந்த நாடகத்தில் இடம் பெறுகிறுன். இந்த நாடகம் வடமொழியும் பிராகிருதமொழியும் கலந்து இயற்றப்பட்டது. மகேந்திரவர்மன் இந்த நாடகத்தை எழுதியபடியினுலே இவனுக்கு மத்தவிலாசன் என்னும் சிறப்புப்பெயர் ஏற்பட்டதுபோலும்.[1]

மகேந்திரவர்மன் அமைத்த குகைக்கோயில்களிலே னுடைய சிறப்புப் பெயர்கள் பொறிக்கப்பட்டிருப்பதை முன்னரே அறிந்தோம். அக் குகைக்கோயில்களில் பல்லாவரத்துக் குகைக்கோயிலிலும் திருச்சிராப்பள்ளிக் குகைக் கோயிலிலும் மத்தவிலாச என்னும் பெயர் காணப்படுகிறது. இவன் அமைத்த மாமண்டூர்க் குகைக்கோயிலில் உள்ள இவன் காலத்துச் சாசனத்தில் மத்தவிலாஸாதிபதம் ப்ரஹஸ(ந) என்று எழுதப்பட்டிருக்கிறது. இதனுல் இவன் மத்தவிலாசப் பிரஹஸனம் என்னும் நூலை இயற்றினுன் என்பது உறுதியாகிறது.

---

1. மகேந்திரவர்மன் பகவதஜ்ஜுகம் என்னும் வடமொழிப் பிரகசன நூலையும் இயற்றினுன் என்று சிலர் கருதுகின்றனர். பகவதஜ்ஜுகத்தை மகேந்திரவர்மன் எழுதினுன் என்பதற்குச் சான்று இல்லை. அந்நூலை யார் இயற்றினுர் என்பதே தெரியவில்லை. மகேந்திரவர்மன் அந்நூலை இயற்றியிருந்தால், பகவதஜ்ஜுகன் என்னும் சிறப்புப்பெயர் அவனுக்கு வழங்கியிருக்கும்; மத்தவிலாசம் இயற்றியபடியால் மத்தவிலாசன் என்னும் பெயர் பெற்றதுபோல. ஆகவே, பகவதஜ்ஜுகம் மகேந்திரவர்மனுல் இயற்றப்பட்டதல்ல என்று தெரிகிறது.

மத்தவிலாசப் பிரஹசனம் என்னும் நூல் இப்போது நமக்குக் கிடைத்திருக்கிறது. ஆனால், இடைக்காலத்திலே இந்த நூல் தமிழ்நாட்டிலே மறைந்திருந்து மலையாள நாட்டிலே அஞ்ஞாதவாசம் செய்திருந்தது. வெகுகாலம் சென்றபிறகு இந்நூல் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டு 1917-இல் "திருவனந்தபுரம் சமஸ்கிருத வெளியீடு" வரிசையில் ஒன்றாக அச்சிடப்பட்டது.



1. மத்தவிலாஸ 2. மத்தவிலாஸாதிபத ப்ரஹஸ(ந)

தமிழ்நாட்டிலே மகேந்திரவர்மனால் எழுதப்பட்ட இந்த நாடகநூல், பிறந்த நாட்டிலே மறைந்து மலையாள நாட்டிலே போற்றப்பட்டிருந்த காரணம் என்ன?

இடைக்காலத்திலே மலையாளநாட்டு அரசன் ஒருவன் தொண்டமண்டலத்தைக் கைப்பற்றி, காஞ்சிபுரத்தைத் தலைநகரமாகக் கொண்டு அரசாண்டான். மலையாள மன்னன் காஞ்சிபுரத்தில் இருந்து அரசாண்டதற்கு அறிகுறியாக இன்னும் காஞ்சிபுரத்தில் மலையாளத்தெரு என்று ஒரு தெரு இருக்கிறது. அன்றியும் காஞ்சிபுரத்து வரதராசப்பெருமாள் கோயிலில் மலையாள நாச்சியாருக்கு ஒரு சிறு கோயிலும் உண்டு. மலையாள மன்னன் காஞ்சிபுரத்தில் இருந்தபோது அவன் பரிவாரங்களில் சாக்கியார்களும் இருந்திருக்க வேண்டும். சாக்கியார் என்பவர் பாட்டுப்பாடி கூத்தாடுகிற ஒரு வகுப்பார். கூத்தாடுவதையே தமது தொழிலாகவுடைய இவர்கள் இன்றும்

மலையாள நாட்டில் உள்ளனர். சிலப்பதிகாரத்திலே[1] சேரன் செங்குட்டுவன் அவையிலே பறையூர் கூத்தச்சாக்கையன் என்பவன் கொட்டிச் சேதம் (கொடுகொட்டி) என்னும் கூத்தை ஆடினான் என்று படிக்கிறோம். ஆகவே, கூத்தாடும் சாக்கையர் (சாக்கியர்) இரண்டாயிரம் ஆண்டுகளாகச் சேரநாட்டில் இருந்துவருகிறார்கள் என்பது தெரிகிறது. காஞ்சிபுரத்திலே அரசாண்ட மலையாள அரசனுடைய சபையிலே இருந்த சாக்கியர்கள், முற்காலத்திலே காஞ்சிபுரத்திலே மகேந்திரவர்மன் இயற்றிய மத்தவிலாசப் பிரஹஸனத்தைப் படித்து, அதன் பெருமையையறிந்து அதனைப் போற்றிவைத்தனர் போலும். காஞ்சிபுரத்தில் மலையாள அரசன் நெடுங்காலம் அரசாளவில்லை. மலையாள அரசன் ஆட்சி முடிவடைந்த பிறகு சாக்கியர்கள் தமது சொந்த மலையாள நாட்டிற்குச் சென்றபோது இந்நூலையும் தங்களுடன் கொண்டுபோய்ப் போற்றிவைத்திருக்கவேண்டும். தமிழ்நாட்டில் எக்காரணத்தாலோ இந்நூல் மறைந்துவிட்டது. இவ்வாறு நெடுங்காலமாக இடைக்காலத்தில் மறைந்துகிடந்த மத்தவிலாசம் மேலே கூறியபடி மலையாள தேசத்தில் கண்டுபிடிக்கப்பட்டு 1917-இல் அச்சிட்டு வெளிப்படுத்தப்பட்டது.[2]

மகேந்திர விக்ரமவர்மன் இயற்றிய மத்தவிலாசப் பிரஹஸனத்தை பார்னெட் என்பவர் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்திருக்கிறார்.[3]

---

1. சிலம்பு: நடுகற்காதை, 67-77.

2. 'மத்தவிலாசம் கூத்து' என்னும் ஒரு நூல் மலையாள மொழியில் உண்டு என்று திரு. ஆர். நாராயணப் பணிக்கர் அவர்கள் தாம் எழுதிய கேரளபாஷா ஸாஹித்ய சரித்திரம் II என்னும் நூலில் எழுதியிருக்கிறார். கூத்தாடுவதையே தொழிலாகவுடைய சாக்கியர்களின் உபயோகத்திற்காக இந்நூல் எழுதப்பட்டதாகத் தெரிகிறது. இந்நூலைப்பற்றி வேறு செய்திகள் தெரியவில்லை. பெயர் ஒற்றுமையைக்கொண்டு இந்நூல், மகேந்திரவர்மன் இயற்றிய மத்தவிலாசப் பிரஹஸனத்தின் வழிநூலாக இருக்குமோ என்று ஐயம் உண்டாகிறது.

3. Bulletin of the Oriental Studies, London Institution Vol. V.

மகேந்திரவர்மன் வரலாற்றையும் அவன் அமைத்த சிற்பங்களையும் ஆராய்கிற நாம் அவனுடைய மத்தவிலாச நாடகத்தையும் படிக்கவேண்டுவது கடமையாகும். ஆகவே, அதனை இங்குத் தமிழில் மொழிபெயர்த்துத் தருகிறோம். இதனைத் தமிழில் மொழிபெயர்க்கும்போது எனக்குப் பெரிதும் உதவிசெய்தவர் கும்பகோணம் அரசாங்கக் கல்லூரிப் பேராசிரியராகவும் தத்துவநூல் பேராசிரியராகவும் இருந்து இப்போது ஓய்வுபெற்றுள்ள இராவ்பகதூர் ஏ. சக்கரவர்த்தி நயினார் எம். ஏ, அவர்கள். இப்பெரியாருக்கு நன்றி கூறுகிறேன்.

இந்த நகைச்சுவை நாடக நூலிலே, மகேந்திரவர்மன் காலத்தில் காஞ்சிபுரத்தில் இருந்த காபாலிகம், பாசுபதம், பௌத்தம், சமணம் என்னும் மதங்களைப்பற்றிய செய்தியை அறியலாம். மேலும், இந்நூலின் இடையிடையே மகேந்திரவர்மனுடைய சிறப்புப் பெயர்களான **அவனிபாஜனன், மத்தவிலாசன், குணபரன், சத்ருமல்லன்** முதலிய பெயர்களையும் காணலாம்.

மத்தவிலாச நாடகம்

[நாந்தி பாடியவுடன் சூத்திரதாரர் அரங்கத்திற்கு வருகிறார்]

சூத்திரதாரர்: பேச்சு, ஆடல், உடை, உருவம், குணம், மெய்ப்பாடு இவைகளைத் தன்னிடத்தே கொண்டுள்ள, திப்பியனாகிய காபாலியின் தாண்டவம், மூவுலகத்திலும் போற்றப்படுகின்றது. இத் தாண்டவத்தைக் காண்பவனும் அக் காபாலியே. அவனுடைய அளவு கடந்த அகண்ட அருளானது இந்த உலகமாகிய பாத்திரத்தில்[1] பரந்து நிறைவதாக.

---

1. உலகமாகிய பாத்திரத்தில் நிறையக்கடவது என்னும் பொருள் உள்ள **வியாப்தாவனி பாஜனம்** என்று மூல நூலில் கூறப்பட்டுள்ளது. இதில், இந்நாடக நூலாசிரியராகிய மகேந்திர விக்கிரமவர்மருடைய சிறப்புப் பெயர்களில் ஒன்றான **அவனிபாஜனன்** என்பது ஒலிக்கும்படி இச்சொல் அமைக்கப்பட்டுள்ளது.

புதிய நாடகத்தை நடிக்கும்படிச் சபையோர் எங்களை நியமித்திருக்கிறார்கள். இளையாள்மீது கோபங் கொண்டிருக்கிற என்னுடைய மூத்த மனைவியின் கோபத்தைத் தணிப்பதற்கு இது ஒரு நல்ல வாய்ப்பு. அவளிடம் போகிறேன். (அணியறையை நோக்கி) ஆரியே! இங்கு வருக. [நடிகை வருகிறாள்.]

நடிகை: (சினத்துடன்) ஐயா! யௌவன குணபர மத்த விலாசப் பிரஹசனத்தை[1] என்னிடம் விளையாட வந்து விட்டீரோ?

சூத்திர: ஆமாம். அதுதான்.

நடிகை: அப்படியானால், அதை, தாங்கள் யாரிடம் ஆசை கொண்டு இருக்கிறீர்களோ அவளிடம் போய் விளையாடுங்கள்.

சூத்திர: உன்னோடு ஆடும்படித்தான் எனக்குக் கட்டளை.

நடிகை: அப்படி அவள் உமக்குக் கட்டளையிட்டாளோ?

ர: ஆமாம். இந்த ஆட்டத்தில் நீ நடித்தால் சபையோரின் நன்மதிப்பைப் பெறுவாய்.

நடிகை: நன்மதிப்பைப் பெறத்தகுந்தவர் தாங்கள்தான்.

சூத்திர: அது எனக்குத் தகுந்ததுதான். எப்படி என்றால், சபையோர் உன்னுடைய நடிப்பைக் கண்டு மகிழ்ந்து அந்த நன்மதிப்பை எனக்கு அளிப்பார்கள்.

நடிகை: (மகிழ்ச்சியுடன்) அப்படியானால், சபையோரின் அபிமானத்தைப் பெற்றிருக்கிறேன்!

சூத்திர: ஆம். மெய்யாகவே.

---

1. இதில், இந்நாடக நூலாசிரியரான மகேந்திரவிக்ரமவர்மருடைய சிறப்புப் பெயர்களான **மத்தவிலாசன், குணபரன்** என்னும் பெயர்கள் அமைந்துள்ளன. யௌவன குணபர மத்த விலாசப் பிரஹசனம் என்பதற்குக் காளைப் பருவத்திற்கு இயல்பாக உள்ள களியாட்டம் பொருந்திய நகைச்சுவை நாடகம் என்பது பொருள்.

நடிகை : இந்த நல்ல செய்தியைச் சொன்ன தங்களுக்கு என்ன வெகுமதி தருவேன்!

சூத்திர : வெகுமதியைப் பற்றிப்பேசி வீணாகக் காலங் கழிக்க வேண்டாம். இதோ உன்னுடைய இனிய முகத்தைக் காண்கிறேன். மகிழ்ச்சியைக் காட்டுகிற உன்னுடைய கண்களையும், புன்முறுவல் அரும்பும் உன்னுடைய வாயிதழ்களையும் காண்கிறேன். இதை விட வேறு வெகுமதி எனக்கு என்ன வேண்டும்?

நடிகை : இப்போது என்ன ஆட்டம் ஆடப்போகிறீர், ஐயா!

சூத்திர : ஏன், நீதான் முன்னமே சொன்னாயே; மத்த விலாசப் பிரஹஸனம் என்று.

நடிகை : நான் கோபமாகப் பேசியது உண்மையாய் விட்டது! இந் நாடகத்தை இயற்றிய ஆசிரியர் யாரோ?

சூத்திர : சொல்லுகிறேன் கேள். பல்லவகுலமாகிய உலகத்திற்கு மேருமலை போன்றவரும், எல்லா நாட்டரசர்களையும் வென்று புகழ்கொண்டவரும், ஆகண்டலனை (இந்திரனை)ப் போன்ற ஆற்றலையுடையவரும், தமது செல்வப் பெருமைக்கேற்ப கொடைப் பெருமையினால் மகாராஜனையும் (குபேரன்) சிறியவனாகச் செய்தவரும் ஆகிய ஸ்ரீநரசிம்மவிஷ்ணு வர்மருடைய திருக்குமாரர் ஆவர் இந்நூலாசிரியர். இவ்வாசிரியர் குணங்களைக் கூறுகிறேன் கேள். ஆறு பகையை வென்றவர்; பிறருக்கு நன்மை செய்கிற அருள் குணத்தினால் ஐம்பெரும் பூதங்களுக்குச் சமானம் ஆனவர். இவருடைய பெயர் ஸ்ரீமகேந்திர விக்கிரமவர்மர் என்பது.

அன்றியும், கற்பாந்த காலத்தின் இறுதியில் உலகம் முதலிய எல்லாப் பொருள்களும் ஆதி புருஷனிடம் ஒடுங்குவது போல, அறிவு, ஈகை, அருள், உயர்வு, ஒளி, கலைவன்மை, வினயம் முதலிய நற்குணங்கள் எல்லாம், இக் கலிகாலத்திலே புகலிடம் கிடைக்

காமல் அலைந்துதேடி, கடைசியாக இவரே தமக்குரிய புகலிடம் எனக் கண்டு, இவரிடம் குடிபுகுந்தன.

மேலும், உயர்தரமாகிய நகைச்சுவையை உண்டாக்கும் சொற்களாகிய உயர்ந்த இரத்தினங்களும், சிறந்த கவிதைகளும் இவரிடத்திலிருந்து உண்டா

நடிகை : இந்தப் புதிய நாடகத்தை உடனே நடிக்க வேண்டும். இனியும் தாமதம் ஏன் ?

திர : இசைப் பாட்டுக்கள்தான் என்னுடைய செல்வமும் வாழ்வும். ஆனால், இப்போது இக் கவிஞரின் ... என் மனம் அடங்கு

(அணியறையிலிருந்து ஒரு குரல்) : அன்பே, தேவசோமா !

திர : கபால பாத்திரத்தைத் தனது பெரும் புகழாக உடைய அந்தக் காபாலிகன், குடித்து வெறித்துக் களியாட்டம் தெளிந்து அதோ, குமரி ஒருத்தியுடன் வருகிறான். [போகிறார்கள்.]

சத்தியசோமன்—சைவசமயத்தைச் சேர்ந்த ஒரு காபாலிகன்.
தேவசோமை—சத்திய சோமனுடைய மனைவி
நாகசேனன்—ஒரு பௌத்த பிக்கு
பப்ருகல்பன்—சைவசமயத்தைச் சேர்ந்த ஒரு பாசுபதன். பைத்தியக்காரன்.
இடம் : காஞ்சிமா நகரம்.

[காபாலிகன் சத்திய சோமன், தன் மனைவி தேவ சோமையுடன் குடித்து மயங்கி வருகிறான்.]

கபாலி : கண்ணே தேவசோமா ! தபசு செய்வதால் நினைத்த உருவத்தை அமைத்துக் கொள்ளலாம் என்பது உண்மைதான். நீ கொண்டுள்ள பரமவிரதத்தின்[1]

1. பரம விரதம் என்பது இங்கே காபாலிக விரதத்தைக்

பலனாக உன் உருவத்தையே மாற்றிக்கொண்டு கட்டழகியாய்க் காணப்படுகிறாய்!

ல சிறு வியர்வைத் துளிகள் அரும்ப, புருவங்கள் வில்லைப்போல் வளைந்து நெகிழ, காரணமின்றிச் சிரிப்பதும், வார்த்தைகள் குழறுவதும், கண்கள் சிவந்திருப்பதும், கருவிழிகள் சுழல்வதும், கூந்தல் அவிழ்ந்திருப்பதும், கழுத்திலுள்ள மாலைகள் நெகிழ்வதும் கண்கொள்ளாக் காட்சியாக க்

தேவசோமை: நான் குடித்திருக்கிறதாகவா சொல்லுகிறீர்?

காபாலி: அன்பே, என்ன சொன்னாய்?

தேவ: நான் ஒன்றும் சொல்லவில்லையே!

காபாலி: அப்படியானால், நான் குடித்திருக்கிறேனா?

தேவ: ஐயா, தரை சுற்றுகிறது; பூமி சுழல்கிறது. நான் விழுந்து விடுவேன்போல் இருக்கிறது. என்னைப் பிடித்துக் கொள்ளும்.

காபாலி: இதோ பிடித்துக் கொள்கிறேன், அன்பே! (அவளைப் பிடிக்கப்போய்க் குடி மயக்கத்தினால் கீழே விழுகிறான்) [1]சோமதேவி! என் கண்ணே! என்மேல் உனக்குக் கோபமா? உன்னைப் பிடிக்க வரும்போது ஏன் விலகிப் போகிறாய்.

தேவ: ஆமாம். சோமதேவிக்கு உன்மேல் கோபந்தான். அவள் முன்பு தலைவணங்கி சாந்தப்படுத்த முயன்றாலும் அவள் உன்னைவிட்டு விலகிப்போகிறாள்!

காபாலி: மெய்தான். நீ சோமதேவிதான். (யோசித்து)

சோமை.

1. குடி மயக்கத்தால், தேவசோமை என்பதற்குப் பதிலாக, சோமதேவி என்று வேறொருத்தி பெயரைக் கூறுகிறான். அதனால், தேவசோமை கோபிக்கிறாள்.

தேவ: சோமதேவிமேல் உமக்கு ஆசை அதிகம், ஐயா அதனால்தான் என்னிடம் பேசும்போதும் அவள் பெயரைச் சொல்லி அழைக்கிறீர்..

காபாலி: என்னுடைய குடிமயக்கத்தினால், கண்ணே! வார்த்தை தவறி வந்துவிட்டது, கோபப்படாதே.

தேவ: நல்லவேளை. நீர் அறிந்து, வேண்டுமென்றே சொல்ல ...

காபாலி: குடிப்பழக்கம், என்னையறியாமல் ஏதேதோ உளறும்படிச் செய்கிறது! நல்லது. இன்று முதல் குடிப்பதைவிட்டு விடுகிறேன்.

தேவ: ஐயாவே! என்பொருட்டு உம்முடைய பரமவிரதத்தைத் தவறவிடவேண்டாம்.

காபாலி: (மகிழ்ச்சிபொங்க அவளைத் தூக்கி நிறுத்தித் தழுவிக் கொள்கிறான்.) தருணை, தருணை! நமசிவாய! அன்பே, விசித்திரமான காபாலிக வேடம் பூண்டு, மனதார மதுவை அருந்தி, கருவிழி மங்கையர் முகத்தைக் கண்டுகொண்டிருந்தால் அதுவே மோக்ஷத்திற்குச் செல்லும் நல்வழியாகும் என்று திருவாய் மலர்ந்தருளிய சூலம் ஏந்திய எம்பெருமான் நீடூழி வாழ்க!

தேவ: நீர் இப்படி எல்லாம் பேசக்கூடாது. ஆருகதர் (ஜைனர்) மோக்ஷத்திற்கு வேறுவழி காட்டுகிறார்கள்.

காபாலி: ஆமாம், அன்பே! அவர்கள் யார் தெரியுமா? காரணத்தைப் பொறுத்தது காரியம் என்று கூறுகிறவர்கள்; இன்பம், துன்பத்தின் காரியம் என்று கூறுகிறவர்கள். ஆகையால், அவர்கள் நிந்திக்கத் தக்கவர்கள்.

தேவ: பாபம் சாந்தியாகட்டும்!

காபாலி: சாந்தி! சாந்தி! ஐம்புலன்களை அடக்கி, பிரமசரிய விரதங் காத்துத் தலைமயிரைப் பிடுங்கி எடுத்து, அழுக்

கடைந்த உடம்பில் அழுக்குக் கந்தைகளை உடுத்து, உண்பதற்குத் தனியாக ஒரு நேரத்தை ஏற்படுத்திக் கொண்டு உயிரை வாட்டித் துன்புறுத்துகிற அவர்கள் பெயரை நிந்தனையாகச் சொல்லுவதும் மகா பாபம். அப் பாஷண்டிகளின் பெயரைக் கூறிய என்னுடைய நாக்கு குற்றப்பட்டுவிட்டது. ஆகையால், கள்ளினால் கழுவிச் சுத்தப்படுத்த வேண்டும்.

தேவ: அப்படியானால், இன்னொரு கள்ளுக்கடைக்குப் போகலாம்; வாரும்.

காபாலி: அப்படியே செய்வோம். வா, போகலாம். (போகிறார்கள்.) ஆகா! காஞ்சிமா நகரத்தின் அழகே அழகு. கோயில் கோபுரங்களின் மேல் படிந்துள்ள மேகங்களினால்[1] உண்டாகும் இடிமுழக்கம், முரசுகள் ஒலிக்கிற முழக்கத்தோடு மாறுபட்டொலிக்கிறது! மாலைகளும் பூச் செண்டுகளும் நிறைந்த பூக்கடைகள் இளவேனிற் காலத்தைக் காட்டுவதுபோல் இருக்கின்றன! மங்கையரின் சிலம்பொலி காமதேவனுடைய வெற்றி முழக்கத்தின் ஆரவாரம்போல் இருக்கிறது!

தேவ: ஐயா! காஞ்சிமாநகரம் வாருணி[2] தேவியைப்போல இனிமையாகக் காணப்படுகிறது!

காபாலி: ஆமாம்! ஆமாம்! அதோ, அந்தக் கள்ளுக்கடையைப் பார்! அது யாகசாலையைப்போன்று எவ்வளவு அழகாகக் காணப்படுகிறது! கடையின் பெயரைத் தாங்கிநிற்கும் கம்பம், யாகசாலையில் உள்ள யூபஸ்தம்பம்போல் காணப்படுகிறது. மதுபானம் சோமபானம்

1. காஞ்சியில் கோபுரங்களின்மேலே தவழும் மேகங்களை மகேந்திரவர்மன் கூறுவதுபோலவே, இவன் காலத்தில் இருந்த திருநாவுக்கரசரும் காஞ்சியில் கருமேகங்கள் தவழ்ந்ததைக் குறிப்பிடுகிறார். "கருமுகில் தவழுமாடக் கச்சியேகம்பனீரே" என்பது அவர் வாக்கு. (அப்பர்: திருவேகம்பம் நேரிசை 2.)

2. வாருணி என்பது, மயக்கந்தரும் மதுபானங்களுக்கும், வருணதேவனுடைய மகளுக்கும் பெயர்.

போலக் காணப்படுகிறது. கள்குடிப்போர், யாகசாலையில் உள்ள பிராமணர் போலக் காணப்படுகிறார்கள். கள் கலயங்கள் சோமபானத்தை வைக்கும் பாத்திரங்கள்போல் இருக்கின்றன. அங்கு விற்கப்படும் சுவையுள்ள மச்சமாமிசங்கள், யாகத்தில் இடப்படும் ஆகுதிகள் போலக் காணப்படுகின்றன. குடிகாரர்களின் வெறிப்பேச்சு, யஜுர் வேதத்தின் யஜுஸைப் போல் இருக்கிறது. அவர்கள் பாடும் பாட்டுகள் சாமகானத்தை ஒத்திருக்கின்றன. கள்ளை முகந்து எடுக்கும் அகப்பை, யாகத்தீயில் நெய் சொரியும் கரண்டி (தர்வி) போல இருக்கிறது. குடிவேட்கையே யாகாக்கினி போலும். கள்ளுக்கடைக்காரன், யாகத்தை நடத்தும் யஜமானன் போலக் காணப்படு

வ: ஆமாம்! அங்குச் சென்று நாம் லவசமாகப் பெறுகிற மதுபானம், யாகத்தில் உ
யை ஒத்திருக்கிறது!

காபாலி: ஓகோ! குடிகாரர் ஆடும் கூத்து எவ்வளவு அழகு! கொட்டு முழக்கத்திற்கு ஒத்தாற்போல ஆடியும் அபிநயித்தும் பேசியும் முகஜாடை காட்டியும் ஆடுவது, எவ்வளவு நேர்த்தி! மேலாடையை ஒரு கையினால் உயரத்தூக்கிப் பிடித்து, அவிழ்ந்து விழுகிற அரையாடையை மற்றொருகையில் பிடிக்கும்போது, தாளம் தவறிவிடுகிறது. கழுத்தில் அணிந்துள்ள மாலைகள்

தேவ: ஐயா, நீர் ஒரு நல்ல ரசிகர்!

காபாலி: கிண்ணங்களில் பெய்யப்படும் வாருணிதேவி,[1] மங்கை யொருத்தித் தன் ஆடை அணிகளைக் கழற்றி வைத்துவிட்டதை ஒக்கும்; ஊடல் தீர்ந்த தலைவன் தலைவியரை ஒக்கும்; வாலிப வயதின் வளமையை ஒக்கும்; வாழ்க்கையின் விளையாட்டையொக்கும்.

1. கள், மதுபானம்.

அன்பே, தேவசோமா! முன்னொரு காலத்திலே, சிவபெருமான் தமது நெற்றிக் கண்ணினால் காமன் உடலை எரித்துச் சாம்பலாக்கினார் என்று கூறுவது பொய்க்கதையே. அந்தக் காமனுடைய உடம்பு, அனலினால் வெண்ணெய்போல் உருகி நமது உள்ளத்தில் பாய்ந்து காமமாக

தேவ: ஆமாம் ஐயா. நீர் சொல்லுவது முழுவதும் சரியே. உலகத்துக்கு நல்லதையே செய்கிற சிவபெருமான், உலகத்தை ஒருபோதும் அழிக்கமாட்டார்.

[ஒருவரை யொருவர் கன்னத்தில் தட்டிக்கொள்கிறார்கள்.]

காபாலி: அம்மணீ! பிக்ஷாந்தேஹி!

[உள்ளிருந்து ஒரு குரல்: இதோ இதை வாங்கிக்கொள், ஐயா.]

காபாலி: இதோ பெற்றுக்கொள்கிறேன். தேவசோமா! என்னுடைய கபால பாத்திரம் எங்கே?

தேவ: அதைக் காணவில்லையே!

காபாலி: (யோசித்து) அந்தக் கள்ளுக்கடையில் அதை மறந்து வைத்துவிட்டோம் போலிருக்கிறது, நல்லது. அங்கே போய்ப் பார்ப்போம்

தேவ: அன்போடு அளிக்கும் பிச்சையை வாங்காமலிருப்பது முறையல்லவே. இப்போது என்ன செய்வது?[1]

காபாலி: 'ஆபத்தர்ம'ப்படிச் செய். இந்த மாட்டுக் கொம்பில் வாங்கிக்கொள்.

தேவ: அப்படியே செய்கிறேன்.

[பிச்சையை மாட்டுக் கொம்பில் பெற்றுக் கொள்கிறாள் பிறகு, இருவரும் சென்று கபால பாத்திரத்தைத் தேடுகிறார்கள்.]

---

1. காபாலிகர், பிச்சையைக் கபால பாத்திரத்தில் (மண்டை ஓட்டில்) பெறவேண்டும் என்பது மரபு. கபாலம் காணமற் போய்விட்டபடியால், தேவசோமை கவலைப்படுகிறாள்.

காபாலி: இங்கேயும் அதைக் காணேமே. எங்குபோய் விட்டது! (ஆத்திரத்துடன்) ஓ! மகேஸ்வரர்களே, மகேஸ்வரர்களே! என்னுடைய கபால பாத்திரத்தைக் கண்டீர்களா? மகேஸ்வரர்கள் என்ன சொல்லுகிறார்கள்? 'இல்லை. நாங்கள் பார்க்கவில்லை' என்று சொல்லுகிறார்கள்? அந்தோ! நான் கெட்டேன். என்னுடைய தூய்மையான காபாலிகவிரதம் அழிந்து கபாலபாத்திரம் இல்லாமல், நான் எப்படி காபாலிகனா ஆவேன? நான உண்ணவும குடிக்கவும அந்தத் தூய கபாலபாத்திரம் எவ்வளவு உதவியாக இருந்தது! அப் பாத்திரம் போய்விட்டபடியால், ஒரு நல்ல நண்பனை இழந்துவிட்டதுபோல், என்னுடைய மனம் கலங்குகிறது. (தரையில் விழுந்து தலையில் அடித்துக்கொள்கிறான்.) ஆ! தெரிந்தது! தெரிந்தது! கபாலபாத்திரம், காபாலிக விரதத்துக்கு 'லக்ஷண மாத்திரம்'[1] தான். கபால பாத்திரத்தை இழந்துவிட்டபடியினாலேயே என் காபாலிக விரதத்தை நான் இழந்து விடவில்லை. [எழுந்திருக்கிறான்.]

தேவ: அந்தக் கபால பாத்திரத்தை யார் எடுத்திருப்பார்கள், ஐயா?

காபாலி: அதில், வறுத்த இறைச்சியை வைத்திருந்தபடியால், அதை ஒரு நாயாவது எடுத்திருக்க வேண்டும்; அல்லது ஒரு பௌத்த பிக்ஷுவாவது எடுத்திருக்க வேண்டும்.

தேவ: அப்படியானால், இந்தக் காஞ்சிமா நகரம் முழுவதும் ...ப் பார்த்து அதைக் கண்டுபிடிப்போம்.

[இருவரும் நடந்து செல்கிறார்கள். ஒரு பௌத்த பிக்ஷு தன் கையில் ஒரு மண்டையை[2] ஏந்தி, அதைத் மேலாடையில் மறைத்துக்கொண்டு வருகிறான்.]

1. காபாலிகன் தர்க்க சாஸ்திரத்தைத் தனக்குக் கொண்டு சமாதானம் அடைகிறான்.

2. மண்டை என்பது மண்டை ஓடு அல்ல. மரம் அல்லது மண்ணால் செய்யப்பட்ட பாத்திரம். இதற்கு மண்டை என்று

பௌ. பிக்கு: ஆகா! நம்முடைய உபாசக அன்பன் தனதாச செட்டியின் தர்மம், மற்ற எல்லாருடைய தர்மங்களைவிட மேம்பட்டது. அவன் எனக்குக் கொடுத்த இந்த உணவு, பலவித மச்சமாமிசக் கறி வகைகளுடன் மணமும் சுவையும் உள்ளது. இப்போது இராச விகாரைக்குப்[1] போகவேண்டும்.

[தனக்குள் நடந்துகொண்டே]

ஆ! பகவான் ததாகதருடைய (புத்தருடைய) கருணையே கருணை. என்னைப்போன்ற, பௌத்த சங்கத்தைச் சேர்ந்த பிக்குகள் வசிக்க நல்ல விகாரைகளையும், படுத்துத் தூங்க நல்ல படுக்கைகளையும் அனுமதித்து இருப்பதோடு, முற்பகலில் வயிறாரச் சாப்பிடவும் பிற்பகலில் சுவையும் மணமும் உள்ள பானங்களைப் பருகவும், ஐந்துவகை நறுமணமுள்ள தாம்பூலங்களைத் தரிக்கவும், மெல்லிய ஆடைகளை யுடுக்கவும் அவர் அனுமதித்துள்ளார். ஆனால், பெண் மகளிரையும் மதுபானங்களையும், கூடாது என்று அவர் ஏன் விலக்கி வைத்தார்? எல்லாம் அறிந்த பகவான் இவை இரண்டையும் தள்ளிவைத்திருப்பாரா? என்போன்ற வாலிபப் பிக்குகளிடத்தில் பொறாமையும் வெறுப்புங் கொண்ட அந்தக் கிழப் பிக்குகள், பெண்ணையும் கள்ளையும் உபயோகிக்கலாம் என்று பகவான் எழுதிவைத்ததை, மறைத்துவிட்டார்கள் என்று நினைக்கிறேன். மாற்றி எழுதப்படாத, திரிபிடகத்தின் மூலநூல் எங்கே கிடைக்கும்! அப்படிப்பட்ட நூல் ஒன்று கிடைக்குமானால், புத்தருடைய முழுப் போதனையையும் உலகத்துக்கு
பௌத்த சங்கத்துக்கு நன்மை

[நடந்துசெல்கிறான்]

பெயர். பௌத்த பிக்ஷுக்கள் இப்பாத்திரத்தில் பிச்சை பெற வேண்டும் என்பது மரபு.

1. இராசவிகாரை என்பது காஞ்சிபுரத்தில் இருந்த செல்வ மிக்க பௌத்த மடம்.

தேவ: அதோ பார் ...ப்பார்த்துக் கொண்டு, உடம்பை அடக்கி ஒடுக்கி, நல்லவர்கள் நிறைந்த ...ந்தத் தெருவிலே, வலப்பக்கமும் ... பக்கமும் பார்த்துக்கொண்டு, பயந்தவன்போல அந்த ...ள் வேகமாக நடக்கிறான்.

காபாலி: ...மாம்! ஆமாம்! அவன் கையில் எதையோ மேலாடையினால் மறைத்து வைத்துக்கொண்டிருக் ...ரன்.

தேவ: அப்படியானால் அவனைப் பிடித்து நிறுத்தி, என்ன வைத்திருக்கிறான் என்பதைப் பார்த்துவிடுவோம்.

காபாலி: அப்படித்தான் செய்வோம். (வேகமாக நடந்து போய்) ஓய்! பௌத்த சந்நியாசி, நில் அங்கே.

பௌ. பிக்கு: யார் என்னை இவ்வாறு அழைப்பது! (நின்று திரும்பிப்பார்த்து) ஓ! ஏகம்பத்தில்[1] வசிக்கிற அந்தப் போக்கிரிக் காபாலிகன்! நல்லது, நான் இந்தக் குடிகாரப்பயலின் கேலிக்கூத்துக்கு ஆளாகக்கூடாது. (வேகமாக நடக்கிறான்.)

காபாலி: பார்த்தாயா, தேவசோமா! என்னுடைய கபால பாத்திரம் அகப்பட்டுவிட்டது. என்னைக் கண்டவுடன், அந்தப்பயல் அச்சங்கொண்டு வேகமாக நடந்து தப்பித்துக்கொள்ளப் பார்ப்பதிலிருந்து பாத்திரத்தைத் திருடினவன் அவன்தான் என்பது உறுதியாகிறது. (ஓடிச்சென்று பிக்குவை வழிமறிக்கிறான்.) திருட்டுப்பயலே! எங்கே போவாய்?

பௌ. பிக்கு: இல்லை. காபாலிக சகோதரா! இப்படி எல்லாம் பேசுவது சரியல்ல. (தனக்குள்) எவ்வளவு அழகுள்ள நங்கை இவள்!

காபாலி: ய்! பிக்ஷு. உன் கையில் இருப்பதைக் காட். உன் சீவரப் போர்வையில் பொதிந்து வைத்திருப்பதை நான் பார்க்கவேண்டும்.

பௌ. பிக்கு: பார்க்க அதில் என்ன இருக்கிறது? அது ஒரு மண்டை. என்னுடைய பிக்ஷைப் பாத்திரம்.

காபாலி: அதைத்தான் நான் பார்க்கவேண்டுமென்கிறேன்.

பௌ. பிக்கு: இல்லை. சகோதர! அப்படிச்சொல்லாதே. அதை நாங்கள் மூடி மறைத்துக்கொண்டு போக வேண்டும். உனக்கும் இது தெரிந்ததுதானே.

காபாலி: ஆம்; பொருள்களை இப்படி மறைத்துக்கொண்டு போவதற்காகத்தான் புத்தர், நீண்ட சீவரம் தரித்துக் கொள்ளச் சொன்னார்.

பௌ. பிக்கு: ஆமாம்; உண்மைதான். நீர் சொல்லுவது யம.

காபாலி: அது சம்விரதிசத்தியம்.[1] நான் பரமார்த்த சத்தியத்தை அறிய வேண்டும்.

பௌ. பிக்கு: நன்று, நன்று. உன்னுடைய கேலிப் பேச்சுப் போதும். பிக்ஷைநேரம் கடந்து விடுகிறது நான் போகவேண்டும். [அப்பால் நடக்கிறான்]

காபாலி: கள்ளப்பயலே. எங்கே போகிறாய்? என் மண்டைப்பாத்திரத்தைக் கொடுத்துவிட்டுப் போ.

[பிக்கு போர்த்துள்ள சீவர ஆடையின் முன்தானையைப் பிடித்துக் கொள்கிறான் காபாலிகன்.]

பௌ. பிக்கு: புத்தருக்கு வணக்கம்.

---

1. சம்விரதிசத்தியம், பரமார்த்தசத்தியம் என்பன, பௌத்தரில் ஒரு சாராருடைய தத்துவ சாத்திரத்தில் கூறப் படுவன. காபாலிகன் இந்தச் சொற்களைக் கூறிப் பௌத்த பிக்குவைக் கேலி செய்கிறான்.

காபாலி: கரவடனுக்கு வணக்கம் என்று சொல்லு. களவுநூலை எழுதினவன் அவன். புத்தர் கரவடனுக்கும் மேலானவர். பிராமணர் தூங்கும்போது, மகாபாரதத்திலிருந்தும் வேதாந்தத்திலிருந்தும் திருடி நூல் எழுதவில்லையா உன்னுடைய புத்தர்[1]

பௌ. பிக்கு: பாவம் சாந்தி. பாவம் சாந்தி.

காபாலி: இவ்வளவு கைதேர்ந்த பிக்குவின் பாவம் சாந்தியாகாமல் இருக்குமா?

தேவ: ஐயா! நீர் களைப்படைந்திருக்கிறீர். அந்தக் கபால பாத்திரம் நல்லபடியாகக் கிடைக்கப் போகிறதில்லை. ஆகையால், இந்த மாட்டுக்கொம்பில் இருக்கிற கள்ளைக் குடித்து, களைப்புத் தீர்ந்தபிறகு, அவருடன் வாதம் செய்யுங்கள்.

காபாலி: சரி. அப்படியே ஆகட்டும். (தேவசோமை மாட்டுக் கொம்பிலுள்ள மதுவைக் கொடுக்கிறாள். காபாலிகன் வாங்கிக் குடித்துவிட்டு) நீயும் கொஞ்சம் குடி. நீயும் களைப்படைந்திருக்கிறாய். (அவளிடம் கொடுக்கிறான்.)

தேவ: அப்படியே. [அவளும் குடிக்கிறாள்.]

காபாலி: இவர் நமக்குத் தீங்கு செய்தவர்தான். ஆனாலும், சமயநூல், எல்லோருக்கும் பகிர்ந்துகொடுக்கும்படி கட்டளையிடுகிறது. ஆகையால் இந்தச் சந்நியாசிக்கும் அதில் கொஞ்சம் கொடு.

தேவ: அப்படியே. ஐயா! இதை வாங்கிக்கொள்ளுங்கள்.

---

1. கரவடன் என்பவர் களவுநூலை எழுதியவர் என்று கூறப்படுகிறார். இவர் உண்மையில் இருந்தவர் அல்லர் என்றும் கற்பனைப் பெயர் என்றும், அறிஞர்கள் கருதுகிறார்கள். வேதாந்தம் என்பது உபநிஷத்துக்கள். உபநிஷத்தில் உள்ள கருத்துக்கள் சில புத்தருடைய உபதேசத்திலும் உள்ளன. காபாலிகன் கூறுவதுபோல மகாபாரதத்திலிருந்து புத்தர் எதையும் எடுத்துக்கொண்டதாகத் தெரியவில்லை.

பௌ. பிக்ஷு : (தனக்குள்) நம்முடைய அதிர்ஷ்டம், நல்ல மதுபானம் கிடைக்கிறது! ஆனால் யாரேனும் பார்த்து விட்டால் என்னசெய்வது? (அவளிடம்) அம்மணி! அப்படிச் சொல்லாதே. எங்களுக்கு அது தகுந்த தல்ல. [நாக்கைச் சப்பிக்கொள்கிறான்]

தேவ : போமையா, போம். உமக்கு இவ்வளவு நல்ல அதிர்ஷ்டம் எப்போ கிடைக்கப் போகிறது.

காபாலி : தேவசோமா! அவருக்கு ல பொங்கி வாய் ஊறுகிறது. ஆகையால், பேச்சுக் குழறுகிறது.

பௌ. பிக்ஷு : உங்களுக்கு இன்னும் என்மேல் இரக்கம் உண்டாகவில்லையா!

காபாலி : எனக்கு இரக்கம் இருந்தால் எப்படி வீதராக னாக[1] இருக்க முடியும்?

பௌ. பிக்ஷு : வீதராகராக இருப்பவர் கோபம் இல்லாதவ ராகவும் 5க்க வேண்டுமே.

காபாலி : என்னுடைய பொருளைக் கொடுத்துவிட்டால், கோபம் இல்லாதவனாக இருப்பேன்.

பௌ பிக்ஷு : உன்னுடைய "பொருள்" என்பதன் பொருள் என்ன?

காபாலி : கபால பாத்திரந்தான்.

பௌ. பிக்ஷு : என்ன! கபாலபாத்திரமா?

காபாலி : "கபால பாத்திரமா?" என்று கேட்கிறார் இவர்! இது இவருக்கு இயற்கைதானே. கண்ணுக்குப் புலப் படும் உண்மைப் பொருள்களை மண், விண், கடல், மலை முதலியவற்றை எல்லாம் மாயை என்றும்

1. வீதராகன் என்பது ஆசையற்றவன் என்று பொருள் படும். புத்தருக்கு வீதராகன் என்ற பெயரும் உண்டு.

மித்தை[1] என்றும் கூறியவரின் வழிவந்த மகன் அல்லவா இவர்? ஆகையால், சிறு மண்டையோட்டையும் "இல்லை" என்று சொல்லி மறைக்க மாட்டாரா?

தேவ: இப்படி எல்லாம் நயமாகப்பேசி நல்லவிதமாகக் கேட்டால் கொடுக்கமாட்டார். அவர் இருக்கிற கபால பாத்திரத்தைப் வாருங்கள்.

காபாலி: ஆமாம்; அதுதான் சரி. அப்படியே செய்கிறேன்.

[பிடுங்கப் பார்க்கிறான்]

பௌ. பிக்கு: எட்டிநில். காபாலிகத் திருட்டுப் பயலே.

[கையால் விலக்கித்தள்ளிக் காலினால் உதைக்கிறான்]

காபாலி: விழுந்து விட்டேனே.

தேவ: தேவடியாள் மகனே! உன்னை உயிரோடு விடுகிறேனா பார்!

[ஓடிப்போய்ப் பிக்குவின் தலையைப் பிடிக்கிறாள். பிக்குவுக்கு மொட்டைத்தலை யாகையால் அவனைப் பிடிக்க முடியாமல் அவளும் கீழே விழுகிறாள்.]

பௌ. பிக்கு: (தனக்குள்) பிக்குகள் தலைமயிரை மழித்து விட வேண்டும் என்று கட்டளையிட்ட புத்தபகவான் திரிகாலஞானி. (உரக்க) எழுந்திரு அம்மணி, எழுந்திரு

[illegible]

1. பழைய தேரவாதப் பௌத்த மதத்தில், கணபங்கம் கூறப்படுகிறதே யன்றி மாயாவாதம் கூறப்படவில்லை. ஆனால், மகாயான பௌத்த மதத்திலே மாயாவாதம் கூறப்படுகிறது. ஏகான்மவாதியான சங்கராச்சாரியார், மகாயான பௌத்த மதத்திலிருந்து மாயாவாதத்தை எடுத்துக்கொண்டார் என்பர்.

காபாலி: பாருங்கள், மகேசுவரர்களே! பாருங்கள், சந்நியாசி என்று சொல்லிக்கொள்ளும் இந்த நாகசேனன் —போக்கிரிப்பயல், என் மனைவியின் கையைப் பிடித்துப் பாணிக்கிரகணம்[1] செய்கிறான்.

பௌ. பிக்கு: இல்லை. சகோதரா! அப்படிச்சொல்லாதே. துன்பத்தில் விழுந்தவர்களைக் கைதூக்கிவிடவேண்டும் என்பது எங்கள் மதக்கட்டளையாகும்.

காபாலி: இதுவும் உங்கள் சர்வஜ்ஞன் (புத்தன்) கட்டளையா? முதலில் விழுந்தவன் நான் அல்லவா? நல்லது, இருக்கட்டும். இப்போ, உன்னுடைய மண்டை ஓடு என் கைக் கபாலபாத்திரமாகப் போகிறது.

[எழுந்து சென்று பிக்குவைத் தாக்குகிறான்.]

பௌ. பிக்கு: ஸோ! துக்கம். தயம்.[2]

காபாலி: பாருங்கள், மகேசுவரர்களே! பாருங்கள்! சந்நியாசி வேடம் பூண்ட இந்தப் போக்கிரிப்பயல் என்னுடைய கபால பாத்திரத்தைத் திருடிக்கொண்டதும் அல்லாமல், கூப்பாடு போட்டு ஓலமிடுகிறான். நல்லது, நானும் ஓலமிடுகிறேன். ஐயகோ! பிராமணர்களுக்கு ஆபத்து, பிராமணர்களுக்கு ஆபத்து.

[இக் கூப்பாட்டைக் கேட்டு ஒரு பாசுபதன் வருகிறான்]

பாசுபதன்: ஓய்! சத்தியசோமரே! எதற்காகக் கூப்பாடு போடுகிறீர்?

காபாலி: ஓ! பப்ருகல்பரே! பாரும். துறவி என்று சொல்லிக்கொள்ளும் இந்தப் போக்கிரிப்பயல், நாக

1. பா ரம செய்கிறான் என்பதற்குக் கையைப் பிடிக்கிறான் என்றும், மனைவியாக்கிக் கொள்கிறான் என்றும் இரண்டு பொருள்கள் உள்ளன.

2. அநித்தியம், துக்கம், அநாத்மம் என்னும் பௌத்த மதக் கொள்கையை ஈண்டு நூலாசிரியர் பிக்குவின் வாயிலாக ஏளனம் செய்கிறார்.

என்னுடைய கபாலபாத்திரத்தைத் திருடிக் கொண்டு கொடுக்கமாட்டேன் என்கிறான்.

பாசு: (தனக்குள்) இவள் நல்ல அழகி! புல்லைக்காட்டிப் பசுவைக் கொண்டுபோவதுபோல, இந்தச் சந்நியாசி —அம்பட்டத்தாசி மகன்—தன் இடுப்பில் செருகி யுள்ள காசைக்காட்டி இவளை அடித்துக்கொண்டு போகப் பார்க்கிறான். இருக்கட்டும். இவனுக்குச் சார்பாகப் பேசி, காத்திருந்தவன் பெண்டாட்டியை நேற்று வந்தவன் கொண்டுபோன கதைப்படி செய் கிறேன். (உரக்க) நல்லது. நாகசேனரே! இவர் சொல் லுவது ...

பௌ. பிக்கு: ஐயா, தாங்கள் அதை நம்புகிறீரா? பிறர் பொருளை, அதற்குரியவர் கொடுத்தாலன்றி, எடுக்கக் கூடாது என்பது எங்கள் சமயக்கட்டளை. பொய் பேசக்கூடாது என்பது எங்கள் சமயக்கட்டளை. காம ... கூடாது என்பது எங்கள் சமயக்கட்டளை. ... கொல்லக் கூடாது என்பது எங்கள் சமயக் ...ளை. குறித்த காலந்தவறி உணவு கொள்ளக் கூடாது என்பது எங்கள் சமயக்கட்டளை. தர்மம் சரணங் கச்சாமீ.[1]

பாசு: என்ன, சத்தியசோமரே! இது அவர்கள் சமயக் கட்டளை. இதற்கு நீர் என்ன சொல்லுகிறீர்?

காபாலி: பொய் பேசக் கூடாது என்பது எங்கள் சமயக் கட்டளை.

பாசு: இருவரும் சொல்லுவது நியாயமாக இருக்கிறது. இவர்களுக்கு எப்படி நியாயம் தீர்ப்பது?

பௌ. பிக்கு: புத்தர் உபதேசங்களைப் பின்பற்றி ஒழுகும் ஒரு பௌத்த பிக்கு, ஒரு மதுக்கிண்ணத்தை எடுக்க என்ன நியாயம் ...

---

1. பௌத்த தர்மத்தைச் சரணம் அடைகிறேன் என்பது இதன்பொருள்.

பாசு: 'பிரதிக்ஞா மாத்திரத்திஞல் ஒன்றும் சித்திக்காது' என்று சொல்லுகிருர்களே. மதுக்கிண்ணம் உமக்கு வேண்டியதில்லை என்பதஞலேயே நீர் அதை எடுக்க வில்லை என்று எப்படி அறிவது?

காபாலி: பிரத்தியக்ஷப் பிரமாணம் இருக்கும்போது, காரண காரியங்களைப் பற்றிப்பேசுவது பயனற்றது.

பாசு: பிரத்தியக்ஷப் பிரமாணம் என்று நீர் சொல்லு வதன் கருத்து என்ன?

தேவ: ஐயா! கபால பாத்திரத்தை அவர் போர்வையில் மறைத்து வைத்திருக்கிருர்.

பாசு: அப்படித்தாஞ, ஐயா!

பௌ. பிக்கு: இந்த மண்டை மற்றவருடையதன்று.

காபாலி: அப்படியாஞல், அதைக்காட்டு.

பௌ. பிக்கு: காட்டுகிறேன். [காட்டுகிருன்]

பாசு: பாருங்கள், மகேசுவரர்களே! பாருங்கள், இந்தப் பௌத்த பிக்குவின்மேல் இந்தக் காபாலிகன் அநி யாயமாக அவதூறு சுமத்துவதைப் பாருங்கள்.

பௌ. பிக்கு: பிறர்பொருளை, அதற்குரியவர் கொடுத்தா லன்றி அதை எடுக்கக்கூடாது என்பது எங்கள் மதக் கட்டளை. பொய் பேசக்கூடாது என்பது எங்கள் மதக் கட்டளை. காம விழைவு கூடாது என்பது எங் கள் சமயக்கட்டளை. உயிரைக் கொல்லக்கூடாது என்பது எங்கள் சமயக்கட்டளை, குறித்த காலம் தவறி உணவு கொள்ளக்கூடாது என்பது எங்கள் சமயக்கட்டளை. தர்மம் சரணங் கச்சாமி.

[பிக்கு கூத்தாடுகிருன். காபாலிகனும் அவனுடன் கூத்தாடு கிருன்]

பௌ. பிக்கு: சீச்சீ! வெட்கத்தால் தலைகுனிய வேண்டிய இவன் கூத்தாடுகிருன்.

காபாலி: போம், ஐயா, போம்! யார் கூத்தாடுகிறது? (நாற்புறமும் பார்த்து) காணாமற்போன என் கபால பாத்திரத்தை மீண்டும் கண்டபோது உண்டான சந்தோஷத்தினால், என்மனம் குதூகலமடைந்து கூத்தாடுகிறது.

பௌ. பிக்கு: நன்றாகக் கண்ணைத் திறந்து இந்தப் பாத்திரத்தைப் பாரும் ஐயா! இதன் நிறத்தையும் பார்.

காபாலி: இதற்கென்ன சொல்லுவது! இந்தப்பாத்திரம் காக்கையைப்போலக் கறுப்பா யிருக்கிறதே.

பௌ. பிக்கு: ஆகையால், இந்த மண்டை என்னுடையது தான் என்பதை ஒப்புக்கொண்டீர் அல்லவா?

காபாலி: ஆம். நீர் நிறத்தை மாற்றுவதில் கைதேர்ந்தவர் என்பதை ஒப்புக்கொண்டேன். இதோ பார். இதோ நீர் போர்த்திருக்கும் சீவர ஆடை, முதலில் தாமரை நூலைப்போல் வெண்மையாக இருந்தது. அதைக் காவிதோய்த்துக் காலைவானத்தின் செந்நிறம் போலச் செய்துவிட்டீர் அல்லவா? அன்றியும், கழுவிப் போக்க முடியாத காஷாயத்தினால் (காவியினால்) அகத்தையும் புறத்தையும் மூடிவைத்திருக்கும் உம்மைச்சேர்ந்த என்னுடைய வெண்மையான கபால பாத்திரம் எவ்வாறு காஷாய நிறத்தை அடையாமல் இருக்கும்?[1]

தேவ: ஐயையோ! அநியாயமே! எல்லா லக்ஷணங்களும் பொருந்திய எங்கள் கபால பாத்திரம், பிரம்ம கபாலம்போலத் திவ்வியமாகவும் வெண்ணிலாப் போலப் பிரகாசமாகவும், எப்போதும் கள்ளின் மணம் வீசிக் கொண்டும் இருக்குமே. இப்போ, இவனுடைய அழுக்குத் துணியில் படிந்து இந்தமாதிரி, நிறம்

1. காஷாயம் என்பது துவர் (காவி) ஆடைக்கும், மனக் குற்றத்திற்கும் பெயர். இந்தச் சொல்லை இவ்விருபொருளிலும் சிலேடையாக வழங்குகிறான் காபாலிகன்.

மாறிக் கெட்டுப்போய்விட்டதே. இதற்கு நான் என்ன செய்வேன்! [அழுகிறான்]

காபாலி: தேவசோமா! வருத்தப்படாதே, அதை மறு படியும் சுத்தம் செய்துவிடலாம். பெரியோர்கள் குற்றங்களுக்குக் கழுவாய் சொல்லியிருக்கிறார்கள். எப்படி என்றால், பிரம்மாவின் தலையைக் கிள்ளிய குற்றத்தைப் பிறையணிந்த எம்பெருமான் (சிவன்) கழுவாய் செய்துகொண்டார். துவஷ்டாவின் மகனை விருத்திராசுரனைக் கொன்ற பாவத்தை இந்திரனும் கழுவாய் செய்துகொண்டார். பப்ருகல்பரே! நான் சொல்லுவதில் தவறு உண்டா?

பாசு: நீர் சொல்லுவது சாஸ்திர சம்மதமானது.

பௌ. பிக்கு: பாத்திரத்தின் நிறத்தை மாற்றிவிட்டேன் என்றே வைத்துக்கொள்ளுங்கள். அதன் உருவத்தையும் அளவையும் எப்படி மாற்ற முடியும்?

காபாலி: நீங்கள் மாயாபுத்திரர்கள்[1] அல்லவா?

பௌ. பிக்கு: உம்மோடு எவ்வளவு நேரந்தான் வாதாடுவது? இதை நீர்தான் எடுத்துக்கொள்ளும், ஐயா!

காபாலி: புத்தருடைய தானபாரமிதைக்கு[2] இது ஒப்பானது.

பௌ. பிக்கு: இந்த நிலையில் எனக்கு உதவி செய்வோர் யார்?

---

1. மாயை யுடையவர்கள், அஃதாவது உலகம் மாயை என்னும் கொள்கை யுடையவர்கள் என்பது பொருள். அன்றியும் புத்தருடைய தாயார் பெயர் மாயாதேவி என்பது. இவ்விரு பொருளிலும் இச்சொல்லைக் காபாலிகன் வழங்குகிறான்.

2. தானபாரமிதை என்பது, போதி சத்துவர் புத்தராகப் பிறப்பதற்கு முன்பு செய்த பத்துப் பாரமிதைகளில் ஒன்று. பிக்கு, காபாலிகன் தொந்தரவு பொறுக்க முடியாமல் தன் பாத்திரத்தைக் கொடுத்துவிட, அதை, புத்தர் முன்பிறப்பில் செய்த தானபாரமிதைக்கு ஒப்பிட்டுக் கேலிசெய்கிறான் காபாலிகன்.

காபாலி : ஏன்? புத்த, தர்ம, சங்கந்தான்.

பாசு : இந்த வழக்கை என்னால் தீர்க்க முடியாது. நியாய மன்றம் போய்த் தீர்த்துக்கொள்வது நல்லது.

தேவ : அப்படியானால், கபால பாத்திரத்திற்கு ஒரு கும்பிடு.

பாசு : ஏன் அப்படிச் சொல்லுகிறாய்?

தேவ : பல விகாரைகளிலும் இருந்து கிடைக்கிற காணிக்கைப் பணத்தை இந்தப் பிக்கு தன்னுடைய இராஜ விகாரையில் குவித்து வைத்திருக்கிறார். நீதிமன்றத்தில் இருக்கிறவர்களின் வாயில், அந்தப் பணத்தைப் போட்டு அவர்கள் வாயை அடக்கிவிடுவார். நானோ ஏழைக் காபாலிகை. எனக்கு என்ன இருக்கிறது? பாம்புத்தோலும் திருநீறுந்தான் இருக்கிறது. நியாய மன்றம் போக எனக்குக் காசு ஏது?

பாசு: அப்படியல்ல. நியாய மன்றத்தில் இருக்கிறவர்கள் நேர்மையும், திண்மையும், உறுதியும், நுட்ப அறிவும், குடிப்பிறப்பும் உள்ளவர்கள். மாளிகையைத் தூண்கள் தாங்குவதுபோல, நீதியை இவர்கள் தாங்குகிறார்கள்

காபாலி : நீங்கள் சொல்லுவது என்ன? யோக்கியனாக உள்ளவன் அஞ்சவேண்டிய காரணமே இல்லை.

பௌ. பிக்கு : அப்படியானால், நீதி மன்றத்துக்கு நடவுங்கள்.

பாசு : ஆமாம்! அதுதான் நல்லது.

[எல்லோரும் நடக்கிறார்கள். பைத்தியக்காரன் ஒருவன் வருகிறான்.]

பைத்தியக்காரன் : அதோ, அந்த நாய்! வறுத்த மாமிசம் உள்ள அந்த மண்டையோட்டைத் திருடிக்கொண்டு ஓடுகிறாயா? தேவடியாள் மகனே! நீ எங்கே போகப்

பார்க்கிறாய்? மண்டையைப் போட்டுவிட்டு, அது தின்ன வருகிறது. (நாற்புறமும்
... க் கல்லினால் அதன் பல்லை உடைக்
பார். மண்டையைப் போட்டுவிட்டு ஓடு கிறாயா, பித்துக்கொள்ளி நாயே! கடல் மானத்திலே குதித்துப் பன்றியின்மேல் ஏறிக்கொண்டு ராவணனை அடித்து இந்திரன் மகனைத் தூக்கிக்கொண்டு வந்துடுத்து. அடே எருக்கஞ்செடி! நீ என்ன சொல்றே? பொய் இன்னு சொல்றே. இந்தத் தவளையைக் கேட்டுப்பார். மூணு லோகத்திலும் இணையில்லாத எனக்குக்கூட சாட்சி வேணுமா? என்ன செய்றேன் பார். அது வைச்சிட்டுப் போன அந்தச் சோத்தைத் தின்னுபோடறேன்.

[தின்கிறான். பிறகு அழுகிறான்.]

ஓ, ஓ! நான் அழுகிறேன்; அழுதுண்டே சாகிறேன். (அழுகிறான். பிறகு நாற்புறமும் பார்க்கிறான்) ஏண்டா என்னை அடிக்கிறிங்கோ; போக்கிரிப் பசங்களா! பீமன் மைத்துனன் கடோற்கஜனைப்போல நான் அவனுக்கு—அவன் பேர் என்ன? அவன், அவன், அவனுக்கு மச்சினன்தான். ஆயிரம் பேய்கள் என் வயித்திலே புகுந்துகொண்டு குதிக்கின்றன. கையிலே ஈட்டியை வைச்சிக்கிட்டுக் குத்துகின்றன. நூறு புலியையும் பாம்பையும் வாயிலிருந்து கக்குகிறேன். என்ன தொந்தரவு செய்கின்றன! பொறுத்துக்கொள் ஐயா, பொறுத்துக்கொள்; தப்பை மன்னிச்சிக்கோ. இந்த மாமிசத்தைப் பற்றிக் கவலை வேண்டாம். (பார்க்கிறான்.) அதோ நம்முடைய குரு சூரநந்தி இருக்கிறார்! அங்கே போறேன்.

: அதோ, அந்தப் பைத்தியக்காரன் இங்கே வருகிறான். குப்பையில் கிடந்த கிழிந்துபோன கந்தல் சட்டையை அணிந்துகொண்டு, பறட்டைத் தலையுடன் காய்ந்து போன மாலைகளைக் கழுத்தில் அணிந்துகொண்டு,

கையில் உள்ள இறைச்சிக்காகக் காக்கைகள் சூழ்ந்து பறந்துவர, குப்பைமேடு மனித உருவங்கொண்டு வருவதுபோல வருகிறான்; பாருங்கள்.

பைத்திய: (அருகில் வந்து) ஒரு சண்டாளப் பயலுடைய, மதிப்புள்ள ஒரு நாயினிடமிருந்து இந்த மண்டை யோட்டை வாங்கிக்கொண்டு வந்தேன். பெரிய மனசு பண்ணி இதை வாங்கிக் கொள்ளுங்கோ.

பாசு: (நோக்கி) அதற்குத் தகுதியானவர்)டம அதைக் கொடு.

பைத்திய: ஓ, பிராமணா! இதை வாங்கிக் கொள்ளும்

பௌ. பிக்கு: கௌரவம் உள்ள இந்தப் பாசுபதன் — — — யானவர்.

பைத்திய: (காபாலிகனை அணுகி, மண்டை யோட்டை அவன் முன்பு வைத்து அவனை வலம் வந்து காலில் விழுந்து கும் பிடுகிறான்.) தெய்வமே! உன்னைக் கும்பிடுகிறேன். வரம் தரவேணும்.

காபாலி: இதோ நம்முடைய கபால பாத்திரம்!

தேவ சோ: ஆமாம்! அதுதான்! அதுதான்!!

காபாலி: சிவபெருமான் திருவருளால் நான் மீண்டும் காபாலி ஆனேன்.

[மண்டையோட்டை எடுத்துக்கொள்கிறான்]

பைத்திய: தேவடியாள் மகனே, விஷத்தைக் குடியேன்.

[மண்டையோட்டைப் பிடுங்கிக் கொண்டு போகிறான்.]

காபாலி: (அவனைத் தொடர்ந்து சென்று) இந்த யமதூதன் என்னுடைய உயிரைக் கொண்டுபோகிறான். ஐயா, எனக்கு உதவி செய்யுங்கள்.

பிக்குவும் பாசுபதனும்: அப்படியே உதவி செய்கிறோம்.

[எல்லோரும் பைத்தியக்காரனை மறித்துக் கள்.]

காபாலி : ஏ! நில்லு, நில்லு.

பைத்திய : என்னை ஏன் வழி மறிக்கிறுங்கோ ?

காபாலி : என்னுடைய கபால பாத்திரத்தைக் கொடுத்து விட்டுப் போ.

பைத்திய : முட்டாள்! இது தங்கப் பாத்திரம் இன்னு தெரியலையா, உனக்கு?

காபாலி : இது தங்கப் பாத்திரம் என்றால், இதை யார் செய்தார்கள் ?

பைத்திய : அதைச் சொல்லட்டுமா? பொன் நிறமான போர்வையைப் போர்த்துக்கிட்டு இருக்கானே, அந்தத் தட்டான் ; அவன் தான் இதைச் செய்தான். இது பொன் கிண்ணம்.

பௌ. பிக்கு : என்ன சொல்லுகிறுய் !

பைத்திய : இது பொன் கிண்ணம் ; தங்கக் கிண்ணம்.

பௌ. பிக்கு : இவன் என்ன, பைத்தியக்காரனு ?

பைத்திய : அடிக்கடி பைத்தியக்காரன், பைத்தியக்காரன் இன்னு சொல்லுறுங்கோ. இதைப் பிடிச்சுக்கோ! அந்தப் பைத்தியக்காரனை எனக்குக் காட்டு.
[காபாலிகனிடம் மண்டையோட்டைக் கொடுக்கிறுன்.]

காபாலி : (மண்டையோட்டை வாங்கிக்கொண்டு) அதோ! அந்தச் சுவருக்குப் பின்னுல் அவன் இருக்கிறுன். சீக்கிரமாக ஓடிப்போய் அவனைப் பிடித்துக் கொள்.

பைத்திய : அப்படியே ஆகட்டும் [ஓடுகிறுன்.]

பௌ. பிக்கு : வாதி வெற்றிபெற்றதற்காக மகிழ்ச்சியடை

காபாலி : (மண்டையோட்டை மார்பில் அணைத்துக் கொண்டு) இதுவரையில் மகேஸ்வரனைப் பின்பற்றி விரதம் தவருமல் நடந்து வந்தேன். என் அருமைக் கபால

பாத்திரமே! உன்னைப் பிரிந்தபோது மகேஸ்வரனும் என்னை விட்டுப் பிரிந்து விட்டான். உன்னை மறுபடியும் பெற்றபோது, மீண்டும் மகேஸ்வரன் எனக்குக் காட்சியளிக்கிறான்!

தேவ: ஐயா! உம்மைப் பார்த்தால் ...ந்திர னோடு கூடிய ...வு[1] போலக் ...ர். ... எனக்குக் கண்கொள்ளாக் காட்சியாக இருக்கிறது.

பாசு: ஐயா, தங்கள் கபால பாத்திரத்தைத் தாங்கள் மீண்டும் பெற்றுக் கொண்டதற்காக மகிழ்ச்சியடைகிறேன்.

காபாலி: நான் அடைந்துள்ள சந்தோஷம் தங்களைச் சேர்ந்தது.

பாசு: (தனக்குள்) 'குற்றமற்றவனுக்கு அச்சமில்லை' என்பது சரிதான். இந்தப் பௌத்தபிக்கு இன்று தப்பித்துக்கொண்டான். (வெளிப்படையாக) என்னுடைய நண்பருடைய மகிழ்ச்சியைக் கண்டு நானும் மகிழ்ச்சியடைகிறேன். தூமவேளை ஆகிவிட்டது. கிழக்குப் பக்கமுள்ள எம்பெருமானிடம்[2] செல்லவேண்டும்.

---

1. கருநிறமுள்ள காபாலிகன் மார்பில், வெண்ணிறமுள்ள மண்டை ஓடு பொருந்தியிருப்பதை உவமானப்படுத்திக் கூறுகிறான்.

2. காஞ்சிபுரத்தில் ஏகாம்பர ஈசுவரர் கோவிலுக்குக் கிழக்--- இருந்த சுடுகாடு. இப்போதும், ஏகாம்பர ஈசுவரர் கோயிலுக்கு எதிரில், கிழக்குப்புறமாக திருக்கச்சி மயானம் என்னும் கோயில் இருக்கிறது. அப்பர் சுவாமிகளும் தமது தேவாரத்தில்,

"சவந்தாங்கும் மயானத்துச் சாம்பல் எலும்புத்
தலையோடு மயிர்க்கயிறு தரித்தான் தன்னை
பவந்தாங்கும் பாசுபத வேடத்தானை பண்டமரர்
கொண்டுகந்த வேள்வி எல்லாம்
கவர்ந்தானைக் கச்சியே கம்பன் தன்னை........"

என்று இவ்விரு கோயில்களையும் குறித்திருக்கிறார். இந்நாடகத்தில் வரும் பாசுபதன் இங்கு இருந்தவனாதல் வேண்டும்.

சச்சரவு கொண்டிருந்த உங்கள் இருவருக்கும், கிராதார்ஜுனர்[1] போல நட்பும் அன்பும் உண்டாகட்டும்.
(பாசுபதன் போகிறான்)

காபாலி: நாகசேனரே! ஏதேனும் பிழை செய்திருந்தால் மன்னித்தருளும்.

பௌ. பிக்கு: அப்படி ஒன்றும் உம்மை நான் எப்படிச் சந்தோஷப் படுத்துவேன்.

காபாலி: தாங்கள் என்னை மன்னித்தால், அதுவே சந்தோஷம்.

பௌ. பிக்கு: நான் போய் வருகிறேன்.

காபாலி: வணக்கம் போய் வாரும். மீண்டும் சந்திப்போமாக.

பௌ. பிக்கு: அப்படியே.

காபாலி: தேவசோமா, கண்ணே! போகலாம் வா!
(போகிறார்கள்)

பரதவாக்கியம்

உலகத்தின் நன்மைக்காக ஓமத்தீ வளர்வதாக. பசுக்கள் பாலை நிறையச் சொரிவதாக. விப்பிரர் வேதம் ஓதுவாராக. ஞாயிறும் திங்களும் உள்ள வரையில் உலகம், தீயவை நீங்கி நன்மை பெற்று வாழ்வதாக. பகைவர்களை வென்ற வீரத் தோள்களையுடைய சத்துருமல்லன்[2] ஆட்சியின் கீழ் இன்பமும் அமைதியும் என்றும் தங்குவதாக.

1. சிவனும் அர்ச்சுனனும் போல
2. சத்துருமல்லன் என்பது மகேந்திரவர்மனின் சிறப்புப் பெயர்களுள் ஒன்று.

கo. தமிழிலக்கியம்

திருநாவுக்கரசர் திருப்பாடல்கள்

மகேந்திரவர்மன் இயற்றிய மத்த விலாசம் வடமொழி யில் எழுதப்பட்டது. இவன் காலத்தில் இயற்றப்பட்ட தமிழிலக்கியம் இப்போது நாம் அறிந்தவரையில் திருநாவுக் கரசரின் தேவாரப் பாக்கள் ஒன்றுதான்.[1] அத் தேவாரப் பாக்களும் முழுவதும் நமக்குக் கிடைக்கவில்லை. திருநாவுக் கரசர் பாடியருளிய பதிகங்கள் 4900 என்று, சுந்தரமூர்த்தி சுவாமிகள் கூறுகிறார். என்னை ?

"இணைகொள் ஏழெழு நூறிரும் பனுவல்
ஈன்றவன் திருநாவுக் கரையன்."

என்று அவர் கூறியது காண்க. திருநாவுக்கரசர் திரு ஏகாதச மாலை,

"பதிகமே ழெழுநூறு பகருமா கவியோகி
பரசுநா வரசான பரமகா ரணவீசன்."

என்று கூறுகிறது. இவர் பாடியருளிய 4900 பதிகங்களுள் இப்போது உள்ளவை 312 பதிகங்கள்தான். மற்றவை செல்லரித்துவிட்டன. எனவே, நாவுக்கரசர் அருளிய திருப்பதிகங்களில் ஏறக்குறைய வீசம் பங்குதான் (16-இல்

---

1. திருமழிசையாழ்வார் தமது பாசுர மொன்றில் குணப் பரன் என்னும் பெயரைக் கூறுகிறபடியினாலே, அவர் மகேந்திர வர்மன் காலத்தில் இருந்தவர் என்று சிலர் கருதுகிறார்கள்.

"காப்பு மறந்தறியேன் கண்ணனே யென்றிருப்பன்
ஆப்பங் கொழியவும் பல்லுயிர்க்கும்—ஆக்கை
கொடுத்தளித்த கோனே குணப்பரனே யுன்னை
விடத்துணியார் மெய்தெளிந்தார் தாம்."

என்பது திருமழிசையாழ்வார் பாடல். இதில், மகாவிஷ்ணுவைக் குணப்பரனே என்று விளிக்கிறார். குணப்பரன் என்பது, குண பரன் என்னும் சிறப்புப் பெயரையுடைய மகேந்திரவர்மனைக் கூறியதாகச் சிலர் தவருக நினைத்துக் கொண்டு, திருமழிசையாழ் வார் மகேந்திரவர்மன் காலத்தவர் என்று கூறுவது ஏற்றுக் கொள்ளத் தக்கதன்று.

ஒரு பங்குதான்) இப்போது நமக்குக் கிடைத்துள்ளன! நாவுக்கரசர் தந்த இலக்கியச் செல்வத்தில் மிகப் பெரும் ப[illegible]யைத் தமிழ் நாடு இழந்துவிட்டது.

திருநாவுக்கரசரின் தேவாரப் பாக்கள் சொல் அழகும் பொருள் ஆழமும் உடைய இனிய செய்யுள்கள். இந்தச் செய்யுள்களில் இவருடைய கல்வியின் ஆழத்தையும் சொல் லின் ஆற்றலையும் நன்கறியலாம். இவர் தலைசிறந்த புலவர் என்பதை இவருடைய செய்யுள்கள் சான்று கூறுகின்றன. ஆழ்ந்த கருத்துள்ள இனிய கவிகளைப் பாடும் இவருடைய நாவன்மையைக் கண்டு, இவர் காலத்திலிருந்த அறிஞர்கள் இவருக்கு நாவுக்கரசர் என்று சிறப்புப் பெயர் வழங்கினார் கள்—இல்லை, சிவபெருமானே இப் பெயரை வழங்கினார் என்பர். திருநேரிசை, திருக்குறுந்தொகை, திரு நெடுந் தாண்டகம் முதலிய இவர் இயற்றிய செய்யுள்கள் இசைத் தமிழின்பாற்படுவன. சேக்கிழார் இவரை இன்தமிழ் ஈசர், தாண்டகவேந்தர், நாவின் மொழிக்கிறையாகிய அன்பர், இன்தமிழ்க்கு மன்னனை வாகீசத்திருமுனி, சிந்தை கரைந்துருகத் திருக்குறுந்தொகையும், தாண்டகமும், சந்த நிறை நேரிசையும் முதலான தமிழ் பாடிய பெரியார் என்று புகழ்கிறார். ஏன்? நாவுக்கரசரே, தாம் பாமாலை பாடியதைத் தம் பதிகங்களில் கூறுகிறார்.

"பத்திமையாற் பணிந்தடியேன் றன்னைப் பன்னாட்
பாமாலை பாடப் பயில்வித்தானை."

என்றும்,

"பத்தனாய்ப் ப[illegible] ப் பன்னாட்
பாமாலை பயில்வித் தானை."

என்றும்,

"நாயேன் முன்னைப் பந்தமறுத் தாளாக்கிப் பண்கொண் டங்கே
பன்னிய நூற்றமிழ் மாலை பாடுவித்தென்
சிந்தை மயக்கறுத்த திருவருளினான்."

என்றும் கூறுகிறார்.

திருநாவுக்கரசர் வேறு ஏதேனும் ஒரு காவியத்தை ற்றியிருந்தால், அந்தக் காவியம் தமிழ்மொழியில் தலை சிறந்த காவியமாக விளங்கியிருக்கும் என்பதில் சிறிதும் ஐயமில்லை. பக்தி வழியிலும், சமயத் துறையிலும் சென்ற இவர் பக்திப் பாடல்களைமட்டும் இயற்றியருளினார். இப் பாடல்களின் கம்பீரமும், சொல் நயமும், பொருள் அழகும் திருநாவுக்கரசர் பெருநாவலர் பெருநாவலர் என்று

இவர் பாடிய பாடல்களில் சிலவற்றை இங்குக் காட்டுவாம்:

தேடிச் சென்று திருந்தடி ஏத்துமின்
நாடி வந்தவர் நம்மையும் ஆட்கொள்வர்
ஆடிப் பாடிஅண் ணாமலை கைதொழ
ஓடிப் போம்நம துள்ள வினைகளே.

நன்று நாடொறும் நம்வினை போயறும்,
என்று மின்பம் தழைக்க இருக்கலாம்;
சென்று நீர்திரு வேட்களத் துள்ளுறை
துன்று பொற்சடை யானைத் தொழுமினே.

பஞ்ச பூதவலையிற் படுதற்கு
அஞ்சி நானும்ஆ மாத்தூர் அழகனை
நெஞ்சி னுள்நினைத் தேன்;நினை வெய்தலும்,
வஞ்ச ஆறுகள் வற்றின காண்மினே.

வேத மோதிலென்? சாத்திரங் கேட்கிலென்?
நீதி நூல்பல நித்தல் பயிற்றிலென்?
ஓதி யங்கம் ஓராறும் உணரிலென்?
ஈசனை யுள்கு வார்க்கன்றி யில்லையே.

நன்று நோக்கிலென்? பட்டினி யாகிலென்?
குன்றம் ஏறி இருந்தவஞ் செய்யிலென்?
சென்று நீரிற் குளித்துத் திரியிலென்?
என்றும் ஈசனென் பார்க்கன்றி யில்லையே.

சுண்ணவெண் சந்தனச் சாந்தும் சுடர்த்திங்கட் சூளா மணியும்
வண்ணவுரிவை உடையும் வளரும் பவள நிறமும்
அண்ணல் அரண் முரணேறும் அகலம் வளாய அரவும்
திண்ணன் கெடிலப் புனலும் உடையார் ஒருவர் தமர்நாம்
அஞ்சுவதியா தொன்றுமில்லை அஞ்ச வருவதும் இல்லை.

மாதர் பிறைக் கண்ணியானை மலையான் மகளொடும் பாடிப்
போதொடு நீர்சுமந் தேத்திப் புகுவாரவர்பின் புகுவேன்
யாதுஞ் சுவடு படாமல் ஐயா றடைகின்ற போது
காதன் மடப்பிடி யோடுங் களிறு வருவன கண்டேன்
கண்டேன் அவர்திருப் பாதம் கண்டறி யாதன கண்டேன்.

சொன்மாலை பயில்கின்ற குயிலினங்காள் சொல்லீரே.
பன்மாலை வரிவண்டு பண்மிழற்றும் பழனத்தான்,
முன்மாலை நகுதிங்கள் முகிழ்விளங்கு முடிச்சென்னிப்
பொன்மாலை மார்பனென் புதுநலமுண் டிகழ்வானோ?

பூங்கழல் தொழுதும் பரவியும் புண்ணியர் புனிதா உன்பொற்கழல்
ஈங்கிருக்கப் பெற்றேன்; என்ன குறையுடையேன்?
ஓங்கு தெங்கு இலையார் கமுகு இளவாழை மாவொடு மாதுளம் பல
தீங்கனி சிதறும் திருவாரூ ரம்மானே.

பழியுடை யாக்கை தன்னில் பாழுக்கே நீர் இறைத்து
வழியிடை வாழமாட்டேன் மாயமுந் தெளிய கில்லேன்
அழிவுடைத் தாய வாழ்க்கை ஐவரால் அழிக்கப்பட்டுக்
கழியிடைத் தோணி போன்றேன் கடவூர் வீரட்டனீரே.

தழைத்ததோர் ஆத்தியின்கீழ்த் தாபரம் மணலாற்கூப்பி
அழைத்தங்கே ஆவின்பாலைக் கறந்துகொண் டாட்டக்கண்டு
பிழைத்ததன் தாதை தாளைப் பெருங்கொடு மழுவால் வீசக்
குழைத்ததோர் அமுத மீந்தார் குறுக்கைவீ ரட்ட னாரே.

அருகெலாங் குவளை செங்நெ லகவிலை யாம்பல் நெய்தல்
தெருவெலாம் தெங்கும் மாவும் பழம்விழும் படப்பையெல்லாம்
குருகினங் கூடி யாங்கே கும்மலித் திறகு லர்த்தி
மருவலாம் இடங்கள் காட்டும் வலம்புரத் தடிக ளாரே.

மையறு மனத்தனுய பகீரதன் வரங்கள்வேண்ட
ஐயமில் அமரரேத்த ஆயிர முகமதாகி
வையகம் நெளியப் பாய்வான் வந்திழி கங்கைஎன்னும்
தையலைச் சடையில் ஏற்ருர் சாய்க்காடு மேவினுரே.

கரும்பினும் இனியான் றன்னைக் காய்கதிர்ச் சோதியானை
இருங்கடல் அமுதந்தன்னை இறப்பொடு பிறப்பிலானைப்
பெரும்பொருட் கிளவியானைப் பெருந்தவ முனிவர்ஏத்தும்
அரும்பொனை நினைந்த நெஞ்சம் அழகிதா நினைந்தவாறே.

மெய்ம்மையாம் உழவைச்செய்து விருப்பெனும் வித்தைவித்திப்
பொய்ம்மையாங் களையைவாங்கிப் பொறையெனும் நீரைப்பாய்ச்சித்
தம்மையும் நோக்கிக்கண்டு தகவெனும் வேலியிட்டுச்
செம்மையுள் நிற்பராகில் சிவகதி விளையுமன்றே.

குனித்தபுருவமும் கொவ்வைச் செவ்வாயில் குமிண்சிரிப்பும்
பனித்தசடையும் பவளம்போல் மேனியில் பால்வெண்ணீறும்
இனித்தமுடைய எடுத்தபொற் பாதமும் காணப்பெற்ருல்
மனித்தப்பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே.

சிந்திப்பரியன, சிந்திப்பவர்க்குச் சிறந்து செந்தேன்
முந்திப்பொழிவன முத்திகொடுப்பன மொய்த்திருண்டு
பந்தித்துநின்ற பழவினைதீர்ப்பன பாம்புசுற்றி
அந்திப்பிறையணிந்து ஆடும்ஐயாறன் அடித்தலமே.

இருட்டருதுன்பப் படலம் மறைப்ப மெய்ஞ்ஞான மென்னும்
பொருட்டரு கண்ணிழந்துண் பொருள்நாடிப் புகலிழந்த
குருட்டரும் தம்மைப்பரவக் கொடுநரகக் குழிநின்று
அருட்டரு கைகொடுத்தேற்றும் ஐயாறன் அடித்தலமே.

மனத்தகத்தான் தலைமேலான் வாக்கினுள்ளான்
வாயாரத் தன்னடியே பாடுந்தொண்டர்
இனத்தகத்தான் இமையவர்தஞ் சிரத்தின்மேலான்
ஏழண்டத் தப்பாலான் இப்பாற்செம்பொன்
புனத்தகத்தான் நறுங்கொன்றைப் போதினுள்ளான்
பொருப்பிடையான் நெருப்பிடையான் காற்றினுள்ளான்
கனத்தகத்தான் கயிலாயத் துச்சியுள்ளான்
காளத்தி யானவன் என்கண்ணுளானே.

குலங்கெடுத்துக் கோள்நீக்க வல்லான்தன்னைக்
குலவரையன் மடப்பாவை யிடப்பாலானை
மலங்கெடுத்து மாதீர்த்தம் ஆட்டிக்கொண்ட
மறையவனைப் பிறைதவழ் செஞ்சடையினானைச்
சலங்கெடுத்துத் தயாமூல தன்மமென்னும்
தத்துவத்தின் வழிநின்று தாழ்ந்தார்க்கெல்லாம்
நலங்கொடுக்கும் நம்பியை நள்ளாற்றானை
நானடியேன் நினைக்கப்பெற் றுய்ந்தவாறே.

முன்னம் அவனுடைய நாமங் கேட்டாள்
மூர்த்தி அவனிருக்கும் வண்ணம்கேட்டாள்
பின்னை அவனுடைய ஆரூர்கேட்டாள்
பெயர்த்தும் அவனுக்கே பிச்சியானாள்
அன்னையையும் அத்தனையும் அன்றேநீத்தாள்
அகன்றாள் அகலிடத்தார் ஆசாரத்தைத்
தன்னைமறந்தாள் தன்நாமங் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன்தாளே.

உன்னுருவில் சுவைஒளி ஊறுஓசை நாற்றத்து
உறுப்பினது குறிப்பாகும் ஐவீர், நுங்கள்
மன்னுருவத் தியற்கைகளால் வைப்பீர்க் கையோ
வையகமே போதாதே, யானேவானோர்
பொன்னுருவைத் தென்னாரூர் மன்னுகுன்றைப்
புலிக்கெழிலாஞ் சிவக்கொழுந்தைப் புகுந்தென்சிந்தை
தன்னுருவைத் தந்தவனை எந்தைதன்னைத்
தலைப்படுவேன் றலைப்படுப்பான் தருக்கேன்மின்னே.

இருளாய உள்ளத்தின் இருளைநீக்கி
இடர்ப்பாவங் கெடுத்(து) ஏழையேனை யுய்யத்
தெருளாத சிந்தைதனைத் தெருட்டித்தன்போல்
யறியச்

மா

ஆறங்க நால்வேதத் தப்பால்நின்ற
பொருளானைப் புள்ளிருக்கும் வேளூரானைப்
போற்றாதே ஆற்றநாள் போக்கினேனே

குலம்பொல்லேன் குணம்பொல்லேன் குறியும்பொல்லேன்
குற்றமே பெரிதுடையேன் கோலமாய
நலம்பொல்லேன் நான்பொல்லேன் ஞானியல்லேன்
நல்லாரோ(டு) இசைந்திலேன் நடுவேநின்ற
விலங்கலேன் விலங்கலாதொழிந்தே னல்லேன்
வெறுப்பனவே மிகப்பெரிதும் பேசவல்லேன்
இலம்பொல்லேன் இரப்பதே ஈயமாட்டேன்
என்செய்வான் தோன்றினேன் ஏழையேனே.

சங்கநிதி பதுமநிதி இரண்டுந்தந்து
தரணியொடு வானாளத் தருவரேனும்
மங்குவார் அவர்செல்வம் மதிப்போம்அல்லோம்
மதேவர்க்(கு) ஏகாந்தர் அல்லராகில்
அங்கமெலாம் குறைந்துஅழுகு தொழுநோயராய்
ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும்
கங்கைவார் சடைக் கரந்தார்க் கன்பர்ஆகில்
அவர்கண்டீர் நாம்வணங்கும் கடவுளாரே.

ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே
அடக்குவித்தால் ஆரொருவர் அடங்காதாரே
ஓட்டுவித்தால் ஆரொருவர் ஓடாதாரே
உருகுவித்தால் ஆரொருவர் உருகாதாரே
பாட்டுவித்தால் ஆரொருவர் பாடாதாரே
பணிவித்தால் ஆரொருவர் பணியாதாரே
காட்டுவித்தால் ஆரொருவர் காணாதாரே
காண்பாரார் கண்ணுதலாய்க் காட்டாக்காலே.

எண்ணுகேன் என்சொல்லி எண்ணுகேனோ
எம்பெருமான் திருவடியே எண்ணின்அல்லால்
கண்ணிலேன் மற்றோர் களைகணில்லேன்
கழலடியே கைதொழுது காணின்அல்லால்
ஒண்ணுளே ஒன்பதுவாசல் வைத்தாய்
ஒக்க அடைக்கும்போது உணரமாட்டேன்
புண்ணியனே உன்னடிக்கே போதுகின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே.

கக. திருநாவுக்கரசர் தேவார ஆராய்ச்சி

1. பழமொழிகளும் உவமைகளும்

திருநாவுக்கரசர் தம் பதிகங்களில் ஆங்காங்கே பழமொழிகளையும் உவமைகளையும் எடுத்தாண்டுள்ளார். ீல் சிலவற்றைக் காட்டுவோம்.

கனியிருக்கக் காய் கவர்தல். முயல்விட்டுக் காக்கைப் பின் போனதுபோல். அறம் இருக்க மறம் விலைக்குக் கொண்டதுபோல. பனிநீரால் பாவை செய்வதுபோல. ஏதன்போர்க்கு ஆதன் போல. இருட்டறையில் மலட்டுப் பசுவைக் கறப்பதுபோல. விளக்கிருக்க மின்மினியில் தீக் காய்ந்தது போல. பாழூரில் பயிக்கம் புக்கது போல. (பயிக்கம்=பிச்சை.) தவம் இருக்க அவம் செய்தல். கரும்பு இருக்க இரும்பைக் கடித்தல்போல. இப் பழமொழிகள் திருவாரூர்ப் பழமொழிப் பதிகத்தில் வந்துள. மேலும், இவர் எடுத்தாண்ட பழமொழிகள் வருமாறு:—

"நரிவரால் கவ்வச் சென்று நற்றசை இழந்த தோற்றம்.'
(திருவதிகை நேரிசை, ௫)

"தலக்கமே செய்து வாழந்து தக்கவா றொன்று
விலக்குவா ரிலாமையாலே விளக்கதிற் கோழி போன்றேன்."

"பழியுடை யாக்கைதன்னில் பாழுக்கே நீரிறைத்து
வழியிடை வாழமாட்டேன் மாயமுந் தெளியகில்லேன்."

"பற்றிலா வாழ்க்கை வாழ்ந்து பாழுக்கே நீரிறைத்தேன்
உற்றலால் கயவர்தேறா ரென்னுங் கட்டுரையோ டொத்தேன்."
(திருக்கடவூர் நேரிசை, ௫, ௬, அ)

"பாம்பின்வாய்த் தேரைபோலப் பலபல நினைக்கின்றேனை
ஓம்பிநீ யுய்யக்கொள்ளாய் ஒற்றியூர் உடைய கோவே."
(ஒற்றியூர் நேரிசை)

"பயிர்தனைச் சுழியவிட்டுப் பாழ்க்குநீர் இறைத்து."

"மத்துறு தயிரேபோல மறுகுமென்னுள் ளந்தானும்."
(திருஆரூர் நேரிசை, எ, கூ)

"வஞ்சனை பாற்சோறு." (திருநனிபள்ளி நேரிசை, ரு)

"என்இனேன் எந்தை பெம்மான், இருதலையினும் வேகின்ற
கொள்ளிமேல் எறும்பென்னுள்ளம், எங்ஙனம் கூடுமாறே."
(திரு நேரிசை, கூ)

"நூலும் வேண்டுமோ நுண்ணுணர்ந் தோர்க்கு."
(திருமயிலாடுதுறை. குறுந்தொகை, அ)

"மையலாய் மறவா மனத்தார்க் கெலாம்
கையில் ஆமலகக்கனி யொக்குமே."
(திருநீலக்குடி. குறுந்தொகை, உ)

"பற்பல் காலம் பயிற்றிப் பரமனைச்
சொற்பல்காலம் நின்றேத்துமின் தொல்வினை
வெற்பிற் றேன்றிய வெங்கதிர் கண்டவப்
புற்பனிக் கெடு மாறது போலுமே."
(சித்தத்தொகை. குறுந்தொகை, உரு)

"பிற்பகல் உணங்கல் அட்டும் பேதைமார் போன்றேன்."
(திருவதிகை. நேரிசை)

"ஆற்றிற் கெடுத்துக் குளத்தினில் தேடிய ஆதரைப்போல்."
(திருநல்லூர் திருவிருத்தம், கூ)

இனி, திருநாவுக்கரசர் கூறும் உவமைகள் சிலவற்றைக் காண்பாம்.

"அழிவுடைத்தாய வாழ்க்கை ஐவரால் அலைக்கப்பட்டுக்
கழியிடைத் தோணி போன்றேன் கடவூர் வீரட்டனாரே."
(திருக்கடவூர் நேரிசை, கூ)

உயிர்நிலை யுடம்பேகாலாய் உள்ளமே தாழியாகத்
துயரமே ஏற்றமாகத் துன்பக்கோலதனைப் பற்றிப்
பயிர்தனைச் சுழியவிட்டுப் பாழ்க்கு நீரிறைத்து மிக்க
அயர்வினால் ஐவர்க் காற்றேன் ஆரூர் மூலட்டனாரே.
(திருவாரூர் நேரிசை, அ)

"சித்தத்துள் ஐவர்தீய செய்வினை பலவுஞ் செய்ய
மத்துறு தயிரேபோல மறுகுமென் உள்ளந்தானும்."
(திருவாரூர் நேரிசை, க)

வளைத்துநின் றைவர் கள்வர் வந்தெனை நடுக்கஞ் செய்யத்
தளைத்து வைத்து உலையையேற்றித் தழலெரிமடுத்த நீரில்
திளைத்து நின்றாடுகின்ற ஆமைபோல் தெளிவிலாதேன்
இளைத்து நின்றாடுகின்றேன் என்செய்வான் தோன்றினேனே.
(குறைந்த திருநேரிசை)

"ஓடுநீரினை ஓட்டைக் குடத்து அட்டி
மூடிவைத்திட்ட மூர்க்கனோ டொக்குமே."
(பாவநாசக் குறுந்தொகை, க)

"கூவல் ஆமை குரைகடல் ஆமையைக்
கூவலோடு ஒக்குமோ குரைகடல் என்றல்போல்."
(ஆதிபுராணக் குறுந்தொகை, ங)

"பொத்தார் குரம்பை புகுந்தைவர் நாளும் புகலழிப்ப
மத்தார் தயிர்போல் மறுகும் என்சிந்தை. மறுகொழிவி."
(திருச்சத்திமுற்றம் திருவிருத்தம், ௫)

திருநாவுக்கரசர் திருக்குறள் கருத்துக்களையும், திருக்குறள் சொற்றொடர்களையும் சில இடங்களில் எடுத்தாள் அவை :—

"சொற்றுணைமாலை கொண்டு தொழுதெழுவார்கட் கெல்லாம்
நற்றுணை யாவர் போலும் நாகவீச்சரனாரே."
(திருநாகேச்சரம் நேரிசை, ௫)

"வாதை தீர்க்கவென் றேத்திப் பராய்த்துறைச்
சோதியானைத் தொழுதெழுந் துய்ம்மினே."
(திருப்பராய்த்துறை: குறுந்தொகை, ங)

"தன்னை நோக்கித் தொழுதெழுவார்க் கெலாம்
பின்னை யென்னார் பெருமா னடிகளே."
(திருக்கடவூர் மயானம்: குறுந்தொகை, உ)

"தொடர்ந்து நின்று தொழுதெழுவார் வினை
மடங்க நின்றிடும் வான்மியூ ரீசனே."
(திருவான்மியூர்: குறுந்தொகை, ங)

இப் பதிகங்களில் இவர் எடுத்தாள்கிற "தொழுதெழு வார்" என்னும் சொற்றொடர்,

"தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை."

என்னும் திருக்குறளின் சொற்றொடரை நினைவுறுத்து கிறது.

"பற்றற்றார் பற்றவனாய் நின்றான் கண்டாய்."

"சுற்றினார் மதில்சூழ் மணஞ் சேரியார்
பற்றினாரவர் பற்றவன் காண்மினே."
(திருமணஞ்சேரி குறுந்தொகை, ௩)

"பனையுரியைத் தன்னுடலிற் போர்த்த வெந்தை
யவன்பற்றே பற்றாகக் காணினல்லால்."
(திருநாகைக்காரோணம் திருத்தாண்டகம், ௧௦)

இவை,

"பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு."

என்னும் திருக்குறளின் கருத்தையும் சொற்றொடரையும் அடியொற்றியுள்ளன.

ம்
பீடுலாந் தனைசெய் வார்."
(திருப்பந்தணைநல்லூர் திருத்தாண்டகம், ௨)

இதில் உள்ள உறுபிணியும் செறுபகையும் என்னும் சொற்றொடர்கள்,

"உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையுஞ்
சேரா தியல்வது நாடு."

என்னும் திரு

"வேண்டாமை வேண்டுவது மில்லான் றன்னை."
ண்டகம், ௧)

"வேண்டுதல் வேண்டாமை யிலானடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை யில."

என்னும் திருக்குறள் கருத்தையும் சொற்றொடரையும் கொண்டுள்ளது.

"இடர்க்கடலுள் சுழிக்கப்பட்டிங் கிளைக்கின்றேற்கு
அக்கரைக்கே ஏறவாங்கும் தோணியை."
(திருவாவடுதுறை திருத்தாண்டகம், ச)

இக்கருத்து,

"பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடிசேரா தார்."

என்னும் திருக்குறள் கருத்தைக் கொண்டிருக்கிறது.

"ஏரி நிறைந்தனைய செல்வன் கண்டாய்."
(திருமறைக்காடு திருத்தாண்டகம், ரு)

"ஊருணி நீர்நிறைந் தற்றே யுலகவாம்
பேரறி வாளன் திரு."

என்னும் திருக்குறளைப் பின்பற்றியுள்ளது காண்க.

"இன்றுளார் நாளையில்லை யெனும் பொருள்
ஒன்று மோராது உழிதரு மூமர்காள்!"
(திருக்காட்டுப்பள்ளி, க)

என்னும் இப்பாடல்,

"நெருநல் உளனொருவன் இன் என்னும்
பெருமை யுடைத்திவ் வுலகு."

என்னும் திருக்குறளை நினைவுறுத்துகிறது,

3. கட்டங்கம்

சிவபெருமான் தமது கையில் கட்டங்கம்[1] என்றும் கட்டுவாங்கம் என்றும் பெயருடைய ஆயுதத்தை வைத்திருக்கிறார் என்று திருநாவுக்கரசர் தம் தேவாரப் பாடல்களில் பல இடங்களில் கூறுகிறார். சில இடங்களில் கட்டங்கக் கொடி என்று கூறுகிறார். அப்பருக்குப் பிற்பட்ட காலங்களில் கட்டுவாங்கத்தைப்பற்றிய செய்தி நூல்களில் கூறப்படவில்லை. கட்டங்கம் ஏந்திய சிவபெருமானுடைய திருவுருவங்கள் காணப்படவில்லை. கட்டங்கம் அல்லது கட்டுவாங்கம் என்றால் என்ன? சிறுகோலின் ஒரு நுனியில் மண்டையோட்டைக் கட்டியிருக்கும் ஆயுதத்திற்குக் கட்டங்கம் என்பது பெயர். இதன் உருவ அமைப்பைப் பல்லவர் காலத்துச் சிற்பங்களில் காணலாம்.

நாவுக்கரசர் தமது தேவாரத்தில் கட்டுவாங்கத்தைக் குறிப்பிடுகிற பகுதிகள் இவை :—

"கட்டங்கம் தோள்மேல் வைத்தார்." "கைகொள் சூலத்தர் கட்டுவாங்கத்தினர்" "கட்டுவாங்கம் கபாலங் கைக் "காதார் குழையினர் கட்டங்கத்தர் மாமலையார்." "கல்லலகு நெடும்புருவக் கபால மேந்திக் கட்டங்கத்தோடுறைவார் காப்புக்களே." "கட்டங் கந்தாமொன்று கையிலேந்தி." "நேசர் அடைந்தார்க்கு அடையாதார்க்கு நிட்டுருவர், கட்டங்கர், வினைவார்க்கென்றும் ஈசர்." "கட்டங்கம் ஒன்றுதன் கையிலேந்தி." "காபாலங் கட்டங்கக் கொடியர் போலும்." "கட்டங்கக் கொடி துடி கைக்கொண்டார் போலும்." "கங்காள வேடத்தானைக் கட்டங்கக் கொடியானை." "காபாலி, கட்டங்கம் ஏந்தினானை." "கட்டங்கக் கொடி திண்டோளாடக் கண்டேன்."

இவருக்கு இளையரும் இவர் காலத்தில் இருந்தவருமான திருஞானசம்பந்தரும் கட்டங்கத்தைக் கூறுகிறார். "கறையார் மணிமிடற்றான் காபாலி கட்டங்கன்," என்று அவர் கூறியது காண்க.

4. ஆரியமும் தமிழும்

ஆரியக்கலையும் தமிழ்க்கலையும் நன்கு கலந்தது "இந்து" சமயம். "இந்து" சமயம் என்பது சைவ வைணவ சமயமாகும். வைதிகப் பிராமணராகிய ஆரியர் பல நூற்றாண்டுகளுக்கு முன்னே தமிழ்நாட்டில் வந்திருந்தனர். ஆனால், தமிழ்ப் பண்போடு (திராவிடப் பண்புடன்) கலக்காமல் நெடுங்காலம் தனித்து இருந்து தமது வைதிக ஒழுக்கத்தை நடாத்திவந்தனர். அவர்கள் தனித்து இருந்த வரையில் அவர்கள் தமிழ்நாட்டிலே சிறப்படைய முடியவில்லை. பௌத்தரும் சமணரும் வைதீக ஆரியரை அடக்கி வைத்தனர். ஆதியில் வைதீகப் பிராமணர் இலிங்க வழிபாட்டையும், சிவன் திருமால் வணக்கத்தையும் மேற்கொள்ளாமல் புறக்கணித்தார்கள். ஆகவே அவர்கள் அக்காலத்தில் சைவ வைணவர்களாலும் பௌத்தர் சமணர்களாலும் புறக்கணிக்கப்பட்டிருந்தனர். பிறகு வைதீகர், திராவிடரின் கடவுள் வழிபாட்டை ஏற்றுக்கொண்டு சைவ-வைணவ மதத்துடன் கலந்து கொண்டனர். அதாவது தமிழர் (திராவிடர்) நாகரிகமும், ஆரிய (வைதீக) நாகரிகமும் கலக்கப்பெற்றன. ஆரியக்கலையும் தமிழ்க்கலையும் உறவுகொண்டன. திராவிடக்கலையை மேற்கொண்ட பிறகுதான் வைதீகப் பிராமணரின் நிலை உயர்ந்தது.

திருநாவுக்கரசர் இந்தத் திராவிட—ஆரிய சமயக் கலப்பைத் தமது தேவாரத்தில் குறிப்பிடுகிறார். இவர் காலத்திலிருந்த இவருக்கு இளையரான திருஞானசம்பந்தரும் இந்தக் கலப்பைக் கூறுகிறார். ஆரியம்—தமிழ் என்னும் இரண்டு பண்புகளும் ஒன்று சேர்ந்ததுதான் சைவம் என்று திருநாவுக்கரசர் கூறும் வாக்குகள் இவை :

"ஆரியந் தமிழோடிசை யானவன்."

"ஆரியன் கண்டாய் தமிழன் கண்டாய்
அண்ணா மலையுறையும் அண்ணல் கண்டாய்."

"மூத்தமிழும் நான்மறையும் ஆனான் கண்டாய்."

"செந்தமிழோடு ஆரியனைச் சீரியனை."

"வடமொழியும் தென்தமிழும் மறைகள் நான்கும்
ஆனவன் காண்."

இவ்வாறே ஞானசம்பந்தரும் கூறுகிறார் :—

"தம்மலரடி யொன் றடியவர் பரவத்
தமிழ்ச்சொலும் வடசொலுந் தாணிமேற் சேர
வம்மலர்க் கொன்றை யணிந்த வெம்மடிகள்
அச்சிறுபாக்கம தாட்சி கொண்டாரே."

"செந்தமிழர் தெய்வ மறைநாவர்
செழுங்கலை தெரிந்த வவரோடு
அந்தமில் குணத்தவர்களர்ச்சனைகள்
செய்ய அமர்கின்றவனூர்."

"தென்சொல் விஞ்சமர் வடசொற்றிசைமொழி
எழில்நரம் பெடுத்துத்
துஞ்சுநெஞ்சிருள் நீங்கத் தொழுதெழு தொல்புகலூர்."

"செந்திறத்த தமிழோசை வடசொல்லாகித்
திசை நான்குமாய்த் திங்கள் ஞாயிறாகி."

—திருமங். திருநெடு - ச.

என்று இவ்வாறு ஆரியக்கலையும் தமிழ்க்கலையும் ஒன்றென்று கூறிய நாவுக்கரசரும் ஞானசம்பந்தரும், வேறு வழியாகவும் இந்தக் கலப்பினைத் தம் தேவாரங்களில் வற்புறுத்திக் கூறுகிறார்கள். அஃதாவது, இருக்கு எசுர் சாமம் அதர்வணம் என்னும் வடமொழி நான்மறையும் அறம் பொருள் இன்பம் வீட்டைக் கூறும் தென்மொழி நான்மறையும் ஒன்றே ; இவ்விரண்டையும் அருளியவர் சிவபெருமானே ; இரு மறைகளும் ஒரே பொருளைக் கூறுகின்றன என்பதைத் தம் தேவாரப் பாடல்களில் ஆங்காங்கே கூறிச் செல்கிறார்கள். முதலில் திருநாவுக்கரசர் கூறியதைக் காண்போம் :

"தூய காவிரியின் நன்னீர் கொண்டு இருக்கு ஓதி ஆட்டி," என்றும், "சாமத்து வேதமாகி நின்றதோர் சம்புதன்னை" என்றும், "சாமவேதத்தர் எந்தையும் எந்தை தந்தையும் ஆய ஈசர்" என்றும், வேதத் தோடா

றங்கம் சொன்னார் போலும் என்றும், "அருமறையோ டாறங்கம் ஆய்ந்து கொண்டு பாடினார் நால் வேதம்." என்றும், "வேதியன்காண் வேதவிதி காட்டினான் காண்" என்றும் வடமொழி வேதங்களைச் சிவபெருமான் அருளிச் செய்தார் என்று கூறிய திருநாவுக்கரசர், தென்மொழி வேதத்தையும் ஆலின்கீழிருந்து அருளிச்செய்தார் என்று

ஆலின் கீழ் அறம் அருளியது: சிவபெருமான் ஆலின் கீழிருந்து அறம் உரைத்த செய்தியைத் திருநாவுக்கரசர் இவ்வாறு கூறுகிறார்:—ஆலின் நிழற்கீழ் அறமோதிய குழகன். மடற்பெரிய ஆலின்கீழ் அறம் நால்வர்க் கன்றுரைத்தான். விரித்தானை நால்வர்க்கு வெவ்வேறு

"ஆலின்கீழ் அறங்க ளெல்லாம் அன்றவர்க் கருளிச் செய்து
நூலின்கீ ழவர்கட் கெல்லாம் நுண்பொரு ளாகி நின்று."

"வருந்தின நெருந லின்றாய் வழங்கின நாளர். ஆற்கீழ்
இருந்தின பொருள்கள் நால்வர்க் கியம்பினர்........"

பணைத்தெழுந்த ஆல்நிழற் கீழிருந்து ஆரண மோதி. ஆலின்கீழறத்தா ரன்னியூராரே. ஆலின்கீழ் அறம் பகர்ந் தார்.

"ஆலத்தார் நீழலில் லறம் நால்வர்க்குக்
கோலத்தால் உரை செய்தவன்......"

"நற்றவஞ் செய்த நால்வர்க்கு நல்லறம்
உற்றவண் மொழியால் அருள்செய்த நற்."

கொற்றவன். அறங்காட்டி யந்தணர்க்கன் றாலநீழல் அறம் அருளிச்செய்த அரனார். சொல்லருளி யறநால்வர்க் கறியவைத்தார். ஆலின்கீழ் அறநால்வர்க் களித்தான் கண்டாய். ஆலநீழல் அறஞ்சொன்னாய் போற்றி அன்றா லின் கீழிருந்து அறஞ்சொன்னானை. ஆலதனில் அற நால்வர்க் கருள்செய்தானை. அன்றாலின்கீழ்த் திருந்து மறைப்பொருள் நால்வர்க்கு அருள்செய்தானை.

இவ்வாறு ஆரிய வேதத்தையும் திராவிட வேதத்தையும் சிவபெருமான் அருளிச்செய்தார் என்று தனித்தனியே கூறிய நாவுக்கரசர்,

"வேதநான்கும் கல்லாலின் நீழற்கீழ் அறங்கண்டானை."

"பொய்யுரையா மறைநால்வர் விண்ணோர்க் கென்றும்
வேதத்தை விரிப்பதற்கு முன்னோ பின்னோ."

"ஆலதன் கீழிருந்து நால்வர்க்கு
அறம் பொருள் வீடின்பம்
ஆறங்கம் வேதம் தெறித்தானை."

என்றும் கூறுகிறார். இவ்வாறு ஆரிய திராவிடக்கலைக் கலப்பைக் கூறிய நாவுக்கரசர், "புதியனவுமாய் மிகவும் பழையான்தன்னை" என்று ஒரே சொல்லில் முடிவாகக் கூறிவிட்டார்.

இவருக்கு வயதில் இளையரான இவர் [illegible] ஞானசம்பந்தரும், ஆரியவேதத் திராவிடவேதக் கலப்பினைத் தமது தேவாரப் பாடல்களில் ஆங்காங்கே காட்டுகிறார். இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என்னும் நான்கு வேதங்களையும் சிவபெருமான் அருளிச்செய்தார் என்று ஆங்காங்குக் கூறிய ஞானசம்பந்தர், சிவபெருமான் ஆலநிழலிலிருந்து அறமுரைத்தார் என்றும் கூறுகிறார். அவற்றில் சில வருமாறு :—

"மாலடைந்த நால்வர் கேட்க நல்கிய நல்லறத்தை
ஆலடைந்த நீழல்மேவி யருமறை சொன்னதென்னே."

"அழிந்த சிந்தை அந்தணாளர்க் கறம்பொரு ளின்பம்வீடு
மொழிந்த வாயான் முக்கணாதி மேயது முதுகுன்றே."

"நண்ணியோர் வடத்தி னீழல் நால்வர் முனிவர்க்கன்று
எண்ணிலி மறைப் பொருள் விரித்தவர்........"

"ஓரானீழல் ஒண்கழல் இரண்டும்
முப்பொழு தேத்திய நால்வர்க்கு ஒளிநெறி காட்டினை."

"கல்லா னிழல்மேவிக் காமுறுசீர் நால்வர்க்கன்று
எல்லா வறனுரையும் இன்னருளாற் சொல்லினன்."

"அங்கம் நான்மறை, நால்வர்க் கறம்பொருளின்பம் பயனளித்த திங்கள் சேர் சடையான்."

சிவபெருமான் ஆலமரத்தின் கீழிருந்து அறநெறியை அருளிச்செய்தார் என்று நாயன்மார்கள் கூறுவது போலவே, திருமழிசை ஆழ்வாரும் தாம் அருளிய நான்முகன் திருவந்தாதியில் (17) கூறுகிறார் :—

"ஆல நிழற்கீழ் அறநெறியை நால்வர்க்கு
மேலை யுகத்துரைத்தான் மெய்த் தவத்தோன்."

என்பது அவர் வாக்கு.

இவ்வாறு ஆரியத் திராவிடக் கலப்பினை நாவுக்கரசரும் ஞானசம்பந்தரும் கூறுவதுபோலவே பிற்காலத்தவரான சேக்கிழாரும் தமது பெரியபுராணத்தில் கூறுகிறார். அவற்றில் சிலவற்றைக் காட்டுவாம் :—

"ஆதிஅரு மறைவழக்கம் அருகிஅரன் அடியார்பால்
பூதிசாதன விளக்கம் போற்றல் பெறுதொழியக் கண்டு."

என்றும்,

"மன்னிய சைவவாய்மை வைதிக வழக்கமாகும்
நன்னெறி திரிந்துமாறி நவைநெறி நடந்ததன்றே."

என்றும்,

"பரசமயத் தருக்கொழியச் சைவமுதல்
வைதிகமும் தழைத்தோங்க."

என்றும்,

"வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்க."

என்றும் சேக்கிழார் வைதிக நெறியையும் சைவ நெறியையும் தனித்தனியாகவும் இணைத்தும் ஓதுவது காண்க.

இதனால் இந்துமதம் (சைவம் வைணவம்) என்பது, திராவிட சமயமும், வைதிக சமயமும், பக்தியியக்கமும் கலந்துண்டாகிய ஒரு மதம் என்பது தெளிவாகிறது.

5. அகப்புறச் சமயங்கள்

திருநாவுக்கரசர் காலத்திலே சைவ சமயத்தில் சில உட்பிரிவுகளும் இருந்தன. அந்த உட்பிரிவுகளை அகப்புறச் சமயம் என்று கூறுவர். அவை பாசுபதம் மாவிரதம் காபாலிகம் வைரவம் என்பன. பாசுபதமும் மாவிரதமும் ஒன்றுக்கொன்று தொடர்புடையன. காபாலிகமும் வைரவமும் ஒன்றுக்கொன்று தொடர்புடையன. திருநாவுக்கரசர் தமது திருவாரூர்ப் பதிகத்தில்,

அருமணித் தடம்பூண்முலை யரம்பையோ டருளிப்பாடி
உரிமையிற் றொழுவார் உருத்திர பல்கணத்தார்
விரிசடை விரதிகள் அந்தணர் சைவர்பாசுபதர் கபாலிகள்
தெருவினிற் பொலியும் திருவாரூர் அம்மானே.

என்று இந்தச் சமயங்களைக் கூறுகிறார். திருஞான சம்பந்தரும் தமது திருச்சண்பைநகர் தேவாரத்தில்,

"காதலால், சைவர் பாசுபதர்கள் வணங்கும்
சண்பை நகராரே."

என்று பாசுபத மதத்தாரைக் கூறுகிறார். திருநாவுக்கரசரால் சைவனான மகேந்திரவர்மன், தான் எழுதிய மத்தவிலாசம் என்னும் நாடகத்தில், காஞ்சிபுரத்து ஏகாம்பரேசுவரர் கோயிலிலும் அதனை அடுத்திருந்த மயானத்திலும் கபாலிகரும் பாசுபதரும் இருந்தனர் என்று கூறுகிறான்.

மானக்கஞ்சாற நாயனார் புராணத்தில் மக யரைப் பற்றியும், சிறுத்தொண்ட நாயனார் ல் வைரவரைப் பற்றியும் சேக்கிழார் கூறுகிறார்.

மாவிரதியர் என்றும் மகாவிரதியர் என்றும் கூறப்படுகிறவரைப்பற்றி ஆராய்வோம். இந்தப் பிரிவினரோடு தொடர்புடையவர் பாசுபதர். இவர்கள் பசுபதியை பர்கள். இவ்விருவருக்குள் பெரிய வேறுபாடு ில சமயங்களில் இருவரும் ஒருவராகவே றப்படுகின்றனர். இந்தப் பாசுபதராகிய மாவிரதிகள்,

சுடுகாட்டில் வசிப்பவர். சுடுகாட்டுச் சாம்பலை உடம்பில் பூசி, இறந்தவர் எலும்பையும் தலையோட்டையும் மாலையாகக் கழுத்திலும் தலையிலும் அணிந்து கொண்டு, தலை மயிரினால் செய்த பஞ்சவடி என்னும் பெயருடைய பூணூலை மார்பில் அணிந்து கொண்டிருப்பார்கள் என்று அப்பர்சுவாமிகள் தேவாரத்தினால் அறிகிறோம்.

> "முத்து விதான மணிப்பொற் கவரி முறையாலே
> பத்தர்களோடு பாவையர் சூழப் பலிப்பின்னே
> வித்தகக் கோல வெண்டலைமாலை விரதிகள்
> அத்தனாரூர் ஆதிரை நாளால் அது வண்ணம்."
>
> (திருவாரூர் திருவாதிரைப் பதிகம். க.)

> "சவந்தாங்கு மயானத்துச் சாம்ப லென்பு
> தலையோடு மயிர்க் கயிறு தரித்தான் தன்னைப்
> பவந்தாங்கு பாசுபத வேடத்தானைப்
> பண்டமரர் கொண்டுகந்த வேள்வி யெல்லாம்
> கவர்ந்தானைக் கச்சியே கம்பன் தன்னை."
>
> (திருவீழிமிழலை திருத்தாண்டகம்.)

> "பருப்பதத்தைப் பஞ்சவடி மார்பினானை."
>
> (திருக்கஞ்சனூர். ரு.)

இந்தப் பாசுபத மாவிரதக் கோலத்தைச் சிவபெருமானே பூண்டிருந்தார் என்றும், அது விலையில்லாத வேடம் என்றும் அப்பர் கூறுகிறார்.

> "தலையினாற் றரித்த வென்புந் தலைமயிர் வடமும் பூண்ட
> விலையிலா வேடர் வீழி மிழலையுள் விகிர்தனாரே."
>
> (திருவீழிமிழலை. ச)

பெரிய புராணத்தில், மானக்கஞ்சாற நாயனார் வரலாற்றில், மாவிரதியர் வேடம் இவ்வாறே கூறப்படுகிறது. சிவபெருமான் மாவிரதி வேடங் கொண்டு நாயனாரிடம் வந்து அவருடைய மகளின் கூந்தலைத் தமது பஞ்சவடிப் பூணூலுக்காகக் கேட்டார் என்றும், நாயனாரும் அதற்கிசைந்து மகளின் கூந்தலை அரிந்து கொடுத்தார் என்றும் கூறுகிறது. தலையிலே எலும்பு மணி ...ும், காதுகளிலே

எலும்பினால் செய்த குண்டலங்களும், கழுத்திலே எலும்பைக் கோத்தமைத்த தாழ்வடமும், மார்பிலே மயிரினால் செய்யப்பட்ட பஞ்சவடிப் பூணூலும், தோளிலே பட்டிகையும் அணிந்து திருநீற்றுப் பொக்கணத்துடன் மாவிரத மூர்த்தி எழுந்தருளினார் என்று பெரியபுராணம் கூறுகிறது.

"முண்டநிறை நெற்றியின்மேல் முண்டித்த திருமுடியில்
கொண்டசிகை முச்சியின்கண் கோத்தணிந்த எலும்புமணி
பண்டொருவன் உடல் அங்கம் பரித்தநாள் அது கடைந்த
வெண்டரளம் எனக் காதின்மிசை அசையுங் குண்டலமும்."

"அவ்வென்பின் ஒளிமணிகோத் தணிந்த திருத் தாழ்வடமும்
பைவன்பேர் அரவொழியத் தோளில் இடும் பட்டிகையும்
மைவந்த நிறக்கேச வடப்பூணு நூலும் மனச்
செவ்வன்பர் பவமாற்றுந் திருநீற்றுப் பொக்கணமும்."

இவ்வாறு மாவிரத முனிவர் வரக்கண்டு, மானக்கஞ்சாறர் எதிர்சென்று வணங்கி, மணப்பெண் கோலங் கொண்டிருந்த தம் மகளை அழைத்து அவரை வணங்கச் செய்தார். அப்போது அப் பெண்மணியின் கரிய கூந்தலைக் கண்ட மாவிரதியார் அக் கூந்தலைத் தனக்குத் தரும்படி அடியாரைக் கேட்டார்.

"தஞ்சரணத் திடைப் பணிந்து தாழ்ந்தெழுந்த மடக்கொடிதன்
மஞ்சுதழைத் தெனவளர்ந்த மலர்க்கூந்தல் புறம் நோக்கி
அஞ்சலி மெய்த் தொண்டரைப் பார்த் தணங்கிவள் தன்மயிர்
நமக்குப்
பஞ்சவடிக்காம் என்றார் பரவ அடித் தலங் கொடுப்பார்."

அப்போது அடியவர்,

"இருள் செய்த கருங் கூந்தல் அடியில் அரிந் தெதிர்நின்ற
மருள் செய்த பிறப்பறுப்பார் மலர்க்கரத்தி னிடை நீட்டினார்."

திருநாவுக்கரசர் பாசுபதரைத் "தலையறுத்த பாசுபதர்," "தலையறுத்த மாவிரதியர்" என்று கூறுகிறார்.

"முறைமையால் ஐம்பொறியும் வழுவா வண்ணம்
படித்தான் தலையறுத்த பாசுபதன்காண், பராய்த்துறை
யான் காண்." (திருக்காளத்தி திருத்தாண்டகம். உ.)

"தாட்பரவு கமலமலர் தயங்கு வானைத்
தலையறுத்த மாவிரதந் தரித்தான் றன்னை."
(திருக்கீழ்வேளூர். ௪)

இனி, வைரவராகிய காபாலிகரைப்பற்றி ஆராய்வோம். காபாலிகருக்குக் காளமுகர் எனும் பெயருமுண்டு. இதை,

"விரித்தபல் கதிர்கொள் சூலம் வெடிபடு தமருகங்கை
தரித்ததோர் கோலகால பயிரவனாகி."

என்று திருச் சேறைப் பதிகத்தில் திருநாவுக்கரசர் கூறுகிறார். வைரவ வேடத்தைப் பெரியபுராணம் இவ்வாறு கூறுகிறது: "படர்ந்த தலைமயிரைக் கொந்தளமாகப் பரப்பி, காதுகளில் தோடு அணிந்து, அக்குமணியால் ஆன சன்னவீரம், ஆரம், தாழ்வடம் இவைகளை யணிந்து, கையிலே கபாலபாத்திரமும் சூலமும் ஏந்திக் காபாலிகர் திரிவார்கள். இவர்களுக்கு முக்கிய அங்கம் தலையோடு. தலையோட்டிலே பிச்சை ஏற்று அதிலே உண்பார்கள். மதுபானத்தையும் தலையோட்டிலே ஊற்றிக் குடிப்பார்கள். இவர்கள் நர மாமிசமும் உண்பார்கள் என்று பெரிய புராணம் கூறுகிறது.

"பெரிய பயிரவக் கோலப் பெருமான் அருளிச் செய்வார்
'யாம், பரியுந் தொண்டர்! மூவிருது கழித்தால் பசு வீழ்த்திட
வுண்பது."

என்றும்,

"பண்பு மிக்க சிறுத் தொண்டர் பரிவு கண்டு பயிரவரும்,
'நண்பு மிக்கீர், நாம் உண்ணப் படுக்கும் பசுவும் நர பசுவாம்."

என்றும் வைரவர் சிறுத்தொண்டரிடம் கூறியதாகப் பெரிய புராணம் கூறுவது காண்க.

பவபூதி என்பவர் எழுதிய மாலதீமாதவம் என்னும் வடமொழி நூலில், மாலதி என்பவளைக் காபாலிகன் ஒருவன் சாமுண்டிக்குப் பலியிட முயன்றதைக் கூறுகிறது.

காபாலிகர் பயிரவமூர்த்தியை வழிபடுவர். காபாலி கரைப்பற்றி, மத்தவிலாசப் பிரகசனத்தில் மகேந்திரவர் மன் அழகாகக் கூறுவதை அந் நாடகத்தில் காணலாம்.

இந்த அகப்புறச் சமயங்கள் நான்கும் வட இந்தியா வில் தோன்றியன. லகுலீ என்பவர், சிவபெருமானின் அவதாரமாகத் தோன்றி பாசுபத மதத்தை உண்டாக்கினர் என்பர். ஆகவே இதற்கு லகுலீ பாசுபதம் என்றும் பெயர் வழங்குகிறது. லகுலீ என்றால் தண்டு அல்லது தடியையுடையவர் என்பது பொருள். இராசபுதன தேசத் தில் பரோடா சமத்தானத்துத் தபோய் தாலுகாவைச் சேர்ந்த கார்வான் என்னும் ஊரில் லகுலீ பிறந்தார். இந்தக் கார்வான் நகரத்தின் பழைய பெயர் காயாரோஹ ணம் என்பது. இந்தக் காயாரோஹணம் என்னும் பெயர் காரோகணம் என்றாகிப் பிறகு காரோணம் என்றாகி இப் போது கார்வான் என்று வழங்கப்படுகிறது. இங்குப் பிறந்த லகுலீசர் பாசுபத மதத்தை உண்டாக்கினர். இவ ருக்குக் கௌசிகர் (குசிகர்), கர்க்கர் (கார்க்கியர்), மித்ரர் (மித்ரகர்), கௌருஷ்யர் (ருஷ்டர்) என நான்குபேர் சீடர் கள் இருந்தார்கள்.

இவர்களுக்குப் பாசுபத சாத்திர பஞ்சார்த்த தர்சனம் என்னும் ஒரு நூல் இருந்தது. அது ஐந்து அத்தியாயங் களைக் கொண்டிருந்தபடியால் பஞ்சத்யாயீ என்றும் அதற்குப் பெயர் உண்டு. அன்றியும் பாசர்வஜ்ஞர் (பாவ சர்வஜ்ஞர்) என்பவர் இயற்றிய கணகாரிகை என்னும் ஒரு நூலும் உண்டு. இதற்கு ஒரு டீகை (உரை)யும் உண்டு.[1] லகுலீசருக்கு இராஜபுதனத்தில் பல இடங்களில் கோயில் கள் உள்ளன.

லகுலீ பாசுபதம் வடநாட்டில் உண்டான சமயம் என் பதற்குச் சான்றாக, சிறுத்தொண்டரிடம் வந்த பைரவர் தம்மை வடநாட்டிலிருந்து வந்தவர் என்று கூறுவதி

1. இந்த நூல் 1920-இல் பரோடா சமஸ்தானத்து மத்திய புத்தகசாலையின் தலைவர் C. D. தலால் என்பவரால் அச்சிடப் பட்டுள்ளது.

நந்தும் அறியலாம். வைரவர் சிறுத்தொண்டரைப் பார்த்து, "நிகழும் தவத்தீர்; உமைக் காணும்படியால் வந்தோம், உத்தராபதியோம்" என்று கூறியதாகப் பெரிய புராணம் கூறுகிறது. இப்போதும் செங்காட்டங்குடி கணபதேச்சரத்தில் உத்தராபதியாராகிய வடக்குநாதருக்குக் கோயில் உண்டு.

இரண்டாம் புலிகேசியின் மருகனான நாகவர்த்தனன் இகத் புரியின் அருகில் ஓர் ஊரைத் தானம் செய்து அதனால் கபாலீசுவரரை வழிபடவும் காபாலிகரை ஆதரிக்கவும் செய்தான் என்று சாசனத்தினால் தெரிகிறது. வட இந்தியாவுக்குச் சென்று புலிகேசியின் வாதாபி நகரத்தை வென்ற சிறுத்தொண்ட நாயனார் (பரஞ்சோதியார்) வட இந்தியாவிலிருந்த காபாலிகருடனும் பயிரவருடனும் தொடர்பு கொண்டிருக்கக்கூடும். அதனால்தான், பிற்காலத்தில் கணபதீச்சரத்துக்கு வந்து சிறுத்தொண்டரைக் கண்ட பயிரவர், தம்மை "உத்தராபதியோம்" (வடக்கிலிருந்து வந்தவர்) என்று அவரிடம் கூறினார் போலும்

வடநாட்டில் காயாரோகணத்தில் (காரோணத்தில்) தோன்றிய இந்த லகுலீ பாசுபத மதமும் அதன் பிரிவுகளும் அப்பர் சம்பந்தர் காலத்துக்கு முன்பே தமிழ்நாட்டிலும் வந்து சிற்சில இடங்களில் நிலைபெற்றிருந்தன. நாகைக்காரோணம், குடந்தைக்காரோணம் என்னும் இரண்டு காரோணங்களை அப்பரும் சம்பந்தரும் தமது பதிகங்களில் பாடியுள்ளார்கள். திருவாரூரிலும் சீகாழியிலும் இந்தக் காபாலிக பாசுபதர்கள் இருந்தனர் என்பதை அப்பர் சம்பந்தர் தேவாரத்தினால் அறிகிறோம். காஞ்சிபுரத்தையும் காரோண க்ஷேத்திரம் என்று காஞ்சிப் புராணம் கூறுகிறது. அதற்கு ஏற்பவே அப்பர் சுவாமிகளும் அவர் காலத்தில் இயற்றப்பட்ட மத்தவிலாசமும் காஞ்சி ஏகாம்பரநாதர் கோயிலிலும் அதையடுத்த கச்சி மயானத்திலும் பாசுபதரும் காபாலிகரும் இருந்த செய்தியைக் கூறுகிறார்கள்.

பிற்காலக் கல்வெட்டுச் சாசனங்களினாலும் பாசுபதர், காபாலிகர் முதலியோர் தமிழ்நாட்டில் சில இடங்களில் இருந்தார்கள் என்பதை அறிகிறோம்.

லகுலீ பாசுபதர் திருவொற்றியூரிலும் இருந்தார்கள். சென்னைக்கு அடுத்த திருவொற்றியூர்க் கோயிலில், வட்டப் பாறை நாச்சியார் சந்நிதிக்கு எதிரில் பாசுபத
ஒரு கோயில் உண்டு. இக்கோயிலில் பாசுபதமூர்;
உருவம் மிக அழகாக அமைந்திருக்கிறது. அது, பெரிய
ல,

"மடல்கொண்ட மலரிதழி நெடுஞ்சடையை வனப்பெய்தக்
கடல்மண்டி முகந்தெழுந்த காளமேகச் சுருள்போல்
தொடர்பங்கி சுருண்டிருண்டு அறிநெறித் தசைந்துசெற்
படர்துஞ்சின் கருங்குஞ்சி கொந்தளமாகப் பரப்பி"

"அயனகபாலந தரித்த இடத்திருக்கையால்
வயங்கொளிமூ விலைச்சூல மணித்திருத்தோள் மிசைப்பொலியத்
தயங்குசுடர் வலத்திருக்கை தமருகத்தின் ஒலிதழைப்பப்
பயன்தவத்தால் பெறும்புவியும் பாததாமரை சூட"

"அருள்பொழியுந் திருமுகத்தில் அணிமுறுவல் நிலவெறிப்ப
மருள்பொழிமும் மலஞ்சிதைக்கும் வடிச்சூலம் வெயிலெறிப்ப."
டர், உசு, நச, நரு)

என்று கூறியபடி சுடர்விட்டெரிவது போன்ற தலைமயிரும், குண்டலங்கள் விளங்கும் காதுகளும், புன்முறுவல் பூத்த
யும், நின்ற கோலமாகக் காட்சியளிக்கிறார் பயிரவ
அவருடைய ஒரு கையில் தண்டாயுதமும் (லகுலியும்), ஒரு கையில் கபால பாத்திரமும் மற்றொரு கையில் சூலமும் தாங்கியுள்ளார். இன்னொரு கையை அபயக் கையாகத் தாங்கியுள்ளார். இந்த அழகான திருவுருவத்தில் சிற்பியின் கலைத்திறன் காணப்படுகிறது.

திருவொற்றியூர்க் கோயிலிலே இன்னொரு லகுலீசர் (பயிரவர்) திருவுருவமும் காணப்படுகிறது. இந்த மூர்த்தியைக் கௌளீசர் என்று கூறுகிறார்கள். கௌளீசர்

என்பது லகுலீசர் என்பதன் திரிபு. இருந்த கோலமாகக் காணப்படும் இந்த உருவமும் சடைமுடியில் கபாலந் தரித்து வலது கையில் திரிசூலமும் இடது கையில் கபாலமும் ஏந்தி, மற்ற இரண்டு வலது இடது கைகளில் அபய வரத முத்திரை காட்டி புன்முறுவல் பூத்த முகத்துடன் அமர்ந்திருக்கிறது. இந்த உருவங்கள் இங்கு இருப்பதனாலே முற்காலத்தில் காபாலிகரும் பாசுபதரும் இங்கு இருந்தார்கள் என்பதை அறியலாம்.

> பாசுபதம் மாவிரதம் காபாலிகம் வைரவம் என்னும் அகப்புறச் சமயங்கள் நான்கும் இப்போது மறைந்து விட்டன.

6. சிவனும் திருமாலும்

சிவபெருமானையும் திருமாலையும் தமிழர் தொன்று தொட்டு வணங்கிவந்தார்கள். இருவரையும் வெவ்வேறு கடவுளாகப் பிரிக்காமல் இருவரையும் ஒருவராக வழிபட்டனர். ஒரே கோயிலில், ஒரே இடத்தில் இந்த இரு தெய்வ வணக்கம் நடைபெற்றது. பத்தி யியக்கம் தோன்றிய பிற்காலத்திலும், அதாவது கி. பி. ஆறும் நூற்றாண்டுக்குப் பிறகும், நாயன்மார்களும் ஆழ்வார்களும் சிவபெருமானையும் திருமாலையும் தனித்தனித் தெய்வங்களாகப் பத்திசெய்து திருப்பதிகங்கள் பாடிய காலத்திலுங்கூட, இரு கடவுளரும் பெரும்பாலும் ஒரே கோயிலில் வழிபடப்பட்டனர் அக்காலத்தில் சிவபெருமானுக்கு அம்மன் சந்நிதி தனியே இருந்ததில்லை. அக்காலத்துக் கோயில்களில் சிவபெருமான் உருவமும் திருமால் உருவமும் அமைக்கப்பட்டிருந்தன. ஏனென்றால், சைவசமயம் என்றும் வைணவசமயம் என்றும் வெவ்வேறு சமயப் பிரிவுகளும் சமயப் பிளவுகளும் அக்காலத்தில் ஏற்படவில்லை. நாயன்மார்கள் சிவனின் சக்தியை (அம்மையை)த் தமது பாடல்களில் பாடியபோதிலும் அந்த அம்மைக்குத் தனியே கோயில்கள் ஏற்படவில்லை. சைவம் வைணவம் என்னும் பெயர்கள் இருந்தபோதிலும், அக்காலத்தில்

இரண்டு சமயமும் ஒரு சமயமாகவே, வேற்றுமை இன்றிக் கருதப்பட்டன. நாயன்மார்கள் ஆழ்வார்கள் காலத்துக்குப் பிறகு, சைவசித்தாந்தம் என்றும் வைணவ விசிஷ்டாத்வைதம் என்றும் தத்துவ சாத்திரங்கள் எழுதப்பட்ட பிறகு, சைவ சமயமும் வைணவ சமயமும் தனித்தனியே பிரிந்துவிட்டது மட்டுமன்றி, பிற்காலத்தில் இரண்டு சமயங்களும் ஒன்றோடொன்று போராடிக்கொண்டன.

சைவமும் வைணவமும் வெவ்வேருகப் பிரிந்துவிட்ட பிறகுதான், ஏறக்குறைய கி. பி பத்தாம் நூற்ருண்டிற்குப் பிறகு, சிவன் கோயில்களிலே தனியாக அம்மன் சந்நிதி கட்டத் தொடங்கிஞர்கள். இந்த உண்மை கல்வெட்டுச் சாசன ஆராய்ச்சியினுலும் விளங்குகிறது. இதற்குச் சான்று காட்டி எழுதுவதற்கு இஃது இடமன்று. சைவமும் வைணவமும் தனித்தனியே வெவ்வேறு மதங்களாகப் பிரிந்துபோவதற்கு முன்பு (ஏறக்குறைய கி. பி. 10-ஆம் நூற்ருண்டுக்கு முன்பு) சிவன் வழிபாடும் திருமால் வழிபாடும் பெரும்பாலும் ஒரே கோயிலில் நிகழ்ந்துவந்தன.

திருநாவுக்கரசா் காலத்தில் சைவம் வைணவம் என்னும் வேறுபாடு அதிகமாகக் காணப்படவில்லை. சிவபெருமான் திருமாலின் ஒரு பகுதியாகவும் திருமால் சிவபெருமானின் ஒரு பகுதியாகவும—இருவரும் ஒருவராக, சக்தியும் சிவமுமாக, அரிஹர மூர்த்தியாக—, வழிபடப்பட்டனர். திருநாவுக்கரசர் தம் தேவாரப் பாடல்களில் இதனைப் பல இடங்களில் குறிப்பிடுகிருர் :—

"காவியங் கண்ணளாகிக் கடல்வண்ணனுகி நின்ற
தேவியைப் பாகம் வைத்தார் திருப்பயற் றூரஞரே."

"மாலொரு பாகமாக மகிழ்ந்த நெய்த் தானஞரே."

"அரியலால் தேவியில்லை ஐயன் ஐயாறனூர்க்கே."

"மண்ணினை யுண்ட மாயன் றன்னையோர் பாகங் கொண்டார்."

"நாரணனை யிடப்பாகத் தடைத்தார் போலும்."

"நீக்கூருந் திருமேனி யொருபால் மற்றை யொருபாலும்
அரியுருவம் திகழ்ந்த செல்வர்."

"திருமாலோர் பங்கத்தன் காண்."
"குடமாடி யிடமாகக் கொண்டான் கண்டாய்."
"மாலை யிடப்பாகத்தே மருவக் கொண்டார்."

இவர் காலத்தில் இருந்த திருஞானசம்பந்தரும் இவ்வாறே சிவபெருமான் திருமாலைப் பாகமாகவுடையவர் என்று கூறுகிறார். மற்றும் திருநாவுக்கரசர், திருமால் அணியும் துழாய் (துளசி) மாலையைச் சிவபெருமானும் அணிந்திருக்கிறார் என்று கூறுகிறார் :

"தூங்கான் துளங்கான் துழாய்கொன்றை
துன்னிய செஞ்சடைமேல்
வாங்கான் மதியமும் வாளரவுங் கங்கை
தான் புனைந்தான்."
(திருநெய்த்தானம் திருவிருத்தம், க.)

இதைப்போன்றே நம்மாழ்வாரும், சிவபெருமான் அணியும் திருநீற்றினைத் திருமாலும் அணிகிறார் என்று கூறுகிறார்.

"கரிய மேனிமிசை வெளியநீறு சிறிதேயிடும்
பெரிய கோலத் தடங் கண்ணன் விண்ணோர் பெருமான்
தன்னை."

என்று அவர் கூறியது காண்க.

திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் கூறியது போலவே, ஆழ்வார்களும், திருமால் சிவபெருமானின் ஒரு கூறாக நின்று அரிஹர மூர்த்தியாக விளங்குகிறார் என்று கூறுகிறார்கள். அவர்கள் கூறுவன வருமாறு :—

"பிறை தங்கு சடையானை வலத்தேவைத்துப்
பிரமனைத் தன் உந்தியிலே தோற்றுவித்து."
(திருமங்கையாழ்வார் பெரிய திருமொழி)

"தடம்புனல சடைமுடியன்
தனியொரு கூறமர்ந்துறையும்
உடம்புடையான் கவராத
உயிரினல் குறைவிலமே."
(திருவாய்மொழி, ச. ப. அ. தி கo.)

"கொங்கத்தார் வளங் கொன்றை யலங்கல் மார்பன்
குலவரையன் மடப்பாவை இடப்பால் கொண்டான்
பங்கத்தாய்! பாற்கடலாய்! பாரின்மேலாய்!
பனிவரையி னுச்சியாய்! பவள வண்ணா!"
ரண்டகம். க.)

"பொன் திகழு மேனிப் புரிசடையம் புண்ணியனும்
நின்றுலகம் தாய நெடுமாலும்—என்றும்
இருவரங்கத்தால் திரிவரேலும் ஒருவன்
ஒருவனங்கத்து என்றும் உளன்."
(முதல் திருவந்தாதி கக. பொய்கையாழ்வார்.)

"நாகத்தான் நால்வேதத்துள்ளான் நறவேற்றான்
பாகத்தான் பாற்கடலுளான்."
(௨-ஆம் திருவந்தாதி ௨க. பேயாழ்வார்.)

"தாழ்சடையும் நீள்முடியும் ஒள்மழுவும் சக்கரமும்
சூழரவும் பொன்னாணும் தோன்றுமால்—சூழும்
திரண்டருவி பாயும் திருமலைமேல் எந்தைக்கு
இரண்டுருவு மொன்றா யிசைந்து."
(-௩ ஆம் திருவந்தாதி ௬௩. பேயாழ்வார்.)

"ஆறு சடைககரந்தான் அண்டர்கோன்
கூறுடையன் என்பதுவும்
(நான்முகன் திருவந்தாதி ௪.

இந்தச் சான்றுகளினால் நமக்கு ஓர் உண்மை விளங்கு நாயன்மார்கள் ஆழ்வார்கள் காலங்களில், திருமாலும் சிவபெருமானும் ஒரே கடவுளாக, அரிஹர மூர்த்தமாக, வேற்றுமையின்றி வணங்கப்பட்டனர். இந்த ஒற்றுமை அவர்கள் காலத்திற்கு முன்பே நெடுங்காலமாக இருந்து வந்தது. பக்தியியக்கம் தோன்றி வளர்ந்த காலத்தில், நாயன்மார்கள் சிவபெருமானையும் ஆழ்வார்கள் திருமாலையும் சிறப்பாக வழிபடலாயினர். பக்தியில் ஆழ்ந்து போன நிலையில் ஆழ்வார்கள் சிவபெருமானையும் நாயன்மார்கள் திருமாலையும் சற்றுத் தாழ்த்தித் தம் பாசுரங்களில் பாடிய போதிலும், சிவபெருமானையும் திருமாலையும்

ஒன்றுபடுத்தியும் கூறினர். அதாவது இருவரையும் ஒன்று சேர்த்தும், வேறு பிரித்தும் இரண்டு வகையாகக் கூறினார்கள்.

அக்கால நிலையும் இருவரும் ஒத்துப்போகவேண்டிய தாயிருந்தது. எப்படியென்றால், சமணரும் பௌத்தரும் நாட்டில் சிறப்பும் ஆதிக்கமும்பெற்றுச் சைவ வைணவ மதத்தைக் குன்றச்செய்து விட்டனர். இந்த நிலையில், பௌத்த சமணருடன் போராட வேண்டிய நேரததில், இவர்கள் தங்களுக்குள் வேற்றுமையையும் பிளவையும் ஏற்படுத்திக் கொண்டால், இவர்களுடைய குறிக்கோள் நிறைவேறாது. ஆகவே, சைவ வைணவ வேற்றுமையை அவர்கள் உண்டாக்கவில்லை. ஆனால் பிரிவுபடுத்திக் கூறாம லும் விடவில்லை. நாயன்மார்கள் ஆழ்வார்கள் திருப்பாசு ரங்களை முழுவதும் படித்தால் அப்பாசுரங்களில் சிவன் திரு மால்களைப்பற்றி ஒற்றுமையும் வேற்றுமையும் விரவியிருப் பதைக் காண்கிறோம்.

பக்தி இயக்கத்தின் மூலமாக ஆழ்வார்களும் நாயன் மார்களும் பௌத்த சமண சமயங்களை ஒருவாறு அடக்கிய பிறகு, பௌத்தமும் சமணமும் சற்று வலிவு குன்றிய பின்னர், ஏறக்குறைய கி. பி. 10-ஆம் நூற்றாண்டிற்குப் பிறகு, சைவமும் வைணவமும் வெளிப்படையாக வேறு வேறு மதங்களாகப் [illegible]ட்டன. பிரிந்து, சைவ சித்தாந்தம் என்றும் விசிஷ்டாத்வைதம் என்றும் [illegible] தனி சமயநூல்களை ஏற்படுத்திக்கொண்டு, திரிபுண்டரம் ஊர்த்துவபுண்டரம் முதலிய வேறுபாடுகளையும் வளர்த்துக் கொண்டு, ஒன்றையொன்று தாக்கிச் சண்டை சச்சரவுகள் [illegible]க்கரசர் காலத்தில் சைவம் வைணவம் என்னும் சமயப்பிரிவு வெளிப்படையாக ஏற்படாமல் இரண்டு கடவுளரும் ஒருவராகவே கருதப் பட்டனர் என்பது அவருடைய [illegible]ப்பாடல்க[illegible] தெரிகிறது.